வெளியீடு — 5.

# திருமந்திர விளக்கம்

★

யோகி: ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்.

★

சுத்தானந்தப் பதிப்பகம்
60 டீல் இடம், கொழும்பு 3.

[விலை ரூ. 2. 50.

1953

முதற்பதிப்பு — விக்கிரம, ஆவணி மீ.
இரண்டாம்பதிப்பு — விஜய, மார்கழி மீ.

இந்நூலின் உரிமை
ஆக்கியோனுக்கேயாகும்.

ஸ்ரீ சண்முகநாத அச்சகம்
யாழ்ப்பாணம்.

# பதிப்புரை.

எமது பதிப்பகத்தின் ஐந்தாவது அன்பு மலராம் இந்நூலை, ஆருத்திரா தரிசனத் திருநாளாகிய இப் புனித வேளையில், நடராசப்பெருமானின் திருவடியில் சமர்ப்பிக்கின்றோம்.

தமிழ்ப் பேரறிஞரும் சைவப் பெரியாருமாகிய காலஞ்சென்ற திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களின் வேண்டுகோளுக் கிணங்கி, யோகி ஸ்ரீ. சுத்தானந்த பாரதியார் அவர்கள், பதினோராவது சைவத் திருமுறையாகப் போற்றப்படும் திருமந்திரம் என்னும் அறிவுக் கடலுள் ஆழ்ந்து பல ஒப்பற்ற முத்துக்களைத் தெரிந்தெடுத்து, அவற்றிற்கு தமது சாந்த அனுபவத்தின் துணைகொண்டு விரிவுரை தந்தனர். அத் திருமந்திரக் கட்டுரைகள், தேவகோட்டை திரு. சு. மு. மு. முத்துக்கறுப்பன் செட்டியார் அவர்களின் தமிழார்வமும் சிவபக்தியுங் காரணமாக, விக்கிரம ஆண்டு ஆவணி மாசத்தில் நூல் வடிவு பெற்றன.

அன்பு நிலையத்தாரின் முப்பத்து நான்காம் மலராக வெளிவந்த அந்நூலின் முதற்பதிப்புப் பிரதிகள், மூன்று மாசத்துள் விற்பனையாகி விடவே, தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் பலர் அந்நூல் தமக்குக் கிடைக்கவில்லையே யென்று வருந்தினர். இவ்விரண்டாம் பதிப்பு அந்த அபிமானிகளின் விருப்பத்தைப் பேணி இலங்கையில் வெளியிடப் பெறு

கின்றது. இதற்கு அணிந்துரை வரைந்துதவிய கௌரவ. திரு. சு. நடேசபிள்ளை அவர்களுக்கும், முன்னுரை தந்த கௌரவ. சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றோம். இவ்விரு மந்திரிமாரும் தமிழ் வளர்ச்சிக்கும் சைவசமயத்திற்கும் செய்துவரும் அரிய பெரிய தொண்டை யாவரும் நன்கறிவர்; அதை சைவ உலகு என்றும் மறக்க முடியாது.

ஆண்டவன் அருளும் அனுபூதிச் செல்வர்களின் ஆசியும் முன்னின்று எமக்கியன்ற அருட்பணி புரிந்து வருகிறோம். கவியோகி சுத்தானந்தர் அவர்கள் சென்ற ஆண்டில் இலங்கைக்கு விஜயஞ் செய்தபோது, அவரை வரவேற்று உபசரித்த பல சங்கங்களுட் சில அவருக்கு நன்கொடை அளித்தன. அப்பணத்தை அடிகள் தமது தாய் நாட்டுக்கு எடுத்துச் செல்ல மறுத்துவிட்டனர்; சேய் நாடாகிய இலங்கையில் சமயப் பிரசாரத்திற்கே அது உதவ வேண்டுமென விட்டுச் சென்றனர். அத்தொகையே எமது பதிப்பகத்தின் மூலதனமாகும். சைவாபிமானிகளின் கூட்டுறவும் தமிழன்பர்களின் ஆதரவும் எம்மை மேன்மேலும் ஊக்கி நடத்துக!

"எப்பரி சாயினும் ஏத்துமின்; ஏத்தினல்
அப்பரி சீசன் அருள் புரிவானே."

மார்கழித் திங்கள்
திருவாதிரை நாள்
கொழும்பு
21—12—53.

**ஓம் சிவம், ஓம் சக்தி**
**சுத்தானந்தப் பதிப்பகம்.**

# முன்னுரை

தமிழ் மக்களின் தொல் பெருஞ் சமயமான சைவ சித்தாந்தம் தமிழ் நாட்டு பழைய சித்தர்கள் அனுபூதியில் கண்ட அரிய தத்துவங்களை அடிப் படையாகக் கொண்டது. அச் சித்தர்கள் அருளிய நூல்களில் பெரும் பாலானவை மறைந்து விட்டன; இப்பொழுது வழக்கில் இருப்பவை மிகச் சிலவே யாகும். இச் சிலவற்றுள் திருமூலர் திருமந்திரம் தலை சிறந்து விளங்கும் நூலென்பது எல்லாருக் குந் தெரியும். இந்த நூலும் நாளடைவில் மறைந் தொழியுமோவென சைவ மக்கள் அஞ்சியதுண்டு. ஏனெனில், கருத்து விளங்கா எந்த நூலையும் படிக் காமல் புறக்கணிப்பது இன்றைய மக்களின் மனப் பான்மையாகும். இதை முழுதும் தவறான கொள் கையென்று சொல்லிவிட்டு நாம் பராமுகமாயிருத் தல் சரியல்ல. அக்குறையை நிறைவாக்க வேண் டியதே அறிஞர் கடமை. இக் கடமை உணர்ச்சி யால் உந்தப்பட்டு வெளி வந்ததே **திருமந்திர விளக்கம்** என்னும் இந்நூல்.

வேதம், ஆகமம் இரண்டின் விளக்கமாக விளங்குவதுடன், ஹடயோகம், இராஜயோகம், தாந்திரயோகம் முதலானவற்றின் நுட்பங்களையும் அடக்கியுள்ள திருமூலரின் பாடல்களுக்கு விரிவுரை வரைதல் எளிதான காரியமல்ல. வெறும் புத்த கப் படிப்பிற்கும் இலக்கண நூலாராய்ச்சிக்கும் அப்பாற்பட்ட விஷயம் அது. மதிநுட்பத்துடன், நெடுங்காலத் தவத்தாலும், தியானத்தாலும் யோக சித்தியும் கைவரப் பெற்றவர்க்கே இத்திருமுறை நூலின் ஆழத்தை அறியும் ஆற்றல் உண்டு.

எனவே, மேற்கூறிய தராதரங்களுடன், பலமொழிப் பயிற்சியும் பரந்த நூலறிவும் படைத்த நம் அருட் பெரியார், யோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் இந்த விளக்க நூலை இயற்றியது சாலவும் பொருத்தமுடைத்து. எஞ்சியுள்ள பாகத்திற்கும் அவரே விளக்கந் தரவேண்டியவராவர். சைவ நன்மக்களின் நன்றி என்றென்றைக்கும் அவருக்கு உரித்தாகுக!

"தோத்திரத்திற்குத் திருவாசகம்; சாத்திரத்திற்குத் திருமந்திரம்" என்பது ஓர் பழந் தமிழ்ப் புலவர் வாக்கு. அதின் முதல் பாகத்தின் உண்மையை இளம் வயசிலிருந்தே யான் உணர்ந்துள்ளேன். ஆனல், இரண்டாம் பாகத்தில் அடங்கிய உண்மை என்னுள்ளத்தில் உதயமானது யோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் எளிய இனிய நடையில் தந்துள்ள இந்த விளக்கத்தைப் படித்த பின்னரே யாகும். யான் பெற்ற அனுபவமே இந்நூலை வாங்கிப் படிக்கும் அன்பர் பலருக்கும் கிடைக்குமென நம்புகிறேன்.

"ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்; நன்றே நினைமின்; நமனில்லை" என்ற மணிவாக்கில் நம்பிக்கை வைத்து, நமது சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாயுள்ள பலவித வேற்றுமைகளையும், பழக்க வழக்கங்களையும் அறவே களைந்து, அன்பே சிவமென்பதை உணர்ந்து, அச் சிவத்தின் அருள் வெளியில் சகோதரராய் இன்புற்று வாழ இந்நூல் வழி காட்டுக!

கொழும்பு,
12—12—53.

**க. வைத்தியநாதன்.**

# அணிந்துரை

தமிழிலுள்ள சமய நூல்கள் தோத்திரம், சாத்திரம் என்று இரண்டு வகைப்படும். திருமூலர் அருளிய திருமந்திரம் சாத்திர வகையில் சேர்ந்த தாகும். இதுவே தமிழில் முதலெழுந்த விரிவான சமய சாத்திரம் என்று கருத இடமுண்டு. மூவர் தேவாரத்துக்கு இது காலத்தால் முற்பட்டது என்பது சரித்திர உண்மை. திருமந்திரம் வேதாகம முடிவுகளை அடிப்படையாகக் கொண்ட நூல். "வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்" என்பது திருமூலர் கருத்தாகும். வேதத்தைப் பொது நூலாகவும், ஆகமத்தைச் சிறப்பு நூலாக வும் அவர் கொள்கின்றார். வேதாகம முடிவுகள் "பெரியோர்க்கு அபேதமே" என்று அவர் வற்புறுத்துகின்றார். உபநிடதங்கள் உணர்த்தும் பரானுபவ உண்மையைச் சைவாகமங்கள் தெளிவு படுத்துகின்றன. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று சைவாகமங்கள் வகுக்கும் நெறி சிவானு பவத்தைப் பெறுதற்குரிய சோபான மார்க்கமா கும். திருமந்திரம் சைவாகம வழியைப் பின் பற்றுகின்றது.

திருமூலர் சிவராஜயோகத்தில் பல ஆண்டுகள் அமர்ந்திருந்து திருமந்திரத்தை அருளினார். யோகானுபவவிரிவைத் திருமந்திரத்தில் காணலாம். பல வித யோக சாதனைகள் இதில் கூறப்பட்டிருக்கின் றன. இது யோக வித்தையின் கருவூலம். இவ்வகையில் இதற்கு இணையாக வேறொரு நூலும் இல்லை என்று சொல்வது மிகையாகாது. திருமந்திரம் என்று பெயருக்கிணைய, இந்நூல் மந்திர

சாதனையை விதந்தோதுகின்றது. பிரணவம், பஞ்சாக்ஷரம் முதலிய மந்திரங்களின் மஹிமை இதில் விளக்கப்படுகின்றது. சிவ வழிபாட்டுடன் சக்தி வழிபாடும் இதில் விரித்துக் கூறப்படுகின்றது. சிவாநுபவத்துக்கு இன்றியமையாத சாதனம் அன்பு நெறி என்பதைத் திருமூலர் தெளிவாக உணர்த்துகின்றார். "அன்பே சிவம்" என்பது அவர் அளித்த பிரதான மந்திரம்.

திருமந்திரத்தில் பல உண்மைகள் படிப்போர் உள்ளத்தில் மந்திரமாகப் பதியும் வண்ணம் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றுள் முக்கியமானவற்றைத் திரட்டியும் விளக்கியும் யோகி சுத்தானந்த பாரதியார், **திருமந்திர விளக்கம்** என்ற நூலை இயற்றியுள்ளார். இந்நூல் திருமந்திரத்துக்கு ஒரு திறவுகோல் போன்றது. இது திருமந்திரத்தின் அரிய கருத்துகளை எளிதில் விளக்கும் நடையில் அமைந்துள்ளது. இதைப் படிப்பவர்கள் திருமந்திரம் முழுவதையும் படிக்க வேண்டுமென்று மன வெழுச்சி கொள்வார்கள் என்பது நிச்சயம்.

திருமந்திரம் தனிச் சிறப்பு வாய்ந்த சமய நூலாகச் சைவ மக்களால் போற்றப்படுகின்றது. ஆனல் அதைப் படிப்பவர்கள் சிலரே யாவர். அதைப் பலரும் படித்துப் பயன் பெறுமாறு யோகி சுத்தானந்த பாரதியார் செய்துள்ள அருந் தொண்டுக்குத் தமிழகம் கடப்பாடுடையது. திருமந்திர விளக்கத்தின் இரண்டாவது பதிப்பு இப்பொழுது இலங்கையினின்று வெளிவருகின்றது. இந்நூலை இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் பலரும் படித்துப் பயன் பெறுவாராக!

கொழும்பு,
8—12—53.

**சு. நடேசபிள்ளை**

# பொருளடக்கம்


பக்கம்

க. பரம்பொருள் விளக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. | மூலமந்திரம் | ... | 1 |
| 2. | திருமூலர் | .... | 3 |
| 3. | உருவிளக்கம் | .... | 8 |
| 4. | உருவணக்கம் | .... | 11 |
| 5. | ஒருவனே யாவும் | .... | 18 |
| 6. | இறைவன் பெருமை | .... | 27 |
| 7. | ஈசனியல்பு | .... | 29 |
| 8. | ஈசன் உறவு | .... | 31 |
| 9. | அல்லும் பகலும் அருள்வான் | | 33 |
| 10. | அருள் பெறலாம் | .... | 35 |
| 11. | பதிவழி | .... | 39 |

உ. வேதாகம விளக்கம்

| | | | |
|---|---|---|---|
| 12. | வேதம், ஆகமம் | .... | 41 |
| 13. | வேதப் பொருள் | .... | 45 |
| 14. | அருள் நூல்களைப் பரப்புக! | | 48 |
| 15. | கண்ணன் | .... | 50 |
| 16. | வேத விரிவு | .... | 52 |
| 17. | நமது கடமை | .... | 55 |
| 18. | போலிகள் வேலை | .... | 56 |
| 19. | வேத சாரம் | .... | 59 |

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 20. | ஆகமச் சிறப்பு | .... | 60 |
| 21. | ஆகமத் தோற்றம் | .... | 63 |
| 22. | குருமார் | .... | 70 |
| 23. | மும்மூர்த்திகள் | .... | 72 |

ந. பரமுத்தி விளக்கம்

| | | | |
|---|---|---|---|
| 24. | பாசமறுத்தல் | .... | 77 |
| 25. | பெரும் பேறு | .... | 80 |
| 26. | சிவசித்தர் | .... | 83 |

ச. திருநெறி விளக்கம்

| | | | |
|---|---|---|---|
| 27. | அருட்கல்வி | .... | 92 |
| 28. | அந்தணர் ஒழுக்கம் | .... | 102 |
| 29. | தீ வளர்த்தல் | .... | 108 |
| 30. | அரசன் கடமை | .... | 114 |
| 31. | வானச் சிறப்பு | .... | 117 |
| 32. | அறஞ் செயல் | .... | 118 |
| 33. | இட்டுண்ணல் | .... | 121 |
| 34. | பாத்திரமும், அபாத்திரமும் | | 125 |
| 35. | போசன விதி | .... | 127 |
| 36. | மகேசுர பூஜை | .... | 129 |
| 37. | நடுவுநிலைமை | .... | 134 |
| 38. | அன்புடைமை | .... | 135 |

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 39. | அன்புசெய்வாரை அறிவன் சிவன் | | 141 |
| 40 | பொறையுடைமை | .... | 146 |
| 41. | பெரியார் துணை | .... | 148 |
| 42. | தெய்வ நிந்தை | .... | 150 |
| 43 | குரு நிந்தை | ... | 156 |
| 44. | மகேசுர நிந்தை | .... | 159 |
| 45. | மோக்ஷ நிந்தை | ... | 160 |
| 46. | சமயாதீதம் | ... | 168 |
| 47. | கொல்லாமை | .... | 175 |
| 48. | புலால் மறுத்தல் | .... | 176 |
| 49. | கள்ளுண்ணாமை | .... | 178 |
| 50. | பிரமாதகரைச் சேராதே | .... | 183 |

## ரு உயிர்மெய் விளக்கம்

| | | | |
|---|---|---|---|
| 51. | நிலையுறு செல்வம் | .... | 188 |
| 52. | இளமை | .... | 190 |
| 53. | உயிர் நிலையாமை | .... | 192 |
| 54. | உடலின் நாடகம் | .... | 195 |
| 55. | வாணாள் | .... | 201 |
| 56. | கண்காணி | .... | 203 |
| 57. | விதிவழி | .... | 206 |
| 58. | உயிரிறைவன் | .... | 207 |

பக்கம்

ஊ. அருளுபதேச விளக்கம்

59. வாய்மை .... 209
60. சன்மார்க்கம் .... 211
61. இதோபதேசம் .... 213

எ. சிருட்டி விளக்கம்

62. ஐந்தொழில் விளக்கம் .... 2.7
63. கருவுயிர்த்தல் .... 222
64. மூவகைச் சீவர் .... 227
65. ஓம் சிவம்! .... 229

# திருமந்திர விளக்கம்

## நூல் — க.

## பரம்பொருள் விளக்கம்

### 1. மூலமந்திரம்

அப்பனை நந்தியை ஆரா வமுதனை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினல்
அப்பரி சீசன் அருள்பெற லாமே!

“தோத்திரத்திற்குத் திருவாசகம்; சாத்திரத்திற்குத் திருமந்திரம்” என்பர் புலவர். நமது நாட்டின் அருட்சுரங்கம் ஈன்ற விலைகாணு மாணிக்கம் திருமந்திரமே. மூலர் உரைத்த மூவாயிரம் தமிழும், உள்ளனுபவக் கடலில் ஆழ்ந்தெடுத்த ஆணிமுத்துக்களாம். திருமந்திரத்தில் அடங்காத வேதப்பொருளில்லை; ஆகமரகசியமில்லை. இதுகாறும் உலகிற் போந்த சமயப் பெரியார் உள்ளம், ஞானிகள் கருத்து, யோகிகள் அனுபவம், ஜீவன் முக்தர் இயல்பு, அருட்புலவர்கண்ட தத்துவங்கள், அறிஞர் அறிந்த அறிவு—இவையனைத்தும், அதில் அடங்கியுள்ளன. வேதம் ஆகமம் இரண்டுக்கும் திருமந்திரம் அரிய விளக்கமாகப் பொலிகிறது. ஹடயோகம், இராஜயோகம், பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம், தந்திரயோகம், மந்திரயோகம், லயயோகம் ஆகிய எல்லா யோகமார்க்கங்களும் திருமந்திரத்தில் அடங்கியுள்ளன. நமது நாட்டின் தொல்

பெருஞ் சமயமான சைவசித்தாந்தத்தை இந்நூல் விரிவாக விளக்குகிறது; திருக்குறளைப் போலவே இந்நூலும் முப்பொருளை விளக்கி, அப்பொருளால் கூட்டோடு வீட்டின்பம் பெற்று மானிட வாழ்வை அமரவாழ்வாக்க வழிகாட்டுகிறது. ஜீவன் முக்தி ரகசியத்தையும் துரியானுபவ ரகசியங்களையும் விளக்குவதில் இந்நூல் தலைசிறந்து விளங்குகிறது. 'நமசிவாய' என்று ஆண்டானை அடைந்து, அவனன் பிற்கே ஊனுகி, அவனருளால் எங்கும் 'சிவமயம்' கண்டு, அவனறிவு முற்றி, சிவோஹம் பாவனையில் இரண்டறக்கலக்கும் பூரண யோகரகசியத்தை இந்நூல் விரிவாக விளக்குகிறது. இப்புண்ணிய நூல் பதினோராவது சைவத்திருமுறையாகப் போற்றப் பெறுகிறது. தேவார திருவாசகங்களின் தத்துவத்தை இந்நூல் கருப்பொருளாகக் கொண்டு விளங்குகிறது. நமது பாரதநாட்டின் ஒப்பற்ற அருள் நூல்களில் மிகச் சிறந்தவற்றுள் ஒன்று திருமந்திரம். நமது நாட்டின் முன்னேற்றத்தைத் தடைசெய்யும் சாதி சமய வேறுபாடுகளை அறவே களைந்து, அனைவரும் அன்புகொண்டு அருள்வெளியில் ஆன்மநேயம் பூண்டு வாழ இந்நூல் வழிகாட்டுகிறது.

மூலன் செய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது;
காலை எழுந்து, கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே.

அரசடியில் நீண்ட மாதவம் செய்து, திருமூலர் இந்நூலை இயற்றினர்.

## உ. திருமூலர்

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே.

மூலர்காலம் கி. பி. 100-க்குப் பின் 900-க்கு முன் என்பர். அவர் திருக்கைலாயத்தில் இருந்த சிவநாத சித்தருள் ஒருவர்; திருநந்திதேவரின் மாணவர்; சிவயோகர், பதஞ்சலி, வியாக்ரமர் முதலிய சித்தருடன் பயின்றவர்; தமிழ்முனிக்கு நண்பர். அவர் நந்தியருளால் வழியறிந்து மனத்தை வென்றார்; இதயமன்றில் திருநடனம் கண்டார்; சதாசிவத் தத்துவமுணர்ந்தார்; அதிலேயே இருக்கை கொண்டார்; சத்திநிபாதம் பொலிவுறப் பெற்றார்; பிறப்பிறப் பற்றார்; அருட்சக்தியால் அறிவு மலரப்பெற்றார்; அறிவின் ஒளியால் அரனை இரண்டறக் கலந்தார்; பிறப்பிறப்பற்ற நிரதிசயானந்தத்தில், இராப்பகல் அற்ற இடத்தில், இமயவரும் போற்றும் பதத்தில் ஞானப்பாலுண்டிருந்தார்.

இச்சித்தர் ஒருநாள், தம் நண்பரான அகத்தியரைக் காணப் பொதிய மலையை நோக்கிப் புறப்பட்டார்; திருக்கேதாரம் வழிபட்டார்; முனிவர் புகழும் பசுபதி நேபாளத்தைப் பணிந்தார்; கங்கை நீராடினார்; காசியை வணங்கினார்; திருப்பருப்பத மிறைஞ்சினார்; திருக்காளத்தியில் நிலவும் இறைவனைத் தொழுதார்; ஆலங்காட்டைத் தொழுதேத்தினார்; திரு ஏகாம்பரம் பணிந்தார்; காஞ்சிவளநகரடைந்து அங்கே யமர்ந்த தவமுனிவரை நயந்தார்; பிறகு, திருவதிகைச் சிவனைக் கலந்திறைஞ்சினார்; நீலகண்டனை சிற்சபேசன் திருநடம் புரியும் தில்லைநகரத்

திற்குவந்தார். அங்கே ஆனந்தக்கூத்தனைக் கும்பிட்டுச் சிலநாட்கள் இன்புற் றமர்ந்திருந்தார். பிறகு, வளம் பொலியும் பொன்னி நாட்டை யணைந்து காவிரிப் புனலாடினர்.

சாத்தனூர் காவிரிக்கரையில் உள்ளது. அவ்வூரில் மூலன் என்னும் இடையனொருவன் இருந்தான். அவன் மாடுகளை வெகு அன்பாக மேய்த்துவந்தான். ஒருநாள் மாடுகளை மேய்க்கும்போது, விதிவசத்தால் அவன் இறந்தான். அவனது பிணத்தை மாடுகள் சூழ்ந்தன; முகர்ந்தன; 'அம்மா!' என்று அலறின; உளந்துடித்தன; விழிநீ ருகுத்தன. இப்பரிதாபக் கோலத்தை அங்கே வந்த நம் தவமுனிவர் கண்டுருகினர். அவர் அஷ்டமா சித்தியும் கைவரப் பெற்றவர்; கூடுவிட்டுக் கூடுபாய வல்லவர். முனிவர், தமது உடலை ஓரிடத்தில் காப்பாற்றி வைத்தார்; இறந்துகிடந்த மூலன் உடலிற் பாய்ந்தார். மூலன் உயிர்த்தெழுந்தான்; ஆனிரைகள் மகிழ்ந்தன; இன்பக் கண்ணீருகுத்தன. சந்தோஷமாகப் பசும்புல் மேய்ந்தன; காவிரி நீருண்டன. இதற்குள் சூரியன் அத்தமித்தான். மூலனுடல் தாங்கிய சிவமுனிவர் மாலைக் கடனை முடித்தார். மாடுகள் சாத்தனூரை நோக்கி நடந்தன. அவற்றின் பின்னே மூலரும் சென்றார்; பசுக்கள் தத்தம் மனைசேரக் கண்டார். எவ்வீட்டினும் நுழையாமல் திருமூலர் வெளியே நின்றார். தனது நாயகனை ஆவலாக எதிர்பார்த்திருந்த மூலன் மனைவி அணுகி, "ஏனிப்படி நிற்கிறீர்? வாரும்; உள்ளே!" என்று தொட்டு அழைக்க வந்தாள். "தொடாதே!" என்று விலகினர் முனிவர். "ஐயோ இதென்ன? என் செய்தீர்!" என்று மனைவி திகைத்துத் தளர்ந்தாள். "உன்னுடன் எனக்கோர் உறவு

மில்லை" என்று எதிர்மறுத்து, ஒரு பொதுமடத்துட் புகுந்து, சிவக்கலப்பில் ஆழ்ந்தார் மூலரான முனிவர்.

சும்மாவிடுவாளா மூலன் மனைவி! உற்றார் உறவினரையெல்லாம் அழைத்து வந்தாள். "பாருங்கள்! என் கணவன் வீட்டிற்குவராமல் இப்படிக் கண்ணை மூடிக்கொண்டு இங்கே உட்கார்ந்திருக்கிறார் என்னோடு பேசமாட்டேனென்கிறார்; என் முகத்தைக் கூடப் பார்க்கமாட்டேனென்கிறார்; ஐயோ! என் கணவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது!" என்று முறையிட்டாள்; அழுதாள்; தொழுதாள்; அலறினாள்.

அறிவாளர் சிலர் முனிவர் நிலையை அறிந்து "அம்மா, பித்தரல்லர்; இவர் சித்தர்; இவர் மனமாறாட்டங் கொண்டவரல்லர்; மனத்தின் ஆட்டத்தை வென்ற மோனி; வரம்பில்லாப் பெருமை பெற்ற சிவஞானயோகி; வாய்மனங் கடந்த இந்நிலையின் மாண்பை யாரே சொல்லால் விளம்பவல்லவர்? இவர் பற்றறுத்தவர்; முற்றுமுணர்ந்தவர். இனி இவர் உன்மேற் பற்றுறார்; இவர் நிஷ்டையைக் கலைக்காதே!" என்று அப்பெண்ணைத் தேற்றியனுப்பினர்.

முனிவர் தமது முன்னுடலைத் தேடினார்; அகப்படவில்லை; மூலனுடலிலே நின்று திருமூலராகவே விளங்கினார். முனிவர் இவ்வுடற்பொறை பூண்டு, உலகிற்குச் சிவாகமப் பொருளைத் தமிழில் அருளவேண்டுமென்பது சிவன் சித்தம்; அதனாலேதான் தமது இயலுடல் மறைந்தது என்றுணர்ந்தார் திருமூலர்.

பிறகு, அவர் திருவாடுதுறைக்கு வந்து, அங்கே ஓர் அரசமரத்தடியில் நீண்ட மாதவம் புரிந்தார் சிருஷ்டி சக்தியும், திதிசக்தியும் அடிமுடி காணமுடியாத சிவக்கனற் குன்றை, கற்பனை கடந்த தற்பரனை மறவாது நெஞ்சில் தியானித்தார்; அவன் உள்ளொளியாகும் மந்திரத்தையே சிந்தித்தார்; அறிவோன், அறிவு, அறிபொருள் அனைத்தும் அவனென்றுணர்ந்தார். உள்ளிரவியும், மதியும் உற்றெழுந்தொளிரப் பெற்றார். அதனால் சக்திக் கனல் பாய்ந்து மயிர்க்கால்தொறும் அருளொளி வீசப்பெற்றார். இந்தஉட்புறச் சித்தி, நந்திதேவர் அருளால் வாய்த்ததென்று குருவிற்கு நன்றி செலுத்தினர்.

நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவ னாயினேன்;
நந்தி அருளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நானிருந் தேனே!

இவ்வாறு நந்தியின் திருவருளால் சிவஞான சித்திபெற்று, நான் எனதற்ற, இருவிகாரமற்ற, மனமுயிருடல் வாதனையற்ற, முப்புரியற்ற, சிவோஹ நிலையில் திருமூலர் இருந்தார். அப்போது, தான் பெற்ற இன்பம் உலகமும் பெறுக என்று, வேதப் பொருளான பரமனை இரண்டறக் கலக்கும் சாதனங்களை மந்திரத் தமிழால் விளக்கினர்.

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே.

இதுவே திருமந்திரத்தின் கருப்பொருள். திருமூலர் சிவானந்தம் பெற்றார்; அந்த இன்பத்தை உலகெல்லாம் பெற வேண்டுமென்று நல்ல விருப்பங் கொண்டார். அப்பேற்றிற்கான வழியென்ன? தகராகாசமான வானைப்பற்றி நிலைத்த அதிரகசியமான சச்சிதானந்தப் பரம்பொருளைக் காணவேண்டும்; நம்முயிரோ இந்தச் சிற்றுடலில், பற்றுடலில் சிக்கி நிற்கிறது. எல்லையற்ற அப்பரம் பொருளைக் காண்பதெப்படி? நாமாவது காண்பதாவது! பைத்தியக்காரத்தனந்தான்! அதுவாகத் தலைப்பட்டு நம்மை ஆட்கொள்ள வேண்டும். ஆண்டவனே அருள் பூத்து ஆண்டுகொள்ள வேண்டும். அதற்குச் செய்ய வேண்டியதென்ன? இந்த ஊனுடலிலே சரியை கிரியை யோக சாதனங்களால் அருளுணர்வாகிய சத்தி நிபாதத்தைப் பெறவேண்டும். அந்த உணர்வெழுந்ததும் ஓங்கார மந்திரம் நம்முள் உதித்து எப்போதும் முரலும். அம்மந்திரத்தையே பற்றவேண்டும். அப்படிப் பற்றப்பற்ற மனம் பழுக்கும்; அருள் விளங்கும்; அறிவுப்பொருளான சிவம் தானே மேன்மேலுந் துலங்கி அன்பனை ஆட்கொள்ளும். அப்பரம் பொருளின் பெருமையைச் சாதாரண மாந்தர் அறியார்; பேர் அறியாத அருட்பெருஞ்சுடராக அது விளங்குகிறது. பிரிவுணர்ச்சியால், அன்னிய பாவனையால் அதை அறிய முடியாது; அன்பினால் உருகிக் கலக்கும் பிரிவற்ற (அனன்னிய) நிலையிலேதான் திருவருட் பயன் எய்தும். உள்ளிசை எழும்போதே உன்னும் உள்ளம் முதல்வனை உணரும். அப்படிப் பட்ட முதல்வனியல்பை இனி அறிவாம்.

## ரு. உருவிளக்கம்

### விநாயகர்

ஐந்து கரத்தனை, யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

கணபதி சிவன்மகன், ஞானக்கொழுந்து, ஐங்கரன், யானை முகத்தன், இளம்பிறைக் கொம்பன்—அவனை எனது புத்தியாகிய கோயிலில்வைத்து, தியானத்தால் போற்றுகிறேன்.

நமது நாட்டில் எவ்வூரிலும் பிள்ளையார் கோயிலைக் காணலாம்; பிள்ளையாரைக் கண்டதும் உக்கி போட்டுத் தலையில் குட்டிக்கொண்டு நம்மவர் 'ஓம் கணபதி' என்று வணங்கிச் செல்வர்; தமது காரியம் வெற்றிபெறப் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பதாக வேண்டிக் கொள்வர். பிள்ளையார் சுழி போட்டே நாம் ஒரு நூலையோ, கடிதத்தையோ எழுதத் தொடங்குகிறோம்; பிள்ளையார் வணக்கம் செய்தே எத்தொழிலையும் எக்கலையையும் தொடங்குகிறோம்; ஏதாயினும் பிழை செய்தால் பிள்ளையாருக்கு உக்கி போடுகிறோம்; குட்டிக்கொள்கிறோம்; அரசடி, குளத்தங்கரை எங்கும் பிள்ளையார் வடிவைக் காண்கிறோம்; பிள்ளையார் சதுர்த்தி கொண்டாடுகிறோம்; கலியாணம் கார்த்திகைகளில் பிள்ளையார் பிடித்து வைத்து, "சுக்லாம் பரதரம்" என்று குட்டி வணங்கியே கிரியைகளைத் தொடங்குகிறோம். நமது நாட்டில் வழங்கும் ஆறு சகுண சமயங்களில் கணபதியை

உபாசிக்கும் காணபத்யம் ஒன்ரும். கணபதித் திரு விழாக்கள் நமது நாட்டில் நடக்கின்றன. காலஞ் சென்ற திலகர் கணபதி பக்தர். தமிழ்க்கலை ஞானி யான ஔவை கணபதி உபாசகி.

கணபதியின் பெருமை யென்ன? 'எல்லாம் ஓம்; பிரமம் ஓம்; வேதசாரம் ஓம்; வேதமுடிவு ஓம்' என்ற னர் அருட்புலவர். அந்த ஓங்காரமே கணபதி வடிவு மாம்.

## இறை - வடிவங்கள்

இலிங்கம், நடராஜர், சக்தி, கணபதி, முருகன் நாரணன் ஆகிய தெய்வ வடிவங்களை நாம் வணங்கு கிரேம். இவையெல்லாம் திருவருட்புலவர் தம்முள் சாட்சாத்கரித்த அருள் வடிவங்களேயாகும். வாய் மனங் கடந்த துரிய நிலையிலேதான் தெய்வானுபவம் பெறலாம். அந்த அனுபவங்களுக்குக் கலை வடி வம் ஈந்தனர் நமது அருட்புலவர். "மணம்" என்ருல் எவ்வளவு வருணித்தாலும் நமக்கு விளங்குவதில்லை; ரோஜாப்பூ வொன்றை முகரச் சொன்னல் மணத் தின் தன்மை நன்கு விளங்குகிறது. தூலத்தைக் கொண்டு சூக்குமத்தை உணர்வது ஓர் அறிவு நெறி யாம். இலக்கணச் சூத்திரங்கள் உதாரணத்தால் விளங்குகின்றன; ஒரு கவியின் கருத்துக்கள் உப மானங்களால் விளங்குகின்றன; இனிப்பு தேன் வடிவாக நமது நாவிலூறித் தனது தன்மையைக் காட்டுகிறது. அது போலவே தெய்வ தத்துவங்களுக் கும், சுயானுபூதிகளுக்கும் நமது நாட்டு மகான்கள் கலைவடிவம் ஈந்து தியான உபாசனைகளை எளிதாக்கி னர். "அன்பு" என்ரேர் உயர் தன்மையுள்ளது. எவ் வளவு இலக்கிய வர்ணனைகளாலும் அது நமக்கு

விளங்காது. அது ஒரு குழந்தை வடிவாய் எய்தினல், "அன்பே! இன்பமே!" என்று நம்மை யறியாமல் கொஞ்சிக் குலாவுகிறோம்.

## சன்மார்க்கம்

நமது நாட்டுச் சமயத்தை "இந்து மதம்" என்பர். அதை நாம் சன்மார்க்கம் என்போம். சத்+மார்க்கம் =சன்மார்க்கம்—உண்மை நெறி: உண்மையாகிய முதல்வனை உள்ளும் புறமும் கூடும்நெறி. இச்சன் மார்க்கம் எல்லாச் சமயங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு சமயங் கடந்து விரிந்தோங்குகிறது. நட்சத்திர மண்டலங்களெல்லாம் ஆகாயத்தில் அடங்கும்; ஆனல், ஆகாயம் அவற்றினும் விரிந்து காணும். அது போலவே சமயங்களெல்லாம் சன்மார்க்கத்தில் அடங்கும். சன்மார்க்கம் சமயாதீதப் பழம் பொருளைக் கலந்து நிற்கும். அவரவர் பக்குவத்திற்கேற்றபடி, உள்ளப்பான்மைக்குத் தக்கபடி சன்மார்க்கத்தைப் பலவாருகப் பயிலுவர். எல்லாப் பயிற்சிகளும் அன்பினல் நிகழ்வன. அன்பின்றி வாழ்வில்லை; வழியில்லை. நமது வாழ்வை முன்னேற்றும் சக்தி அன்புதான். சன்மார்க்கத்தில் ஒளி காட்டுவது அன்புதான்.

அந்த அன்பைக் கொண்டு, அன்பு வடிவான இறைவனைத் தேடிக் கூடலே சன்மார்க்க சாதனமாம்.

## சன்மார்க்க சாதனம்

அன்பின் தீவிரத்தால் அருள் விளங்கும்; அருளின் முதிர்ச்சியால் அறிவு துலங்கும்; அறிவின் தெளிவால் இறைவனை எய்தலாம்.

முதலில் நம்பவேண்டும்; கருத்தூன்ற வேண்டும்; மனம் பற்ற வேண்டும்; ஆர்வக்கனல் வெண்கொழுந்தேற வேண்டும்; மனிதன் தனது ஆற்றாமையை எண்ணியெண்ணி உருகி முறையிட வேண்டும்; அழவேண்டும்; தொழ வேண்டும்; அன்பு செய்ய வேண்டும்.

## ச. உருவணக்கம்

'இறைவன் நிர்க்குணன், நிராமயன்; நிரஞ்சனன்,' என்றால் அற்ப மனித மூளைக்கு விளங்காது. பலருக்கு உருவமொன்று எதிரில் இருந்தாலேதான் அன்பு நிலைக்கும்; மனம் அதில் ஈடுபடும். மனம் நிலைத்து, சித்தந் தெளிந்து, அந்தக்கரணங்கள் அடங்கி, உள்விழி திறந்த ஞானிகளே இறைவனை அகண்டாகார மோனவடிவாக, அருவாக, சிதம்பரமாக, பரம்பரமாக வழிபடல் இயலும். கேவலம் பூத பௌதிக உணர்வில் மனச் சலனத்தில் உழலும் பல கோடி மாந்தர் சன்மார்க்கக் கடவுளையடைய முதற் படியாக நின்றுதவுவது உருத்தொழுகையே யாகும். மனிதனிடம் அன்புள்ளது. அதைத் தீயவழியிற் செல்லாமல் சஞ்சலப் பாதையில் ஓட்டாமல் உந்தியிழுத்து, இறைவழியிற் செலுத்த வைராக்கியம்வேண்டும். ஓர் ஊரைக் குறி வைத்துச் சென்றால் நமது பயணம் எளிதாகிறது. அதுபோல ஏதாயினும் ஒரு மூர்த்தியைக் குறிப்பாகக் கொண்டு, அதனிடம் நமது அன்பை முற்றிலும் செலுத்தினால் மனம் பழுக்கும். காவிரியாற்றில் எத்துறையில் நீராடினாலும் காவிரி முழுக்கின் பலன் கிடைக்கிறது. சர்க்கரையை இலட்டு, ஜிலேபி, மிட்டாய், மைசூர்ப்பாகு, சந்தேசம், ரசகுல்லா முதலிய எவ்வடிவாக உண்டாலும்

இனிப்பின் பயன் கிடைக்கிறது. அதுபோலே எவ் வடிவாக இறைவனை வணங்கினலும், நமது அன்பு தீவிர மானல் அவ்வடிவாகவே இறைவன் நமக்கு அருளு வான். அதனலேதான் மகான் திருமூலரும்,

எப்பரி சாயினும் ஏத்துமின்; ஏத்தினல்
அப்பரி சீசன் அருள்புரிவானே

என்ருர். சரியை, கிரியை, யோக ஞானசித்திகளால் சுத்தான்ம நிலைபெற்ற மகான்கள் தமது காட்சிப் புலமையால் வடித்த தத்துவ வடிவங்களே நமது நாட்டுச் சன்மார்க்கம் வணங்கும் தெய்வங்கள்.

## தத்துவ வடிவம்

உடற்பயன் கடவுளடைவேயாம். அக்கடவுளை எப்பெயர், எவ்வடிவில் அன்பு செய்தடையினும் எல் லாம் சன்மார்க்கத்திற்குகந்ததேயாம். எத்தனையோ வகையாக அன்பு செய்து அடியார் ஆண்டானருள் பெற்றதைத் தொண்டர் சரிதை விளக்கும்.

நம் பெரியார்கள் கேவலம் ஜடமான கல்லையும் செம்பையுமே கடவுளென வணங்கவில்லை. கல்லி லும் செம்பிலுங் கூடப் பரவி இருப்பது அவன ருளே. எனினும், உருவால் விளங்கும் தெய்வ தத்து வத்தையே அவர்கள் வழிபட்டார்கள். 'ஆகாசத்தில் எலக்ட்ரேன் உள்ளது' என்ருல் நமக்கு விளங்காது. அதனை ஒரு மைக்ரோபோனில் இறக்கி, ஒலிப்பதிவு. செய்து, ஒரு பேசும்படச் சரட்டை விறுவிறென்று இயக்கி, வெள்ளித்திரையில் விநோதக் காட்சிகளை அது ஆட்டும் போதே 'ஆகாய மின்சாரம் என்ன அற்புதம்! "என்று வியக்கிருேம். இது கேவலம்

ஜடவியற்கையின் செயல்; மாயா சக்தியின் அணு வொன்றின் செயல். அதற்குமேல் கோடிகோடிப் பங்கு சக்திபெற்ற பராசக்தியுள்ளது; அதற்கிறை வன் பரம்பொருள்.

அப்பரம் பொருட் சந்நிதி மாத்திரத்தில் அவ னருளாகிய பராசக்தி ஐந்தொழில் புரிகிறது. மேலே பாருங்கள்! நாம் காணும் எண்ணரிய விண்மீன்க ளெல்லாம் சூரிய மண்டலங்கள்; அவற்றைச்சுற்றி எத்தனையோ உலகங்கள் நடக்கின்றன. அக்கோடா னுகோடி யுலகங்களில் நாம் இருக்கும் மண்ணுலகம் ஒன்று. அண்ட வெளியில் இது ஒரு தூசி போன் றது. இதனினும் பன்மடக்கு பெரிய ஒள்ளிய உல கங்களைப் படைத்து, காத்து, அழித்து, தன்னுள் அடக்கி மீண்டும் புதிதாகத் தோற்றுவிக்கிறது இறை வன் அருளாணையான சக்தி. அந்தச் சக்தியின் முன் நம்முடைய புலனறிவும், மனத்திறனும், பௌதிக வியன்களும் எம்மாத்திரம்? பரமன் நிர்க் குணனுகவும் உள்ளான்; பராசக்தியுடன் கூடி அளந்த சின்மய குணங்களுடனும் பொலிகிருன். அக் குணங்களனைத்தையும் மனிதன் அறிய முடி யுமா? மனிதன் பார்வை, கேள்வி, அறிவு, திறமை யெல்லாம் அற்பம். இந்த அற்பத் திறமையைக் கொண்டு அகண்டமான பராசக்தியை, இறைவன் அருளை, மனிதன் அறிய முடியாது. குடங்கைவிட்டுக் கடலாழம் பார்க்கமுடியாது! அதனுல், பரமனின் அனந்த கல்யாண குணங்களில் குறிப்பான குண தத்துவங்களை, உருவாக்கிக் கோயிலிலமைத்தனர் நமது நாட்டுச் சன்மார்க்கப் பெரியார்.

## சிவலிங்கத் தத்துவம்

இனி, நமது நாட்டினர் வழிபடும் இரண்டொரு தெய்வ வடிவங்களின் தத்துவத்தைச் சிறிதறிவாம்: கைலை முதல் குமரிவரை, இலிங்காகாரம் வணங்கப் பெறுகிறது. சுத்த சமாதி நிலையில் எனக்குச் சாக்ஷாத்காரமான இறைவடிவம் ஜோதிர்லிங்கமே. எங்கு நோக்கினும், எவரை நோக்கினும் அங்கே, ஒளிமயமான இலிங்கவடிவமாகவே இறைவன் கோயில் கொண்டிருப்பதை மிகத்தெளிவாக நான் காண்கின்றேன். எனக்குமேல் வளைந்த ஆகாசமும் இலிங்கவடிவமாகவே தோன்றுகிறது. எல்லா இடமும் அதன் ஆவுடையாகத் தோன்றுகிறது. நம் சிவாலயங்களின் மூலஸ்தானங்களில், இலிங்கமே முதன்மையாகக் காணும். சிவம் என்ருல் அன்பு, இன்பம் எனப் பொருளாம். அன்பிஞல் அடையும் அன்புமயமான அந்த உண்மை யறிவின்பக் கடவுளுக்கு ஓர் அடையாளமாக இலிங்கம் உள்ளது. ஆன்மா அழுக்கற்று, ஆணவமற்று, நின்மலமாகி, அருள்பெற்று, அறிவுற்று இலயமாகும் ஆலயத்தில், இரண்டறக் கலக்கும் பேரின்பமே இலிங்கமாக உருக் கொண்டுள்ளது. தற்பர நிலையில், இறைவன் தானே தாஞகத் தாக்கற்று, தொழிலற்று, உலகற்று, அசைவற்றிருக்கிருன். சூரியனுடன் சமமாகச் சேர்ந்த கதிர்க்கணம் போல, பராசக்தி அவனுடன் கூடியுள்ளது; அச்சக்திக்கதிர் பரவும்போதே இறைவன் அதன் மூலம் செயலாளியாகிருன். சூரியன் எழுந்ததுமே கதிர்பரவி உலகம் விழித்தெழுந்து, பல தொழில்புரிகிறது. அதுபோலவே இறைவன் சந்நிதி மாத்திரத்தில், அவனருட் கதிர் பரவி அண்டங்கள்

சுழல்கின்றன; பஞ்சபூதங்களும் தன்மாத்திரைகளும் செயல்புரிகின்றன; ஐந்தொழில்களும் நடக்கின்றன. சக்தி சிவம் இரண்டும் பரம் பொருளின் இரண்டு தன்மைகள். அதனுலேதான் "சக்தியாய்ச் சிவமாகி" என்ருர் முனிவர். இந்த இரண்டு தன்மைகளையும் இலிங்க வடிவாகக் கண்டு அமைத்து உபாசனைக்கு எளிதாக்கினர் நம்நாட்டு மகான்கள். இலிங்கம், அனைத்தையும் தன்னுள் லயமாக்கி விளங்கும் இறைவனின் அருவுருத் தன்மையை விளக்குகிறது மகான்கள் அமைத்த கடவுள் வடிவங்களிலெல்லாம் மிகச் சிறந்த தத்துவப் பொருள் கொண்டது இலிங்கமேயாகும். இலிங்கத்தின் ஆவுடை சக்தியை குறிக்கிறது; உலகாடலுக்கு அதுவே ஆதாரம். சக்தியின்மேல் நிவந்து விளங்கும் பாணம் அல்லது இலிங்கம், பரவெளியாகிய சிவனைக் குறிக்கிறது. ஸஹஸ்ரார சித்திபெற்று நாதவிந்து கலையறிந்து, முச்சுடர்கண்டு, இரண்டறக் கலந்த சித்தாந்த முத்தி முதல்வர், நீலமான பீடத்தின் மேல் ஏற்றிய கனற்பிழம்பான இலிங்கம்போலவே பரம் பொருளைச் சாக்ஷாத்கரிப்பர். "நீலமேகத்தில் மிளிரும் மின் போல்" என்று புருஷஸூக்தம் இதய பரமாத்மனை விளக்குகிறது. ஒரு மின்சாரத்தில் இணைத்த இரண்டு மின் ஓட்டங்கள் போன்றன சக்தியும் சிவனும். இந்த ஆழ்ந்த தத்துவங்களையே இலிங்க வடிவாய் அமைத்து, முற்றறிவாளரான அருட்சுடர் ஞானிகள் விளக்கினர்.

## முருகன்

இன்னுமோர் அருள் வடிவத்தைக் காண்போம்—முருகன்! ஆ, முருகன் என்ற பெயரைக் கேட்டதும் நமது உள்ளம் சிலிர்க்கிறது! முருகன் சிவக்

கனல் வடிவம். சிவவீற்றில் எழுந்த வீரக்கடவுள்; நிறைவான அழகு, எழில், இளமை, நறுமணம், இனிமை, அரக்கத் தன்மையை மறக் கருணையால் பிளந்தெறியும் வீறு—இவையே முருகனும். இச்சா சக்தியும், கிரியா சக்தியும் வள்ளி தெய்வானைகள். ஞான சக்தியே வடிவேல்.

## விநாயகத் தத்துவம்

இவ்வாறே நமது சன்மார்க்கங் கண்ட ஒவ்வொரு திருவருள் வடிவிற்கும் தத்துவம் பொருள் நிரம்பி யுள்ளது.

இவற்றையெல்லாம் எதற்காகச் சொல்ல நேர்ந்த தென்றால், விநாயக வடிவின் தத்துவத்தை விளக் கவேயாம். "விநாயகர்" என்றால் தனக்கு மேல் தலை வனற்றவர், ஒப்பற்றவர் என்பது பொருள். விநாய கருக்கு முன்னோன், மூத்தோன், இடர்களைவோன், கணபதி, முக்கண்ணன் என்ற காரணப் பெயர்க ளும் உண்டு. விநாயகர் பிரணவ சொரூபியாவர். அனைத்திற்கும் தாயொலி ஓம். அ + உ + ம் = ஓம். யானை ஓங்காரத்தைத் தெளிவாக ஒலிக்கும். அத னல் விநாயகருக்கு யானைமுகம் என்பர். பிரணவம் அனைத்தையும் தன்னுள் அடக்கி, அனைத்தினும் ஓங்கி நிற்றலின், விநாயகர் எல்லா வணக்க வழிபாடு களிலும் முதன்மை பெற்றார். பரமாத்மாவை, இத யாத்மாவை "ஓம்" என்று தியானிப்பர் அருட்புல வர். விநாயகர் வயிறு பிரமாண்டங்களையும் தன்னுள் அடக்கிய தன்மையைக் குறிக்கிறது. மோதகங்கள் உலகங்களைக் குறிக்கின்றன. "காலம் அனைத்தை யும், எல்லா அண்டங்களையும் உண்டு தீர்க்கும்; நித்தியமான பொருள் ஓங்கார வடிவமான இறை

வனே யாவன்" என்பதை விநாயகர் மோதகம் உண்பது விளக்குகிறது. அவ்வளவு பெரிய கடவுளுக்கு மூஞ்சூறு வாகனமேன்? அவரை மூஞ்சூறு தாங்குமா? எனப் பகுத்தறிவு வினவுகிறது. இறைவன் அண்டாண்டங்களினும் பெரியான்; ஆனல் பருமையே அவன் இயல்பன்று. அவன் உலகினும் பெரியவனயிருப்பது போன்றே, அணுவினும் சிறியவன யிருப்பன். "என் பானை வயிற்றையும், யானை முகத்தையும் கண்டு அஞ்சாதீர்! இச்சிறு மூஞ்சூறு கூடத் தாங்கும்படியாக நான் அவ்வளவு இலேசாகவும் இருக்கின்றேன்" என்று விநாயகர் வடிவம் பேசுகிறது. யோகிகளுக்குச் சத்திநிபாதம் பாயும் தொடக்கத்தில், குண்டலிக் கனல், 'குடுகுடு குறுகுறு' வென்று மூஞ்சூறு போலவே சத்தமிட்டு மேலேறிப் பாயும். அக்குண்டலியின் ஓட்டத்தால் பிரணவம் உதயமாகும். அவ்வோட்டத்தையே மூஞ்சூருகக் காட்டினர் பெரியார். ஓங்காரம் என்னும் விநாயகரின் மூலாதாரம், மூஞ்சூறு போல் ஓடிப்பாயும் குண்டலிக் கனலேறி நிற்கிறது என்பதற்கு அடையாளமாகவே விநாயகருக்கு மூஞ்சூறு வாகனம் ஏற்பட்டது. விநாயகரின் ஐங்கரம் படைத்தல், காத்தல், அழித்தல், ஒளித்தல், தோற்றல் ஆகிய ஐந்தொழிலைக் குறிக்கிறது.

### விநாயகர் உபாசனை

இவ்வளவு தத்துவ இரகசியங்கள் அடங்கிய மூர்த்தியைத் திருமூலர் "ஞானக் கொழுந்து" என்றழைத்தார். அந்த ஞானக்கொழுந்தை உபாசிக்கும் வழி யென்ன? அன்பினல் போற்ற வேண்டும். வெறும் வாய்த்தோத்திரம் போதாது. ஆசை யாண

வமற்று, சலனமற்று, வேறுநினையாத புத்தியை அதன் கோயிலாக்க வேண்டும். புத்தியில் பிரணவ விநாயகப் பெருமானை நிலைநாட்டி அன்பார்ந்த தியானத்தால் போற்றவேண்டும். அவ்வாறு போற்றினால் பிரணவ ரகசியமான திருமந்திரம் நம்முள் உதிக்கும். அதனால் நாம் இறைவனுண்மை, தன்மை, வன்மை, நன்மைகளையடைவோம். மந்திரத்திற்கரசு ஓங்காரமல்லவா? அதுவே திருமந்திரம். அதுவே வேதாகம சாரம். அந்த ஓங்கார விரிவான திருமந்திரத்தைச் சொல்ல பிரணவ மந்திர சொரூபியான விநாயகரைத் தியானிக்கிறார் திருமூலசித்தர். எத்தனையோ அருள் வடிவங்கள் உள்ளனவே! உண்மையாக இறைவனியல் பென்ன? இறைவன் எவ்வாறு விளங்குகின்றான்? என்பவற்றை அடுத்த பாட்டிற் காண்பாம்.

## ரு. ஒருவனே யாவும்

"ஏகம்ஸத்" உள்ளது ஒன்றே என்கிறது ஆரிய வேதம். ஒருத்தனுள்ளான் உலகத்துயிர்க் கெல்லாம் என்கிறது செந்தமிழ் மந்திரம்.

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தானைந்து
வென்றனன்; ஆறு விரிந்தனன், ஏழும்பர்ச்
சென்றனன், தானிருந் தானுணர்ந் தெட்டே!

(1) ஒன்று + அவன் + தானே.—உள்ளது ஒன்று. அதையே அது (தத்) உண்மை (ஸத்) என்று அறிஞர் அறிவர். அதையே அவன், எல்லாம் வல்ல ஒருவன், இறைவன் என்பர் அன்பர்; அந்த இறைவன், தானே அனைத்துமாய், தானே தானாய், ஒப்புயர்வில்லாமல் உள்ளான்.

(2) அவன் + இன்னருள் = இரண்டு—இரவி எழுந்த தென்றால் அதன் கதிரும் அதனுடம் எழுந்து பரவு கிறதல்லவா? கதிர் + அவன் = கதிரவன். கதிரும் கதிரவனும் சொல்லுக்கு இரண்டு; இயல்பில் ஒன்று தானே! அதுபோலே பரமன் தனது அருட் கதிரான பராசக்தியுடன் கூடி இரண்டாகிறான். பரம்பொருளொருவனே இவ்வாறு இறைவன் - இறைவி, ஆண்டவன் - அருள், தலைவன் - தலைவி, நியாமகன் - ஆணை, பரமன் - பராசக்தி, அப்பன் - அம்மையாக விளங்குகிறான். அதனாலே தான் உயிர் களெல்லாம் ஆண் - பெண் ஆகிய இரண்டுருக் கொண்டு விளங்குகின்றன. சிவன் ஆண்; சக்தி பெண். சிவனும் சக்தியும் சமமான சம்பந்தம் உடைய இரண்டு தத்துவங்கள். சிவன் அமைதி, சாந்தம், உறுதி, பற்றற்ற சாட்சி, ஆடலை நுகர் வோன். சிவன் இன்பத்திற்காகச் சக்தி, உலகமாக் விளையாடுகிறாள். சிவம் சத்து, சக்தி, சித்து; சத்தும் சித்தும் சேர்ந்த ஆனந்தத்தில் உலகமும் படைப் பும் தோன்றிப் பரவி விளங்கி விளையாடும். பரனும் - பரையும் போலவே ஆண்மையும் பெண்மையும் உலகை வளர்க்கின்றன. உயிர்க்குயிரான ஒருவனே இரண்டாகப் பொலிகிறான் என்க.

(3) மூன்றினுள் நின்றனன்.— சமயங்களெல்லாம் முப்பொருளை ஒப்பும்; முப்பொருளாவன: (1) இறை (2) உயிர் (3) தளை. இதையே பதி, பசு, பாசம்; கட வுள், ஆன்மா, உலகம்; சீவசகபரம்; இறை, இயற்கை இன்னுயிர் என்பர். சத்து சித்து ஆனந்தம், (உண்மை அறிவு இன்பம்) ஆகிய மூன்று தன்மை யனான ஒரு பரமனே எல்லாம் வல்ல பரமாத்மாவாகவும்,

எங்கும் விரிந்த விசுவாத்மனாகவும், எல்லா உடல்களி லும் உயிருக்குயிராகக் கோயில் கொண்டுள்ள ஜீவாத் மாவாகவும் விளங்குகிறான். பிரகிருதி (இயற்கை) புருஷன் (ஆன்மா) இரண்டையும் தாங்கி அனைத் தினும் ஓங்கிநிற்பவன் புருஷோத்தமனான இறைவன். உலகம் சக்தி விலாசம், பராசக்தி ஆடல்; உலகம் இறைவன் திருவிளையாட்டரங்கம் என்பதைச் சைவம் வைணவம் இரண்டும் ஒப்பும். அவ்விளையாட்டை அனுமதித்து, தாக்கற நின்று தாங்குகிறான் சக்தி நாதனான இறைவன்; அவனே உலகநாதனாகி எண் ணிறந்த குண பேதங்களால் அதை ஊக்குகிறான். இவ்வுலக விளையாட்டிற்குப் பாத்திரங்கள் யார்? கல், புல், பூச்சி, புழு, விலங்கு, மக்கள், தேவர் எல் லாந் தான், எல்லாருந்தான். அனைத்திலும் அருள் மயமாக, சின்மயமாக அவனே கோயில் கொண் டிருக்கிறான். கோயில் கொண்டு என்ன செய்கிறான்? ஆன்ம பரிணாமத்தை ஊக்குகிறான்; புல்லறிவி லிருந்து புலனறிவிற்கு, புலனறிவிலிருந்து மனத் தறிவிற்கு, அதனின்று அருளறிவிற்கு ஈடேற்றி, இறுதியில் ஆன்மாக்களைப் பக்குவமறிந்து தன் னறிவீந்து ஆட்கொள்கிறான். இதற்காகவே அவன் தனது அருள் மூலம் எல்லையில்லாத விளையாட்டுத் தலைவனாக விளங்குகிறான். அவன் மூன்றில் நிற்கும் காரணம் அறிந்தோம். இனி அவனியல்பை உண ரும் நிலை எது என்று காண்பாம்.

(4) நான்கு உணர்ந்தான். 'நான்கு' என்பது ரிக், யஜுஸ், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்கள் என்பர். நான்கு வேதங்களும் அவனையே முதல்வனாக உணரும். வேதம் என்றால் அறிவு எனப்

பொருளாம். அந்த அறிவு, புலன், மனம், புந்தியைக் கடந்த அருளறிவாம். இறை யுணர்வால் எழுந்த ஒளியறிவே வேதம். எதை அறிந்தால் எல்லாம் அறிந்ததாமோ அதுவே கடவுளறிவாம். அந்த அறிவினெழுந்த அநுபூதி வாக்குகளே திருமுறை நூல்களும், வேத ஆகமங்களுமாம். நான்கு வேதங்களும் ஓம் தத்ஸத், பரநாதமாகிய ஓங்காரமாக எங்கும் நிறைந்த அதுவே (பரம் பொருளே) உண்மை என முறையிடுகின்றன. ஆனால் வேத வேதாந்தங்கள் சப்தப் பிரமாணங்களேயாகும். வேதத்தைத் தலைகீழாக ஒப்பித்தாலும் வேதங்கடந்த, வாய்மனங் கடந்த அந்த ஒருவனை உணர முடியாது. அவனை உணருவதற்குச் சாதனம் செய்து ஆன்மாவைப் பக்குவப்படுத்த வேண்டும். (1) விழிப்பில் (சாக்கிரம்) நாம் புலனுணர்வு கொண்டு திரிகிறோம். புலன்களுடன் அலையுமட்டும் ஆன்மா இறைவ னுணர்வைப் பெறமுடியாது. (2) கனவில் (சொற்பனம்) மனவுலகில் நாம் சஞ்சரிக்கிறோம். தூலவுலகைவிட மனவுலகம் மிகப் பெரிது. உடலைவிட மனம் வெகு விரைவாகத் தாவித்திரியும். நாம் உறங்கும்போது கனவு காண்கிறோம். சித்தத்தில் பதிந்த நினைவுகளெல்லாம் கனவுகளாகக் கிளம்பி நாடகமாடுகின்றன. இந்தச் சித்தச் சலனம் இருக்குமட்டும் ஆன்மா கடவுளுணர்வெய்தாது (3) ஆழ்ந்த உறக்கத்தில் (சுழுத்தி) புலன்களின் சேட்டை யொடுங்கும். ஆனால், இது ஒரு மறதி நிலையே ஒழிய வேறில்லை. இதனால் அருளுணர் வெய்தாது. (4) நான்காவது துரியம். மனம் புத்தியில் ஒடுங்கி, புத்தி இதயத்தில் அடங்கி, இதயம் இறையுணர்வில் லயிப்பது துரிய நிலை. நான்காவதாகிய

அத் துரிய நிலையே இறைவனை யுணரும். அதையே நான்கு (துரிய நிலை) உணர்ந்தான் என்க.

(5) ஐந்து வென்றனன்.—உலகிற் காணும் எல்லாப் பொருள்களும் பூதலயமாகின்ற மாயா சம்பந்த முள்ளவையே. ஐம்பூதக் கூடுதாங்கி உயிர்கள் நடமாடுகின்றன. விண், வளி, தீ, நீர், மண் ஆகிய பஞ்ச பூதச் சேர்க்கையே உலகம். ஒலி, பரிசம், உரு, சுவை, மணம்—இவை இப் பஞ்சபூதத் தன்மைகள். இவை தன்மாத்திரைகள் எனப்படும். பூதமும் தன் மாத்திரையும் இயற்கையுடலை யாக்குகின்றன. அதில் பத்து இந்திரியங்களும் அந்தக் கரணங்களும் விருப்பு வெறுப்பாகிய குணதொந்த விகாரங்களும் சேர்ந்துள்ளன. இவை யனைத்தும் இயற்கையுடல் அல்லது க்ஷேத்ரம் எனப்படும். இவ்வுடலுள் உயிர் குடி கொண்டுள்ளது. அந்த உயிருட் புகுந்துறை பவன் அருளிறைவன். ஆனல் அவன் ஐம்பூதக் கூண்டிற் கட்டுப் பட்டவனல்லன். அவன் ஐம்பூதங் களையும் வென்றவன்; பூதகணங்களின் தலைவன்; ஐம்பூத உடல் அவனன்று. அவன் உடல் இடங் கொண்ட உடலோன், தேகி, ஆத்மநாதன், உயிர்க் கிறைவன். அதனலேதான் அவனை ஐந்தும் வென் ருன் என்ருர். ஐம்பூதம் தன்மாத்திரை ஐந்து ஞானேந்திரியம் ஐந்து கர்மேந்திரியம்—இவை யனைத் தையும் வென்று அவன் நித்திய முத்தனகச் சர்வ சுதந்தரனக விளங்கும் முதல்வனவான்.

(6) ஆறு விரிந்தனன்:—அவனே ஆறு சமயங்களி லும் விரிந்தனன்.

## ஆறுசமய விளக்கம்

ஆறுசமயங்கள் நான்கு உட்பிரிவுடையன:-

அகச்சமயம்:- பேதவாத சைவம், பாஷாணவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுவர விகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் ஆக ஆறு.

அகப்புறச்சமயம்:- பாசுபதம், மாவிரதம், காபாலம் வாமம், வைரவம், ஐக்கியவாதம் ஆகிய ஆறு சைவ சமயங்கள்.

புறச்சமயம்:- தருக்கம், மீமாம்ஸை, ஏகான்ம வாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்ரம் ஆக ஆறு.

புறப்புறச்சமயம்:- உலகாயதம், சூனியவாத பௌத்தம், யோகாசார பௌத்தம், சௌத்திராந்திக பௌத்தம், வைபாடிக பௌத்தம், ஆருகம் ஆக ஆறு.

இந்த ஆறு மதங்கள் இறைவனை அல்லது இயற்கையை நம்பும். இயற்கையிலுள்ளவனும் அவனே. ஆதலின் அவனே ஆறு சமயமாக விரிந்தான்.

இன்னும் சைவம், வைணவம், சாக்தம் கௌமாரம், காணுபத்யம், சௌரம் என்று ஆறு வகையாகக் கடவுள் வணக்கம் செய்யும் சமயங்களுமுண்டு. அவை முறையே சிவன், விஷ்ணு, சக்தி, குமரன், கணபதி, சூரியன் ஆகிய கடவுளரைத் தொழும். இக்கடவுளெல்லாம் ஒருவன் மயமே.

ஆறு என்றால் மந்திரம், வன்னம், பதம், தத்துவம், புவனம், கலை ஆகிய ஆறு அத்துவாக்கள் என்

பர். ஆனால் இறைவன் அத்துவாதீதன். அறு சமயம் என்பதே இங்கே பொருந்து மென்க.

(7) ஏழு + உம்பர் + சென்றனன் — உம்பர் என்றால் உணர்வு நிலைகள்; சேதனப் பூமிகள். உடல், உயிர், மனம், விஞ்ஞானம், ஆனந்தம், சித்து, சத்து ஆகிய ஏழு சேதன பூமிகளிலும் அவனே சென்றுறைந்தான். அவனே தூலமாகிய இயற்கைப் பொருள்களிலும், உடல்களிலும் கரந்துறைகிறான்; அவனே உயிர்களுக் கெல்லாம் உயிராய் உயிர்க்கிறான்; அவனே மனங்களிலெல்லாம் நினைப்பவன் ஆனான்; அவனே மனங்கடந்த விஞ்ஞானத்தில் தெள்ளறிவானான்; அவனே ஆனந்தத்தில் இன்பமானான்; சித்தில் அருளுணர்வானான்; சத்தில் உண்மையாக உள்ள பொருளானான். அவனே கல்லில் உறங்குகிறான்; புல்லில் பரிசவுணர்வு கொண்டு தளிர்க்கிறான். விலங்கில் புலனறிவுகொண் டுலாவுகிறான்; மக்களில் மனத்தறிவு கொண்டு நினைக்கிறான்; செயலாற்றுகிறான். இதுகாறும் ஜீவபரிணாமம் மனோமயத்தையே எட்டியுள்ளது. பரிபக்குவமாகி, விஞ்ஞான நிலயத்தை எட்டினால் அந்நிலையிலிருந்தே இறைவன் விளையாட்டை ஆன்மாக்கள் காணமுடியும். அந்நிலையிலே மனமாய வேறுபாடுகளும் மயக்கங்களும் ஒழியும். அந்நிலையிலேயே எல்லா வுலகிற்கும் இறைவன் ஒருவனே, எல்லா வுடலும் இறைவன் ஆலயமே என்னும் உண்மை விளங்கும். அந்நிலையில் உயிர்களெல்லாம் இறைவன் திருமேனியாக விளங்கும். அதைத் தாண்டி ஆனந்த நிலையில் கவலை, துன்பம், இருவிகாரப் புயல்கள் அனைத்தும் மறைந்து இறையின்பம் தளிர்க்கும். அதைத் தாண்

டிய சித்துணர்வில் அவனருள் விளக்கமாகும். அவனருட் சக்தி பாய்ந்து புதிய அறிவு மலரும். அந்த அறிவைக்கொண்டு மேலேறினல் சத்துலகம் அல்லது சின்மய சேதனம் ஒளிரும். அதிலேதான் இறைவன் உண்மை விளங்கும். அதிலேதான் ஓம் தத்ஸத்; உள்ளவன் இறைவனே; அவனே உண்மை; மற்றவெல்லாம் அவனருள் விளக்கமே என்பது புலனுகும்.

உயிர்களுள் மன்னி, இந்த எழுநிலைகளிலும் அதைச் செலுத்திப் பக்குவமாக்கி முடிவில் தன்னுடன் அவற்றை இரண்டறக் கலக்கச் செய்வோன் இறைவனே. அதற்காகவே அவன் எழுநிலைகளிலும் சென்றுள்ளான். ஒவ்வொருவருள்ளும் இந்த எழுநிலைகளும், ஏழு உம்பர்களும், ஆதார வடிவாக அமைந்துள்ளன; அவையாவன; (1) மூலாதாரம் (2) சுவாதிட்டானம் (3) மணிபூரகம் (4) அனுகதம் (5) விசுத்தி (6) ஆக்ஞை (7) ஸஹஸ்ராரம். இவற்றின் விளக்கமெல்லாம் "யோகசித்தி, யோகவியலில்" காண்க.

(8) தான் + இருந்து + உணர்ந்து + எட்டே — மேற்சொன்ன ஏழு நிலைகளையும் கடந்த எட்டாவது நிலையுள்ளது; அது அப்பாலுக்கப்பாலான துரியாதீத நிலை; சுயம்பு நிலை. அந்நிலையே, நிஷ்'ரபஞ்சம், நிர்விகாரம், சதசத்தாதீதம், இராப்பகலற்ற நிலை, தானுன தன்மய நிலை. அந்நிலையை ஜீவபரிணமம் எட்ட முடியாது. அது சிற்பரங் கடந்த தற்பர நிலை. அதுவே பராத்பர நிலை. அந்நிலையில் தானே தானுக இருந்தபடி இருந்து தானன்றி வேறுணர்வில்லாதிருக்கிறுன் இறைவன். இறைவன் எட்டாகி, அட்டமூர்த்தியாகி, (5 பூதம் + இரவி + மதி + இயமானன்)

அருள்மூலம் யாவுமாயிருந்து எல்லாம் புரிகிறான். எனினும், அவன் யாதிலும் கட்டுண்டவனல்லன், அவன் சுதந்தரன். ஏழ்படி கடந்த பராத்பரன்.

" இலகுபரா பரமாய்ச்சிற் பரமாய் அன்பர்
இதயமலர் மீதிருந்த இன்பத் தேவே."

என்றார் அருட்சோதி வள்ளலார். பரமன் அத்துவாதீதனாய் - அனைத்துமாய் - அனைத்திற்கும் அப்பாலாய் நிற்கும் எட்டாவது நிலையை அருட்பிரகாசர் அடியில் வரும் திருவாக்கால் தெளிவுறுத்துகிறார் :—

" மந்திரமாய்ப் பதமாகி, வன்ன மாகி,
வளர்கலையாய்த் தத்துவமாய்ப் புவன மாகி,
சந்திரனாய், இந்திரனாய், இரவி யாகித்,
தானவராய், வானவராய்த் தயங்கா நின்ற
தந்திரமாய், இவையொன்றும் அல்ல வாகித்
தானாகித் தனதாகித் ' தான்நான் ' காட்டா
அந்தரமாய் அப்பாலாய், அதற்கப் பாலாய்,
அப்பாலுக் கப்பாலாய் அமர்ந்த தேவே!"

ஆ! பரம்பொருட் பெருமையை யாரால் அறிய முடியும்! யாங்கும், யாதுமான அவனது அருள் விரிவையும், ஏழு சேதன நிலைகளையும் கடந்து எட்டாவது தற்பர நிலையில் அவன் அப்பாலுக்கப்பாலாய் நிற்கும் பரம்பர நிலையும் யாரால் அறிய முடியும்? அவ்வுண்மையைத் தெளிந்தே திருமூலர் அவையடக்கத்தில்,

" ஆர்அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
யார்அறிவார் அந்த அகலமும் நீளமும்."

என்றார். ' அகலம் ' என்றால் யாதுமான அவனருள் விரிவு ; ' நீளம் ' என்றால் ஏழ் நிலைதாண்டி உயர்ந்த

எட்டாவது தற்பர நிலையாம். அத்தகைய இறைவன் பெருமையைச் சிந்தித்தலே நமக்கு உய்வாகும்.

## கூ. இறைவன் பெருமை

நான் கூறும் இறைவன் சாமானியனல்லன்; எல்லா வுயிர்களையும், தென்றிசைக் கோமானாகிய கூற்றுவன் அழிப்பான். அப்படிப்பட்ட கூற்றுவனைக் காலால் உதைத்த நித்தியன், பிறப்பு இறப்பற்ற பெரியசாமி, ஒருவனே; அவனையே நான் கூறுகிறேன். அவனையே போற்றி இசைக்கிறேன். அவன் புனிதன், மாசறு தூயன்; உயிர்களுக் கெல்லாம் உயிராய் உள்ளவன்; நாற்றிசை யுலகிற்கும் நல்ல தாயாகிய பராசக்தியின் நாதன். அவன் தனது அருள் விரிவான உலகுயிர்களுடன் ஒக்க நின்றான்; கணக்கற்ற தேவர்கள் அவனைச் "சிவ சிவ" என்று ஏத்துகின்றனர். அவன் அனைவருக்கும் இறைவன். எல்லா ஆறுகளுக்கும் கடல் பொதுவான புகலிடமா யிருப்பதுபோல, எல்லாச் சமயங்களுக்கும் அவன் பொதுவானவன்; அவன் சமயங் கடந்த மோனன். ஒரு சார்பிலிருந்து வாதமிடுவோர் அறியாத பரமன் அவன். அவனை நான் எப்படிப் போற்றுகின்றேன் என்பீர்களோ? பேச்சினல் அன்று; மனத்தை ஒடுக்கி, உள்ளத்திற் புகுந்து, அங்கே நின்று நிலைத்து, தியானத்தால் அவனை வணங்குவேன்; புக்கு நின்று, உன்னிப் போற்றி செய்வேனே!

உலகில் விளங்கும் உண்மைப் பொருள் அவனே; பிரபஞ்ச மரத்திற்கு விதை அவனே. எனக்குப் புகலிடம் அவன் மலரடியே. "வா என்

திருவடி சேர்!" என்று எனக்கொரு வழி காட்டி,
இடரின்றிப் புகலிடத்திற்கு என்னைப் போகவிட்
டான் அவன். அவனை நான் பகலிற் பணிகிறேன்;
இரவிலும் யோக நித்திரை கொண்டு அவனையே
பணிந்தேத்துகிறேன். அதனால் முக்குணப் போர்க்
களமாகிய (இகலிடம்) இவ்வுலகில் அஞ்ஞான இருள்
நீங்கி, சிவஞான ஒளி சேர்ந்து இன்புற்றிருக்
கிறேன்.

நானும் எல்லாத் தெய்வங்களையும் பார்த்தேன்.
சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடிப்பார்த்தாலும்
கிடையாது; அவனுக் கிணையானவர் யாருமில்லை;
அவனையன்றி அமரரும் இல்லை; அவனன்றிச்
செய்யும் அருந்தவமில்லை; தவம், தவசி, தவக்கனல்,
தவப்பயன், சக்தி, சாதனம், சித்தி எல்லாம்
அவனே; அயன், அரி, அரன் ஆகிய முத்தொழி
லாளருக்கும் அவனன்றி யாதும் இயலாதாம். ஒப்
புரைக்கத்தக்க மேற்சொன்ன மூவருக்கும் அவன்
மூத்தவன், அவரினும் பெரியன்; தனக்கிணையில்
லாத் தலைவன்; "அப்பா, நீயே துணை!" என்றுருகி
யழைக்கும் அன்பருக்கு அவனே தந்தையாயிருந்து
பாதுகாப்பளிப்பான். அவன் மாசுபடியாத பொன்
போன்ற சுயம்பிரகாசன்; அவனே போதகுரு;
புவனங் கடந்தவன்; அனைத்துலகையும் படைத்
தும் தாக்கற்றிருப்பவன். அவனன்றி எனது ஊரா
கிய சுத்தான்ம நிலயத்திற் புகும் வழி யறியேன்.
அவனருளே தாரகமாக நான் வாழுகிறேன்.

## ஏ. ஈசனியல்பு

அவன் எப்படிப்பட்டவன்? பாபங்களை எரிப்பதில் தீயினும் வெய்யன்; வெப்பந் தணித்து, மாசு நீக்கி, அன்பர் மனங்குளிர, உடல் குளிர, ஆட்கொள்வதில் புனலினும் தண்ணியன். அவன் வஞ்சமற்றவன்; நாம் குற்றம் செய்தாலும் மனத்தில் வைத்துக்கொள்ளமாட்டான். அவன் குழந்தையை விட இனியவன்; நல்ல அன்பருக்குப் பக்கத்தில் நெருங்கியிருந்து துணை செய்பவன்; அவன் தாழ்சடையன்; எம்பிரான்; தாயினும் நல்லவன். இவ்வளவு நல்லவனாயினும் அவனருளின் பெருமையை அறிவார்களில்லையே!

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்,
ஆயினும் ஈசன் அருளறிவார் இல்லை;
சேயினும் நல்லன்; அணியன் நல்லன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ் சடையோனே!

பொற்சடையானாகிய அவன் பெயர் "நந்தி" அவனே நான் தொழும் இறைவன். அவனையே அனைவரும் தொழுவர்; அவன் யாரையும் தொழுவதில்லை; அவனே முதல்வன்; அனைவர் வணக்கத்தையும் ஏற்பவன்.

என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படு வாரில்லை தானே!

எல்லையற்ற உலகை அவனே அருள்வல்லமையால் தாங்குகிறான்; அவன் உலகிற் சிக்காமல், அனைத்திற்கும் மேலான பரமாகாசமாய் விரிந்து நிற்கிறான். நெருப்பு, சூரியன், குளிர்மதி அவனே! விண்ணும் அவனே; விண் பொழியும் மழையும்

அவனே. அவனே தடவரை; அவனே தண் கடல். அயலே பார்த்தாலும் சரி, புடையே நோக்கினுஞ் சரி; ஆதி சிவன்போல எம்மைக் காப்பாற்ற இயலும் பெருந் தெய்வம் யாதொன்றும் இல்லை. எல்லா அத்யாத்ம முயற்சிகளும் அவனையே முடிவாகக் கொண்டன. அவனே அருள் மழைபொழியும் கருணை முகிலாவன். எனது கண்ணுதலான், ஒருமையுள்ள அன்பில் நிலைத்திருக்கிறான். அவனை முதல்வனென்றறியாமல் எத்தனையோ தேவர் இறந்தனர்; எத்தனையோ பேர் மண்ணில் பிறப்பர், பிறகு வானுலகெய்துவர். ‘ இவன் நமது இறைவன்; இவனிடம் காதலானல் நமக்கு இந்தப் பிறவித்துயர் ஒழியும் ’ என்றறியாமல் அவர்கள் அப்படி உழல்கின்றனர். மண்ணையும் விண்ணையும் அளந்த தெய்வமும் அதற்குமேல் பரமாகாசத்திலுள்ள பரமனை அளக்க முடியவில்லை. கண் அளக்குமிடமெல்லாம், பார்க்குமிடமெல்லாம், அவன் நீக்கமற நிற்கிறான்; எனினும் ஊனக்கண்ணைக் கடந்து அப்பாலுக்கப்பாலா யிருக்கிறான்; கண்ணளந்து, எங்கும் கடந்து நின்றானே. சிருட்டி திதித் தலைவரைக் கடந்து அவர்க்கப்புறம் நிற்கும் கடவுள் எங்கும் உலக விளையாட்டைக்கண்டு சாட்சியாக நிற்கின்றான்; கடந்து நின்றான்; எங்கும் கண்டு நின்றானே. அவன் ஆதியாய், அரனாய், உடலுள் நிற்கும் அறிவோனாய், க்ஷேத்ரக்ஞனாய் விரிந்து நிலவுகிறான். அவன் அருட்சோதியாய், சுருங்காத தன்மையுடன், நீதியாய், நித்தியமாய் நின்று நிலவுகிறான். மங்கைபாகன், கொன்றைச் சடையன் ஆகிய சிவனை அமரரும் தேவரும் எப்போதும் யாதிலும் வைத்து, நினைத்து, உளங் களித்து அவனது தெய்விகத் தன்மைகளைப் பயில்வர்.

## அ. ஈசன் உறவு

வெண்காயமும் வெள்ளைப் பூண்டும் (காயம் இரண்டு) கலந்து கொதித்தாலும் அசல் கஸ்தூரியின் மணம் அவற்றிற்குமேல் வீசுமல்லவா? அதுபோல, தேசமெல்லாம் கலந்து, ஒரு தேவனை, அரசனை, இறைவனைத் தேர்ந்தெடுத்துப் போற்றிப் பணிந்தாலும், எல்லாத் தேவர்க்கும் இறைவனான பரமன் உறவிற்கு ஈடாகாது. அவனே போற்றத் தக்கவன்; அவனே தலைவன்; முதல்வன்; மற்றெந்தத் தலைவரும், தேவரும் அவனுக்கு ஈடாகார். காயம் கஸ்தூரியாகுமா?

> தேசங் கலந்தொரு தேவனென் றெண்ணினும்
> ஈசன் உறவிற்கு எதிரில்லை தானே.

எவ்வளவு பெரியாரானாலும் உலகோர் உறவு கைத்துப்போகும்; சிவனுறவே, சிவக்கலப்பே, சிவமணமே என்றும் நமக்கு நிலையான வழிகாட்டும். அதனுடன் வேறெதையும், எவரையும், எவ்வுறவையும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாது! செல்வரை இறைவரென்பீரே? சிவச் செல்வத்தினும் செல்வமுண்டோ? அளகேசன் நிதிபதியானது சிவனருளாலன்றோ? சிவனை நோக்கி அவன் தவம் புரிந்து அளகேசனானான். எல்லாச் செல்வத்திற்கும் ஒரு காலம் அழிவுண்டு; இறப்பையும் பிறப்பையும் முன்னே படைத்தான் இறைவன். அவன் அறநெறி வழியேதான் எல்லாம் நிகழும். இடியும், முழக்கமும் உருத்திரன் உருவமே. இடிமுழக்கம் அவனை ஒன்றும் செய்ய முடியாது; அவன் மலைபோன்று உறுதியுள்ளவன்; நித்தியன். மதமென்

னும் யானையைப் பிளந்தான் எம் இறைவன். அவனை வழிபட்டாலேதான் தேவருக்கும் பிறவித் துயர் ஒழியும். பிறவித் துயர் தீர்ப்பவன் அவன் ஒருவனே. அவனையே புகழுமின்! அன்பு பெருகிப் பெருகி அவனைக் கூடலும் இயலும். அவனைக் கூடினார்க்குப் பிறப்பிறப்பில்லை.

சிவன் செந்தீவண்ணன்; சர்வவல்லவன்; சக்தி முதல்வன். அவன் அருட்கனல் பெற்ற அகத்திய முனிவன் நடுநிலை சரிந்து கெடும் உலகைச் சம நிலைப்படுத்தினான்; சிவன் ஆணவ அரக்கனைக் கொல்லச் சூலமேந்தினான்; மும்மலமான திரிபுரத்தை எரித்தான்; (முப்புரமவாது மும்மலகாரியம்) பிரமகபாலந் தாங்கினான்; காலனைக் காலால் உதைத்தான்; காமனை நெற்றிக் கண்ணால் எரித்தான்; அகந்தை கொண்டு கைலையைப் பெயர்த்த இராவணனை ஒரு கட்டை விரலால் நெரித்தான்; அன்புகொண்டு சாமகானத்தால் துதித்த இராவணனுக்கு வாளும் நீண்டநாளும் கொடுத்தான். தேவர்க்கு அபயமீந்தான்; தனது அருளை மதியாத தக்கன் செருக்கைத் தணித்தான், துணித்தான்; பொல்லாரைப் பொன்றச் செய்தான். ஊழிக்கடல் பொங்கியபோது தேவருக்கு அபயமீந்தான்; அருவரையாயிருந்து ஆக்கியளிக்கும் இருவரைக் காத்தான்; திருமாலுக்குச் சக்கரமளித்தான். பிரமனுக்கு வாளீந்தான்; அருட்ஜோதி மலையாக நின்ற சிவனை ஆக்கியளிககும் சகதிகள் முடி, அடி காணமுடியவில்லை. சிவன் தேவதேவன், மகாதேவன்; அட்டமூர்த்தி. தானே அண்ட பகிரண்ட மடங்கலுமாய் நிற்பவன். சிவன் உண்மை, அறிவு, இன்பம், அருளிறைவன், ஊழிக்கதிரோன், ஒருவன் ஒப்பிலான்.

## கூ. அல்லும் பகலும் அருள்வான்

தியானித்தால் அவன் நமது மனத்தில் எழுகின்றான்; நாம் நினைத்ததை அறிகின்றான்; பிறவித் துயரினின்றுந் தப்பிப்பிழைக்க உறுதிபூண்டு அவனது திருவடிபற்றி நிற்கும் அன்பரைக் காப்பாற்றுகின்றான். எனினும், அவனை மனிதன் நினைப்பதில்லை! உள்ளன்பு செய்யாமல், ஆசையாணவங்களால் அல்லற்பட்டு, "இறைவன் என்பால் அன்பில்லாதவன்" என்கிறார்கள்! அந்தோ, மனிதரே, அவன் தேவர்க்கிறைவன், மகாதேவன்; எல்லாம் வல்லவன். அவனை 'இல்லை' என்று மறுக்காதீர். அவன் அல்லும் பகலும் ஆன்மாக்களுக்கு அருள்புரிகிறான்.

இல்லென வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் றானே.

அவன் மாசறுதூயன்; அவனையே போற்றி, இசைத்துப் புகழ்ந்து, அவன் திருவடித் திறத்தைத் தெளிமின்! உங்கள் செல்வத்தைச் சிவனடிக்கே நிவேதிமின்! சிந்தை மயக்கறுமின்! அவனன்றி வேறில்லை. எல்லாம் அவனுடைமையே யென்று தெளிந்தோர் உடனிருந்து, அவனே மேன்மேலும் அவர்களை வழிநடத்துவான்.

மாந்தர்காள், பிறவித் துயரைப் போக்க வேண்டுமானால், அத்துயர் கடந்த கடவுளைத் தொழுமின்! பிஞ்ஞகனான சிவபிரான் பிறப்பற்றவன்; இறப்பற்றவன்; பேரருளாளன்; அவன் எதைத் துறந்தாலும் அடியார்க்கு அருளுவதைத் துறவான்.

அவன் எல்லாருக்கும் இன்பமே அருளுவான். அவனையே தொழுமின்! அப்போதுதான் மறவாமல் உலகை ஆட்டும் மாயாசக்தியை அறிந்து, அவற்றினின்றும் தப்பிப் பிழைப்பீர். (மாயா+விருத்தம்=மாயையின் அறிவு.) இறைவன் உங்களைத் தொடர்ந்து நிற்கிறான். அவனை யாரும் இடைவிட்டு நிற்கமுடியாது. சுற்றும் பாரகம் முற்றிலும் அவன் பரந்து நிற்கிறான். ஆனால் அதில் ஒட்டாமல் அனைத்தையும் கடந்து தாக்கற்றிருக்கிறான். 'அப்படியானால் அவனை எவ்வாறு அடைய முடியும்' என்று கவலற்க! உங்கள் இதய கமலத்தில் அவன் திருவடியூன்றி நிற்கிறான். அவனைத் தொழுமின்! புண்ணியமாம், பாபம் போம். அவன் அந்தமில்லாதவன். சிவந்த தாமரை போன்றது அவன் முகம்; அவன் அந்திவண்ணன். அவனருள் நமக்கெய்தும் என்று நம்பி, நாளும் சிவனை வணங்கினேன். அவன் என் புந்தியினுள்ளே புகுந்து நின்றான். அன்பு முற்றினால் அவன் இணங்கி நிற்பான். அவன் தோன்றாத் துணைவன்; எங்குமிருப்பான்; முன்னிருப்பான்; பின்னிருந் துதவுவான்; அவன்முன் இந்திரனும் வணக்க ஒடுக்கமாக நிற்பான். அவனையே வணங்கி, அவன் இச்சை வழியே நிற்கும் அன்பர்க்கே அவன் வழித்துணையாவான்; வணங்கி நின்றார்க்கே வழித்துணை யாமே. "தலைவா, உன்னைத் தழுவிக் கொள்ள நான் நாணேன்; உன்னினும் அரிய உறவு எனக்கில்லை; என்கண் காண நின்றருள்!" என்று இறைஞ்சும் நேர்மையான நல்லடியார் மனத்திற் புகுந்து அவர் வாழ்விற்கே ஆதாரமாய் அமர்ந்திருப்பான் இறைவன். இறைவனை முறையிட்டழைக்க வேண்டும்.

வாடும் பயிர்கள் வானை அழைக்கின்றன. "இதோ வந்துவிட்டேன், பசுஞ் சேய்காள்!" என்று கருணை மழை பரிந்து பொழிகிறது. அதுபோலே இறைவனும் அருளுவான்; நம்மைக் கூவிக் கொள்வான்; தயக்கம் வேண்டாம். ஆனால் கேவலம் உலக சுக போகாதி வரங்களுக்காக அவனை அழையாதீர். கன்றைத் தாய் அழைப்பதுபோல, இன்று நான் அவனை அழைப்பது எதற்காக? ஞானங் கருதியே. அவனிடம் நான் வேண்டுவது பொருட்செல்வமன்று; அருட்செல்வமே; ஊனச்செல்வமன்று; ஞானச்செல்வமே; புவிச்செல்வமன்று; தவச் செல்வமே.

> ஆன்நின் றழைக்கும் அதுபோல் எந்நந்தியை
> நான்இன் றழைப்பது ஞானங் கருதியே!

அனைத்தின் உள்ளும் அவனே; மண் அகம், வான் அகம் (Ether), விண் அகம், (Heaven) வேத அகம், பண் அகம் அனைத்தும் அவனே; பண்ணில் இசையாயிருப்போன் அவனே; அவ்விசையால் அடியார் கொண்டாடும் ஆண்டவன் அவனே. அவனுக்கே நான் காதலானேன். எப்படி? புறஞ் செல்லும் கண்ணை அகத்தே திருப்பி, பார்வையை உள்ளே ஊன்றி, அவனை உள்ளத்தில் காதலித் தேன்; கண் அகத்தே நின்று காதலித் தேனே.

## ௧௦. அருள் பெறலாம்

நம்பிரானாகிய சிவபெருமான், தேவர்பிரான், பத்துத் திசையும் மேவும் பிரான், எங்கும் பரவி நிற்பவன்; விரிநீர் உலகங்கள் ஏழையும் தாண்டி

நிற்கும் தனி முதல்வன். ஆ, அவன் தன்மையை அறிவார் இல்லையே! அவன் அருளைப் பாடுந் திறமையும் நமக்குண்டோ? அவன் அருட்பெருமை பாட்டில் அடங்குமோ? இப்பண்டுலகில் எத்தனையோ சமயங்கள்; அவற்றிற்கு எத்தனையோ கோயில்கள்! அக்கோயில்களைச் சேர்ந்த விதிநியமங்கள், ஐதிகங்கள் எல்லாம் மிகப்பலவாம். இவ்வளவு விதிகளைச் செய்தும் மாந்தர் இறைவனுண்மையை உணரார். எத்தனையோ கவிகள் இறைவன் புகழைப் பாடுகின்றனர். அவர்கள்கூட இறைவனை யுணரும் மதிப்பொலிவில்லாமல் "அவனை அறிய முடியவில்லையே!" என்று நெஞ்சில் வாடுகின்றனர்.

துதிபல தோத்திரம் சொல்லவல் லாரும்,
மதியிலர் நெஞ்சினுள் வாடுகின் றாரே!

இறைவன் தேவருக்கு ஒரு மெய்ந்நெறி அருளினன்; அந்நெறி அவனது நாமரூபத்தை வற்புறுத்துகிறது. கவரிமான் இயல்பான கஸ்தூரி மணம் வீசுவதுபோல, என் அந்தக் கரணங்களுள் சிவமணம் வீசுகிறது. இருந்தும், நடந்தும் நிறைந்த சுடர்போன்ற அவனது நாமத்தை நான் புகழுகின்றேன்.

ஆர்ந்த சுடர்அன்ன ஆயிர நாமமும்
போந்தும் இருந்தும் புகழுகின் றேனே!

அதேபோல் எல்லாரும் இறைவனை அவரவர்க்கியன்றவாறு போற்றுங்கள்; புகழுங்கள்! மேற்கு கிழக்கு முதலிய எட்டுத் திசைக்கும் அவன் அருளாற்றுவான். நமது அன்பினால் எத்திசையிலும்

பரவும்படி அவனருளை எப்படி ஆட்டவும் இயலும். என் அப்பனை, நந்தியை, ஆராவமுதனை ஒப்பில்லாத வள்ளலை, ஊழி முதல்வனை எவ்வகையேனும் ஏத்துமின்! அவ்வகையில் உயிர்க்கிறைவனாகிய அவனருளைப் பெறலாம். (திருத்தொண்டர் தத்தமக்கு இயன்ற வழிகளில் உறுதியாக நின்று அவனருளைப் பெற்றார்களல்லவா?)

நாள்தோறும் நான் திருவடி நின்று அவனை ஏத்தினேன்; செந்தணல் மேனிச் சிவனும் என் வழிபாட்டை ஏற்று நின்றான். எங்கே? ஊன் இல்லாமல் என் உள்ளுடலுள் நின்றான். நின்று என்ன செய்கிறான்? அவனே என் உயிராய் உயிர்க்கின்றான். அவன் எப்படி ஊனுடலில் உள்ளான்?

> வானில்நின்று ஆர்மதி போல்உடல் உள்உவந்து
> ஊனில்நின்று ஆங்கே உயிர்க்கின்ற வாறே.

வான்மதி மேலிருந்து, உலகுடன் பற்றாமல் சாட்சியாயிருந்து, ஒளி வீசுகிறது. அதுபோலவே பற்றற்ற சாட்சியாய்ப் பரமன் என்னுள் உள்ளான். அவன் பெரியான், அரியான், பிறவாத அருள் உருவான்; அவன் பேர் நந்தி; அவன் பேரைப் பிதற்றுவதை, அவன் பெருமையைப் பேசுவதை நான் ஒழியேன். ஆ! இப்படி அவன் பெயரை இடையறாது சொல்ல என்ன பேறுபெற்றேன்! நானே பெருமையான தவஞ் செய்தேன்.

மாந்தர்காள்! அவனருளை நீவிர் பெறலாம். எப்படி? கேளுங்கள்: அவனைப் போற்றுங்கள்! மனதார வாழ்த்துங்கள்!

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெரு மானென் றிறைஞ்சியும்
ஆத்தஞ்செய் தீசன் அருள்பெற லாமே.

"உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால் முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே" என்றா ரல்லவா அப்பர்; அதுதான்வழி.

அவன் உள்ளந்தோறும் கனலும் சோதிச் சுடர்; அவனே தீர்த்தன்; அந்தர்குரு. அவன் அங்கே இதயத்தில் இருந்து திளைக்கின்றான். வாழ்த்தி, ஏத்தி, 'எம்பெருமானே' என்றிறைஞ்சி, நட்புறவு (ஆத்தம்) பேணினால் அவனருளைப் பெற லாமே. "வாயே வாழ்த்து, நெஞ்சே நினை, கைகாள் தொழுமின்!" என்றார் அப்பர். அகங்கரியாமல் தாழ்ந்து, அவனை அடைமின்! அவன் கழலே நாடுமின்! அவன் நிறைந்தடர்ந்த செம்பொன் சோதியான், அருட்சோதிப் பெருமான். அவனை வெளிப்படையாக வாழ்த்துமின்! ஒளிந்து, மறைந்து அடஞ் செய்யவேண்டா; குப்த சாதனங்கள் வேண்டா. கரவின்றி, இயல்பாக அவனை வாழ்த் தினால், நமது இதயத்திற் குந்திய அவன் வெளிப் பட்டுக் கண்காணத் தோன்றுவான்; சடத்திலும் தான் விளங்குவதைக் காட்டுவான்; உடம்பிலும் உத்தமன் ஒளிர்வான்; உள்ளத்தான் உடம்பிலும் நிலவுவான்.

சினந்தெழுந்த ஆலகால விஷத்தை யுண்டு, வானோரைக் காத்தான் தேவர்பிரான். நட்புரிமை கொண்ட ஒரு மானுடன், இன்னொரு அன்பு - மான்

வந்து இணைந்து கூடிநிற்குமல்லவா? அதுபோலே அன்பினுல் பண்பட்ட நெஞ்சில் போற்ற வல்லாருடன் இணங்கிக் கலந்து நிற்பான் மங்கைபாகனுன எம் இறைவன். எவ்வளவு துன்பஞ் சூழ்ந்தாலும், அனைத்தையும் பொருட்படுத்தாமல், சித்தசுத்தியுடன் வந்து அரனைப் போற்றுவார்க்கு, வேதநாயகனுன பிரமாவின் நான்முடியும் எய்தும். அவருடன் சக்தி சிவன் ஒன்றி நிற்பான். அரனடி போற்றி முறையிட்டு, பிழைகளை நினைந்து வருந்தி, அருளைக் கூவி அழுமின்! பரனடியே நாடி, அவனையே நெஞ்சில் பாவனைசெய்து பணிமின்! மார்பை (உரன்) அவனடிக்கு இடமாகச் செய்மின்! அவன் திருவடி நிழலில் ஒதுங்கி யிருமின்! அப்படி யிருக்க வல்லார் உள்ளத்தில் திருவடியை இருத்தி, நிறைந்து விளங்குவான் இறைவன்.

## கக. பதிவழி

அமரர், அசுரர், மனிதர் எல்லாரும் போற்றி செய்யும் சிவன் திருவடியை நான் அன்பு மயமான என் உள்ளத்திற் பொலியவைத்தேன். விதிவழி செல்லும் இவ்வேழையுலகம் நிலையில்லாதது; விதி வழியே துய்க்கும் இன்பம் அதற்கு இயல்பேயாம். இவ் விதிவழி நீங்கி நித்திய இன்பந் திளைக்க வேண்டுமானுல் இறைவன் துதிவழி நிற்கவேண்டும்; அப்போது அருட்சோதிப் பிரானுன இறைவன் விதி வழி விலக்குவான்; பதிவழி துலக்கும் பகவானுவான்; இருள்வழி நீக்கி அருள்வழி காட்டும் சுடர்போல நம்முன் ஒளிர்வான். "அந்திவண்ணு, அரனே, சிவனே" என்று சிந்தை செய்தவண்ணம் நல்லடி

யார் தொழுகின்றனர். "அனைத்திற்கும் முன் இருந்த ஆதியழகா, முதல்வா, பரனே!" என்று நான் தொழுதேன். அறிவழகன் என் மனம் புகுந்துநின்றான். அப்போது "நின் திருவடியே மனையாகக் கொண்டு அதனுள் இருந்தவர், மாதவர் போன்று வீட்டின்ப மெய்துவர். நினைவை உனக்கே உறையுளாகச் செய்திருப்பவர் நினது பிரியா நேசத்துள்ளிருந்து சிவசாயுஜ்ய மெய்துவர்" என்றுணர்ந்தேன். பனை என்பது ஒரு சிறு மீன் வகை. அதை வாய்க்குள் கௌவிய பருந்து அதையே விடாது நினைக்கும். மற்றப் பறவைகளைக் கிட்ட வரவிடாது; தனியிடம் சென்று மீனை யுண்ணும். அதுபோலே சிவநாமத்தை உள்ளே கொண்டு மற்ற ஆசைகளை விலக்கி, அதையே நினைக்க வேண்டும். அத்தகைய சிவத்தியானிகளுக்கே பேரின்பமெய்தும்; அவ்வாறு இறைவனை ஏகாக்கிரகத்துடன் நினையாதவர்க்கு இன்பமில்லையாம். அவன் அடியார் பரவும் அமரர்பிரான்; முத்தி முதல்வன்; பரம்பரன். உலகோர் அவனை எண்ணி அவனிச்சைக்குப் பணியார்! பணிந்தவர்க்கு அவன் தந்தைபோல் அருள்வான்; அவன் எந்தை. சூரியன்கூடத் தோன்றி மறைகிறான். என் அறிவைத் துலக்கும் என்னப்பன், விடியா விளக்கு. அவ் விளக்கிற்கு உதயமும் இல்லை; அத்தமனமும் இல்லை; அது தூண்டாமணி விளக்கு. அவ் விளக்கையே நான் மேவி நின்றேன். அவ் விளக்கொளியால் பரன், பரை, பசு, பாச உண்மைகளைக் கண்டேன்.

பசுவாகிய உயிர்கள் செய்யும் பாவம் வற்றாக் கடல் போன்று திரை வீசுகிறது. பசு பாசவினை கடந்து கரை எய்த ஒரே வழிதான் உண்டு. உயிர், உரை, அன்பு—இவை ஒன்றிநின்று, பரை பசு-பாசம் இவற்றிற்கு நாதனான இறைவனை நினைப்ப தேயாம்.

ஆதலால் அவனடி சூடி, நெஞ்சில் வைத்து, பாடி, மலர் தூவி, பணிந்து நின்று, ஆனந்தக் கூத் தாடி, "எம்பிரானே, அமரர்க்கிறையே!" என்று அவனையே ஆர்வமுடன் நாடுவேன். நான் இன் றைக்கு அறிவது இதுவே.

சூடுவன்; நெஞ்சிடை வைப்பன் பிரான் என்று
பாடுவன்; பன்மலர் தூவிப் பணிந்து நின்(று)
ஆடுவன்; ஆடி, அமரர் பிரான் என்று
நாடுவன்; நானின் றறிவது தானே!

---

## நூல் – உ

## வேதாகம விளக்கம்

### கஉ. வேதம், ஆகமம்

நமது சமுதாய வாழ்விற்கு ஆதாரமான அறிவுத் திரள் இரண்டாம்: வேதம், ஆகமம். வேதம் இலக் கணம் போலும், ஆகமம் இலக்கியம்போலும்; வேதம் தந்தை, ஆகமம் தாய்; வேதம் வேர், ஆக மம் கிளை மலர் கனிபோலும். சரியை இலை, கிரியை மலர், யோகம் காய், ஞானம் கனிபோலும். மனித வாழ்க்கை ஆர்வந் தளிர்த்து, அன்பு மலர்ந்து, அறிவு காய்த்து, இன்பம் பழுத்து, இறைவனுக்கே

அதை உண்பித்து அவனுடன் இரண்டறக் கலக்க ஆகமம் துணை செய்யும். வேதம் அறிவுநூல், ஆகமம் அன்புநூல்; அனுட்டான நூல். வேதம் பொது; ஆகமம் சிறப்பு.

வேதமோ டாகமம் மெய்யாம் இறைவனூல்;
ஓதும் சிறப்பும் பொதுவுமென் றுள்ளன;
நாதன் உரைஅவை; நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே.

"வேதங்கள் 'ஐயா' எனவோங்கி
ஆழ்ந்தகன்ற நுண்ணியனே."

என்ற மணிவாசகமே வேத விளக்கமாம். வேதங்கள் இறைவனை, ஆர்வமுடன் முறையிடுகின்றன; மனத்திற்கு மேலே சென்று நாடுகின்றன; உள்ளத்தில் ஆழ்ந்து பார்க்கின்றன; அவன் வடிவாக விரிந்தகன்ற உலகில் தேடுகின்றன; இத்தனைக்கும் அகப்படாது நுண்ணியனாக, சூட்சுமப் பொருளாக அவன் இருக்கிறான். முடிவில் 'அமைதி, அமைதி, அமைதி' என்று வேதங்கள் அடங்கி மோனமாகின்றன. வேதாந்தம் நாதாந்தம் கலாந்தங்களெல்லாம் அவனைக் காணுவாம். அவை ஒரு நிலையை அடைந்து நின்று விடுகின்றன. ஏன்? அவன் நாதவிந்து கலாதீதன்; வாய்மனங் கடந்தவன். அவனைத் தன் முனைப்பாற்காணும் ஆற்றல் *ஆன்மாவிற்குக் கிடையாது. அவனருளே கண்ணாகக் காணினல்லால், இறைவனை யாரும் அறிய முடியாது. அருளே தாரக

* இங்கே பாசான்மாவையே குறிக்கிறோம். சுத்தான்மா இறைவனை நீங்காதுறைவதாம்.

மாகத்தான் ஆன்மா ஆண்டானைக் காண முடியும். 'அஹம்ப்ரமம், சகம்மப்ரம்மம்' என்ற வாசா ஞானம் பயனில்லை. அருட்பெருஞ் சோதிக்கே இறைவனை விளக்கி நம்மை உய்விக்கும் தனிப்பெருங்கருணை யுண்டு. அருளில்லா ஆன்மா தாயில்லாக் குழந்தை போலாகும்.

ஆன்மாக்களைத் தாய்போன்று வழிநடத்துவது ஆகமமேயாம். அதனாலேதான் மணிவாசகப் பெருமான்,

"ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க!"

என்று அருளினர். வேத அந்தம் சாந்தமே; மோனமே; சித்தின் அல்லது சிற்சக்தியருளின் அந்தம் சின்மயனான இறைவனாம். சித்தாந்தம் எல்லையற்ற விரிவுடைத்து. அது ஆகமத்தை அடிப்படையாகக்கொண்ட திருவருட் கோயில் போன்றது. வேதாந்தத்திற்குத் தற்போது ஏராளமான பிரசாரம் உள்ளது. விவேகானந்தரும், இராமதீர்த்தரும் அதைக் கடல் கடந்து கர்ஜித்தனர். சித்தாந்தம் ஆழ்ந்தகன்றுயர்ந்து எல்லாச் சமயங்களையும் தன்னுள் அடக்கிச் சமயாதீதப் பொருளை எட்டிநிற்கிறது. அதன் அறிவை மீண்டும் உலகில் தூண்ட வேண்டும். தற்கால இயற்கலைப் புலவர் ஜீவபரிணாமத்தை ஒப்புகின்றனர். ஜீவன் அல்லது ஆன்மா களிம்பேறிய செம்பு போன்றது; அதை மாசறுத்து, அன்புலையில் வைத்துருக்கி, அருளால் பரிசித்து, வேதி செய்து, அறிவுத் தங்கமாக்கி இறைவனுக்கு அணிவதே சித்தாந்தத்தின் தனிப் பெருமையாகும். வேதம் 'நீ ஆன்மா, அதுவே பிரம்மம்,' என்று சொல்லி அடங்கிவிடுகிறது: மத்தலை தயிர்போல

மாயா சக்திகள் நம்மை வாட்டி யலைக்கும்போது, அஹம்ப்ரம்ம நினைப்பு வருவதில்லை; தனுகரண புவனபோகாதிகள் நம்மை எளிதில் விடுவதில்லை. காம வெகுளி மயக்கங்கள் நம்மை வலிந்திழுத்துத் துயர்க்கடலில் தள்ளித் தத்தளிக்கச் செய்கின்றன. அச்சமயம் வேதாந்தம் பேசினால் நமக்குச் சினம் பொங்குகிறது.

அதேசமயம் ஆகமம் என்ன செய்கிறது? நோய்க் குழந்தைகளுக்கு மருத்துவம் புரியும் தாய் போலப் பொறுமையாக ஆன்மாவைத் தன் கையில் ஏற்கிறது; தனு கரண புவன போகாதிகளை ஊட்டுகிறது; அனுபவங் காட்டுகிறது; மாயா சக்திகளின் மாற்றத்தை உணர்த்துகிறது; சரியை கிரியைகளால் சித்த சுத்தியளிக்கிறது; யோகத்தால் புறஞ் செல்லும் மனத்தை உள்ளே திருப்புகிறது; மன வொருமைப்பாட்டுடன் ஆன்மா அன்பு முதிரமுதிர அருளைப் பொழிகிறது. அருள் பழுக்கப்பழுக்க அறிவொளி துலங்குகிறது. அறிவு மலர்ந்ததும் ஆன்மா விழிப்புறுகிறது; உடலினும், உலகினும், உயிரினும், மேலான பதியின்பத்தை நாடுகிறது. காதலியின் காதல்முதிர்ச்சி காதலன் அன்பைப் பெருக்குமல்லவா? உணர்ச்சியுள்ள, அறிவோங்கிய காதலால் ஆன்மா ஆண்டானை அணுக இயலும். அந்நிலையில் சிற்றின்பம் வெற்றின்பம், சித்தின்பம் பேரின்பம் என்று ஆன்மா உணரும்.

காதலாகிக் கசிந்துருகிவரும் ஆன்மாவை உயிர்க்குயிரான இறைவன் ஆட்கொள்ளுகிறான். இருட்படலத்தைக் கிழித்தெழும் இளஞாயிறுபோல,

அறிவுஞாயிறு அருள்பெற்ற ஆன்மாவின் இருள் மனத்தை ஒட்டியெழும். விண்மீன்கள் கதிரொளி யிற் கலப்பதுபோலவே, அறிவெழுச்சிபெற்ற ஆன் மாக்கள் சிவச்சுடரிற் கலக்கும். தீயுண்டு பழுக்கக் காய்ந்த இரும்பு, தீவண்ணமாவதே போன்றது அக் கலப்பு. "நீ ராஜா" என்று சொல்லி வாய்மூடுகி றது வேதம். ஆகமம், பகைவரை வென்று, அர சனுக்குரிய அறிவறம் ஆற்றல்களைப் புகட்டி, ஆன் மாவை அருளாட்சிக்குப் பயிற்றுகிறது.

நமது நாட்டின் பெரிய அறிவுச் சுரங்கங்களான வேதம், ஆகமம் ஆகிய இரண்டின் இயல்பையும் அறிந்தோம். இனித் தனித்தனியே அச் சுரங்கங் களில் இறங்கி அவற்றிலுள்ள செல்வத்தை நுகரு வாம். திருமூலர் முதலில் நம்மை வேதச் சுரங்கத் துள் அழைத்துச் செல்கிறார்.

## கரு. வேதப் பொருள்

வேதத்தை விட்ட அறம் இல்லை; வேதத்தின்
ஓதத்தகும் அறம் எல்லாம் உள; தர்க்க
வாதத்தை விட்டு, மதிஞர், வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றாரே.

வேதம் அறக்கடல்; அதில் எல்லா அறிவும் அடங்கும். மனிதன் இறைவனை அடையவேண்டும் அத்யாத்ம தர்மம் (அறம்) எல்லாம் வேதத்தில் உள்ளன. ஆனால் அந்த அத்யாத்ம தருமத்தைச் சொல்லால் முழக்கிச் சுகங்காண முடியாது. 'மாங் கனி' என்றால் வாயினிக்குமா, வயிறு நிறையுமா? உண்டாலேதான் உவப்புண்டாம். கண்டு கலந்தா

லேதான் கடவுட் களிப்புண்டாம். கண்டு கலக்கும் கருத்தில்லாமல் உரு, அரு, குணம், நிர்க்குணம், அது இது, அவன் அவள், ஒன்று இரண்டு மூன்று என்று வெறும் தர்க்கவாதங்கள் செய்து, வேதாந்த பரிபாஷைகளால் உண்மையைக் குழப்பக்கூடாது. தத்துவப் பேயோடே முட்டி மண்டையுடையக் கூடாது; 'கட மட' வென்று பேச்சுக் கருவி போன்று சொற்களை அளந்துகொட்டாமல், வேத தருமத்தை அனுட்டிக்கவேண்டும். அவ்வாறு கற்ற வழி நிற்கும் மதிப்பொலிவுடைய அறிவாளர் வேதத்தை ஓதியே இன்பவீடுபெற்றனர். இன்ப வீடென்பது இதயமே. அதுவே உடலிடங்கொண்ட இறைவன் இருப்பிடம். சொல்லும் செயலும் ஒன்ருயிருக்க வேண்டும்; கல்வியும் ஒழுக்கமும் சேர்ந்திருக்கவேண்டும் என்பதை வற்புறுத்தியே "வேதம் உரைத்தானும் வேதியன் ஆகிலன்" என்னும் அழுத்தமாகச் சொன்னர் மூலர்.

வேதம் இயற்றினவன் வேதா என்பர். 'வேதா' இறைவனின் ஐந்தொழில்களில் ஆக்கத் தொழிலைப் புரியும் சக்தியாம். இறையறிவாகிய வேதத்தினின்றே சிருஷ்டி எழுந்தது. 'ஓ'மினின்றே உலகெழுந்தது. எப்படி? 'ஓம்' என்பது ஆகாசத்தின் தன்மாத்திரையாகும். ஓமொலியால் ஆகாச அலைகள் எழுந்து, பரமாணுத்திரள்களைச் சுழற்றுகின்றன; அவற்றினின்று காற்றும், காற்றினின்று கனலும், கனலினின்று நீரும், நீரினின்று நிலமும், நிலத்தினின்று தாவரமும், தாவரத்தையுண்டு உயிரினங்களும் பரிணும முறையில் விளக்கமாகின்றன.

'பிரம்மா வேதம் சொன்னன். வேதத்தினின்று உலகம் உண்டானது' என்னும் பொருள் இப்போது

விளங்குகிறதா? வேதத்தை வேதா எதற்காக உரைத்தான்? "வேதியர் வேள்விக்காய்." "இதென்னடா சங்கடம்! பிராமணர் யாகத்திற்குத்தானா பிரம்மா வேதம் செய்தான்? மற்றக் கோடானு கோடி மக்களுக்கு அதனாற் பயனில்லையா? அப்படியானால், அவ்வளவு ஓரகமுள்ள பிரம்மா சொன்ன பார்ப்பார வேதத்தைக் கொளுத்தியெறி" என்னலாம், சில பகுத்தறிவு நேயர். அற்றன்று.

வேதியர் சாதி வேதியரல்லர். திருமூலர் சொல்லும் வேதியர் தற்காலம் வேத தர்மத்தை இழந்து, அஜாகளஸ்தனம் மாதிரிப் பூணூலை மாட்டிக் கொண்டு வயிற்று வழிபாடே பெரிதெனக் கருதும் சாதிப் பார்ப்பாரல்லர்; வேதத்தை முறையாகக் கற்று நின்று பார்த்தறிந்து பயன்பெற்ற ஞான சிகாமணிகளே, அருளறிவாளரே திருமூலர் கூறும் வேதியராவர். வேள்வி என்பது மந்திரம் சொல்லி ஆட்டையும் மாட்டையுங் கிட்டி போட்டுக் கொன்று வபையை நெய்யிற் பொரித்துண்ணும் கொலையன்று; அவிசொரிந்து உயிர் செகுத்துண்ணும் வேள்வியன்று. ஆசையாணவ மாயங்களைத் திருமந்திரமான இறைவன் பெயரால் போக்கி, நானென்றெழும் பாசான்மாவை யெல்லாம் அவனென்றுணரும் சுத்தான்மாவாக்கி, சிற் சக்திக்கனலில் அதை வாட்டி இறைவனுக்கே ஊணாக்கவேண்டும்—அதுவே வேள்வியாம். வேள்வியின் விரிவான பொருளை எமது கீதை காட்டும் பாதையிற் காண்க. இத்தகைய ஆன்ம வேள்விக்கு வேதத்தை உரைப்பானேன்?

வேதம் உரைத்தானும் மெய்ப் பொருள் காட்டவே

இப்போது தெரிகிறதா? சாதியில்லை, ஆட்டியாகமில்லை; நானென்றெழும் ஆணவ மனத்தைத் திருவருளுக்கே ஊணாக்கி மெய்ப்பொருளைக் காண வேண்டும் என்பதைக் காட்டவே வேதத்தை வேதா வேதியர்க்கு ஓதினான்.

## கச. அருள் நூல்களைப் பரப்புக!

வேதம் என்பது இறைவனை விளக்கும் அருளறிவாம். அது ஆரியத்திற்கே உரியதென்பது பொருந்தாது. ஆரியவேதம் கற்றவர் அங்கு மிங்குமாகச் சில பிராமணர்களே யாவர். மற்றவர் அதைக் கேட்கக் கூடாது, கற்கக்கூடாதென்போர் இந்த 20-ஆம் நூற்றாண்டிற்கூட இருக்கின்றனர். கற்றவர்களும் வார்த்தையை மொந்தையுருப் போட்டுப் பேச்சுக் கருவி மாதிரி ஒப்பிக்கிறார்கள். பொருளறிந்து வேதஞ்சொல்வார் கோடியில் இருவர்கூட இரார். ஆங்கில மோகங்கொண்டவருக்கு வேதம் 'வைதிகரின் காட்டுக் கூச்சல்' என்று தோன்றுகிறது. இழவு, சிராத்தம், கலியாணங்களில் "ஹிரண்யகர்ப கர்பஸ்தம்" சொல்லித் தட்சணை வாங்கிப் பிழைக்கும் சில புரோகிதர்களை வேதம் அடைக்கலம் புகுந்து நிற்கிறது. வடமொழியே மறைந்துவரும் இந்நாளில், கலியாணத்தில் இழவு மந்திரம் சொன்னாலும் கேட்பாரில்லாமலிருக்கிறது. நம் மந்திர ஓமங்கள் கிளிப்பிள்ளைப் பேச்சாயிருக்கின்றன. நம் வேதம், உபநிடதம், கீதை முதலிய புண்ணிய நூல்களை ஐரோப்பியர் கற்றுத் தெரிந்து, ஆங்கிலத்தில் தெளிவாக விரிவுரை எழுதி உலகிற்கு அளித்திருக்கின்றனர். மாக்ஸ்முல்லர், எட்வின் ஆர்னல்ட், அனிபெசண்ட், ஸேர் ஜான் உட்ராஃப் முதலியோர் நம்

வேதாகமங்களை உலகிற்கு விளக்கினர். அவர்நூல்களைக் கற்றே நம்மவரும் நமது புண்ணிய நூல்களின் அருமைபெருமைகளை அறியும் நிலைமை வந்திருக்கிறது. தமிழ், ஆரியம் இரண்டிலும் அருளறிவான வேதம் நிரம்பிப் பொலிகிறது. ஆரிய முனிவரும் செந்தமிழ் முனிவரும் ஆக்கிய வேதங்களை நாமும் கற்று நின்று, உலகிற்கும் வழங்கவேண்டும். ஆரிய நூல்கள் ஒருவாறு உலகில் வழங்குகின்றன. திருக்குறளைத் தவிர வேறு அரிய தமிழ் நூல்களை இன்னும் உலகம் சரியாக அறியவில்லை. தமிழர், பன்மொழிகளிலும் தமது அருட்செல்வத்தை வழங்க வேண்டும். திருமந்திரம், திருவாசகம், தேவாரம், தாயுமானவர் பாடல், அருட்பா முதலிய பதிநூல்கள் உயர்ந்த வேதங்களாம். இந்த அருள் வாக்குகளின் அருமை பெருமைகளை நாம் உலகிற்கு விளக்க வேண்டும். கிறிஸ்து சுவிசேஷம் உலகில் இவ்வாறு பரவியதேன்? அவரவர் தாய்மொழிகளில் பைபிளை மொழிபெயர்த்து இலட்சக் கணக்கில் அச்சிட்டு வழங்குகிறார்கள்; பாதிரிமார்கள் ஓயாது கிராமம் கிராமமாகச் சென்று பிரசாரம் செய்கிறார்கள்; பொதுஜனங்களின் உள்ளத்தை வசப்படுத்துகிறார்கள். அதுபோல நம் அருட் புலவர் இயற்றிய பதிநூல்களையெல்லாம் பாமரருக்கு இனிய எளிய உரைநடைகளில் தெளிவாக எழுதி வீடுதோறும் திருத்தொண்டர் பிரசாரம் செய்து வழங்கவேண்டும். திருமந்திரம் அரிய பொதுமறை. அதில் வேதாகம தந்திர மந்திர சாத்திரங்களெல்லாம் நுட்பமாக அடங்கியுள்ளன. இந்நூல் ஒன்றைக் கற்றுத் தெளிந்தாலும் போதும்; வேதாகமப் பொருள் விளங்கும்.

---

## கரு. கண்ணன்

வேதம் மொழி வேறுபாடற்றது. வேதத்தின் உள்ளேயுள்ள எழில் (அருட்பிரகாசம்) இருக்கு உருவாம், மந்திரவடிவாம். மனனம் செய்தவனைக் காப்பாற்றுவது மந்திரம். வேதம் மந்திரநாதம். அந்த மந்திரநாதத்தை எப்படியுணரலாம்? உள்ளத்தை அன்பால் உருக்கும் அருளுணர்வாலேதான் அதை உணரலாம். அவ்வாறு வேதத்துள் மனமோங்கிச் சென்று உணர்ந்தவரே உலகம் பயபக்தியுடன் வணங்கும் பெரியாராகிய வேதியராவர். அத்தகைய பொருளுக்கு உருவாயிருப்பவன் யார்? அவனே கண்ணன்! கண்ணன் யார்? தேவகி வயிற்றிற் பிறந்து ஆயர்பாடியில் வளர்ந்து, பாரதம் நடத்தி, காலில் வேடனம்புபட்டிறந்த கிருஷ்ணனு? அல்லன். இங்கே சொல்லும் கண்ணன் பிறப்பும் இறப்பும் அற்ற பெருமான்; நித்தியமுத்தன். நாம் பார்ப்பதற்கு மூன்று பொருள் வேண்டும்:—(1) கதிர் (2) கண் (3) காண்பான். கண்ணிற்குள் இருந்து காண்பான் யார்? அவனே உயிரிலும் உயிராய் நிற்கும் கண்ணன், பார்ப்பான் (Seer) (திருக்). அக்கண்ணன் எத்தகையன்? அவன் சதசத் விலாசன்; சித்து அசித்து, ஜீவன் சடம் - இரண்டையும் கடந்த பரமன். அவன் கேவலம் சித்தாகமட்டுமே விளங்கவில்லை; அவன் சின்மயன்; இயற்கையிலிருப்பவனும் அவனே. அனைத்திலும் அருள்வடிவாக அவன் இருப்பதனலேதான் கல்லாகிப், புல்லாகிப், புழுவாகி, விலங்காகி, மனிதனுய்த் தேவனுகி ஆன்ம பரிமணமம் அறிவு முதிர்ந்து இயங்குகிறது. ஜீவசைதன்யம் இருப்பதனலேதான் ஓரறிவுயிர் முதல்

ஆறறிவுயிர்வரை அனைத்தும் உயிர்த்து வளர்ந்தோங்குகின்றன. சித்து அசித்து, புருஷன் பிரகிருதி, ஆன்மா இயற்கை இரண்டையும் தாண்டி, அவன் பெருநெறியில் பரம்பர நிலையில், பரமனாக நிற்கிறான். அனைத்திற்கும் முதல்வனாகிய எம்பிரானை நினைத்தலே திருநெறி, நன்னெறியாகும்—"சிவாய நம" வென்று சிந்தித்திருப்பார்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை; உபாயம் இதுவே. உலகில் எத்தனையோ சமய நெறிகள் உள்ளன. அவற்றிற்கெல்லாம் குரு நெறி, குருமார் மூலம் இறைவன் அருளிய நெறி, மேலான சன்மார்க்கம் எது? அதுவே சிவமாம் நெறி, அதுவே ஒப்பற்ற ஒரு நெறி. அதுவே திருநெறியாவது. சிவமாவதெப்படி? எது சிவமாவது? அத்வைத வேதாந்தம் ஒன்றாக ஓதும்—ஜீவனுகபரம் ஒன்றென்னும்—சீவனே சிவன் என்னும். மாணிக்கவாசகர் அன்பினாற் சிவமேயானார். இராதை காதலாற் கண்ணனேயானாள். கற்பூரம் சுடரோங்கிக் காற்றிற் கலந்தே போகிறது. சுத்தான்ம நிலையில் அப்படிப் பட்ட முக்தியெய்தும். அந்த ஐக்கியானுபூதி கரும்பும் இனிப்பும் போன்றதாம். நம் கோயில்களில் சுவாமி உறையுள்ளில் திரை போட்டிருப்பர். எதற்காக? இப்புறம் அன்பு செய்யும் பசுவிற்கும், மூலஸ்தானத்தில் இருந்தபடி இருக்கும் பரமனுக்கும் இடையே நிற்பது பாசம், தளை என்பதைக் காட்டவே. தீபாராதனை காட்டும்போது திரையை விலக்குவர். எதற்காக? அருட்சுடர் விளக்கமானதும், பாசத் திரை விலகிப் பதிப்பொருள் விளக்கமாகும் என்பதை அறிவிக்கவே. நமது கோயில் சந்நிதியமைப்பு, பதி பசு பாச விளக்கத்தையும், பாசம் விலகிப் பசு பதியுடன் இரண்டறக் கலக்கும் சுத்தாத்வைத தத்துவத்தையும் அற்புதமாக விளக்கி நிற்கிறது.

## கசு. வேத விரிவு

இனி வேத விரிவை அறிவாம்: வேதம் பல நூற்றாண்டுகளுக்குமுன் இயற்கை வனங்களில், இறைக்கலப்புடன் வாழ்ந்த அருட்பெரியார் உள்ளத்திற் கனிந்தெழுந்த அனுபூதி வாக்குகளாம். அவற்றை உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம் (உயர்வு, தணிவு, சமம்) என்னும் ஸ்வரங்களுடன் தம் மாணவருக்கு அம்முனிவர் உபதேசித்து, வழி வழியே வாயுரையாகவே வழங்கச் செய்தனர். 5000 ஆண்டுகளுக்கு முன்பு வியாச முனிவர் ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்று வேதத்தை நான்காக வகுத்தார்; அந் நான்மறைகளையும் முறையே பைலன், வைசம்பாயனன், ஜைமினி, ஸுமந்து ஆகிய நான்கு மாணவருக்கு உபதேசித்து, அவர் வழியே பரம்பரையாக வழங்கச் செய்தார். ரிக் வேதம் சொல்வது ஓமக்கிரியை; யஜுர் வேதம் வேள்வி விளக்கம்; சாமவேதம் இறைவணக்கம்; அதர்வண வேதம் உபாசனை; இடர்களை நீக்கவும், பகைவரை வீழ்த்தவும், பொதுநலம் புரியவும் வேண்டிய மந்திர தந்திரங்களெல்லாம் அதர்வண வேதத்தில் உள்ளன.

கொள்ளத்தக்க நன்னெறி, தள்ளத்தக்க தீநெறி இரண்டையும் வேதம் விளக்கும். வேதப்பொருள் மூன்று காண்டங்களாகப் பிரிந்துள்ளன: (1) கர்ம காண்டம் (2) உபாசன காண்டம் (3) ஞானகாண்டம். ஞான காண்டமே வேதாந்தம் அல்லது உபநிஷத் எனப்படுவது.

'உப + நிஷத்' என்றால் ஆன்மாவைப் பரமனருகே உய்ப்பது எனப் பொருளாம். 108 உப

நிஷத்துக்களில் 12 முதன்மையானவை. அவையாவன :—ஈசம், கேனம், கடம், ப்ரச்னம், முண்டகம், மாண்டூக்யம், ஐதரேயம், கௌஷீதகி, தைத்ரீயம், சுவேதாச்வதரம், பிரகதாரண்யம், சாந்தோக்கியம். நீலகண்ட சிவாசாரியார், சங்கரர், உடையவர், மத்வாசாரியார் ஆகிய நான்கு சமயாசாரியரும், முறையே சித்தாந்த, அத்வைத, விசிஷ்டாத்வைத, துவைதக் கொள்கைகளை யொட்டி மேற்சொன்ன உபநிஷத்துக்களுக்கு விரிவுரை எழுதியிருக்கிறார்கள். அன்பு, அறிவு, செயல் (பக்தி, ஞானம், கர்மம்) ஆகிய மூன்றிற்கும் வேதம் வழிகாட்டுகிறது. இம்மை மறுமையின்பத்திற்குகந்த எல்லாம் அதில் அடங்கியுள்ளன. பிணி தீர்த்து உடலுறுதி நல்கும் ஆயுர்வேதம், வேள்விக்குகந்த பொருள்களை விளக்கும் அர்த்தவேதம், போர்க் கலையாகிய தனுர் வேதம், இசைக்கலையாகிய காந்தர்வ வேதம் ஆகிய நான்கும் உபவேதங்களாம்.

(1) சிக்ஷை (பதம், கிரமம், ஜடை, கனம் ஆகிய அத்யயனமுறை) (2) வியாகரணம் (இலக்கணம்) (3) சந்தஸ் (யாப்பு) (4) நிருத்தம் (பதவுரை) (5) ஜோதிஷம் (வானநூல்) (6) கல்பம் (கிரியைகளுக்கேற்ற தந்திரம் வேள்வி விளக்கம், வேள்விச்சாலை யமைக்கவேண்டிய க்ஷேத்திரகணிதம் ஆகியவை அடங்கியது), இவை ஆறும் வேதாங்கங்கள் அல்லது ஆறு சாஸ்திரங்களாம். (1) மீமாம்ஸை (முரண்களை விலக்குவது) (2) நியாய சாஸ்திரம் (தர்க்கம்,) (Logic) (3) தர்ம சாஸ்திரம் (மனு, பராசர ஸ்மிருதிகள்) (4) புராணம் ஆகிய நான்கும் உபாயங்கள் எனப்படும். வேதசம்மதமான ஆசார விவகாரங்களையும், ஒருவர் செய்த பிழைகளுக்குப் பரிகாரங்களையும் கூறுவன ஸ்மிருதிகளாம்.

இவையே பாரத சமுதாயத்தின் அறநூல்கள். ஸ்மிருதி கர்த்தாக்கள் பதினெண் பெரியாராவர். சத்ய யுகத்திற்கு மனு ஸ்மிருதியும், திரேதா யுகத்திற்குக் கௌதம ஸ்மிருதியும், துவாபர யுகத்திற்கு சங்க ஸ்மிருதியும், கலியுகத்திற்குப் பராசர ஸ்மிருதியும் ஆதாரம் என்பர். மனு ஸ்மிருதி ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன் முதலிய மொழிகளிலெல்லாம் விளங்குகிறது. ஜெர்மன் அறிஞரும் கவியும் பலாத்கார வாதியுமான நீட்சை என்பவர் மனுஸ்மிருதியைக் கற்று வியந்தார். தற்காலத்தார் கோரும் சமுதாய சீர்திருத்தங்களிற் பல பராசர ஸ்மிருதியில் அடங்கியுள்ளன. இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்கள் சூரிய சந்திர வம்ச முதல்வரின் வரலாறுகளைக் கொண்டு வேத நெறியை உலகிற்கு விளக்குகின்றன. பிராம்மம், பத்மம், சைவம், பாகவதம், நாரதீயம், மார்க்கண்டேயம், பவிஷ்யத், பிரம்மகைவர்த்தம், இலிங்கம், வராகம், ஸ்காந்தம், வாமனம், கூர்மம், மத்ஸ்யம், கருடம், பிரம்மாண்டம், முதலிய பதினெண் புராணங்களும் பிரம்மா, விஷ்ணு, சிவன், முருகன், சூரியன், அக்கினி முதலிய தேவர் பெருமையை ஆயிரக்கணக்கான சுலோகங்களாகப்பாடி, அவ்வகையில் வேத நெறியை விளக்கும். இப் புராணங்களின் ஆசிரியர் வியாசரென்பர். வேதம் எவ்வாறு பரந்து விரிந்து இம்மை மறுமைப் பயன்களையெல்லாம் தன்னுட்கொண்டு நிற்கிறது பார்த்தீர்களா! இந்த வேதநெறி தழைத்தோங்கவே குருமார்கள் எழுந்து அவ்வக்காலங்களிற் பணி செய்தனர்.

---

## கள. நமது கடமை

தமிழ்—ஆரியம் ஆகிய இரண்டும் கடவுளர் மொழிகள் என்பதில் ஐயமில்லை; முப்பொருள் தத்துவங்களெல்லாம், மனிதன் அறியவேண்டிய அறிவெல்லாம், அறிவிற்கெட்டாத ஜீவப்ரம்ம இரகசியங்களெல்லாம் இந்த இருமொழிகளிலுள்ள அருட்பெரு நூல்களில் அடங்கியுள்ளன. தமிழ்—ஆரியம் இரண்டும் அருளறிவின் இருவிழிகளாம். ஆரியம் வழக்கிலில்லை; ஆனல் இது இறக்கவில்லை; எல்லா மொழிகளிலும் கலந்து விளங்குகிறது. ஆரிய முனிவர் வேதம், சாத்திரம், ஸ்மிருதி, இதிகாசம், புராணம் முதலிய அற்புத நூல்களின் வாயிலாக நமக்குத் திருநெறி காட்டியிருக்கின்றனர். அவர் வாக்குகளில் எக்காலத்தும் மாறு உண்மைகள் பலவுண்டு. அவரவர் காலத்திற்கேற்றபடியே சமுதாயத்திற்கு விதிக்கப்பெற்ற விதிகளும் உண்டு. அவ்விதிகள் இக்காலத்திற்கு ஒவ்வாதிருக்கலாம். இக்காலம், புறவாழ்வு எல்லையற்ற விரிவடைந்து வருகிறது. மூளையறிவு விண்ணெட்டப் பறக்கிறது; இடத்தையும் காலத்தையும் வெல்லுகிறது. சாதிமத சாத்திர கோத்திர பேதங்களையெல்லாம் உடைத்தெறிந்து, உலக சமரசத்தை நோக்கி மனித சமுதாயம் சென்றுகொண்டிருக்கிறது; ஆராய்ச்சித் திறனும், இயற்கலைத் திறனும் ஓங்கிவருகின்றன. ஆனல் இக்காலத்து மனப்பான்மைக்கேற்ற சமதருமக் கொள்கைகளையும் நம் வேதமுனிவர் விளக்கிப் போந்தனர். அம்மொழிகளை வடித்தெடுத்து நாம் உலகிற்களிக்கவேண்டும். பழைய நூல்களிற் சாதி யிறுமாப்பை வளர்க்கும் மொழிகளை நீக்கிவிடலாம்.

கொல்லை நாற்றத்தைப் பார்த்து வீடெல்லாம். சாக்கடை என்று முடிவு கட்டக்கூடாது. நமது பெரியார் நமது நலனுக்காகக் கட்டிய மாளிகையில் ஒரு பழுதிருந்தால், கட்டிடத்தையே இடித்துத் தரை மட்டமாக்குவதா? பழுதைத் திருத்தி அதில் வாழுவதா? எது அறிவாகும்? சொல்லுங்கள்! வேட்டியில் ஒரு பொத்தலிருந்தால், அதைத் தைத்துடுப்பதழகா, அல்லது எரிப்பதழகா? பழைய நூல்களில் நிலையான உண்மைகளைக் கொண்டு காலமாறுபாட்டிற்கேற்ற வழிகளைப் புதிதாகச் சேர்த்துக்கொண்டு நாம் முன்னேறவேண்டும். அதுதான் அறிவாகும். வேத சாரத்தை யெல்லாம் திரட்டி வியாசர் பிரம்ம சூத்திரம் செய்ததுபோல, நாம் இக்காலத்திற்கேற்றபடி முன்னோர் கொள்கைகளை விளக்கவேண்டும்.

## க அ. போலிகள் வேலை

நமது புண்ணிய பூமி அன்னியருக்கு இரையானதேன்? (1) நாம் ஒருவருக்கொருவர் பொறாமை கொண்டு குடுமிபிடித்தலைந்ததால்; (2) அருட்பெரியார் வகுத்த அறநூல்களைப் போற்றிப் பயிலாமல், அன்னிய மோகத்தில் உறங்கியதால்; (3) நாமே நம் அருள்நூல்களை அலட்சியம் செய்து வைததால்; (4) பெரியார் வாக்குகளின் உட்பொருளறியாமல் அனர்த்தம் செய்துகொண்டு மூடப் பழக்கங்களில் கண்மூடித்தனமாக அழுத்தம் செய்ததால்; (5) நாமே நம்மவரை அன்னியருக்குக் காட்டிக் கொடுத்ததால். இன்னும் நம் தீவிர இயக்கங்கள் படுத்துப் போவதற்கு இவையே காரணமாயிருக்கின்றன. பழமையைக் காலத்திற் கேற்றவாறு நாம் பயிலவேண்டும். புதுமையை மாசுநீங்க வடிகட்டிக்கொள்ள வேண்டும்.

காதலர் இருவர் பாரத பாகவத புராணம் கேட்டனர். "இப்புண்ணிய நூல்களை அனுட்டிப்பவருக்கே மோக்ஷம் உரியது" என்று பாகவதர் கதையை முடித்தார். காதலர் அப்படியே அனுஷ்டிக்க ஆவலாயினர்.

—என் அருமைக் காதலா! நான் பாரதத்தை அனுஷ்டிக்க விரும்புகிறேன்.

—எப்படி?

—நாளையே இன்னும் நான்கு காதலரைத் தேடிக் கொள்வேன். உம்மைச் சேர்த்து ஐவராவர். பாஞ்சாலி பஞ்ச பாண்டவருடன் வாழ்ந்ததுபோல நான் எப்போதும் ஐந்து காதலருடன் வாழ்வேன்.

—மெத்தச் சரி; காதலி நானும் பாகவதத்தை அனுஷ்டிப்பேன்.

—எப்படி?

—கண்ணன் ஆயிரக்கணக்கான கோபியருக்கு நாதனாக விளங்கினான். நான் சுமார் ஆயிரம் அழகிகளுக்காவது காதலனாவேன்.

—ஐயோ வேண்டாம் பாகவதம்!

இந்த மாதிரி அசட்டுத்தனமாக நமது பெரியார் வாக்குகளை மனம்போன போக்கிலே பயிலக் கூடாது. குணமறிந்து அவற்றைக் கொள்ள வேண்டும். அதைத்தான் திருமூலர் வற்புறுத்துகிறார்:—

வேதம் ஆறங்க முடைத்து; அதை ஓதியுணரும் அருட்பெரியார் கூறும் மொழிகளிலுள்ள குணத்தை, தன்மையை, உண்மையை அறிந்து பயில்வார் இல்லையே! பின்னே என்ன செய்கிறார்கள்? பெரியோர்

மொழிகளை மனம் போனபடி திரித்து வேருேர் அங்கமாக்கி, "நாம் புதியன கண்டோம்; அதுவே உண்மை" என்று செருக்காடுகின்றனர். அப்புறம்? பேறு + அங்கமாகப் + பெருக்குகின்ருரே. பேறு என்ருல் இலாபம். தத்தமக்கு இலாபமான அங்கமாகத் திரித்து உலகில் சுயநல நூல்களையும் மூடக் கொள்கைகளையும் அரைகுறைச் சுவடிகளையும் பெருக்குகின்றனர். அவற்றைக்கொண்டு பாமரரை மயக்கிப் பொருளீட்டிப் பிழைக்கின்றனர். 'பொன்னே, பெண்ணே, மண்ணே' எனத் திரிவர் உலகப் பேதையர். அவர், பாட்டும் ஒலியும் பரக்கும் கணிகையர் ஆட்டமும் நீங்காது காண்பர்.

கணிகையரின் ஆடல் பாடல் அழகுகளெல்லாம் ஆளைமயக்கி அரும் பொன் கொள்ளும் வித்தை தாமே! அவர் அருட் பெண்டிரல்லர்; பொருட் பெண்டிர். அவரைப் போன்றே சமயப் போலிகள், சாத்திரப் போலிகள், பெரியார் வாக்குகளை வேறங்கமாக்கிச் சுயநலந் தேடுவோர். அவர் வேட்டு விருப்பார்; மண், பெண், பொன் வேட்டையில் ஆசை கொண்டவர். அவர் விரதமில்லாதவர்; நோன்பில்லாதவர்; கொல்லாமை, கள்ளாமை, கள்ளுண்ணுமை, விழைவின்மை, சூதின்மை ஆகிய விரதமின்றிக் கண்டபடி பாப வழியில் நடப்பர். அவர் நாட்டம் எங்கே செல்லும்? "ஈட்டும் இடம் சென்று" பிறகு "இகலல் உற்ருரே!" எனதருமைத் தோழர்களே, தற்கால நடத்தையைத் திருமூலர் அப்படியே படம் பிடித்துக் காட்டுகிருர் பாருங்கள்!

## கக. வேத சாரம்

'சுத்தம், சுதந்தரம், சமத்துவம்' இவையே வேதத்தின் உள்ளம். எவ்விதமான இடையீடும் இன்றி, எல்லாரும் உள்ளும் புறமும் இறைவனை அறிந்து கலந்து களிப்புற வாழும் வகையை வேதம் எல்லாருக்கும் சொல்லுகிறது. "அந்தராத்மனை இறைவன் ஒருவன்; அவனே பாரொடு விண்ணாய்ப்பரந்த எம்பரமன். அவன் உயிர்க்குயிராய் உள்ளந்தோறும் இடங்கொண்டுள்ளான். அவன் சுத்தன், இன்பன். சுரங்கத் தங்கத்தை மாசு மறைத்துக் கொண்டிருப்பதே போல, நமது நிஜசொரூபமாகிய அவனை மனமாசு மறைத்துக்கொண்டிருக்கிறது. சுத்த சாதனங்களால் மனமாசைத் துடைத்துப் பளிங்குபோலத் தெளிவுற்றால் இறைவனைக் காணலாம்." என்பதே வேதசாரம். பதிஞானத்தை மறைத்துப் பசுவை மயக்கும் தீவினைகளையே வேதம் இருள் வன்மைகளான அரக்கராக வருணிக்கிறது. வேதக் கடவுளரெல்லாம் ஒரு நிர்க்குணப் பிர்ம்மத்தின் சகுணவடிவுகளேயாவர். கடவுளரின் தத்துவப் பொருளை முன்பே அறிந்தோம். மனிதனுள் புகுந்த தேவனையறிந்து, மனிதன் மாறிப் பிறந்து, அமுத வாழ்வு பெற வழிகாட்டும் தெய்வ ரகசியங்கள் அடங்கிய வேதத்தை உள் விழியால் அறியாமல், புற விழியாற் கண்டு அனர்த்தம் செய்துகொண்டனர் மாந்தர். அதனால் நமது நாட்டை மெலித்து, ஆயிரம் சாதி மதக் கந்தலாக்கி, அன்னியருக்கு அடிமை செய்த போலிப் பழக்கங்கள் பெருத்தன. அனுபூதி பெற்ற மகான்களின் வேதவாக்குகளைக் கேவலம் படிப்பு வல்லபத்தால், மனம் போனபடி வியாக்கியானம்

செய்து, தமது கூற்றே உண்மையென்று செருக் காடி, மத பேதங்களை ஏற்படுத்தினர் சிலர். சிலர் நெற்றியையும் குடுமியையும் பார்த்து மனிதரை மதிக்கத் தொடங்கினர். அந்தோ! எத்தனை வகுப் புச் சண்டைகள் புல்லுருவிகள் போல நம்மிடையே பெருகிவிட்டன! அவற்றால் நம் நாடு பகற் கொள்ளை போகிறது. இந்த வகுப்பு வேறுபாடுகளெல்லாம் சுயநலப் போலிகளின் சூழ்ச்சிகளே! இச் சுயநலப் புலவரின் வேசை மயக்கத்தில் விழாமல் வேதங்களை உண்மையாக ஆராய்ந்து உண்மைப் பொருளறிந்து உள்ளாரப் போற்றிப் பயன்பெற வேண்டுமென்ப தைத் திருமூலர் விளக்குகிறார். இனி ஆகம விளக்கம் காண்பாம்.

## உ0. ஆகமச் சிறப்பு

"தமிழ்ச் சொல் வடசொல் எனும்இவ் இரண்டும்
உணர்த்தும் அவனை உணரலும் ஆமே!"

தமிழ் ஆரியம் இரண்டிலும் வேதாகமப் பொருள் பொதிந்துள்ளது. தமிழ் தந்தை, ஆரியம் தாய் போலும். ஆரியம் வழக்கிறந்த மொழியாயினும், அதற்கு ஏராளமான செல்வாக்குள்ளது. தமிழ் மொழிக்கரசாயினும் அந்தோ! அது பத்து ஜில்லாக் களில் சிறைப்பட்டு அரையுயிர் வைத்துக் கொண்டுள் ளது. ஆரிய நூல்களை உலகம் மொழிபெயர்த்து ஓதுவதுபோலத் தமிழிற் சிறந்த அருள் நூல்களை யும் உலகம் ஓதவேண்டும். தமிழர் அதற்கு ஆவன செய்ய வேண்டும். வேதாந்தம் உலகளாவியுள்ளது. தமிழ் முனிவர் பயின்றுரைத்த சித்தாந்தம் குடவிளக்

காயிருக்கிறது. அதைப் புவிவிளக்காகத் தூண்ட வேண்டும். தமிழர்களே, எழுந்திருங்கள்! இன்னும் உறங்காதீர்கள்! கேளுங்கள் சிவாகம மகிமையை! திருமூலரைப் போன்ற மகா யோகசித்தர் அதையே அனுட்டித்தனர்; உபதேசித்தனர்.

"அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணிநின்று அப்பொருள் ஏத்துவன் நானே"

என்கிறார் நமது செந்தமிழ்ச் சித்தர்.

ஆ + கமம் = ஆகமம்: 'ஆ' என்றால் அண்மை; கமம் என்றால் போதல். ஆகமம் என்றால் இறைவனை அணுகுதல் என்பது பொருளாம். அணுகுதல் என்ற மாத்திரத்திலேயே முப்பொருளின் தோற்றம் உண்டாகிறது. எப்படி? "நான் அரசனை அணுகினேன்" என்கிறான் ஒருவன். அப்போது அரசன், நான், இருவருக்கும் இடையேயுள்ள தடை நீக்கம் என மூன்று பொருள்கள் உணரநிற்கின்றன அல்லவா? மூன்று பொருளும் ஒன்றானால் யாரை யார் அணுகுவது? பாலும் வெள்ளையும் ஒன்றானால் பாலை வெண்மையடைந்தது கலந்தது என்ற பேச்சிற்கு இடமில்லையல்லவா? கடலொன்று ஆறொன்று வழியொன்று ஆகிய மூன்றும் இருந்தாலேதான் ஆறு கடலையடைந்து கடலானது என்று சொல்ல வியலும். நன்றாக யோசித்துப் பாருங்கள்! இந்த முப்பொருளுண்மையின் விரிவே ஆகம சாத்திரம். ஆறு கடலைக் கலக்குமுன், எத்தனை காடு, எத்தனை மலை, எத்தனை பள்ளத்தாக்குகளில் விழுந்தெழுந்து, வளைந்து பிரிந்து சேர்ந்து திரிந்து ஏறியிறங்கி எத்தனை உயிர்களையும் பயிர்களையும் ஊட்டி

இறுதியில் கடலையடைகிறது! அதுபோலவே ஜீவ நதியும் எத்தனையோ இன்ப துன்பங்களில் உழன்று இருவிகாரக் கரைகள் வழியே திரிந்து, வினைவழியே வளைந்து சென்று, அறம்பாவமென்னும் அணைகளைத் தாண்டி இறுதியில் அருளையணுகி அறிவானந்தமான இறைவனை ஒரு நாள் கூடுகிறது. தனுகரண புவன போகாதிகளில் உழலும் உயிராறு உடையானைச் சேரப் படிப்படியாக வழி நடத்துவதே ஆகமத்தின் சிறப்பாம்.

'வேதமா, ஆகமமா - எது முன்னது எது பின்னது?' என்னும் கேள்வி வேண்டா. முன்னுதித்த நலனையும் பின்னுதித்த நலனையும் நாம் பயில்வாம். 'வேதம் உபநிடதம், தரிசன நூல்கள் இவற்றில் 'ஆகமம்' என்ற சொல் இல்லை; அது பிற்பட்டது' என்பர்; என்றால் என்ன? அண்ணனைவிடத் தம்பி அறிவாளியா யிருத்தலாகாதா? ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் காய்த்த காட்டு மாங்காயைவிட, இன்று பௌதிக இரசாயன முறையிற் கனிந்த பெங்களூர் ஒட்டு மாம்பழம் சுவையுள்ளதாயின் கொள்ளலாகாதா? இப்போது அறிவாற்றல்களிலும், உரிமை வேட்கையிலும் முன்னேறிவரும் மனித சமுதாயத்திற்கு எது பயனுள்ளதோ, அதைக் காலம், மொழி, நாடு, நிறம், சாதி, மதம் ஆகிய எவ் வேறுபாடுமில்லாமல் கொண்டொழுகுவதே அறிஞர்க்கழகு. இடமும் காலமும் மனப்பான்மையும் மாறும்; கடவுளுண்மை மாறாது; அது காலதேச வர்த்தமானங் கடந்தொளிர்வது. அதனால்,

"அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்" என்றுமுள்ள சிவசக்தி - உலகான்ம விளக்கம் என்றே கொள்வோம்.

## உக. ஆகமத் தோற்றம்

ஆகமம் வந்த வகையைக் காண்போம்:

"மன்னு மாமலை மகேந்திர மதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்"

என்றார் மணிவாசகப் பெருமான். ஆகமம் ஆதியிலேயே இருந்த உண்மையின்ப நூல்; அதைத் தக்க காலமும், ஆன்மாக்களின் பக்குவ நிலையும் கண்டு இறைவன் தோற்றுவித்தான். இதற்கொரு கதை திருவிளையாடற் புராணம் வலைவீசிய படலத்திற் காணப்படுகிறது:

ஆகமத்தை அருளியவன் பரமன்; அவன் அதைத் தன் மருங்கினளான பார்வதிக்கு விளக்கினான். பார்வதி பொருளையுணராமல், கருத்தின்றிக் கேட்டாள். அதனால் 'விரதமும் அறமும் இல்லாத வலைஞர் குலத்திற் பிறக்கக் கடவாய்!' என்ற சாபம் உண்டானது. பார்வதி அவ்வாறே பரதவர் தலைவன் வீட்டிற் பிறந்து வளர்ந்தாள். தம் அன்னையை இப்படிச் சபித்ததற்காக முனிந்து, கணபதியும், முருகனும் சிவன் கையிலிருந்த ஆகம ஏட்டைப் பறித்துக் கடலில் எறிந்தனராம். இந்தத் துட்டப் பிள்ளைகளை உள்ளே விட்டதற்காக நந்திதேவனை மீனாய்ப்பிறந்து கடலில் விழுந்த ஆகம ஏடுகளைச் சுமந்தலையும்படி இறைவன் சபித்தான். அவ்வாறே நந்தி - மீன் கடலில் வளர்ந்து பெருகி, வலைஞர் படகை உடைத்து அவர் தொழிலை நடக்க விடாமல், வலைக்கடங்காமல் இடர்செய்தலைந்ததாம். இம் மீனைப் பிடிப்பவருக்குத் தன் மகளைத் தருவதாகப் பரதவர்கோன் விளம்பரம் செய்தான். பரமனே ஓர் இளவலாகத்

தோன்றி, நந்தி - மீனைப் பிடித்து, வலைஞர் குடியில் வாழ்ந்த பார்வதியை மணந்தான். இறைவன் நந்தி-மீன் சுமந்த ஆகமத்தை மீட்டு, அதன் பொருளை மீண்டும் மகேந்திர மலையினின்று அருளினான். எப்படியருளினான் என்பதைத் திருமூலர் விளக்குகிறார்:—

பரமன் அஞ்சனமேனி அரிவையாகிய பார்வதியின் வாமபாகத்தன்; சத்யோஜாதம், வாமம், அகோரம், தற்புருடம், ஈசானம் ஆகிய ஐம்முகன். அஞ்சலி செய்து தொழுத அறுபத்தாறு முனிவர் இறைவனது ஐந்தாம் முகமான ஈசானியத்தில் ஆகம இரகசியப் பொருளைக் கேட்டனர்.

"அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே."

'தாந்திர தத்துவம்' என்னும் ஆரிய நூல், ஆகமத்தின் தோற்றத்தை அடியில் வருமாறு விளக்கும்:— சத்யயுகமாந்தர் நீண்ட ஆயுளும், உடலுறுதியும்; ஆன்ம பரிபூரணமும் பெற்றுத் தீரராக வாழ்ந்தனர், வேத நெறியைச் சரிவரக் கடைப்பிடித்தனர், ஆனால் காலக்கோளால் மாந்தர், ஆற்றல் குன்றி மெலிந்து தளர்ந்தனர். பலசாதி மதப் பிரிவுகளால் மனித சமுதாயம் உரனிழந்து, நடையிழந்து, அருகிக்கொண்டிருந்தது. ஆண்மையிழந்த ஆண்களும். பெண்மையிழந்த பெண்களும் இயற்கையைக் கண்டு அஞ்சி நடைப்பிணங்களாக வாழ்ந்தனர்; மாயா சக்திகளை எதிர்த்து வெல்லும் திறமையற்றனர். உலகன்னையாம் உமாதேவி, தன் அன்புச் சேய்களான ஆன்மாக்களை மீண்டும் உய்வித்து வீர தீரராக்கக் கருதிப் பரமனிடம் முறையிட்டாள்: "இறைவனே, உலகம் உனதருளாகிய எனது ஆடரங்கம். ஆன்ம

கோடிகள் என் குழந்தைகள். அவர்கள் அறிவும், அருளும், அன்பும், இன்பமும், வீறும், வீரமும் பெற்றுத் தெய்வ சமுதாயமாக வாழ ஒரு சன்மார்க்கம் வகுத்தருள வேண்டும்.” கருணைக்கடலான மங்கைபாகன், ஆண்மையும் பெண்மையும் சிவசக்தி யின்பமும், ஆற்றலும் பெற்று வாழ ஆகமப் பொருளை உபதேசித்தான்.

குமரிமுதல் கைலைவரை, நம் நாட்டுக் கோயில் வழிபாடுகளெல்லாம் ஆகம நெறி பற்றியே நடக்கின்றன. மானிடத்தின் சமபாதியான பெண்மையை வெறுக்கும் வறட்டுத்துறவால் நமது நாடு கேடடைந்தது. ஆகம தாந்திரம் பெண்மையைப் பராசக்தி அமிசமாகப் பெருமைப் படுத்துகிறது; ஆணும் பெண்ணும் அமைவுறக் கூடி வாழ்வைச் சிவசக்தி யோகமாக்க வகை செய்கிறது. ‘யோகசித்தி’ இல்லறவியலில் இதன் விளக்கத்தைக் காண்க.

மஹார்ணவம், குலார்ணவம், தாந்த்ர தத்துவம், சாரதாதிலகம், ஞானார்ணவம், பிரபஞ்சசாரம், குலசூடாமணி நிகமம், காளிவிலாச தாந்த்ரம் ஷட்சக்ரநிரூபணம், திருமந்திரம், ஔவைகுறள், திருமுறை நூல்கள்—இவையெல்லாம் ஆகம-தாந்திர சாத்திர விளக்கங்களேயாம். எல்லா ஆகம நூல்களின் பொருளும் திருமந்திரத்தில் பொதிந்து கிடக்கின்றன.

## ஆகம விரிவு

மனித வாழ்க்கை மாரியும் கோடையும் சூழ்ந்த ஏரி போன்றது; அதில் ஏற்றம் இறக்கம், இன்பம் துன்பம் ஆகிய இருவிகாரங்கள் மாறிமாறி வருவன

வாம். மனித வாழ்க்கை உரனற்று இளைத்த காலத்தில், அது உய்யும் பொருட்டுத் தனது அருட்சக்தியான உமைக்குக் கருணைகூர்ந்து, ஆரியம் தமிழ் ஆகிய இரண்டு புண்ணிய மொழிகளிலும் ஆகமம் அருளினன் இறைவன். ஆன்மா பெத்தன்; ஆணவம் மாயை கன்மங்களிற் கட்டுப்பட்டது. ஆன்மாவை மும்மலங்கள் கட்டும் வகை, அக்கட்டுடன் உயிர்க்கிளி உடலைவிட்டுச் சென்று மறுவுடலிற் புகும் வகை (சிமிழ்த்தலைப்பட்டு உயிர் போகின்ற வாறு), இக் கட்டை அவிழ்க்கும் வகை ஆகிய மூன்றையும் இறைவன், தமிழ்ச்சொல் வடசொல் இரண்டிலும் அருளினன். அவ்வாறு அருளிய கருணை வள்ளலான இறைவனை உணர்வதே ஆகமப்பயனும். வடமொழி தவிர சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கு, கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கவுடம், கோசலம், தமிழ் ஆகிய பதினெட்டு மொழிகள் உள்ளன. 20-வது நூற்றாண்டில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்துஸ்தானி, பார்சி, அரபி, வங்கம், குஜராத்தி, மராத்தி, சீனம், ஜப்பானியம், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், லத்தீன், கிரேக், ரஷ்ஷியன் ஆகிய 18 முதன்மையான மொழிகள் உள்ளன. பதினெட்டும் கற்ற பண்டிதர், அண்டத்தைப் படைத்த முதல்வனை உலகநாதனை அடையும் அறத்தையே சொல்வர். சிவாகமம் எதைச் சொல்லுகிறது? இறைவனது பல வகை விளக்கங்களையும், தானே தானாயிருக்கும் தற்பர நிலையையும் சொல்லுகிறது. அவன் அமரர் அர்ச்சிக்கும் இறைவன்; அவனே உலகை ஆக்கி அளிக்கிறான்; அவனே காலருத்திரனாகிப் பழைய

உலகை அழித்துத் தன்னுள் அடக்குகிருன்; அவனே உயிர் உலகம் அனைத்திற்கும் தலைவனு யிருக்கிருன். அவனே ஐந்தொழில் வடிவைத் தாண்டி, எதிலும் தாக்கற்றுத் துரியாதீத நிலையில் பராபரனுயிருக்கிருன். அவனே அறிவாகி ஆகம மாகி, ஓங்கி நின்று ஆன்மாக்களுக்கு அருளொளி காட்டுகின்ருன். அவனே பரமன், சக்தி-சதாசிவன், உமாமகேசன், உருத்திரன், திருமால், பிரமன். அவன் 28 ஆகமங்கள் அருளினன். அவற்றுள் ஒன்பது முதன்மையாம். அவையாவன:—காரணம், காமிகம், வீரம், சித்தம், வாதுளம், விமலம், சர்வோத்தம், சுப்பிரபேதம், மகுடம் என்பன.

இருபத்தெட்டு ஆகமப் பிரிவுகளை அடியில் வருமாறு காண்க: ஒவ்வோராகமமும் சிவபிரான் அங்கம் ஒன்றைக் குறிக்குமென்பர். அதாவது, அவனே ஆகமமாக விளங்குகிருன் என்பதாம்.

## ஆகமப் பிரிவு

| எண் | பிரிவு | அங்கம் |
|---|---|---|
| 1 | காமிகம் | திருவடிகள் |
| 2 | யோகஜம் | கணைக்கால்கள் |
| 3 | சிந்த்யம் | கால்விரல்கள் |
| 4 | காரணம் | கெண்டைக்கால்கள் |
| 5 | அசிதம் | முழந்தாள் |
| 6 | தீப்தம் | தொடைகள் |
| 7 | ஸூக்ஷமம் | குய்யம் |
| 8 | ஸஹச்ரம் | இடுப்பு |
| 9 | அம்சுமான் | முதுகு |
| 10 | ஸுப்ரபேதம் | தொப்புள் |

| | | |
|---|---|---|
| 11 | விஜயம் | வயிறு |
| 12 | நிர்வாசம் | நாசி |
| 13 | ஸ்வாயம்புவம் | முலைமார்பு |
| 14 | ஆக்னேயம் (அனலம்) | கண்கள் |
| 15 | வீரம் | கழுத்து |
| 16 | ரௌரவம் | செவிகள் |
| 17 | மகுடம் | திருமுடி |
| 18 | விமலம் | கைகள் |
| 19 | சந்திரஞானம் | மார்பு |
| 20 | பிம்பம் | முகம் |
| 21 | புரோத்கீதம் | நாக்கு |
| 22 | லளிதம் | கன்னங்கள் |
| 23 | சித்தம் | நெற்றி |
| 24 | சந்தானம் | குண்டலம் |
| 25 | ஸர்வோத்தம் | உபவீதம் |
| 26 | பாரமேசுரம் | மாலை |
| 27 | கிரணம் | இரத்தினபரணம் |
| 28 | வாதுளம் | ஆடை |

சிவாகமங்கள் நான்கு பாதங்களாகப் பிரிக்கப் பெற்றுள்ளன :—

**சிவாகம—பாதங்கள்**

| பாதம் | பொருள் |
|---|---|
| 1 சரியாபாதம் | சமயாசாரம், தீக்ஷாவிதிகள் |
| 2 கிரியாபாதம் | மந்திரம், தந்திரம், பூஜை, ஓமம் |
| 3 யோகபாதம் | அஷ்டாங்க சிவயோகம் |
| 4 ஞானபாதம் | பதிபசுபாச லக்ஷணம் |

கோயில் திருப்பணி, தெய்வ வடிவங்களைச் செய்து நிலைநாட்டும் விதிகள், நித்திய பூஜை விதிகள்,

திருவிழாக் கொண்டாடும் வகை, தந்திர மந்திர பிராயச்சித்த விதிகள், கர்மானுஷ்டானம், அர்ச்சகர் ஒழுக்கம், அடியார் நடைமுறை, ஆலயதரிசன விதிகள், ஜபதப நியமங்கள், சமயதத்துவம், குருமார் இலக்கணம், தீக்ஷாவிதிகள், பஞ்சாக்ஷர ஷடாக்ஷர மந்திர தத்துவம், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய சாதனங்கள், பதிபசுபாச விளக்கம், தத்துவ விளக்கம், சிவசக்தி விளக்கம், ஆதார ஆதேய விளக்கம், குண்டலி மகாகுண்டலி சித்தி - இவையெல்லாம் ஆன்மா மலமொழிந்து, சுத்தான்மாவாகி அருளிறைவனைக் கலப்பதற்குப் படிப்படியாக, சோபானபக்ஷம் காட்டி நடத்துவனவாம். ஆகமம், சைவம் வைணவம் இரண்டிற்கும் உண்டு. சிவாகமம் கூறினோம்.

வைஷ்ண வாகமம் இரண்டு வகையாம்: (1) திருமால் விகனச முனிவருக்கருளிய வைகானசம் (2) ஐந்து நாட்களில் அருளிய பாஞ்சராத்ரம். இரண்டும் அஷ்டாக்ஷர மகிமை, ஆசாரிய லக்ஷணம், சிஷ்ய லக்ஷணம், சமாச்ரயணம், சிஷ்டாசார விதிகள், பெருமாள் சேவா நியமங்கள், மூர்த்தி உபாசனை கிரமங்கள், கோயில் அமைப்பு முதலியவற்றைக் குறித்து விரிவாகச் சொல்லும்.

ஆகமம் இருபத்தெட்டும் கோடிக்கணக்கான செய்யுட்களைக் கொண்டன. இந்த ஆகமப் பொருளை அறிதல் எளிதன்று. அது அமரர்க்கும் அரிது; அதை இறைவன் அருளறிவில்லாமல் அறிய முயல்வது நீர்மேலெழுத்தைப் போலப் பயனற்றதாகும் :—

அண்ணல் அறைந்த அறிவறி யாவிடின்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே.

## உ௨. குருமார்

பின்னே எப்படி ஆகம ரகசியங்களை அறியலாம்? குருமார்கள் மூலமே அதை அறியலாம்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்;
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்;
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்;
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

இறைவனருள் பெற்ற நாதர்களே குருமாராவர். நந்தியருளாலே நாதனும் பேர் பெற்றேம். 'நாதர்' என்றால் தன்னையடக்கி வென்று இறைவனுக்கே ஆளாயிருப்பவராம்! இயற்கையின் தளைகளை உதறி, மாயா சக்திகளைத் தம் வசப்படுத்தி, ஆத்ம ஜயம் பெற்ற சித்தரே நாதர்களாவர். திருநந்திதேவர், சிவயோகமாமுனி, தில்லை நடனம் கண்ட பதஞ்சலி, வியாக்கிரமர், மூலர் முதலியோர் நாதர்களாவர். இந்திரன், சோமன், பிரமன், மால், உருத்திரன், காலாக்னி, கஞ்சமலையன்—இந்த எழுவரும் மந்திரம் பெற்ற வழிமுறை முதல்வர். நாதர்கள் நாலு திசையிலும் இருந்து ஆன்மாக்களுக்கு அருளுவர்.

நான்கு திசையிலும் நான்கு நாதரும் இருந்தருளுவர். திருமூலர் தென்றிசை நாதராக விளங்குகிறார். நாதர்கள் அவரவர் பக்குவத்திற் கேற்றபடி பலவகையான தத்துவப் பொருளைக்கொண்டு ஆன்மாக்களுக்கு அருளுவார்கள். எதற்காக? தாம்

பெற்ற இன்பம் தம்மவரான ஆன்மாக்களும் பெறக் கருதியே அருளுவர். அப்படித் தாம் சிவ யோக சித்தி பெற்று ஆன்மாக்களுக்கும் அதை யருளும் குருமார் தெய்வத்தன்மை பொருந்திய நாதராவர். அவர்களுக்கு ஈசனே அருளறி வீந் தான். அது எத்தகைய அறிவு? இறைவன் மொழிந்த அறிவு, இறப்பும் பிறப்பும் ஒழிந்த பெருமையைத் தரும் அறிவாகும். சூரிய சந்திராக் கினியாகிய முச்சுடர் இறைவன், ஆன்மாக்கள் பிறப்பிறப்புத் துயர் கடந்து வீடுபெறும் அறி வையே உணர்த்துவான்; மற்றறிவு வெற்றறிவு; அதிற் பெருமையில்லை.

இறைவன் எந்த நிலையில் அறிவை உணர்த் தினன்? ஆன்மா தன்னன்பில், தன்னுணர்வில் அழுந்திய நிலையில். அந்த நிலையிலேயே அண் ணல் நவநாதசித்தர்களுக்குச் சிவஞான மருளி னன். அந்த 'நெறிக்குரிய நியமங்களை எண்டிசை மாந்தரும் பயிலுங்கள்!' என்று இறைவன் அரு ளுகிறான்.

உலகில் சன்மார்க்கத்தைப் பரப்பக் குருமார் ஆங்காங்கே திருமடங்கட்டிச் சீடரைப் பயிற்றினர். திருமூலர் மடத்தில் மூவாயிரம் செய்யுட்கள் அடங் கிய ஒன்பது தந்திரங்களில் அழகாக ஆகம வேதத்தை விளக்கும் திருமந்திரத்தை ஓதினர். இதைத்தவிர வேறு மடங்களும் இருந்தன. காலாங் கர், அகோரர், மாளிகைத் தேவர், நாதந்தர், பரமானந்தர், போகதேவர் முதலாய நாதர்களும் தமது மடங்களிலிருந்து ஆன்மாக் களுக்குப் பதியன்புணர்த்திப் பதியறிவை விளக்கி

னர். இவர் இறைவனுடன் இரண்டறக் கலந்தவர், உலகிற்கு நலந்தருவோர்; அருட்புலவர், உலகிற்கு அறிவொளியாக விளங்குவோர், நிராமயர், தூயர், வாய்மையாளராவர்.

## ௨௩. மும்மூர்த்திகள்

மூலர் சொல்லும் திருமந்திரம் சிவனைப் பெருமைப் படுத்துகிறது; மற்றக் கடவுளரை ஒதுக்குகிறதோ? அன்று. மூலர்மந்திரம் சர்வ மத சமரச நூல். சிவன் பெருமை என்ன? அவன் இறப்பிலி, பிறப்பிலி; அளவில்லாத இளமை, காலத்தை வென்று ஆதியந்தமற்ற சாசுவதமான இன்ப நிலை, சதா முத்திநிலை கொண்டவன் சிவபெருமான். மற்றத் தேவர் காலத்திற்குக் கட்டுப்பட்டவர். அவர் பிறப்பர்; இறப்பர். தளர்வில்லாமல் என்றுமிருப்பவன் சிவனே. சிவன் என்பது இன்பக் கடவுள் எனப் பொதுமையிற் கொள்க! நாம் இங்கே 'சிவம்' என்பது வேதாந்திகள் பிரமம், நித்தியம், நிராமயம், நிரஞ்சனம், நிராலம்பம், சுத்தம் என்று சொல்லும் உயர் பரம்பொருளாம். இப் பரம்பொருளின் சக்தி வடிவு அல்லது அருள் வடிவே ஐந்தொழில் புரிகிறது. உருத்திர மூர்த்தி சம்ஹார வடிவம், விஷ்ணு அருளும் வடிவம், பிரம்மா சிருஷ்டி வடிவம். ஆக்கல், அளித்தல், அழித்தலுக்குக் காலம், இடம், காரணம் ஆகிய எல்லையுண்டு. படைத்தளிக்கும் அரிபிரமாதிகளுக்கு எல்லையுண்டு. ஆனல், சோதித்துப் பார்த்தால் முத்தொழிலும், அதன் முதல்வரும் ஒரே தொடர்பினரே யாவர். வீணுக பேத புத்தியால் மாந்தர் மனத்தைச் சிதைத்து, உலகோர் பல சாதி சமயமாகப் பிரிந்து பிணங்குகின்றனர்.

ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை யானும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனார்;
பேதித் துலகம் பிணங்குகின் றார்களே!

இந்தக் கொள்கையை **நம்மாழ்வா**ரும் ஒப்புகிறார். குயவன் சட்டி செய்கிறான்; மாந்தர் அதை வாங்கி உபயோகித்துக் காக்கின்றனர். காலம் அதைப் பழுதாக்கி எப்படியோ உடைக்கிறது; உடைந்த சட்டி புதிய சட்டிக்கு மண்ணாகிறது. ஒவ்வொரு நொடியும் உலகில் இந்த முத்தொழிலும் நடைபெறுகின்றன. முடிவான தொழில் அரன் தொழிலே; அதுவில்லாமல் படைப்பில்லை; அதுவில்லாமல் காப்பில்லை. ஒரு தங்க நகையை முதலில் அழித்தல்லவா தட்டான் புதிய நகை செய்யவேண்டும்? ஒரு விதை பூமியில் ஊன்றப்பட்டுத் **தான்** அழிந்தல்லவா முளையாகி இலையாகிக் கிளையாகிப் பூவாகிக் காயாகிக் கனியாகிறது. ஒவ்வொரு நிமிஷமும் இலை உதிர்கிறது; மரம் முதிர்கிறது. சிருட்டிப் பொருள் ஒவ்வொன்றும் பிறந்து முதிர்ந்து அழிவை நோக்கியே சென்றுகொண்டிருக்கிறது. வாழ்வே போராட்டந்தான்; வாழ்வே உருத்திர பூமிக்குச் செல்லும் ஓட்டந்தான். எல்லாத் தொழில்களும் அரனிடமே தொடங்கி, பிரமனால் விளங்கி, விஷ்ணுவால் வாழ்ந்து மீண்டும் அரனிடமே பவனி சென்று முடிகின்றன. 'அழிவின்றி ஆக்கமில்லை' ஆக்கமின்றிக் காப்புமில்லை. அழிவின்றிப் புதுமையில்லை; ஒன்றழிந்து இன்னொன்றாகியே உலக விளையாட்டு நடைபெறுகிறது. எண்ணெயும் திரியும் அழியாமல் விளக்கெரியாது. குழந்தைப் பருவம் அழியாமல் வாலிபம் வராது.

முத்தொழிலும் ஒரே தொடர்புடையன. வாழ்வுச் செடிக்கு இடஞ் செய்வோன் அரன், நடுவோன் பிரமன், வளர்ப்போன் விஷ்ணு; மரம் வளரும் போதே உருத்திரத் தொழிலும் அதனுடன் தொடரும். இலை, பூ, கனிகள் உதிர்ந்து மண்ணுகின்றன. ஒரு நாள் மரமே சாய்ந்து விறகாகிச் சாம்பலாகும். வசந்தம் தளிர்க்கச்செய்கிறது; கோடையும் மாரியும் வளர்க்கின்றன; ஆடிக் காற்று இலைகளை உதிர்க்கிறது. நமது வாழ்வும் இவ்வாறே. இறப்பு, பிறப்பு என்னும் இரண்டு கரைகள் வழியே வாழ்வாறு செல்லுகிறது. ஆறு ஓடும்போதே அதை விழுங்கக் கடல் ஆர்க்கிறது.

## முத்தொழில்

இருவினைக் கட்டால் இறப்பும் பிறப்பும் உண்டாவன. பரமேசனுகிய சிவன், இருவினைக்கும் அப்புறம் சாசுவத முத்தனுயிருக்கிறுன் — ஈசன் இருக்கும் இருவினைக்கு அப்புறம். அப்பெருந் தெய்வமே அனைத்திற்கும் வித்தாம். 'அது இது' என்று உலகில் வாதாடுகின்றனர். ஒருவனருளே முத்தொழில் முதல்வரானது என்ற நினைப்பில்லாதவர், சைவ வைணவச் சண்டை செய்கின்றனர். பரிசுத்தமானவர் முத்தொழில்களின் வேரை அறிவர்; வேர் எது? அருள் விதையின்றி வேர் வருமா? வேருக்கு ஆதாரமான விதை எதுவோ அதுவே பரமன், சிவன், ஆதி முதல்வன். ஆதலால் இவ்வாறு பயனறிந்து தொடர்பறிந்து எண்ணினல் அரியும் பிரமனும் நமக்கு அன்னியமில்லை.

பயன் அறிந்து அவ்வழி எண்ணும் அளவில்
அயனோடு மால்நமக்கு அன்னியம் இல்லை.

அரியும் அயனும் முக்கண்ணன் தமராம்; அவனுடன் இணைந்தவராம்; அந்த வானவராலும் வேத வசனத்தை மாந்தர் பெறுவர். ஆதியிலிருந்த ஒரு பேரொளியே, மூன்றொளி, ஐந்தொளியாகிறது; ஒரு விளக்கே பல சுடர்களாகின்றது. ஒரு பரஞ்சுடரே மும்மூர்த்திகளானது. அதை அறியா மூடர் திரிமூர்த்திகளைப் பேதித்து வாதம் பிதற்றுகின்றனர். உலகில் அனைவரும் ஊனில் அமர்ந்தவர்கள், தேகாத்மாக்கள். ஊனில் உயிராயிருப்பதெது? ஆன்மா; பலகோடி ஆன்மாக்களும் இயங்குவது எதனால்? உயிர்க்குயிரான, பசுபதியான இறைவனருளால். அவனன்றி யாருக்கும் உணர்வில்லை. அவன் உயிர்க் குயிராயிருக்கக் கண்டுதான் நா சுவைக்கிறது, கண் காண்கிறது; காது கேட்கிறது. இன்றேல் இயற்கையுடல் பிணமாகி மண்ணாகுமன்றோ? வானவராகட்டும், மனிதராகட்டும்; உள்ளுறையும் ஒரு பொருளின்றி யாருக்கும் உயிரில்லை, உயிர்ப்பில்லை, வாழ்வில்லை. அப் பரம்பொருள் பரத்தில், தற்பர நிலையில், தானே தானாக ஒன்றாகும்; அதுவே அருளால் ஆன்மாக்களின் உள்ளே உயிர்க்கும்; அதுவே பரமான்மாவாகிப் புறத்தே உலகில் விளையாடும். அதுவே மாயவனாகி உலகைத் தாங்கும். அதனருளே அயனாகி உலகைப் படைக்கும். இவ்வாறு பலதரங்களில், பல தன்மையனாக விளங்கும் அருளிறைவனே ஒளியுள் ஒளியாயிருக்கிறான்; அவனே ஒளியை மறைத்து இருளில் இருளாகவும் இருக்கிறான்.

பரத்திலே ஒன்றாய் உள்ளாய்ப் புறமாகி,
வரத்தினுள் மாயவனாய், அயனாகித்
தரத்தினுள் தான்பல தன்மைய னாகிக்
* கரத்தினுள் நின்று கழிவு செய்தானே.
(கரம்=ஒளி. கழிவு=நீக்கம்.)

எம் இறைவன் சதாசிவன், நித்திய சுத்தானந்தன்; அவன் பகுப்பற்றவன்; ஒரே கூறுடையான். அவன் தானே தானான நிலையில் தற்பரனாயிருக்கிறான். எனினும், தன் அருளில் ஒரு கூறு வானை மருவ நிற்கிறான். அவனே வானவனாயிருக்கிறான்; அவனே வானிற்கிறைவன். அவனே மன்னுயிர்களின் உடலுள் நின்று உயிர்க்கின்றான். அவனே சலமயனாக விரிந்தான். அவனே நாராயணன்.

இப்படிப்பட்ட இறைவன் திருவடிப் பெருமையைச் சொல்லத் திருவருளாணை பெற்றேன். நான் யாதும் அறிகிலேன்.

பாடவல் லார்நெறி பாட அறிகிலேன்
ஆடவல் லார்நெறி ஆட அறிகிலேன்
நாடவல் லார்நெறி நாட அறிகிலேன்
தேடவல் லார்நெறி தேடகில் லேனே.

ஆனால் நான் போற்றும் இறைவன் கருணை வள்ளல். வாய்மொழியால் மதித்தவருள்ளும் இன்னிசையாக அவன் எழுகின்றான். அன்பர் உன்னும் அவனைப் பிரமனும் உணர்தல் அரிது. வேறாயிருந்து துதிசெய்யும் பக்தியால் அவனை யுணரும் பயனையறியார். முத்திக்காகக் காத்திருந்த முனிவர் அவனுடன் ஒத்து உடனுறைந்தார்; அவன் அன்

பில் உறைந்தார்; அனன்ய பாவத்திலிருந்தார். அவருக்கே மகேந்திர மலையில் இறைவன் தத்துவ ஞானம் உரைத்தான். அந்த ஞானத்தை அவனருள் தூண்ட, அவனன்பிற்கூடி 3000 மந்திரங்களாக உரைக்கிறேன். ஆன்மாக்கள் உய்யும்பொருட்டுத் திருவருட் சித்தர் வகைவகை நன்னூல்கள் அருளினர். அவற்றுள் இந்நூல் முத்தி முடிபாகும்; அருளிறைவனுடன் இரண்டறக் கலக்கும் உயர்ந்த முத்திநெறியை இந்நூல் கூறும்.

பாயிரம் முற்றிற்று.

---

## நூல் – ௩

## பரமுத்தி விளக்கம்

### உபதேசம்

### உச. பாசமறுத்தல்

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே,
சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா;
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்,
ஆரியன் தோற்றமுன் அற்றன மலங்களே.

பதி, பசு, பாசம் எனும் முப்பொருளுண்மையை முன்பே யறிந்தோம். மூன்றும் அனாதிப் பொருள்களாம். பதியினின்றும் பசுவைப் பிரிப்பது பாசம். பதிப்பொருள் என்றும் விடுதலைபெற்றது; எங்கும்

அனைத்தும் தானயிருப்பினும் யாதிலும் தாக்கற்றிருப்பது. அதைத அணுகும் ஆற்றல் பாசான்மாவிற்குக் கிடையாது; இறைவனே கருணைகொண்டு அணுகினல் பசுவின் பாசம் நீங்கும்.

பதியினைச் சென்றணுகாப் பசு, பாசம்;
பதியணுகிற் பசு, பாசம் நிலாவே.

இதற்கொரு உதாரணம் காண்க:—சூரிய காந்தக்கல் வெப்பமுடையது; எனினும் அது தானே பஞ்சைச் சுடாது; சூரியன் சந்நிதியிலேயே சுடும். பெருக்காடி (Magnifying glass) தானே காகிதத்தைச் சுடாது. சூரியனுக்குமுன்னே சூடேறப் பிடித்து, அதன் வெவ்வொளியில் காகிதத்தை வைத்தால் அது பொசுங்கும். அதுபோல, இறைவன் அருட்கிரணங்களிற் காய்ந்து காய்ந்தே ஆன்மா மலமறும்.

மூங்கிலுள் ஞறையும் தீயைப்போலவே இறைவன் உடற்கோயிலுள் குடிகொண்டிருக்கிறன். அவனே உடலுக்கிறைவன், உடையான், தேகி, அந்தர்யாமி. அவன் பரம தயாபரன். தன் குழந்தையின் அழுக்கைக் கழுவிச் சுத்தம் செய்யும் தாய் போல, அவன் மும்மலத்தைக் கழுவிப் பாசான்மாவைச் சுத்தான்மாவாக்கக் கருணைவெள்ளம் பரவும் அருட்சோதிக் கதிரவனகிறன். அவன் உருவம் அருட்சுடர்; அதன் கதிர் கருணை வெள்ளம்.

வேயின் எழுங்கனல் போலேஇம் மெய்யெனுங்
கோயி லிருந்து குடிகொண்ட கோன்நந்தி,
தாயினும் மும்மலம் மாற்றித் தயாஎன்னுந்
தோயம தாய்எழுஞ் சூரிய ஞமே!

இறைவன் எப்படி ஆன்மாக்களின் களிம்பறுத்தான்? பரமாகாச விண்ணினின்று அருளுடம்பு கொண்டு வந்து, தனது தண்ணடியை முன் வைத்துப் புகல் கொடுத்தான். அத்திருவடி பற்றிய அன்பர் உள்ளிருந்து, உள்ளத்தை உருக்கி, ஒப்பில்லாத அருளின்ப விழியைத் திறந்து, களிம்பணுகாத கதிரொளி காட்டினன். ஆன்மாவின் நீண்ட முறையீட்டைக் கேட்டருளும் ஆண்டான், பக்குவமறிந்து "இதோ களைந்தோம்" என்று மலங் களைந்தான்; தலமாகிய உலகின் பற்றுகளைக் களைந்தான்; ஐம்புலன்களின் சேட்டை யடக்கினன். பிறகு,

சளிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே.

பளிங்காவது சுத்தான்மா; பவளம், அருள். களிப்பற்று, அறிவு ஒளிரும் சுத்தான்மாவில், சிற்சக்திக் கனலான பவளத்தைப் பதியவைத்தான் இறைவன். சக்திக்கனல் பெருகப் பெருக அருளொளி பெருகும்; சிவஞானம் பொலியும்; மனத் துயரொழியும். புலன்களின் சேட்டை அறும். ஆன்மா, இருவினைக் கட்டறும்; சித்தசுத்திபெறும்; இதயம் இன்ப நிலையமாகும்; அந்த இதயப்பொதுவில் ஆன்மாவின் பக்குவமறிந்து அதையணுகி, அருள்மிகுந்து அதனுடன் இணங்கியிருப்பான் இறைவன். இந்நிலையில் குணத்தையும் (நலம்) களைந்து, ஆன்மாவைக் குணாதீதமாக்குவான் இறைவன். நலம் தீது, அறம் பாவம், இன்பம் துன்பம், சத்வம் ராஜஸம் தாமதம் ஆகிய குணதொந்த விகாரங்களெல்லாம் மனத்தைப் பலவாறலைத்து ஆத்மசாந்தியைக் கெடுக்கும். குணதொந்த விகார

மற்று, நிர்விகாரியாய், நிர்க்குணனாய், நிரஞ்சன நிராமயனாயிருப்பதே பதியருளும் நிலையாகும். அந்நிலையில் அவனைக் கலந்திருத்தலே பேரின்பமாகும்.

## ௨௫. பெரும் பேறு

இதயம் ஆணிப்பொன் மன்றம்; அதிலுணர்வாகும் துடிப்பே உயிர்த்துடிப்பு; அது நின்றால் உயிர் பிரியும்; ஒரு தவளையின் மூளையை நீக்கினால் அது உயிர்க்கும்; இதயத்தை நீக்கினால் உயிர்க்காது; இதயமே உயிர்நிலை; அதன் உயிர்த்துடிப்பே திருவடி நடனம். "நான் நான்" என ஆடும் அத்திருவடியைப்பற்றி, அதே நினைப்பா யிருந்தால், மனச் சேட்டைகளும், சித்த சலனங்களும் அடங்கும்; உள்ளத்தானாகிய இறைவனைப் பிரியாமல் கலந்துறையும் பெருநெறி வாய்க்கும்; பிறவித் துயர் தரும் சங்கற்பவிகற்பங்கள் ஒழியும்; வினைகளொழியும்; பிறவாப் பெரும் பயனாகும்; இறைவனை நீங்காமல் இதயமன்றில் இரண்டறக் கலக்கும் பெரும் பேறெய்தும். அப்பேறு பெற்றோர் உலகுடன் பேசாப் பெருமை பெறுவர்.

பெற்றார் உலகிற் பிரியாப் பெருநெறி;
பெற்றார் உலகிற் பிறவாப் பெரும்பயன்;
பெற்றார் அம்மன்றிற் பிரியாப் பெரும்பேறு
பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே.

'உலகுடன் பேசாப் பெருமை' என்றால் எல்லாரோடும் "டூ"ப் போட்டுவிட்டு, முகத்தை 'உம்' மென்று வைத்து ஒரு மூலையில் ஒளிவதல்ல. சிலர் வாயைத் திறவாமல் ஊமைச் சாடை காட்டி 'அது

கொண்டா, இது கொண்டா!' என்று ஒட்டிக்கு இரட்டியாக வாங்கிக்கொள்வர். மனமடங்காத வாய் மௌனம் பயனில்லை. உள் மௌனமே மௌனமாம். மோனமென்பது ஞான வரம்பு.

இறையின்பமே பெருமை; உலகின்பம் சிறுமை; இறைவன்போல் அருமையானவரும், அன்பர்க்கெளியவரும் இல்லை; இதையறிந்த அறிவாளிகள் ஐந்துறுப்புகளையும் (கால் 4 + தலை 1 = 5) உள்ளிழுத்தடக்கும் ஆமையைப்போல் சுகதுக்க பந்த தொந்தங்களான இருமையின் வகை கேட்டு, கண்டறிந்து, அவற்றை விளைவிக்கும் புலன்களை அடக்கிப் புரையற்றிருப்பர்.

ஒருமையுள் ஆமைபோல் உள்ளைந் தடக்கி
இருமையுஞ் சண்டிருந் தார்புரை யற்றே.

அவ்வாறு அடங்கியோர் சித்தம் சங்கற்ப அலை வீசாதிருக்கும். அவ்வாறு அடங்கியமர்ந்த சித்தத்தில், இறைவன் புரையற்ற பாலில் நெய்கலந்தாற்போலக் கலந்து நிற்பான். அவ்வாறு கலந்ததற்கடையாளமாகப் பரநாதவொலி கேட்கும்.

புரையற்ற பாலினுள் நெய்கலந் தாற்போல்
திரையற்ற சிந்தையில் ஆரியன் செப்பும்.

உரையடங்கி உள்ளுணர்வோர், உடலுணர்வு, தேகான்ம புத்தி அல்லது தற்போதம் ஒழிவர்; தற்போத மொழிந்தால் சிற்போத முதிக்கும்; அதனல் கரையற்ற அருட்சோதி துலங்கும்; அதிற் கலந்து சத்தாக நிற்பர் உண்மை மோனிகள்.

திருவடிகண்டு சிவக்கலப் பெய்தும் இந்நிலை எளிதன்று. நமதுடல் பஞ்ச பூதங்களாலானது;

சத்தம் பரிசம், உருவம், சுவை, மணம் ஆகிய ஐந்தும் பூதங்களின் தன்மாத்திரைகளாம். இத் தன் மாத்திரைகள் புலன்வழிச் சென்றலைந்து மனத்திற் கர்ம வாசனைகளைக் கொண்டு குவிக்காமல், அதது அததன் வழியில் நிற்கவேண்டும். தன்மாத்திரை களை அடக்கி வென்ருல் பூதசித்தி யெய்தும். பிறகு சேதனம் (சித்து, அறிவு) அறிவுப் பொருளான ஆன்மாவுடன் சேரும். அப்போது ஒரு சோதி தோன்றும். பிறகு, சாதனத்தால், அச்சோதியும் சுத்த சிதாகாச வெளியில் விளங்கும் அருட்சோதி யுடன் சேரும். இதன் பொருளைக் கடல்நீரைக் கண்டு தெளிக! என்னை? அப்பினில் உப்புக் கலந் துள்ளது; கடல் நீரைப் பாத்தியில் பாய்ச்சுகிருர் கள்; சூரியன் வெம்மையால் நீர் வற்றி உப்புத் தோன்றுகிறது. அவ்வுப்பினுல் ஓர் உருவைச் செய்து கடலிலிட்டால் என்னவாகும்? கடலுடன் உப்புருக் கரைந்து ஒன்ருகுமல்லவா? அதுபோல, சிவனருட்கதிரால் எழுந்த சீவன், வினை தீர்ந்து மீண்டும் சிவனுள் அடங்கும்.

அப்பினிற் *கூர்மை ஆதித்தன் வெம்மையால்,
உப்பெனப் பேர்பெற் றுருச்செய்த அவ்வுரு
அப்பினிற் கூடிய தோன்ருகு மாறுபோற்
செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே.

அண்டத்தில் அணு அடங்கும்; அண்டம் அணுவில் அடங்காது; கடாகாசம் மகாகாசத்தில் அடங்கும். அதுபோல, சீவன் சிவனில் அடங்கும். அவ்வாறு அதை ஆட்கொள்ளவே இறைவன் உளங்தோறும்

* கூர்மை - உப்பு.

திருவடி வைத்து நடம் புரிகிறான். அந்தத் திருவடியே உயிர்க்குயிராம். அதுவே சிவம், இன்பம். அதையே நினைத்தால் அதுவே சிவலோகமாகும். ஆன்மா சிவத்தின்பாற் செல்லும் கதியும், திருவடிப் பற்றேயாம். உள்ளாழ்ந்து கடவுளைத் தெளியும் யோகிகளுக்குத் திருவடியே தஞ்சமாகும்.

திருவடி யேசிவ மாவது தேரில்;
திருவடி யேசிவ லோகஞ்சிந் திக்கில்;
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே.

"சிவபிரான் தாளையே உள்ளத்தில் அகக்கண்ணுற் சந்தித்தேன்; அவனது செந்தணல் மேனியையே தியானித்தேன். எனது வாய்மையில் அவன் திருநாமத்தையே வந்தித்தேன்; என் புந்தியில் நிற்பதும் சிவன் பொற்பாதமே" என்கிறார் மூலர். இச் சிந்தனையாலும், வந்தனையாலும் பந்தனையொழிந்து, புலனைந்தும் முனைப்பழிந்து, பொருள்வழி செல்லாது, மடை மாறி, தனித்து, உள்முகப்பட்டு, அருள்வழியே சென்று, ஆன்மா எம்பிரானைச் சந்திக்கும். இவ்வாறு சந்திக்க ஆன்மாவிற்குப் போதம் அல்லது அருளறிவைத் தருபவன் புண்ணியனான எம்பிரான்; அவனையே தமது அறிவில் வைத்தவர் புண்ணியரானார்; அப்புண்ணியர், திருவடி நடனத்தைக் கண்குளிரக் கண்டு, வேதமும் துதிக்க இவ்வுலகிலேயே இன்ப விண்ணடைவார்.

## உகூ. சிவசித்தர்

இத்தகைய சித்திக்கு வழிகாட்டும் பூரணரே குருமாராவர். அவர் கேவலம் படிப்பு வல்லபத்தால்

தத்துவ விவகாரம் பேசுவோரல்லர். சித்தர் இலக்கணத்தைக் காண்போம். "சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்" ஆவர். அவர் ஜீவன்முக்தர்; சிவசாயுஜ்யத்தில் வாழ்வோர். அவர்நிலை கருதற்கரிதாம்.

சித்தர் நிலை எப்படி வாய்க்கும்? அறிக!

அறிவு ஐம்புலன்களுடனே கலக்கவேண்டும். 'நான்' என்னும் தற்போத முனைப்பு அறவேண்டும்; அம்முனைப்பெழும் உள் அழிந்து, இறையுணவே உள்ளாக வேண்டும். அப்போது இன்ன நெறியினின்று வந்தது என்றறிய முடியாமல் வரும் ஆற்று வெள்ளம் போலே, அறிவு வெள்ளம் வந்து, உணர்வாக நிறையும்—இத்தகைய குறியறிவிப்பவனே குருபரனுவான். அவன் தன்னையே கொடுத்துக் காட்டுவான். பாலிலுள்ள நீரை அன்னம் பிரிப்பது போலத் தற்போதந்தவிர்த்து, இதயமன்றில், சிற்கனல்பரவும் தனிக்கூத்தாடுகிறுன் இறைவன்; பல கரணங்களுடன் உற்ற அந்த நிருத்தக் கனலைச் சார்ந்தோர்க்கு, ஏழ்பிறவியும் எரிந்து சாம்பலாகும்; பிறப்பிறப்பற்ற சுத்த முத்தியெய்தும். அத்தகைய முத்தரே சிவயோகிகளாவர். அவர் வியாக்கிரகதி போல வெகு விரைவாகப் பிறப்பிற்குக் காரணமான வினைவித்தைக் கெடுப்பவர்; மிகச் சுத்த துரியவுணர்வில் மாறிப் பிறந்து குண தொந்தவிகாரமின்றி, புலன், உயிர், உடம்பு எல்லாம் ஒருங்கே சேர்ந்து, இறைவனுணர்வுடன் ஒன்ருகிப் புறவுணர்வு செத்துக்கிடப்பவர். அவரே சிவயோகசித்தர்.

சிவயோகமாவதென்ன? சித் அசித், உண்மை இன்மை, வித்தை அவித்தை, அறிவு அறியாமை

ஆகிய இரு தன்மைகளையும் இன்னதென்று தெளிதல்; அறிவையே பற்றித் தவயோகத்துட் புகுந்து, சுயம் பிரகாசமான சுத்தான்ம ஜோதியாதல்; பிறப்பையும் இறப்பையும் வளர்க்கும் அவயோகங்களை, மலயோகங்களை, பாச நெறிகளைச் சாராது, நிமலமான, சுத்த சிவக் கலப்புடனே நிற்றல்; வேறெவ்வகைப் போகமும் கருதாமல், கற்புள்ள மனைவி கணவன் சம்போகத்தையே விரும்புவது போலப் பதிபோகத்தையே நுகர்ந்து, சிவானந்தந் திளைத்தல்—இதுவே சிவயோகமாம். இதையே நவயோக சித்திபெற்ற திருநந்திதேவர் நமக்கு அளித்தார்.

உலகெங்கும் இறைவன் தானே தானாகத் தாக்கற்றிருக்கும் உண்மை, அமரரும் அறியாத சிவதுரியானந்தம், திருமன்றுள் ஆடும் திருவடி நிழல், அருள் வெளி வாழ்க்கை—இப்பேறுகளைத் திருநந்திதேவர் எமக்களித்தார். இப்பேறுகளைப் பெற்ற சிவசித்தர் மனவெளி, துரிய வெளியில் போய் விரவும்; அவர் பாச அன்பு, பதியன்பிற் போய் அடங்கும்; ஜீவவொளி, சிவ பரஞ்சோதியில் ஒடுங்கும். இவற்றின் வகை தெரிந்து அனுபவித்துத் தெளிந்தவரே சிவசித்தராவர். சித்தர் என்பவர் இந்தப் பூலோகத்திலே சிவலோகந் தரிசித்தவர்; அப்பரைப் போன்று உலகெல்லாம் சிவமயங் கண்டோர். அவர் பரநாதமறிந்தவர்; சத்தங்கடந்த சுத்த மௌனிகள். அவர்கள் என்றுமுள்ள பொருட் கலப்பிலேயே வாழும் நித்தியர்; மும்மலங்கள் அணுகா நிமலர்; பிறவி நோயற்ற நிராமயர். அவர் பரமுத்தர். அவர் முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து, ஒப்பில்லாத பரமா

னந்த ஜோதியுட் புகுந்து, செப்பரிய சிவங்கண்டு, அதையே சொரூபமாகத் தெளிந்து அத்தன்மை யாக, சிவமயமாக அமர்ந்திருப்பர். சித்தர் பாச இருளற்றவர்; 'எனது' 'யான்' அற்றவர், சக்தர், சதாசிவத்தன்மையர் ஆவார்.

## தத்துவங்கள்

முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத் துள்ளொளி புக்குச்
செப்பரி யசிவங் கண்டுதான் தெளிந்து
அப்பரி சாக அமர்ந்திருப் பாரே!

ஒரு கடிகாரத்தில் சக்கரங்களும் விசைகளும் இருப்பது போலவே, பல தத்துவங்கள் கூடி நமது தூல, சூக்கும, காரண சரீரங்களை இயக்குகின்றன. வேதாந்திகள் பிரகிருதி தத்துவம் 24-ம், புருஷன் அல்லது ஆன்மாவுடன் சேர்ந்து தத்துவம் 25 என்பர். சித்தாந்திகள் 36 தத்துவங் காண்பர். அவை 24 அசுத்தம், 7 சுத்தாசுத்தம், 5 சுத்தம் என மூன்று வகையாம். 5 பூதம், 5 தன் மாத்திரை, தசேந்திரியங்கள், 4 அந்தக்கரணங்கள் ஆகிய 24-ம் அசுத்ததத்துவங்களாம். காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருஷன், மூலப்பகுதி ஆகிய ஏழும் சுத்தா சுத்த தத்துவங்களாம். சிவம், சக்தி, சாதாக்கியம், ஈசத்வம், சுத்தவித்தை ஆகிய ஐந்தும் சுத்த தத்து வங்களாம். இந்த முப்பத்தாறு தத்துவப் படிகளை யும் கடந்து உள்ளொளிபுக்கு, சிவங் கண்டு அதுவே அனைத்துமென்றறிந்து அமர்ந்திருப்பர் சித்தர். கடலைக் கலந்த உப்பைப்போலச் சிவத்தைக் கலந் தோர் சிவமாயிருப்பர்; சிவம் எங்குமிருப்பதால்

அவரும் எங்குமிருப்பர்; உலகெங்கும் சிவன் செயலேயே, அவன் அருளாடலேயே சாட்சியாகக் கண்டுகொண்டிருப்பர். சிவசித்தர் வந்து, இருந்து, செல்லும் முக்காலமும் ஒரு நீரோட்டமெனக் கருதிக் காலங் கடந்த கடவுட் பொருளிற் கலந்திருப்பர். அதுவே சுத்த முத்திநிலையாம்.

## சும்மா இருத்தல்

இந்நிலையில் சுத்தசிவ சித்தருக்குத் தன் முனைப்பும் குணங்குறி யுணர்வும் ஒழிந்துபோம். தற்போதமழிந்து சதாசிவ போகத்தில் ஆழ்ந்திருப்பர் சித்தர். அந்நிலையை "இழவு வந்து எய்திய சோம்பு" என்றார் திருமூலர். 'இழவு' என்றால் தன்னிழப்பு; 'சோம்பல்' என்றால் பந்ததொந்தமறத் தன் முனைப்பற வொடுங்கி, இறைவனுடன் கலந்து, அவனன்றி வேறில்லாமற் சும்மா இருத்தலாம். "தேசம் முன்னேற வேண்டாவா? சும்மா இருக்கும் சோம்பேறி வாதம் நமக்கு வேண்டா, போம்!" என்பர் உட்பொருளறியாதார். "சும்மா இருத்தல்" சாமானியம் அன்று. "சும்மா இருக்கின்ற திறம் அரிது—சற்றாகிலும்". சூரியன் ஆகாயத்தில் சும்மா இருக்கிறான். அவனால் எத்தனைத் தொழில்கள் இயல்பாய் நடக்கின்றன! கருவி கரணங்களின் சேட்டையொடுங்கிச் சிவக் கலப்புடன் சும்மா இருக்கும் யோகி, ஒரு சக்திப் பிழம்பாவன். அவனைச் சுற்றிச் சிற்சக்திக் கதிர்கள் சூட்சுமமாக வீசிக்கொண்டிருக்கும். அவன் சந்நிதானம் ஆத்மசுத்தி தரும்; தெய்வவுணர்வைப் பொலிவிக்கும். அவன் சக்தி பரவிப் பரவி, மனித சமுதாயத்தில் பல புதிய நலங்கள் உண்டாகும். அப்படிப்பட்ட யோக சித்

தராலேதான் இன்றும் நமது நாடு புண்ணிய பூமியாக விளங்குகிறது. அத்தகைய சித்தரின் சக்தி மௌனமாகப் பரவியே நமது முன்னேற்ற இயக்கங்களைத் தூண்டி நடத்துகின்றன. ஜீவ - சிவைக்கிய நிச்சல, நின்மல நிலையே சித்தர் பரிபாஷையில் 'சோம்பல்'. 'தூக்கம்' எனப்படும். "ஒரு பம்பரம் தூங்குகிறது" என்னும்போது, அது சொக்கி நிற்கும் நிலையைக் குறிக்கிறது. சிற்சக்தி பாய்ந்ததும் ஓமொலி கேட்கும்; அதுவே சுருதி. அச்சுருதியில் லயித்துத் தியானத்தில் உறங்குவர் யோகியர். பிறகு சுருதி கடந்த, சத்தமற்ற உபசாந்த நிலையெய்தும்; அந்நிலையிலேதான் 'சோம்பல்' அல்லது 'நிச்சல சமாதி' உணர்வாகும்—சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடம். அத்தகைய நிச்சல உபசாந்தர் குணதொந்தமற்ற நிர்விகாரமான, சுத்த சிதாகாச வெளியிலே சதாகால சகச நிட்டையிற்கிடப்பர்.

சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பதுஞ் சுத்த வெளியிலே
சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடம்
சோம்பர் கண்டார் சுருதிக்கண் தூக்கமே.

## தூக்கம்

'தூக்கம்' என்றால் கண்ணுறங்குவது என்று சாதாரணமாகச் சொல்லுகின்றனர். இது வெறும் சடவுறக்கம். கண்ணுறங்கும்போது தூலக்கருவிகளுக்கு ஓய்வாகும்; மனம் கனவிற் சுழலும். மனமும் உறங்க வேண்டும், சித்தமும் உறங்க வேண்டும்; அந்தக்கரணங்கள் இதயத்தில் ஒடுங்க வேண்டும்; இதயம் திருவடியில் அடங்க வேண்டும். அதற்கு

மேலே,தான் சடவுணர்வழிந்து, சித்துணர்வு தளிர்க்கும். அந்த உணர்ச்சியில் கலந்திருப்பதே தியான வுறக்கமாகும். இவ்வுறக்கம் வளர்ந்து வளர்ந்து மேலோங்கி மோனவுறக்கமாகிச் சிவக்கலப் பெய்தி நிற்கும்போதே துரியவுறக்கம் எய்தும். விஷ்ணு ஆதிசேஷன்மேல் பள்ளிகொண்ட இரகசியம் இதுவே. ஆதிசேஷன் என்பது மகாகுண்டலி; அதன்மேல் விஷ்ணு துரியத்துயில் அல்லது அறிதுயிலமர்ந்தார். அதையே "தூங்காத தூக்கம்" என்பர்.

"ஆங்காரம் அற்றுன் அறிவான அன்பருக்கே
தூங்காத தூக்கமது தூங்கும் பராபரமே"

என்ருர் தாயுமான மஹர்ஷி.

இத்தகைய துரியத்துயிலேயே திருமூலர் குறிக்கிருர்.

தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம்உள்ளே;
தூங்கிக் கண்டார் சிவயோகமும் தம்உள்ளே;
தூங்கிக் கண்டார் சிவபோகமும் தம்உள்ளே;
தூங்கிக் கண்டார் நிலைசொல்வ தெவ்வாறே?

பக்குவமில்லாக் கன்னி சிற்றின்பத்தை அறியாள்; பருவமாகி, நாயகனுடன்கூடி இன்பமறிந்த பின் அதைச் சொல்ல வாயிலாள். அது போலவே பக்குவமில்லாத ஆன்மா, சிவதுரிய சுகநித்திரையை அறியாது; அருளுணர்ச்சி பெற்று, ஆண்டானைக் கலந்து அந்தக் கேவலானந்த சுகமனுபவிக்கும் போது சுத்தமௌனம் தலைப்படும், பேச்சொழியும். அதுவாயின், அதுவாவர், அதுவே சொல்லும். சிவ போகம் சிவயோகம் ஆகிய அனுபவானந்தத்திற் கெல்லாம் வழிகாட்டி நடத்துவது முதலில் திருவடிப் பற்று.

## திருவடி நடனம்

ஆன்மத் துடிப்பு (ஹ்ருதயஸ்பந்தனம்) ஒவ்வொருவருள்ளும் இடைவிடாமல் நிகழும். செழுஞ்சுடர் மாணிக்கம்போலே, மாணிக்கத்துள்ளே மிளிரும் மரகதச் சோதிபோலே ஆணிப்பொன்மன்றமான இதயச் சிற்சபையில் சிற்சக்தி காண இறைவன் நடம்புரிகிறான். அதைக் கண்டு தொழுதவர் எத்துணை இன்பம் பெறுவர்! அவ்வின்பத்தைச் சொல்லால் விளக்க முடியுமா?

ஆணிப்பொன் மன்றில் ஆடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறு பெற்றாரே!

உள்ளம் எல்லாருக்கும் உள்ளது; உயிர்த்துடிப்பும் உண்டு; உணர்ந்தால் சாதிமத வேறுபாடில்லாமல் எல்லாரும் பதிப்பொருளை அறியலாம். அப்பொருள் சாதிமத பேதமற்ற பொதுப்பொருள். அது நிலவும் உள்ளத்தைப் பொதுமன்றம், அருட்பொது என்பர் அனுபவசித்தர். எல்லாரும் அங்கிலே பெறலாம். தமக்குள் அனைவரும் அந்த இன்பத்தைப் பெறலாம் என்பதைக் குறிக்கவே "பொது மன்றம்" என்று தமிழ்ச்சித்தர் வழங்கினர். இறைவன் ஒருவனே; மனித மூளைதான் பலவிதமாக நினைக்கிறது; எவ்வண்ணம் நினைத்தாலும் அவ்வண்ணம் இறைவன் வந்தருளுவான். அவரவர் அறிவின் பரிபக்குவத்திற்கேற்றபடி இறைவன் காட்சியளிக்கிறான்.

எவ்வாறு காண்பான் அறிவுதனக் கெல்லை
அவ்வா றருட்செய்வான் ஆதியரன் தானும்.

என்றார் சுத்த சமரச ஞானியான திருமூலர். அவரவர் நம்பும் கடவுள் இதயத்தில் விளங்குவதாகத்

தியானிக்கவேண்டும். சைவர், உள்ளத்தையே சிற் சபையாக்கி அங்கே சிவநடனங் காண்க! வைணவர் உள்ளத்தையே பாற்கடலாக்கி அங்கே சித்துணர் வில் விஷ்ணு துரியத்துயிலமர்ந்ததை யுணர்க! கிறிஸ்தவர் உள்ளத்தையே விண்ணரசின் அரியணை யாக்கி அதிற் பரமபிதாவை வைத்துத் தொழுக! இஸ்லாமியர் உள்ளத்தை மசூதியாக்கி, அதில் அல் லாவைத் தொழுக! எப்பெயர் வடிவில் அல்லது பெயர் வடிவில்லா உணர்வில் உள்ளாரக் கடவுளைத் தொழுதாலும் அவனைப் பெறலாம். கடவுட்பேறே பிறவிப்பயனும். இப்பயனைப் படிப்படியாக மனம் பழுத்து, வினை நீங்கியே ஆன்மா அடைய முடியும். பாசான்மா சுத்தான்மாவாகவேண்டும்.

இனி ஆத்ம சுத்திக்கேற்ற ஒழுக்கங்களைத் திருமூலர் விளக்குகிறார்.

## நூல் ௪.

## திருநெறி விளக்கம்

### ௨எ. அருட்கல்வி

கற்றல், கேட்டல். சிந்தித்தல் இம்மூன்றும் மனத்தைப் பண்படுத்திச் சிவகதிக்குப் பெருந்துணை செய்யும். ஞானசாதகன் 'அறம் இன்னது, மறம் இன்னது' எனக் கேட்டுப் பகுத்தறிந்து, அற வழியே நடக்கவேண்டும்; செந்நெறியந்தணர் வாய் மொழிகேட் டொழுகவேண்டும்; தேவர் அருளும் மந்திரோபதேசங் கேட்கவேண்டும்; இன்னும் சிவ நெறிக்கேற்ற சாதனங்களை யெல்லாம் கேட்டறிய வேண்டும். அனைத்திற்கும் மேலாகப் பொன்னார் மேனியனான இறைவன் அருள் வல்லமையைக் கேட்டறிந்து, அவனையே அன்பினால் தொடர்ந்து சிவகதி சேரவேண்டும்.

அறங்கேட்டும், அந்தணர் வாய்மொழி கேட்டும்,
மறங்கேட்டும், வானவர் மந்திரங் கேட்டும்,
புறங்கேட்டும், பொன்னுரை மேனியெம் ஈசன்
திறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே.

நிற்பது நில்லாதது, நல்லது பொல்லது, ஆவது அழி வது, வித்தை அவித்தை, சத்து அசத்து, அறிவு அறியாமை இன்னதென்று ஒருவன் தக்கார் வாயி லாகக் கற்றறிய வேண்டும். ஆவதழிவதன் அறிவில் லாமல், ஆராய்ச்சியில்லாமல், அழியும் பொருளை மெய்யென்றெண்ணி, நில்லாவுடலையே நிலையென்று ணர்வர் மூடர். முதல்வன் எல்லாவுயிர்களிடமும்

உயிர்க்கிறைவனுயிருக்கிறான். எனினும் இல்லது உள்ளதன் அறிவில்லாமல், நில்லாப் பொருளைப் பற்றித் திரியும் கல்லார் அவனை உள்ளத்திற் காண முடியாதாம்.

நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்கள்,
எல்லா வுயிர்க்கும் இறைவனே யாயினும்,
கல்லாதார் நெஞ்சத்துக் காண வொண்ணாதே.

## கற்றவர் யார்?

'கல்வி' யென்றாலே உள்ளாராய்ந்து உண்மைப் பொருளைத் துருவிப் பார்ப்பதாம். கல்வி கேள்வி வல்லார்கள் திருநெறியொன்றி வாழ்வர். அல்லாதார் பதியறிவின்றி, அறிவுபல என்பர். அவர் சிந்தனை பலவாகத் திரியும்; அவருக்கு நிச்சயபுத்தி இராது. எம் இறைவன் எல்லா இடத்திலும் கலந்து நிற்கிறான், என்றாலும் பதியறிவைக் கல்லா மக்கள் அவன் கலப்பை அறியார்.

எல்லா இடத்தும் உளன் எங்கள்தம் இறை,
கல்லாத வர்கள் கலப்பறி யாரே.

ஆனால் சில சமயம் படிப்பில்லாதவரும் கருத்தறியும் அருட்காட்சியைக் காண வல்லவராயிருக்கின்றனர். கல்வி மணமில்லாத மகான்கள் பலர் உளர். எனின், அவர்கள் அருட் கண்ணான இறைவனால் மதிக்கப்பெற்ற திருவடியாராவர்; அவர் அருளால் அறிவுபெற்றவர், கல்லாத கல்வி பெற்றவர். "நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்" என்று சிவநாமமே கற்று, பெற்று, பற்றிச் சிந்தித்

துருகும் திருத்தொண்டர், நூற் கல்வி இல்லாவிடினும், உண்மையான இறைவனருளைப் பற்றி நிற்பர் அவர்கள் நுகரும் இன்பம் கற்ற புலவருக்கும் அரிதாகும். மனத்தினுட் கற்றறியவேண்டியது அரனை அடையும் திருநெறியேயாம். அந்நெறி யறியாமல் மாயாசக்திகளில் மயங்கி, வினைத்துயர் பெருக்கி, மாந்தர் அல்லற்படுவர். உடலிற் சீவன் எப்போதும் நில்லாது. இதையறிந்தே அறிவாளிகள் உடல் இருக்குமட்டும் அறத்திலும், நித்தியப் பொருளைக் காணும் தவத்திலும் புகுவாராயினர். இதைக் கல்லாக் கயவர், உடலே உலகமே உண்மையென நம்பி, பொல்லாத வினைத்துயர்களைப் பெருக்கும் இந்திரிய போகங்களிற் காலங்கழிப்பர். உள்ளது இல்லது இன்னதென்று கல்லாதவர், அறிவிலிகளாவர், மூடராவர். அவர் நன்னெறி விட்டுத் தீநெறி செல்வர். அக்கல்லாத மூடரைக் காணவும் ஆகாது; அவர் சொற் கேட்கவும் கடமையன்று. அம்மூடருக்குத் தம்மைப்போன்ற அறிவிலிகளே நல்லவராகத் தோன்றுவர்; கற்றவரைக் கண்டால் அவர் வெறுப்பர். கல்லாமூடர் நல்லோர் கருத்தை அறியார்.

ஆனால் நூல்களைக் கற்றும் சிவஞானமில்லாத மதிகேடரும் மூடரே. அவர் கல்வி வெறும் ஏட்டுச் சுரைக்காய் போலும். அவர் தம்மைச் சுற்றும் பந்தங்களைக் களையமாட்டார்; தம்மைக் கெடுக்கும் மாசுகளை நீக்கார்; பல திசைகளிலும் அறிவாளர் எப்படி நடக்கிறார் என்றும் காணார்.

கற்கவேண்டும்; கற்றதன் பயனைக் கடவுளன்பு செய்ய வேண்டும். கற்றுக் கடவுளன்புவழி நடப்

போரே கணக்கறிந்தவராவர்; அறிவாளராவர். அவர்களுக்கே உண்மைப் பொருள் காணவியலும். அவர்களுக்கே தெய்வக் காட்சி கைகூடும். கணக்கறிந்து தத்துவமறிந்து, திருவருள் உண்மை கண்டு, அது தம்மை அண்டநிற்கும் அறிவாளிகளே கல்வி கற்று அறிந்தவராவர்; கணக்கறிந்தார் கல்வி கற்றறிந்தாரே. பரமாகாச விண்ணின் அருட்கனி, ஆன்மாக்களின் உள்ளத்தே விளைந்து விளங்குகிறது; அதுவே கண்ணிற் காண்போனுகக் கலந்து அங்குள்ளது. இதையறியாமல், பார்ப்பவனைப் பாராமல், பார்வையைக் காட்சியாகிய மண்மிசை வைத்து, அதையே மதித்து மதித்துப் புறப் பொருள்களையே எண்ணி எண்ணி, நூல்களை எழுதியெழுதிப் பதிப் பொருள் காணுமல் உலகோர் இளைத்துவிட்டனர்.

இறைவன் ஆதிப்பிரான், அமரர்க்கும் பரஞ்சுடர், அருட்சோதி அடியார் தொடரும் பெருந் தெய்வம். நூலறிவால் அவனை அறிய முடியாது. அவன் இதயத்துட் சோதியாய் நின்று, அனைத்தையும் தனது அருளால் நடத்துகிறுன். அவனுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள தொடர்பைப் படிப்பு வல்லபத்தால் அறியொணுது. இறைவன் நச்சினுர்க்கு இனியன்; ஆர்வமுடன் முறையிடும் அன்பர் அவனை அணுகுவர். மனப்பாவனையாலும், வாய்ப்பேச்சாலும் இறைவனுக்குப் பலவேறுன பெயர் வடிவுகளைக் கற்பிக்கின்றனர். உள்ளத்தில்லைத் துணர்ந்தாருடன் இறைவன் ஒத்துணர்வான். உலகம் புகழநிற்கும் தேவர்க்கும் பழையோன், இறைவன்; இகழநின்றூர்க்கும் இடும்பைக்கிடமாம்.

அவனை மகிழ்ந்தோதி உணராதவர்க்கு அவனருள் சுரவாது. கற்பசு பால் கறவாது. "இவன் எம்பெருமான்" எனப் போற்றிசெய்யும் திருநெறியன்பர் தேவராவர். தன்னைத் தேடிவரும் மாதவர்க்கு அருந்தவ முதல்வனை ஆதிப்பிரான் அகமகிழ்ந்தருளுவான். சிவன்பணி கேட்பவர் தேவருமாவார். ஆனால் பயனில் விருப்பில்லாமல், அவாவில்லாமல், அவன் பணியை அன்பு வழிபாடாகச் செய்ய வேண்டும். "பலனிற் பற்றின்றிப் பணிசெய்!" என்பதே கீதையின் சாரம். அதையே திருமூலர் "பயன் பணி கேட்பது பற்றது வாமே" என்கிறார்.

இறைவன் இறப்பையும் பிறப்பையும் அருளி ஆன்மாவைப் பரிபக்குவப் படுத்துகிறான். அவனருளைப் பேசி, அதிலே நிலைகொண்டு, உயிர்த்து, மகிழ்வெய்தி, அருளொளி விளக்கமாகி, அவனது அருளாகிய மலர்மண மெய்தினோர், பேரின்பத்தில் நிலைபெற்றிருப்பர். சிறுவர் விளையாட்டில் மணற் சோறு பொங்கி அதில் மகிழ்வெய்துவர். அதுபோலக் குணங்குறி பற்றிச் சிலர் மகிழ்வர். உட்குவிதலால், நேயத்தால், அனுபோகம் சித்திக்கும்.

எனினும், "இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாது". குறி குணங்களில், முன்னிலைச் சுட்டுகளில், அவன் அடங்கினவனல்லன். குறிகளைக் கொண்டு இறைவனை அறிந்து மகிழ்வது, பிள்ளைகள் மணற்சோற்றில் மகிழ்வது போலாகும். குணங்குறி கடந்து தன்னையே கொடுத்துக் காட்டும் இறைவனை அவனருளே கண்ணாகக் காணவேண்டும். கேள்வி, மெய்ஞ்ஞானவொழுக்கம் இவற்றுடன் சிந்தை தியானத்தில் இறைவனையுணர வேண்டும்; சிந்தை சிவத்தி

ஊன்ற வேண்டும். ஆனால் அந்நிலை எளிதன்று; மாயா சக்திகள் வந்து சோதிக்கும். அவற்றால் சிறு நெறியில் வழுக்கி விழாதிருக்கவேண்டும். வானவர் கோன் கூட அவ்வாறு வீழ்ந்தான் என்றால், மாந்தரைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. சிறுநெறி புகாமல் வைராக்கியமாகச் சிவநெறியேபற்றித் தியானத்தில் ஊன்றியுணர்ந்தால், இழுக்கில்லாமல் ஆன்மா எண்ணில்லாக் காலம் சிவானந்தமெய்தியிருக்கலாம். இச் சிவானந்தப் பேற்றிற்கு,

உறுதுணை யாவது உயிரும் உடம்பும்;
உறுதுணை யாவது உலகுறு கேள்வி;
செறிதுணை யாவது சிவனடிச் சிந்தை;
பெறுதுணை கேட்கிற் பிறப்பில்லை தானே!

உயிர், மனம், உடம்பு, கல்வி, கேள்வி எல்லாம் கடவுளடைவிற்கே, பிறவிநோயை ஒழிப்பதற்கே, உறுதுணையாக வேண்டும். கல்வி கேள்விகளைவிடக் கடவுளடைவே முதன்மையென்கிறார் மூலர். மாந்தர், கற்றல் கேட்டலால் மட்டும் பொருளுணரமாட்டார்; கற்றதன் பயனாகிய கடவுளைப் பெற்றபின்னரே பொருளுணர்வர். "இறைவனை உள்ளாழ்ந்து அறிமின்; அவனை அறிந்தபின், அவனையே ஓதுமின், அவன் புகழையே கேண்மின்; அவனே அனைத்திலும் உயிர்க்குயிராயிருப்பதை யுணர்மின்! அவ்வாறு உணர்ந்த பின்னரே கற்றறிந்த புலவர் சிறந்தோங்கி விளங்குவர்.

தேவர் பிரான்தனைத் திவ்விய மூர்த்தியை
யாவர் ஒருவர் அறிவார், அறிந்தபின்
ஓதுமின். கேண்மின், உணர்மின், உணர்ந்தபின்,
ஓதி யுணர்ந்தவர் ஓங்கிநின் றாரே!

"இறைவன் உயிர்க்குயிராயிருக்கும் குறிப்பறிந்தேன். அவன் அவ்வாறிருப்பதினலேதான் உயிரும் உடலும் சேர்ந்து வாழுகின்றன. அவனே என்னுயிர்க்குயிர் என்றறிந்ததும், தேவர் பிரானுன பரமன் என் உள்ளம் புகுந்தான். பிறகே நான் அழிவில்லாத கல்வி கற்றேன். உடலில் உயிர் நிற்கின்ற போதே நிலைபெருமானுகிய நித்தியக்கடவுள் திருவடியைக் கற்றறிமின்! உங்கள் பாவங்கள் ஒழியும். சொல்லைச் சுருக்காமல் அவனைத் தொழுமின்! இறைவனைத் தொழுதபின், அவனே எல்லாமாவான்; தானன்றி வேறில்லாத் தன்மையனுய், நமது அறிவைத் துலக்கும் மணிவிளக்காய் உள்ளத்தில் அவன் பொலிவான்.

நிற்கின்ற போதே நிலையுடை யான்கழல்
கற்கின்ற செய்மின்; கழிந்தறும் பாவங்கள்;
சொற்குன்ற லின்றித் தொழுமின்; தொழுதபின்,
மற்ருேன் றிலாத மணிவிளக் காமே!

உண்மைக் கல்வி கற்றவர், கல்விப் பயனுன இறைவன் மலரடியைக் கருதுவர்; அக்காலத்தில் அத் திருவடி காண அவர் கருத்தில் ஒரு கண் உண்டாம். அதுவே அகக்கண், ஞானவிழி. புறக்கண்ணுல் திருவடிக் காட்சியெய்தாது; உள்ளத் தடத்தில் கயல்போலத் துள்ளும் திருவடி; அதைக் கற்றறிவாளர் கருதியடைவர். அவர் கற்ற அறிவே அதைக் காட்டும். அத்தகைய திருவடிக் கல்வியுடையவர் இருவினைத் தொடர்பினின்றும் கழிந்தோடுகின்றனர்; வயலை உழுது, பரம்படிக்கப் பலுகுக் கட்டை (பல்லி) பயனுகும். பலுகுக் கட்டையடித்துப் பண்

படுத்திய நிலமுடையார் வாய்க்கால் வரப்பை (பாம்பு) நீர்பாய்ச்சிப் பயிர் விளைத்துண்பர்; பல்லியுடையார் பாம்பரிந் துண்கின்றார். பல்லியென்றால் பாதி கிராமம்; பாம்பு என்றால் வைக்கோல் திரணை. கிராமம், பூமி யிருப்பவர் பயிர் செய்து, குலுக்கையிற் சுற்றிய திரணையவிழ்த்து நெல்லெடுத்துண்பர் என்றுமாம். அது போலவே கல்வியறிவால் அல்லும் பகலும் இறைவனை ஏத்திப் பண் பட்ட நெஞ்சுடையார், நெஞ்சை அவனுக்கே நிலைக்களனுக்கினோர், அவன ருள் பெறுவர். பிரம்மானந்தவல்லி என்னும் உப நிஷத்தில் வாதிக்கப்பெற்ற பரமாகாயமாக அருளி றைவனை அவர் காண்பர். சத்தியம், ஞானம், அனந் தமான பரமாகாயமான பரம்பொருளை அடைந்தவர் எல்லாம் அடைந்தவராவர். அந்த அடைவிற்குத் துணையாக வந்துதவுவது நன்மை பயக்கும் தூய அருட்சோதியாகும். அந்த அருட்சோதியடைவிற் குத் துணை நிற்பது எல்லா நன்மையுந் தரும் சுத்தப் பரநாதச் சொல்லாம். அச் சொல்லைக் கேட்கத் துணை செய்வது நலந்தரும் சுத்த சாத்விக வாசனையாகும். சாத்விக வாசனையுண்டாகத் துணையாவது தூய நற் கல்வியாம்.

துணையது வாய்வருந் தூயநற் சோதி;
துணையது வாய்வரும் தூயநற் சொல்லாம்;
துணையது வாய்வருந் தூயநற் கந்தம்
துணையது வாய்வருந் தூயநற் கல்வியே!

ஓர் உயரத்தில் ஏறவேண்டுமானல் கயிற்றைக் கட்டித் தொத்தி மேலே செல்கின்றனர். அதுபோல, ஓர் அருள் நூலைக் கற்று நின்று நுட்பமான (நுனி)

கடவுளறிவிற்கு மேலோங்கிச் செல்ல வேண்டும். அவ்வாறு செய்யாதவர், ஒரு சார்பான வாதத்தைப் பற்றினல், அவர் பண்பின் பயன் கெடும். புனத்தில் ஒரு கோலைப்பற்றி நின்றால், பறவைகள் கூடிக் கதிரையுண்ணு; அதுபோல அருளறிவூட்டும் ஒரு பெரியார் வாக்கைப்பற்றி நின்றால், தீவினைகள் கூடாமலொழியும். அவ்வாறன்றி, மதிமயக்கும் ஏதோ ஒன்றைப்பற்றி, உலகோர் கலங்குகின்றனர் கற்றறிந்து அறிவாராய்ந்து ஒழுகுவார்க்கு, அந்த அறிவில் அரன் வெளிப்படுவான்; ஆய்ந்து கோள் வார்க்கு அரன் அங்கே வெளிப்படும். சாணைக்கல்லில் தோய்ந்த தூயமணி நெருப்புமிழும். சஹஸ்ராரத்தி லுள்ள இளமதி மண்டலத்தை நாடி தாரணையால் எட்டவல்லார்க்கு மனம் உறுதியாக நின்று நிலைக் கும். அவ்வாறு நிலைத்த மனமே மேலேறிச் செல்வ தற்கு நூலேணிபோலுதவும்; அருள் வழியில் முன் செல்ல மருந்துபோலுதவும். கற்றறிவாளர் பெருந் துணையாவர். கற்றறிவில்லாதார் சிந்தை, அருள்வழி யினின்று நம்மை ஒழிக்கவே துணையாகும். பெருந் தன்மை வல்ல இறைவனே ஆன்மாக்கள் கருதும் இன்பவிண்ணுய் நிற்கிறன். ஏழு சேதன பூமிகளை யுங் கடந்து, அந்த இன்ப நிலை பெற வழித்துணையா யிருப்பவன் இறைவனேயாவன். அவனே கடலுடை யான்; மலையானன்; ஐம்பூதங்களையும் உடலாகக் கொண்டான்; ஊழி தோறூழி அழிவின்றி அவனே அமரர் தலைவன்; அவன் விடையேறி; அவன் விசாலமான அன்புடையார் நெஞ்சை வீடாகக் கொண்டுள்ளான்; இடமுடையார் நெஞ்சத்தி லிருந்தானே எல்லாப் பற்றையும் விடுக; பரமனையே பற்றுக!

அவனே பற்றத்தக்கவன்; அவனே பற்றறுப்பவன். அதுவே முடிவான உண்மை. முதல்வன் அருளைப் பெறுமின்! உறுதியான விவேகம் (கிற்றவிரகு) உண்டாகும்; அதனால் அருட்சோதி கிளரும். அச்சோதி பெற்றவர் தேவராவர்; அத்தகைய தெய்வத் தன்மை பெற்றவரே கற்றவர்; அவரே பேரின்பம் அடைந்து சிவதுரிய நிலையில் நின்றவராவர்.

பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின்
முற்றது எல்லா முதல்வன் அருள்பெறில்
கிற்ற விரகிற் கிளரொளி வானவர்
கற்றவர் பேரின்பம் உற்றுநின் றாரே!

தக்க ஆசிரியரிடம், அநுபூதி பெற்ற மகான்களின் அருள் வாக்குகளைக் கேட்க வேண்டும்; கேட்டதைச் சிந்தித்து மனத்தில் நாட்டவேண்டும்; பிறகு அதன்படியே சாதனம் செய்ய வேண்டும். இறைவனன்பை வளர்க்க வேண்டும். அவனருளைப் பெற வேண்டும். அதன்பின் "அவனன்றியானில்லை யாதுமில்லை" என்றறிந்து உள்ளத்தில் நடமாடும் அவனது திருவடி பற்றி நிற்கவேண்டும். இதுவே கல்வியும், கற்ற பயனுமாகும். இக் கல்வியுடையாரை இறைவனே ஆட்கொண்டு, அருளொளி காட்டி நடத்துவான் என்பது இந்தப் பகுதியின் கருத்து.

## ௨௮. அந்தணர் ஒழுக்கம்

இனிக் கற்றறிந்தொழுகும் அந்தண்மையாளரான பெரியார் ஒழுக்கத்தைக் காண்பாம். அந்தணர் யார்?

அந்தணர் ஆவோர் அறுதொழில் பூண்டுளோர்;
செந்தழல் ஓம்பி, முப் போதும்நிய மஞ்செய்து,
அந்தவ நற்கரு மத்துநின் றங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே!

சமுதாயத்திற்குக் கண் போன்ற கல்வியளிப்பவர் அந்தணர். வேதம் ஓதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், செய்வித்தல், தானஞ் செய்தல், தானமேற்றல் - இந்த ஆறும் அந்தணர் கடமையாம். வேதம் பயிற்றல், வேள்வி செய்வித்தல், தானமேற்றல் இம் மூன்றும் அந்தணருக்குச் சீவனோபாயமாம். வேதந்தவிர்ந்த, சமுதாயத்திற்குப் பயனுள்ள, மற்றக் கலைகளையும் அவர் கற்கலாம். அந்தணர் தீ வளர்த்து அக்னி ஹோத்ர ஔபாஸனாதிகளைச் செய்வர்; மூன்று வேளையும் சந்தியா நியமங்களைச் சரிவரச் செய்வர்; செய்விப்பர். தேஜஸும், ஓஜஸும் கொடுக்கும் புண்ணியத்தவவினைகளைச் செய்வர். ஜீவ சுத்திக்கும், சமுதாயக் கட்டுப்பாட்டிற்கும் வேண்டிய சடங்குகளை வகுத்து நடத்துவர். அந்தணர் வேதத்தின் முடிவான, வேதாந்தமான பிரணவோபாசனை செய்வர். அ+உ+ம் என்று முவ்வொலி கொண்ட போதாந்தமான பிரணவத்துள் அவர் மனம் புகுந்துறையும். அதனால் அவர் நாதாந்த வேதாந்த, போதாந்த நாதனாகிய இறை

வனை எல்லையறக் கண்டின்புறுவார். அந்தணர் சிவ சூரிய மந்திரமாகிய காயத்திரியைத் தியானிப்பர்.

"ஓம்பூர் புவஸ்ஸுவ: தத்ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமகி
தீயோயோந: ப்ரசோத யாத்"

என்பது காயத்ரி மந்திரம்.

யா: = எவன்
ந: = நமது
தீய = நினைப்புகளை,
ப்ரசோத யாத் = ஞானவொளி பெற, அருட் சோதிபெற உந்துகிறானோ அவன்
வரேண்யம் = மிகவும் சிறந்த
சவிது: = சிவசூரியன், பரமாத்ம சூரியன்
ஓம் = ஓங்காரமாயிருப்பவன்
பூ: = மண்ணுலகு, சடவுலகு
புவ: = அந்தரிக்ஷம், நடுவுலகு, உயிருலகு
ஸுவ: = மேலுலகு, விண்ணுலகு, மனவுலகு
இவையனைத்திலும் மேவி விளங்குவோன்,
தத் = அந்த
தேவஸ்ய = இறைவனது
பர்க: = அருட் பெருமையை
தீமஹி: = தியானிப்போமாக.

"கீழும் மேலும் நடுவும், உடல் உயிர் மனம் எங்கும் பரவி ஓங்காரமாகி, சச்சிதானந்தமாகி, அனைத்திற்கும் மேலான பரம்பொருள் சிவசூரியன், சிவ ஜோதி, அருட்பெருஞ்சோதி இறைவன். அவ்விறைவன் நம் நினைப்புகளை ஞானவொளி பெற ஊக்குவான். அப் பரம்பொருளின் பெருமையைத் தியானிப்போமாக!" என்பதே காயத்திரியின் பொருள்.

“ தத்ஸவிது:” என்பதற்கு சூரியன், நாராயணன், சிவன், பரமாத்மன் என்று அவரவர் கொள்கைக் கேற்றபடி பொருளுரைப்பர். அனைத்தும் அவரவர் உள்ளத்துறையும் அருளிறைவனையே குறிக்கு மென்க. பெயர் வடிவுகளைப் பற்றி நமக்குக் கவலையில்லை. இக்காயத்திரி மந்திரத்தை அனைவரும் உபாசித்துப் பயன்பெறலாம். சித்தசுத்தியுடன் ஜபிக்க வேண்டும்; அவ்வளவுதான். நேயமாகிய தேரில் ஏறி நினைவுற்று, தியானமுற்று, அருளுறவு பெற்று, மனத்தை மயக்கும் சசமாயங்களில் தோயாமல் மறையோர்கள் பரம பரிசுத்தராயிருப்பர்.

‘பார்ப்பார்’ என்றால் யார்? தமது உள்ளத்துள்ள சொரூபத்தை, உள்ள பொருளைப் பார்ப்பவரே பார்ப்பார். அப்பொருளைப் பார்க்கச் சாதனம் செய்ய வேண்டும். சாதனங்களில் பெரிது ஓங்கார சாதனம். சுத்தமானல் சத்தம் பிறக்கும். சங்கற்ப விகற்பங்களைவிட்டு மனம் பரிசுத்தமானல் ஓங்காரம் உள்ளே கேட்கும். அதை ஓர்ந்து நிற்க வேண்டும். அத்துடன் ஒரு குருவை அணுகி உபதேசம் கேட்க வேண்டும். அவ்வுபதேசம் அனுபவத்திற் கைகூடப் பயிற்சி செய்யவேண்டும். நான்கு வேதமாகிய திருநெறி சொல்லும் கிரியைகளை, அனுட்டானங்களைச் செய்து, தியான சாதனத்தால் சொரூப சித்திபெறு அதுவேயாகி விளங்குவோரே மாசற்ற பார்ப்பாராவர். மனோவாக்குக் காயத்திலும் சத்தியமாய் நடத்தல்; தவசாதனஞ்செய்து சுத்தநிலை பெறுதல்; ‘தான் அவன் ஆகும்’ சுத்தாத்வைதநிலை பெறுதல், அதாவது தீவிரமான அன்பினல் அருள் பெற்று, அறிவு முற்றி, இதயத்தானுடன் இரண்டறக் கலந்து ‘சிவோஹம்’ பாவனையிலிருத்தல், இந்

திரிய சக்தியை ஈட்டி, அதை யோகசாதனத்தால் ஓஜஸாக மாற்றி, அது புலன்கள் வழியே தாவிச் சிறுநெறி புகாமல் வாட்டல், அடக்கல், அதாவது இந்திரிய ஜயம்; மன்னுயிர்களைத் தன்னுயிராகக் கருதும் சமநோக்கம்; அருளுணர்வுறுதல்; அந்த அருளுணர்வால் பந்த பாசங்களை அறுத்தல், இவற்றால் சாத்விக விருத்தியுள்ள அந்தணன் பிரமமாவான்; பரமாத்மசித்தி பெறுவான்.

சத்திய முந்தவம், தான்அவன் ஆதலும்
எய்த்தகும் இந்தியம் ஈட்டியே வாட்டலும்
ஒத்த வுயிர்கள் உண்டா யுணர்வுற்றுப்
பேத்தம் அறுத்தலும் ஆகும் பிரமமே!

ஆனால் இத்தகைய பிரம்ம சாக்ஷாத்காரம் கேவலம் வேதாந்தக் கேள்வியினாலும், வாய் ஞானத்தாலும் உண்டாகாது. 'கனி' என்றால் வாய் இனிக்குமா, பசி தணியுமா? சாதிவேதியர் சிலர் வேதாந்தங் கேட்பர், சொல்லுவர். பொன் - மண் - மனை மகவெனும் வேட்கை யொழிந்திடார். வேட்கை யொழியவேண்டும்; அவா நீங்கவேண்டும்; அதுவே வேதாந்தம். வேட்கை யொழிந்து நிராசை கொண்டோரே வேதாந்தம் கேட்டவராவர்.

வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர்,
வேதாந்தம் கேட்டுந்தம் வேட்கை ஒழிந்திலர்;
வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்;
வேதாந்தம் கேட்டவர் வேட்கைவிட் டாரே.

சிகை வைத்துப் பூணூல் மாட்டிக்கொண்டதனால் மட்டுமே ஒருவன் பிராமணனாகான்.

சிகை, மயிர்; பூணூல், பருத்தி. மயிரும் பருத்தியுமே பிரமவித்திற்கு இலக்கணமாகுமா? ஆகா. அனுட்டானமில்லா வேடம் போலித்தனமாகும். அனுட்டான வேதாந்தத்தால் அவாவறுத்தலே பூணூலாகும். பிரமஞானமே சிகையாகும். இவை யுடையாரே மாசற்ற அந்தணராவர்.

நூலுஞ் சிகையும் நுவலிற் பிரமமோ?
நூலது வேதாந்தம்; நுண்சிகை ஞானமாம்.

சத்தியம், ஆத்ம ஞானம், விஷயாதிகளைவிட்டு ஆத்ம விசாரம் செய்து பிரம்ம சைதன்யம் பெறல், பதியன்பு, பரனே உண்மையென்னும் ஆஸ்திக புத்தி—இவையே பிராமணருக்கழகாம். இவையின்றிப் பொன்னே, பெண்ணே, போகமே, மக்களே, பட்டமே, பதவியே என்று பித்தேறி மாயையில் உழலும் மூடர் பிராமணர் ஆகார்.

சத்தியம் இன்றித் தனிஞானம் தானின்றி,
ஒத்த விடையம்விட் டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரன்உண்மை யின்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாம்அன்றே.

சித்(அறிவு), அசித்(அறியாமை) என்றின்றி, இரண்டிற்கும் அப்பாலுள்ள சத்தாகிய உண்மைப் பொருளையே உணரவேண்டும். அதை உணரத் திருநெறியாகிய குருநெறியில், பரமாசாரியன் காட்டும் அருள் நெறியில் பயின்று அந்தர் குருவான சிவனடி சேரவேண்டும், கரும நியமாதிகள் பிறகு வேண்டுவதில்லை. "எல்லாத் தருமங்களையும் அறவே நீத்து, என்னையே சரண்புகு! நான் உன்னைப் பாவங்களினின்றும் விடுவித்து மோக்ஷமளிக்கி

றேன்" என்கிறான் கண்ணன். இறைவனுக்கே ஆளாகி அவனது திருவடிப்பற்று நிலைத்தபின், வேறொரு கிரியையும் சாதனமும் கர்மானுட்டானமும் தேவையில்லை. இவற்றையெல்லாம் கைவிட்டுச் சுதந்தரமாகத் தமது சொரூபத்தைக் காணும் துரிய சமாதியே தூய அந்தணர்க்குப் பெருமையாகும். அவரே உண்மையான மறையவராவர். அவர் வேதாந்த வாய்மை, தூய்மையாயொளிரும். மற்றோர் வெறும் கூச்சலையும், ஆடம்பரங்களையும் சடங்குகளையுமே அறிவார்கள். வேதத்தின் இரகசியப் பொருளான இதய பரமாத்மனைத் தெளிந்தவரே அந்தணராவர். அந்தண்மை பூண்டு, அருமறை முடிவான இறைவனைச் சிந்தை செய்யும் உண்மையந்தணர் சேர்ந்த செழும்புவி வளமோங்கும்; அதில் எக்குறையும் இராது; அப்புவியின் அரசும் நன்றாகும். அந்தியும் சந்தியும் அங்கே ஆகுதி நடக்கும்; வேள்விக் கடன்கள் சரிவர நிறைவேறும். வேதாந்த ஞானம் விளங்காதவர், அதை அனுட்டிக்க இயலாதவர், நாதாந்த போதம் நணுகிய பிறகு, எல்லாப் போதங்களுக்கும் முடிவான பரமனிடம் புகலடைக! அவனடி புகுந்து அவனுக்கே ஆளானால் நாதாந்த முத்தியும் சித்தியும் நண்ணும்.

இறைவனை எப்போதும் அருள்வழிச் சென்று வணங்கும் திருவுடையோர் ஒன்றுகிய மனமும், அதன் இருவிகாரங்களும் இதயத்தில் ஒடுங்கி நிற்பர். அவர்கள் நின்றும், இருந்தும், பல உணர்வு நிலங்களைப் (சேதன பூமி) பேசியும், அனைத்தையும் வென்று தானே தானாக, நிராலம்பனாக, நிஷ்ப்ர

பஞ்சனைக விளங்கும் சுத்த பரமாத்மனையே நாடுவர். அந்நிலையில் ஆன்மாவை இடர்ப்படுத்தும் இரு வினைப் பற்றுகளும் தாமே விட்டு விலகும். 'நான்' என்னும் ஆணவம் ஏவும் யாதொன்றையும் ஆன்மா நாடாமல், இறைவன் ஆணைவழியே நிற்கும். அப்போது, உலகில் உறையும் நான்மறையோன் பிரணவ வேள்வியில், ஓங்காரத்தையே ஆகுதியாக வழங்கிப் பிரம்மானந்தமாகிய அவியுண்டு புண்ணிய போகமனுபவிப்பான்.

## உகூ. தீ வளர்த்தல்

நம் பெரியார்கள் இயற்கையோ டிசைந்தே வாழ்ந்தனர்; நம் நித்யகர்மானுட்டானங்களில் அவ் வாழ்வை நுட்பமாக இணைத்தனர். வான், வளி, தீ, நீர், மண், கதிர், மதி, ஆன்மா—இவை எட்டும் இறைவன் திருவடிவங்களாம். இவை உலக வாழ்விற்கு இன்றியமையாதன. கதிர், தீ—இரண்டையும் நம் முன்னோர் முதன்மையாக உபாசித்தனர்; சூரிய நமஸ்காரம் செய்தனர்; வீட்டில் முத்தீ வளர்த்தனர்; அக்னிஹோத்ர ஔபாசனாதிகளை உயிர்க்கடமையாகக் கருதினர்; ஔபாசனத் தீயை அணைக்காமல், பரம்பரையாகக் காப்பாற்றி வந்தனர்.

தீ வளர்த்தலின் பொருளென்ன? கதிரொளித் தீயே கடல்நீரை மேகமாக்கி மழை தருகிறது. "நானே உயிருடலில் தீயாயிருந்து உணவைச் செரிக்கச் செய்கிறேன்" என்கிறார் பகவான் கீதையில். கனலின்றி உணவில்லை, உடலில்லை, உயிரில்லை, வாழ்வில்லை. கனல் ஒரு சக்தி. கனல் கடவுள் வடி

வம். இறைவனை, 'விறகில் தீயினன்', 'மாமணிச் சோதியான்' என்றார் அப்பர்.

கனல் இரண்டு வகையாகப் பரிணமித்துள்ளது; ஒன்று தூலக்கனல்; விறகெரிக்கும்போதும், விளக்கெரிக்கும்போதும், கதிர் பரவும்போதும், கல்லுடைக்கும்போதும், சாணை பிடிக்கும்போதும், அரணி கடையும்போதும், துள்ளியெழுவது தூலக் கனலாகும்; அதுவே நம் புலன்களுக்கு உணர்வாவது. மற்றொரு சூக்குமக் கனல், நம்முள்ளே உளது. அதுவே குண்டலிக்கனல், மூலாதாரக்கனல், சிற்கனல், சக்திக்கனல், தவக்கனல் என்று பலவாகப் பெயர்பெற்று யோகிகளுக்கு உணர்வாவது. அக் கனலே அனைத்தையும் ஆக்கிக் காக்கிறது. அக் கனலையெழுப்பி மேரு தண்டத்தின் மேலேற்றி, பிரமரந்திரத்தில் முட்டச் செய்தால் பரமானந்தமுண்டாகும்; நம்மிடம் மறைந்துள்ள தெய்வசக்திகளெல்லாம் கட்டவிழ்ந்து விளங்கும்; அருட்சோதி விளக்கமாகும். யோகசித்தியில் சஹஸ்ராரசித்தி என்னும் அதிகாரத்தில் இதைப்பற்றி விரிவாகக் காண்க.

மூலக்கனலை, ஆதாரசக்கரங்களூடு ஸஹஸ்ராரத்தை எட்ட மேலேற்றலே தீ வளர்த்தலின் தத்துவப் பொருளாகும். இந்த மூலத் தீயே பாசான்மாவை மாசறுத்துச் சுத்தான்மாவாக்கி, ஈசனுடன் கூட்டுவிக்கும் சக்தியாகும். இக்கனலை ஜாதவேதஸ் (பிறப்புகளறிவான்), அனைத்துமறிவான், சக்தியளிப்பவன், வரமளிப்பான், அவி சுமப்பான், தேசளிப்பான் என்று பலவாறு வேதம் புகழும். ஆற்றல், வலிமை, ஒளி, ஆயுள், வீரம், தீரம், அறிவு, ஆண்மை, ஆட்சித்திறன், வினைத்திட்பம், மனத்

திட்பம், வினைவெற்றி, வாழ்வின்பம் எல்லாம் இத் தெய்வக்கனலால் எய்தும். இந்தச் சூட்சுமக்கனலையே தூலமாகத் தோன்றும் கனல்மூலம் உபாசிக்க நம் பெரியார்கள் சமிதாதானம், அக்னிஹோத்ரம், ஔபாசனம் முதலிய புண்ணியக்கிரியைகளை ஏற்படுத்தினர்.

தீ வளர்க்காமல் எச்சடங்கும் நிறைவேறாது. சமிதுத் தீ வளர்த்தே பிரமசாரி கல்வி பயில்கிறான். தீயின் முன்னிலையிலேயே காதலர் மனமொன்றி இல்லறம் பூண்பர். தீ வளர்த்தே உடலுக்கும் உயிருக்கும் இதமான சடங்குகளைச் செய்வர். இறுதியில் தீச்சட்டியுடனேதான் மனிதவுடல் சென்று, தீயில் வெந்து பிடி சாம்பலாகிறது. வேதரிஷிகள் உயிரைப்போலத் தீயைப் பேணினர். தீ வளர்த்தலின் தத்துவப் பொருள் ஒருபுறமிருக்க, அதனால் உடலுக்கும் மனத்திற்கும் ஓர் இன்பமுண்டாகிறது. நான் 22 வயதுவரையில் சந்திஜபங்களுடன் முறையாகச் சமிதாதானம் செய்து வந்தேன். அப்போது எனக்கிருந்த மனத்தெளிவு வியக்கத்தக்கது. சமிதுப்புகை நோய்க் கிருமிகளை அழிக்கும். உடலுக்கு சமிதாக்கினி ஒரு சுகமான விறுவிறுப்பைத் தரும்; இரத்த ஓட்டத்தை ஒழுங்குபடுத்தும். தேஜஸ் அளிக்கும்; சமிதாக்கினி வளர்ப்பவர் முகத்தில் இன்றும் ஒரு பொலிவைக் காணலாம். அந்த மந்திரக் கனல்போயிற்று! தீயை நாம் அலட்சியம் செய்தோம்; சமிதுப்புகை நமது வீட்டைப் புனிதப்படுத்தவில்லை; பிரமபத்திரப் புகைதான் எங்கும் சுழன்று நாறுகிறது; அருட்புகை போயிற்று; சுருட்டுப் புகை வந்தது; அத்துடன் பெற்றோல் புகையும் மண்

ணெண்ணெய்ப் புகையும் சேர்ந்து நமது உடல் நலத்தைப் பாழ் செய்கின்றன. இக்காலம் 'சமிதாக்கினி வளருங்கள்!' என்றால் "பேசாதே, மூடக் கொள்கை!" என்பர். நான் சொல்லவில்லை: நம் செந்தமிழ்ச் சித்தரான திருமூலர் சொல்லுவதைக் கேளுங்கள் :—

இறைவன் ஒண் சுடரான்; உலப்பிலான்; அனைத்திற்கும் முதல்வன், பரமன். அவன் ஒள்ளிய சுடராக என் உள்ளத்தில் இருக்கிறான்; அவன் சுடர்க்கண்ணன், தீயுமிழும் நெற்றிக் கண்ணன்; உலகேழும் கடந்த துரிய சிவன். அவனே தண்சுடரோங்கும் ஓமத் தலைவனவன்.

ஒண்சுட ரானை, உலப்பிலி நாதனை
ஒண்சுடர் ஆகிஎன் உள்ளத் திருக்கின்ற
கண்சுட ரோன்,உல கேழும் கடந்தஅத்
தண்சுடர் ஓமத் தலைவனும் ஆமே.

எம் இறைவன் ஹோமாக்கினியின் உள்ளே யுள்ளான்; ஓமத்துள் அங்கியின் உள் உளன் எம் இறை! உயிர்க்கனலிலும் அவனே இருக்கிறான்; ஈமத் தீயாகிய சாவுக்கனலிலும் அவனே இருக்கிறான். அவனே அனைத்தின் இரசத்தையும் உண்கிறான். அனைத்தின் பிழிசாறும், இரசமும் அவனே (ரஸோவை ஸஹ). வினைக்கடல் விளைவான துயர்க் குலங்களெல்லாம் அவனருட்கனலில் வெந்து நலியும். தெய்வபரவசத்தால் சிற்கனல் ஆர்த்தெழும். குண்டலிக்கனலைத் தம்முள் எழுப்பி நிறுத்துவர் அருந்தவர். அவர் வேதமுறைப்படி முத்தீ வளர்ப்பவர்; அவர்கள் தாமிருக்கும் ஊர் இளைத்தால் மீண்

டும் அது பொங்கி வளம்பெறச் செய்து தமது புகழை எங்கும் நிலைநிறுத்தி விளங்குவர். வானிலம், மண்ணிலம், திசை திசைத் தேவர்குழாம், மனித வாழ்விற்கு வெற்றியளித்துப் பெருகியோங்கும் வேதம், இவையனைத்திற்கும் பரம்பொருளுணர்வில் உறுதி பெற்ற அந்தணர் ஆகுதியால் நலமுண்டாகும். ஆகுதி வேட்கும் அருமறை அந்தணர், பரகதி நாடி, பிறருக்குக் கொடுத்துண்ணுவர். ஈந்து துய்மின் என்பது மறைமொழி. அதைப் "பாத்தூண்" என்றூர் வள்ளுவர். அருட்புலவரான அந்தணர் தமது தெள்ளிய அருளறிவால், தலைப்பட்டு, மெய்ந்நெறி கண்டொழுகுவர். வேதவிதிகளை அவர் வேண்டிப் பயில்வர்.

அந்தணர், தமக்கிசைந்த வாழ்க்கைத் துணைவியுடன் தீயோம்புவர். தவவிரதங்களால் இருவர் உள்ளிருக்கும் சிற்கனலும் எழுந்தொளிரும். அதனல் இருவருள்ளும் விளங்கும் தெய்வப் பொருள் விழித்தெழும். அதுவே இருவருக்கும் இணைந்த துணையாம். அச்சைதன்யப் பொருள் எழுந்து இயங்கும் பொழுது அதுவே நீங்காத் துணையாக நின்று தூய நெறி காட்டும். தூய சதிபதிகள் புரியும் குண்டலி யோகத்தால் வாழ்வு மாசற்றுப் பேரின்பமெய்தும். இதன் விளக்கம் யோகசித்தி 'இல்லற வியலிற்' காண்க. அந்தணர் இரவும் பகலும் வேதமோதுவர்: ஓதிய வழியே செயல் புரிவர்; ஆன்மாக்களுக்கு நன்னெறி காட்டியருளுவர்; இட்டுண்பர்; அவரது மங்கல மனையில் எல்லாத் திருக்களும் மகிழ்ந்து திரண்டு கூடி விளங்கும்; இடர்க் கூட்டங்கள், எரித்திரள் கண்ட பறவைகளைப் போல வெறித்தோடும். நெய்யுண்டு

நின்றெறியும் நெடுஞ்சுடர்; அதையோம்பும் நெறியே சென்று, தீமைகளை எரிக்கும் வகையறியும் அந்தணர்க்கு, எல்லாப் பாவங்களினின்றும், அஞ்ஞானங்களினின்றும் விடுபடும் திருமந்திரம் கைகூடும். ஒருவனுக்கு என்றும் நலம் பெருகச் செய்வது தீவளர் செல்வமேயாகும். வேதாத்யயனமாகிய அகலில் (பாழி=வேதமோதும் ஒருவகை) அக்னிஹோத்ரமாகிய திரியிட்டுப் போற்றி ஞானக் கனல் உதித்த அந்தணர் இருக்குமிடத்தில் சுபமுண்டாகும்; அங்கிருந்து இடர்களும் பலப்பல நோய்களும் தீவினைகளும் நீங்கும்; துயர்க்குலங்கள் விழும். அந்தணர் வளர்க்கும் தீ, பிறவி வினையைச் சுட்டெரிக்கும். எவ்வளவு பெரியதானாலும் முன்னே சேர்ந்த இகச் செல்வம் அருகும்; பரச் செல்வமான பேரின்பச் செல்வமே நிலைபேறுகும். அச் செல்வத் தலைவன் இறைவன். அவனையே தீ வேட்கும் அந்தணர் உள்ளம் நாடும். அவ்வாறு இறைவனை நாடி அன்பு செய்வதே பாக்கியமாகும். பொருட் செல்வத்தினும் பெரிதான அருட் செல்வத்தின் இன்பம் வரவே நிஷ்டையிலிருந்து, இறைவனையே தியானித்து, ஆகுதி வழங்கித் தீவேட்பர் அந்தணர்.

அந்தண்மையும் தீவேட்டலும் சாதிமத வேறுபாடில்லாமல் அனைவர்க்கும் இயலும். அரசங்குச்சியால் தீமூட்டி அவரவர் தாய்மொழியில் உள்ள புண்ணிய வாக்குகளைச் சொல்லி, அல்லது மானசீகமாக இறைவனை எண்ணி, தீயது கெட்டு, நல்லது தழைக்கத் தீ வளர்க்கலாம். தமிழர் தேவார திருவாசகங்களை ஓதித் தீவளர்க்கலாம். அவையும் தடவலானல், தெளிவாக, "தீவடிவான கடவுளே, நீ புறத்தே

கனல் வடிவாக விளங்குவதுபோல என் அகத்தே எழுந்து சிற்கனலாக விளங்கு! இந்த அரசங்குச்சி களைத் தீ உண்டு சாம்பலாக்குவது போல, எனது காமம் வெகுளி மயக்கமாகிய தீமைகளை எரித்து அருளொளி துலக்குவாயாக!!" என்று தமிழில் தீயு டன் பேசி ஆகுதி வழங்கலாம். அல்லது அவரவர் இஷ்டமூர்த்திகளின் பெயர் சொல்லி வழங்கலாம். தீயோம்பல் உடல், உயிர், மனம் அனைத்திற்கும் நல மாகும். அது நரம்புகளுக்குப் புதிய சக்தியைத் தரும்.

## ௩௦. அரசன் கடமை

நாட்டையும், நன்மறையையும், நல்லோரையும் காப்பது அரசனல்லவா? அரசாட்சி சரியாயில்லாது போனால் அறமோங்காது. ஆத்மஞானம் பேசிக் கொண்டு, அரசியலை அந்நியரிடம் விடும் நாடு கெடும். வீட்டிற்குள் அந்நியரைப் புகவிட்டுத் தெருத்திண்ணை யில் வேதாந்த முழக்கம் செய்வதிற் பயனில்லை. அருளும் அரசும் சேர்ந்திருக்கவேண்டும்; ஆதலால் அறநெறிச் செங்கோல் நாட்டில் செழிக்க வேண்டு மென்று மூலர் வற்புறுத்துகிறார். நாட்டுத் தலைவ ஞன வேந்தன், திருக்குறள் பொருட்பாலிற் சொல் லியபடி, கல்வி கேள்விகளிலும் அருளுணர்விலும், வீரத்திறமையிலும், வினைத்திட்பத்திலும், படைவலி யிலும் சிறந்தவனாயிருத்தல் வேண்டும். நீதிநூல் களைக் கற்று, நன்னெறிச் செங்கோல் பிடித்து, நாட்டைக் காவாத அரசன் எமனினும் கொடியனா வான். ஏன்? எமன் நல்லாரை அண்டமாட்டான். அவன் பாசத்திற்கு ஒரு நியதியுண்டு. முட்டாள் அர

சனே, அறம் உணர மாட்டான்; மனம்போனபடி நடப்பான்; நல்லாரையும் கொல்லச் சொல்வான்.

கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்;
கல்லா அரசன் அறம்ஓரான், 'கோல்' என்பான்
நல்லாரைக் காலன் நணுகநில் லானே.

மன்னன் ஒவ்வொரு நாளும், தன் அரசியலில் தவநெறியோங்கி, அவநெறி நீங்க அரசாளவேண்டும். இன்றேல் நாள்தோறும் நாடு கெடும். மடமை குடிபுகும்; அரசச் செல்வம் குறையும். அந்தணர், வீரர், வணிகர், வேளாளர், துறவிகள், இல்லறத்தார், அனைவரையும் அவரவர் வேடத்திற்கேற்றபடி, அரசன் நடக்கச் செய்ய வேண்டும். சாமியார் வேடம் பூண்டவர், தவவொழுக்கம் நீங்கிக் காமியாராக நடப்பது கூடாது. வேடத்திற்குத் தக்க நடையிருக்க வேண்டும். நடையும் உடையும் சேர்ந்திருக்க வேண்டும். அதுவே மெய்வேடம். போலிவேடக்காரரை, ஒழுக்கம் தவறிய பாசாங்குக்காரரை, திறமையுள்ள அரசன் தண்டித்து ஒழுங்காயிருக்கச் செய்தல் வேண்டும். அதனல் அரசனுக்கு நற்கதியுண்டாம்.

நெஞ்சில் மடமையிருள் குடிகொண்டு, சிகை வைத்துப் பூணூலும் போட்டு "நான் பிராமணன்" என்று பொய்வேடம் பூணுவோரால் நாடுகெடும்; புவி வளம் குறையும்; பெரு வாழ்வும், அரசும் பெருமை யிழக்கும். ஆதலால் அந்த ஆடம்பரப் போலிகளின் பூணூலையும் சிகையையும் அரசன் அறுத்தெறிதல் நன்றாகும்; ஆடம்பர நூல் சிகையை யறுத்தல் நன்றே. ஞான சூனியர்கள் சடைவளர்த்துச் சாமியார் என

வும், சிகைநூல் பூண்டு அந்தண் ஞானிகள் எனவும் நடித்து உலகை ஏமாற்றுவர். அரசன் மெய்ஞ்ஞானி களைக் கொண்டு அவர்களைச் சோதித்து, ஞானமுண் டாக்கி நல்வழிப்படுத்த வேண்டும். அதுவே நாட் டிற்கு நலமாகும்.

ஞானமி லாதார் சடைசிகைநூல் நண்ணி
ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை,
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிட்கே.

ஆக்களையும், பெண்டிரையும், அறவோரையும், தேவர் போற்றும் திருத்தகு துறவினரையும் காவலன் காப்பாற்றவேண்டும். இன்றேல் மறுமைக்கு மீளாநரகமாம். அருளாற்றலளிக்கும் முத்தியும், இம் மைக்குச் செல்வமும் வேண்டினல், எப்போதும் அற நெறியே பற்றிச் செயல் புரியவேண்டும். மறந்தும் மறநெறி புகக்கூடாது, ஆழிசூழ் உலகம் செய்யுந் தொழில்களின் பலாபலன்களில் ஆறிலொருபங்கு வேந்தனுக்காகும். ஆதலால் அரசன் தன் குடிகள் அறநெறியிலேயே ஒழுகுமாறு செய்ய வேண்டும். வேந்தன் அறநெறிச் செங்கோலோச்சி, உலகைக் காப்பது மிகவும் நன்றாகும். வேந்த னெப்படியோ அப்படியே அவனுக்குவாய்ந்த மாந்தரும் நடப்பர். வேந்தன் அறந்தவறி, முறைகெட்டால் உட்கலகம் விளையும்; அந்நியப் பகைவர் நாட்டிற் புகுவர்; தான் பாய்ந்து பற்றியதைப் புலி விடுமா? அதுபோல அந் நியர் தாம் கைப்பற்றிய நாட்டைத் தமக்கே அடிமை யாக்குவர். அரசன் அன்புடன் ஆண்டு குடிகளுக் குத் தந்தை போலுதவ வேண்டும்; நாட்டின்மேற்

பகைப் புலிகள் பாயாமல் காவலுடன் கவனமா யிருக்க வேண்டும். அரசன் கட்குடியை ஒழிக்க வேண்டும், வாசி அடக்கிக் குண்டலிக்கனலை எழுப்பி, மதிமண்டலத்தை எட்டி, அங்கே அமுதுண்பர் யோகிகள். அதுவே உண்மையான சோமபானம். அஃதின்றி, தாந்திரிக சாதனத்தின் பெயராலும் சோமபானத்தின் பெயராலும், சாமிபூதங்களின் பெயராலும் வெறிகொண்டு கள்ளுண்டு மருளுவர் சிலர்; அம்மூட வெறியரைக் குடிமறுக்கச் செய்து, மேற்கொண்டு தண்டிப்பது அரசன் கடமையாகும்.

கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப்
பால்கொண்டு சோமன் முகம்பற்றி உண்ணுதோர்
மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை
மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே.

அற்காலத்திலேயே மதுவிலக்கைத் திருமூலர் வற்புறுத்தியிருக்கிருர் பாருங்கள்!

குடிகளை அவரவர் சமயத்திற்குத் தக்கபடி அரசன் ஒழுகச்செய்ய வேண்டும். ஒழுக்கமற்ற ஆடம்பரப் போலிகளை எத்தண்டமும் செய்யலாம்; அது சிவன்சொன்ன ஆகம நூல் நெறியாகும். மறுபிறப்பில் அவர்கள் வினைக்கேற்ற தண்டனையடைவார் என்று விடக்கூடாது. மும்மைப் பிறப்பினும் இம்மையிலேயே அவர்களைத் தண்டித்துக் கண்டித்துத் திருத்துதல் வேந்தன் கடமையாகும்.

## ௩௧. வானச் சிறப்பு

இவ்வாறு மறங்கடிந்து, அறம் போற்றும் வேந்தனுடைய நாட்டில் வான் மழை பொய்க்காது வழங்

கும். அமுதூறும் மாமழை நீரால், கமுகு, தெங்கு கரும்பு, வாழை முதலிய மரங்கள் பாரில் தோன்றும். சிவானந்த மழையால் காஞ்சிரம் போன்று கசக்கும் காய வாழ்வும் அமுதூறி யினிக்கும். துரிய மலையி னின்றிழியும் வானருவி உரையில்லாமல், நுரையில் லாமல், மாசில்லாமல், கரையில்லாமல், நுண்ணிய சூக்ஷ்மமான தெளிந்த சிற்சக்தி நீராக உள்ளகத்தில் ஊறும். அதுவே எந்தை சிவபெருமானின், (கடைசல் பிடித்த மணி போன்ற) தெள்ளிய ஞானநதியாம்!

## ௩௨. அறஞ் செய்தல்

விலங்குகள் தமக்குத் தாமே வாழும்; பிறர்க்கென வாழலே மனிதச் சிறப்பாம். மனிதத் தன்மையிற் சிறந்தது உயிரிரக்கம், ஜீவகாருண்யம், உள்ளத்தையும், வாழ்வையும் தூய்மை செய்வதில் ஜீவகாருண்யத்திற்கு இணையில்லை. உயிரிரக்கம், அறமும் ஈகையும், அருளும் அன்பும் ஒப்புரவுமாக மலரும். அறத்தால் உண்மையின்ப மெய்தும். மாந்தர் இன்பம், துன்பம் ஆகிய இரண்டை யனுபவிப்பது முன்னே அவரவர் செய்த செய்கையின் விளைவாம். ஈதலே இன்பம்; அதையறியாப் பேதையர் துன்புறுவர்; அவர் அன்பிலார், அறஞ்செய்ய நினையார்.

இன்பம் இடர்என் றிரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையி னாலே முடிந்தது;
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்,
அன்பிலார்; சிந்தை அறம்அறி யாரே.

எட்டி பழுத்துப் பெரிய கனிகளை உதிர்த்தால் பயனென்ன? மனித சமுதாயத்துடன் ஒட்டுறவா

யிருந்து, தமக்கியன்ற நல்லறம் செய்யாதவர் செல்வம் எட்டி பழுத்ததே போலாம். கடுவட்டிபோட்டு ஏழைகளின் கண்ணீரைக் கறந்து ஈட்டிய அந்த உலோபிச் செல்வம் இறுதியில் மண்ணாகும். பொருளைப் புதைத்து வைத்து ஒரு செல்வன் இறக்கிறான். அதை மண் காக்கிறது; இன்றேல், அது பிறர் கைக்குமாறுகிறது. பட்டிப் பதர்கள் செல்வம் பெற்ற பயனை அறியார்கள். எத்தனையோ செல்வரும் அரசரும் வாழ்ந்த காலங்கள் ஒழிந்தன. எத்தனையோ ஊழிகள் வந்து போயின. எத்தனையோ கலைக்கற்பனைகளும் காலத்தாற் கழிந்தன. வாணாட்களும் குறுகிப் போயின. காலன் உயிரைப் பிழிந்து கொண்டு போகிறான். எத்துணையோ பாசத்துயர்களால் இடர்ப்படும் யாக்கைகள் பிறந்து நின்று அழிந்து மண்ணாயின. இந்த அழிவை நிதம் கண்டும், மாந்தர் அறஞ் செய்ய அறியாதிருக்கின்றனர்.

ஒழிந்தன காலங்கள் ; ஊழியும் போயின ;
கழிந்தன கற்பனை ; நாளும் குறுகிப் ,
பிழிந்தன போலத்தம் பேரிடர் ஆக்கை
அழிந்தன கண்டும் அறம்அறி யாரே !

அறம் அறியாதவர் இறைவன் திருவடி நினைக்கும் திறமறியார்; சிவலோக நகருக்குச் செல்லும் திசையறியார் ; அவர் அன்பும் அறமும் இல்லாச் சுயநலத் தீயர் சொல்லும் பொய்மொழி கேட்டு, அதர்மமே செய்ய அறிவார். அக்கொடியர் பிறரைப் பகைப்பர் ; பிறர் பகை சுமப்பர் ; மறம் அறிவார், பகை மன்னி நின்றாரே ?

தருமஞ் செய்யாதவரை இருமல், சோகை, ஈளை, வெப்பு நோய்கள் துன்புறுத்தும். இடி,

நாகம், தொண்டை நோய் கழலை முதலியவை தருமம் செய்வாரை அணுகாவாம். நல்லோர் பரவும் பரமனை ஏத்தாதார், இரப்பவருக்குத் தம்மால் இயன்றதைக் கூடத் தர மாட்டார்கள்; குடநீர் ஊற்றி ஒரு சோலையாயினும் வளர்க்கார்—இத்தகை யோர் வீணாட்கழித்து நரகவாசம் செய்வர். இட்டுண் பவர் எளிதாக வழிநடந்து பேரின்ப விண்ணடைவர். அளவுடன் ஈந்து துய்த்தலால் தீவினை வீழ்ந்தொழி யும்; மனமாசறும்; இன்பமுறும். அன்பிற் கனிந்த பக்குவிகள் ஈசன் கழலடி காண்பார்; அனைத்தை யும் தியாகம் செய்யத் துணிந்தவர் தெய்வ விண்ண டைவர். அறஞ் செய்யாது தீவினை மலிந்தவர் இறக் குமட்டும் அமைதியின்பமின்றி இடர்ப்படுவர்; உட லிளைப்பர்; மனமிளைப்பர்; சினத்தில் வீழ்வர்; உயி ரிளைத் தொழிவர். பிறர் பசிக்கு அன்னமிடுவதும், தம்மாலானதை ஈவதும் கடமை என்று ஒவ்வொரு வரும் எண்ண வேண்டும். நடுநிலையில்லாத காரியத் தைச் செய்து எவரும் இன்புற முடியாது. ஜீவசாட் சியாய் இறைவனொருவன் உள்ளான்; அவன் ஆவ தும் அழிவதும் இல்லாதவன்; அவன் கேடிலி; நித் தியன்; அவன் தீவினை செய்தாரைத் தண்டிப்பான். நடுநிலை தப்பிப் பொருள் தேடுவோர் இன்புற வொட் டான். உயிர்கள் இன்புறலாம்; வழியுள்ளது. இறை யன்பு, ஈகை, இவற்றால் இன்புறத் தெரியாத மனி தன் விலங்கு போல்வான். 'பணம் பணம்' என்று புல்லறிவாளரைப் போற்றிப் பலர் வாடுவர். அறிந்து விழித்தவர் சிலரே ஆவர். அவர் வீடுபேற்றையே கருதி, இறைவனை ஏத்துவர். நல்ல வில்லாளி குறி தப்பாமல் எய்வான். அதுபோலவே நல்ல அறிவாளி

தன் மனத்தைச் சிதறவிடாமல் திருவடிப் பேற்றையே குறிப்பாகக் கொண்டு அறவழியில் நடப்பான்.

## ருரு. இட்டுண்ணல்

தம்மைத் தாமறியும் ஞானிகள் இறைவனடி பணிவார். இவ்வுடல் குடியிருக்கும் வீடு; காய வாழ்க்கை அநித்தியம்; இதிலுள்ள உயிர் இறைவனைச் சேர்தலே இன்பம்; இறைவன் எல்லா உயிர்களுள்ளும் உயிராயிருப்பவன். ஆருயிர்ப்பணி ஆண்டவன் பணியாகும் என்றறியும் அறிவாளர் அறந் தாங்கி நிற்பர். தம்மைச் சுத்தான்மாவாக அறிவார் தத்துவ ஞானிகளாவர். தம்மைத் தாம் அறிந்தவருக்குச் சுற்றும் உறவெல்லாம் பரமனே யாவன். அவனே நித்தியன்; அவனைப்பற்றலே வீடுபேறும்.

தாமறி வார்அண்ணல் தாள்பணி வாரவர்;
தாமறி வார்அறந் தாங்கிநின் றூரவர்;
தாமறி வார்சிலர் தத்துவ ராவர்கள்;
தாமறி வார்க்குத் தமர்பர னாமே!

எல்லார்க்கும் உயிர்க்குயிராய் நடுநின்ற சாட்சியாய் விளங்கும் இறைவனுக்கு ஒரு பச்சிலையிட்டாவது வணங்குங்கள்! எல்லார்க்கும் பால் கொடுத்துதவும் பசுவுக்குச் சிறிது பசும்புல்லாயினும் கொடுங்கள்! சாதி மதம் பாராமல் பசியென்று வந்த எவருக்கும் நீங்கள் உண்ணும்போது பிடி சோறு கொடுங்கள்! பிறருக்கு இன்னுரை பேசுதல் யாவருக்கும் நன்மையாகும்; இன்னுரை யாவருக்கும் இயன்றது தான்.

யாவர்க்கு மாம் இறை வற்கோரு பச்சிலை;
யாவர்க்கு மாம்பசு வுக்கோரு வாயுறை;
யாவர்க்கு மாம்உண்ணும் போதோரு கைப்பிடி;
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே!

அவர் இவர், அச்சாதி இச்சாதி, என்னுதீர்கள்; யாவருக்கும் சோறிடுங்கள்! பசிப்பிணி தீர்த்தலே சிறந்த ஜீவகாருண்யமாகும். சுற்றிலுமிருப்பவர் முகம் பார்த்து, அவரை அழைத்து அவருடன் இருந்து உண்ணுங்கள்! இலையைப் பார்த்து, அவசரப்படாமல் மெதுவாயிருந்து உண்ணுங்கள். பதுமாசனத்தில் அமர்ந்து, அமைதியாக, நன்ருகமென்று, வம்பாடாமல் கவனமாகச் சுசிருசியாக விருந்துடன் உண்ணவேண்டும். சமைத்த மூன்று மணி நேரத்திற்குள் உண்ணவேண்டும். ஆறி, உலர்ந்து, பழமையான உணவு தீமை செய்யும். அப்பழைய உணவை உண்ணுதீர்கள்! பசி தாகம் எவ்வளவானுலும் சரி, 'அவக் அவக்' என்று விரைவாக அள்ளிப் போட்டு உண்ணுதீர்கள்! காக்கை கரைந்து தனது இனத்தையும் அழைத்துக் கூடியுண்ணும் தன்மையைப் பார்த்து அறியுங்கள்! தீண்டாமை, பாராமைகளை விடுத்து, உற்ருர் உறவினரைப் போலே, 'பசி' என்று வந்தவரையும் அழைத்து வந்து உண்ணுங்கள்! உண்ணும்போது 'காகா' என்று கூவினுல் காக்கைகள் வரும். அவற்றிற்கு ஒரு பிடி போட்டு உண்ணல் நம் நாட்டில் தொன்று தொட்ட வழக்கமாகும். அப்படிக் காக்கைக்குப் போடும்போது அது தனது இனத்தைக் கூவி உடனுண்ணும் காலத்தில் அதன் அன்பைப் பாருங்கள்!

ஆர்க்கும் இடுமின், அவரிவர் என்னன்மின் ;
பார்த்து, இருந்து, உண்மின்; பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர்: விரைந்தொல்லை உண்ணன்மின் ;
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே !

கற்றும் அருளுணர்ச்சி கமழ்பவரே மானிடராவர்; கருமித்தனமற்று, சுயநலமற்று, தாராளமான ஈகை தாங்கி நின்றோர் விருந்துடன் உண்ணும் இரத்தமற்ற உணவே அறமாகும். குளங்கிணறுகளில் தூண்டில் போட்டு மீன் பிடித்துண்பவர் உணவின் பயனை அறியார். அவருண்பது பாப உணவாகும்; அத்தகையோர் கற்றும் இரக்கமில்லார், அருளில்லாராவர். காமம், குரோதம், உலோபம், கொலை ஆகிய அழுக்கினை ஓட்டி, நல்லறிவைப் புந்தியில் நிறைக்க வேண்டும்; அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர். செழித்த நாளில், நீங்கள் துய்ப்பதுடன் தேவையானவருக்குக் கொடுத்துத் தருமமும் செய்யவேண்டும். இவ்வாறு அழுக்கறுத்து, அறிவுற்று, அறஞ் செய்யாத ஏழை நெஞ்சீர்! நீர் உயிருடன் கண்விழித்திருந்தென்ன பயன்? நீர் உலகிற்கும் உமக்கும் என்ன செய்வீர்? தீவினையால் வெம்மை பெருகி வழிதெரியாமல் விழிப்பீர். உம்மால் உமக்கும் பயனில்லை; பிறர்க்கும் பயனில்லை. என்றாயினும் எமன் வருவான்; தன்னையும் அறியாது தன்னை மறைக்காமல், இன்மையறியாமல், இளையர் என்றுணராது வன்மையாக உயிரைக் கொண்டு போக வருவான் எமன். அவன் வருமுன்பே அவரவர் தன்மைக்குரிய தவவினை செய்மின் !

வன்மையில் வந்திடும் கூற்றம்; வருமுன்னம்
தன்மையில் நல்ல தவஞ்செய்யும் நீரே.

துறந்தாருக்குத் தன் சுற்றம் மரபு என்ற பற்றில்லை. அறஞ் செய்யாமல் இறந்தவருக்கு இன்பமில்லை. அதர்மம் செய்தவருக்கு இறைவனருட்டுணை எய்தாது. அறத்தினளவே ஒருவனுக்கு இன்பமாகும். அறத்தைக் கொண்டே அறிஞர் ஒருவனை அளப்பர். மனிதன் தவம் செய்யலாம்; ஆனால் இறைவனை அடையவே தவம் செய்ய வேண்டும்.

தவத்திற் கேற்றபடியே உலகம் ஒருவனைத் தெய்விகப் பெரியானாக மதிக்கும். பதிப்பொருளை விட்டு, நிலையில்லா ஊனுடலையே தெய்வமாகப் பேணி உயிர்க்கின்றனர் பலர். அவர்களுக்கு, "நானே தெய்வம்" என்று நமன் வருவான். அதாவது, ஒருவன் ஊனுடலே பெரிதென்று அதையே வளர்க்கும் அதமத்தவங்களை, மலயோகங்களைச் செய்யாமல், மனத்தைக் கட்டித், திருவடியில் நிறுத்தி, அன்பினால் இறைவனை வழிபட்டு அவன் மயமான உயிர்களை நேசித்துத் திருவருட் கலப்புடனேயிருக்கும் ஞானத்தவம் புரியவேண்டும். அத்தகைய தவத்தினரையே உலகம் மகான்களாகக் கொண்டாடும்.

வினைக்கடல் மிகப் பெரிது; அதை மனமெனும் தோணி பற்றிக் கடக்கிறோம். ஆனால் அத்தோணி இளைத்துப்போகும். அதன் இளைப்பினை நீக்க இரண்டு வழியுண்டு. ஒன்று தனக்கும் தன்னவரான ஆன்மாக்களுக்கும் இனியதான அறஞ்செயல்; மற்றொன்று நித்தியப் பெருமை வாய்ந்த இறைவன் அருளை விளைக்கும் தவம்.

திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி;
இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு;
கிளைக்குந் தனக்கும் அக்கேடில் புகழோன்
விளைக்கும் தவம்அறம் மேற்றுணையாமே.

அறநெறியே பற்றொழுகித் திருவருளால் விடுதலை பெறும் வழியாம். ஈகையே ஒருவனுக்குத் துணையாகும். தருமம் தலைகாக்கும். அறமும் ஈகையும் தவமும் இருந்தால் மற்றதெல்லாம் இறைவன் இச்சை வழியே நன்கு நிறைவேறும்.

## ௩௪. பாத்திரமும் அபாத்திரமும்

'பாத்திர மறிந்து பிச்சையிடு' என்பது பழமொழி. வறட்டு மாட்டைக் குனிந்து கறந்து சர்க்கரை போட்டுப் பால் பருகமுடியுமா? முடியாது. அதுபோற் சீலமும் நோன்பும் இல்லாதவர்க்குத் தரும் தானமும் பயனற்றதாகும். பருவங் கழிந்த பயிர் பயன் தராதல்லவா?

கோல வறட்டைக் குனிந்து, குளகிட்டுப்
பாலைக் கறந்து பருகுவதே யொக்கும்
சீலமும் நோன்பும் இலாதவர்க் கீந்தது;
காலங் கழிந்த பயிரது ஆகுமே.

இயமநியமாதி யோகம் பயின்று, பதியறிவும், பரந்த அன்பும் கொண்டவருக்குப் புண்ணியதானம் புரியவேண்டும். இன்னவினையால் இன்னது ஆகும் என்றறியாமல், உள்ளத்தில் அன்பில்லாத போலிகளுக்கு ஈவது பெரும் பிழையாகும் என்று நினையுங்கள்!

ஈவது யோக இயம நியமங்கள்
சார்வ தறிந்தன்பு தங்குவர்க் கன்றி
ஆவ தறிந்தன்பு தங்கா தவர்களுக்கு
ஈவ பெரும்பிழை யென்று கொளீரே.

பஞ்சமாபாதகர் புண்ணியமாகும் வழியறியார். ஆன்மாவை மாசறுத்து ஆட்கொள்பவன் ஈசனேயாம். அவனுக்கும், தூய பெரியார்க்கும், காமக் குரோதாதிகளை விட்ட முனிவருக்கும் வேண்டியதைத் தரவேண்டும்; நல்லறிவைக் கற்கவேண்டும்; கற்பிக்கவேண்டும். அத்தகையோர் நரகம் புகார். இறைவனைத் தலைவனாக எண்ணி இறைஞ்சாதவர்க்கு மலையத்தனை மகாதானம் செய்தாலும் பயனில்லை. அப்படி ஈந்தவனும், ஈகையை ஏற்ற நாத்திகனும் நரகக் குழியில் விழுவர். சிவஞானிக்கு எள்ளத்தனை யீந்தாலும் அதன் பயனாக முக்தி, சித்தி, பரலோக இன்பம் எல்லாம் எய்தும். பதியறிவற்ற நிர்மூடருக்கு நிலமத்தனை கொடுத்தாலும் இகத்திலும் பயனில்லை; பரத்திலும் இன்பங்குன்றும். தன்னை நன்கு உணர்ந்தார்க்கு அருள் புரியும் காலகண்டனை இறைவனை அறவழியே, அருள் வழியே, சென்றுணர்ந்த சிலர் தேவராவார்.

நன்றுணர்ந் தார்க்கருள் செய்திடு நாதனை
சென்றுணர்ந் தார்சிலர் தேவரு மாமே!

ஏன் சிலர்? இறைவனையுணரும் அருளறிவு மிகவும் அரிது; மிகவும் பரிசுத்தான்மாக்களுக்கே அது வாய்க்கும் என்றவாறு. நான் பொய்யை விடுவேன்; மெய்யை விட்டிலேன்; கருவாகிய காலத்தும் இறைவன் திருவடிப்பற்றைக் கைவிடேன்.

நெய் நீங்காத விளக்குத் தகழி நன்ருய் எரியும். அதுபோல அன்பு நீங்காத திருவடிப்பற்றும் அருளொளியளிக்கும். உலகில் ஆவன ஆகும்; அழிவன அழியும்; போவன போகும்; புகுவன புகும்.

ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன.

ஆருயிர்களைப் பாதுகாக்கும் நந்தி யெம்பெருமான் இந்த உண்மையைக் காட்டினன். இவ்வாறு உண்மையின்மையின் அறிவுடையோன், உயிர் உடலில் இருக்கும்போதே தன்னல் இயன்ற, காலத்திற் கேற்ற, நல்லறம் செய்து, நல்லாருக்கு ஒரு தம்பி போலுதவுவான்.

## ருரு. போசன விதி

ஒவ்வொருவருள்ளும் சிவம் விளங்குகிறது; அதன் அருட்பெருமையை அறிந்தவர், அவனுள் அமரும் நடமாடுங் கோவிலுக்குச் சாதிமதபேதமில்லாமல் பிச்சையிட்டுப் பிறகே சோறு பிடித்துண்பர். அத்தகை அறவோர் பேர்புகழின் இச்சையைவிட்டு, ஏகாந்தமாக இதய பீடத்தில் ஏறித் தியானத்திலிருப்பர். எட்டுத் திசையிலும் எதிரும் அடியார்களை எதிர்கொண்டுபசரித்து அமுதளிப்பர் புண்ணியர்; தாம் அவ்வாறே அடியார்க்கமுதளிக்க ஒரு நிலத்தைப் பயிர்செய்து ஆளுவர்; அடியார் அமுதிற்கெனப் பேணும் அந்நிலத்தை விட்டால் அவர்களுக்கு வேறு சொத்து சுகம் சேர்க்கும் விருப்பமிராதாம். பயிர் செய்து பாத்துண்பான் புண்ணியனவான். ஒரு வேலி நிலம் உழுது

விதைத்து அறுவடை செய்து, நெல்லைக் கலம் கல மாகக் குவித்து, உச்சிவேளைக்கு முன்பே அதைத் தீட்டிச் சமைத்துண்ணும் வேளாண்மை மிக இனிது. அதனல் இரவச்சம் கெடும்; தம் பசி தீரும்; பிறர் பசியும் தீர்க்கலாம். இவ்வாறு உழைத்து உழவின் பயனை உண்ணுதவர் பசி நீங்க விரும்பிப் பிச்சை யெடுக்கின்றனர். பிறர் அறத்தை விடாது செய்யவே சிவன் பிரம்ம கபாலத்தில் பிச்சையேற்ருன். பிரம்மா தனது தலைநீட்டிப் பிச்சை ஏற்ருன்; உலகேழும் படைத்த எம்பிரானை இரந்துண்ணும் 'பிக்ஷாடனன்' என்பர். அவன் ஏன் இரந்தான்? தன்னை நிரந்தரமாக நினைக்கும் அடியாருக்கு உழு துண்ணும் சிந்தையே இராது. அவர் சிந்தை சிவனி டமே இலயித்துப் போகும். அப்படிப்பட்ட மெய்யடி யார் இரந்துண்டு பசி தீர்ந்து, தன்னை அன்பு செய் வதிலேயே காலங்கழித்துத் தன் கழல் அடைய வேண்டும்; அவ்வாறு அடியார் பிச்சை புகுவது இழி வாகாது என்பதைக் காட்டத்தானே ஓடேந்தினன் சிவன்! அன்புடன் அடியார்க்குத் தானதருமஞ் செய்பவரை இறைவன் வழிநடத்தி ஆட்கொள்வான். அவன் நல்லவர்க்கு இன்பம் அளிப்பான்; அவன ளிக்கும் புகலே புகலாம். அது கைவர அன்புவழி நிற்கவேண்டும். அவ்வாறிருந்தால், 'அவனே யான்' என்னும் தத்துவமாக அன்பருள் இருப்பான். இதை அறிக! அவ்வாறு புகல்பெற்ற தூயசிவனடி யார் தாகம், பசி, அவா, வெகுளி இவைற்றில் மனம் தங்கார்; உடலைக்கண்டு பொங்கி மகிழமாட்டார். வினைக்களனை இவ்வுலகிலும் புண்ணிய விண்ணி லும்கூடப் பற்றுவைத்துத் தங்கார். வைராக்கிய முடன் சிவனையடையவே அவர் தலைப்படுவர். சிவப்

பேறே பேரும்; புவிப்பேறு புழுதி மண்ணும்; விண் பேறும் ஒரு நாள் அழிவதாகும். நிரம்ப மெய்ஞ் ஞானம் தெளிந்தவர்களும் பசிவந்தால் பிறர்வாச லிற் கைநீட்டிப் பிச்சையெடுக்கச் செல்வர். அந்த ஆசைகூட இல்லாமல், ஐயம் புகாமல், இருந்த இடத்தில் இருப்பதே சிறந்த தவமாகும். அவ்வாறு யாதொன்றையும் யாசியாமல் இருந்தபடி இருக்கும் அருந்தவ முனிவரை, வையகமெல்லாம் தானே வந்து அடையும்.

ஐயம் புகாமல் இருந்த தவசியார்
வையகம் எல்லாம் வரவிருந் தரரே.

## ௩௬. மகேசுர பூஜை

அத்தகைய தபோதனருக்கு உணவு தருவதே மகேசுர பூஜையாம். பரம சாந்தமான, சிரத்தையுடைய தபோதனர் நமது நிவேதனத்தை மனமுவந்து உண்டால் மூன்றுலகும் உண்டதற்குச் சமான மாகும்.

தண்தரு சிந்தை தபோதனர் தாமகிழ்ந்து
உண்டது மூன்று புவனமும் உண்டது.

அவர் மனமுவந்து ஒன்றை ஏற்றுக்கொண்டால் மூன்றுலகும் அதை ஏற்றுக்கொண்டதாகும். இவ் வுண்மையைத் தென்திசைச் சித்தனை நந்தி எடுத் துரைத்தான். இரண்டு கோயில்கள் உள்ளன: (1) படமாடும் கோயில்; இது கற்கோயில்; (2) நடமாடுங் கோயில்; இது உயிர்க்கோயில். கொடியாடும் கற்கோயி லில் சிலை வடிவாகக் கடவுள் இருந்தருள் புரிகிறான்;

சிலைக் கடவுளுக்கு ஒன்றை நிவேதித்தால் அதை அச்சிலையும் உட்கொள்வதில்லை. பூசாரிக்கே நமது நிவேதனம் செல்லுகிறது; அது நடமாடும் கோயில்களான அடியார் பசிக்கு ஆவதில்லை. நடமாடுங் கோயில்களான நம்பர்க்கு ஒன்றீந்தால், அது கோயிலிலுள்ள பகவற்கும் ஈந்ததாகும். ஏனெனில், இறைவன் அடியார் வடிவில் நடமாடுகிறான். உள்ளந் தோறும் அவன் நடம் புரிகிறான். கோயில் நிவேதனத்தைவிட அடியார்க்கு அன்னமளித்தல் சிறப்பானது. மகேச்வரன் அடியாருட் கோயில் கொண்டிருக்கிறான். ஆதலால் அடியார் வழிபாடு மகேசுர பூசையாம்.

படமாடும் கோயில் பகவற்கொன் றீயில்
நடமாடும் கோயில் நம்பர்க்கங் காகா;
நடமாடும் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடும் கோயில் பகவற்க தாமே:

காலக் கணக்கில்லாமல், சகஜ நிஷ்டையில் நிலைத்தவர் வணங்குதற் கருகர் ஆவர். அவருக்கு ஈந்த அரும்பொருள், மும்மூர்த்திகளுக்கும், மூவேழு குரவருக்கும் வழங்கிய அர்க்கியத்திற்குச் சமானமென்றறிமின்! அந்தணருக்கு ஆயிரம் கிராமங்களைத் தானம் செய்தாலென்ன? ஆயிரம் கோபுரங்கள் எழுப்பிக் கோயிலமைத்தாலென்ன? இவை சிவநெறி பகரும் ஞானிக்கு ஒரு பகல் உணவளிக்கும் புண்ணியத்திற்கு நிகரில்லையாம்.

அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயிலென்?
சிகரம் ஆயிரம் செய்து முடிக்கிலென்?
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை என்பது நிச்சயந் தானே!

தான தருமங்கள் பிராமணருக்கே தரவேண்டுமென்பதில்லை; எச்சாதியானாலும் கடவுளன்புடையாரைப் போற்ற வேண்டும். நெறிப்படி வேள்வி செய்து, அருமறை வல்லார் சொல்லும் கோடி அந்தணருக்குப் பிராமண போசனம் செய்விப்பதினும், திருநீறு பூசிய சிவத் தொண்டரை நினைப்பதே பெரும் பயனாகும். அடியார்க்கு ஒரு பிடி அன்னம் போட்டாலே பெரும்பேறெய்தும்.

## திருநீற்றின் பெருமை

நீறு பூசிய அடியார் பெருமை யென்ன? நீறு என்றாலே மும்மலங்களையும் சாம்பலாக்கி ஆணவமற்றிருத்தலாம். நீறிடுதல் மலமற்ற சுத்த சத்வநிலைக்கு அடையாளமாம்.

நம் சமயச் சின்னங்களெல்லாம் உயர்ந்த தத்துவக் கருத்துடையனவாம். புருவ நடுவே தியான நிலை; அங்கே நமது சொரூபம் உள்ளது; ஆத்மப் பிரகாசம் அங்கே முக்கோண வடிவாக எரிவதை யோகியர் காண்பர். அங்கே தியானம் ஊன்ற வேண்டுமென்பதற்காகவே சந்தனம், குங்குமம், திருநீறு, நாமம் முதலியவை இடுவது. அதற்குமேல் நெற்றியில் சஹஸ்ராரத்தில் துரிய வெளியுள்ளது; அங்கே அருட்சோதி விளங்கும். அதைக் குறிக்கவே சைவர் பட்டையாக விபூதியிடுவது. மற்றும் ஆதார கமலங்களுக்குப் பாதுகாப்பாகவே மேனியில் திருநீறிடுவதாம். விபூதி சிவம், குங்குமம் சத்தி, சந்தனம் சிவமணமாம். சூரிய, சோம, அக்கினி கலையாகிய மூன்று நரம்புகளைக் குறிக்கவே வைணவர் நாமமிடு

வர்; அனல் நரம்பு அல்லது சுழுமுனையைக் குறிக்கவே நரம்பு நடுவே சிவப்புக் கோடிடுவர். சம்பந்தர் பாடிய திருநீற்றுப் பதிகத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் தத்துவ இரகசியமாகும். மேனாட்டு நாத்திக வாதங்களையும் மனோ தத்துவங்களையும் படித்துவிட்டு, நம் சமயச் சின்னங்களை 'மூடக் கொள்கை, சாணிப் பூச்சு' என்று தூஷிப்பது அறியாமையாகும். சாணியைச் சுட்டுச் சாம்பலைப் பூசுவதாக நம்மை ஏளனம் செய்பவர் உண்மையறியாதார். சாணியும் மலமும் உரம்போட்டுத் தாவரங்களை விளைவித்துண்கிறோமே! சேற்றில் விளைந்த நெல்லும் சேறுதானா? ஊர்ச் சாக்கடை நாற்றமெல்லாம் உரமாகின்றன. அவற்றிற் கனிந்த மா, பலா, வாழை இவையும் மலந்தானோ? என்று அவரைக் கேட்கவும்.

இக்காலம் சமரசப் பேச்சுகள் நீள நிகழுகின்றன. அன்னியருக்கு நம் சதாசாரங்கள் விளங்காமற் போனால், அவற்றை விட்டுவிடுவதே சமரசமா? விபூதி உருத்திராக்ஷம் ஆசாரம் பஞ்சாக்ஷரி இவற்றை விட்டுவிட்டுக் கிராப்பும், சட்டையுமாய் உள்ளே வேர்வை நாறிக்கிடப்பதா சமரசம்? சுப்பன் பிட்டை விட்டுக் கிப்பனுடன் (Gibbon) புட்டி போடுவது சமரசமா? ஒரு சபையில் பலர் பல சட்டைகள் பூண்டு வந்தாலும் வேறுபாடு தோன்றுவதில்லை. அதுபோலே அவரவர் சமயச் சின்னங்களை அணிந்தாலும் வேறுபாடில்லாமல் பழகவேண்டும். மூஞ்சியில் சீமைச் சாயங்களும் (Cosmetics), செரிப்ளாசமும், உதட்டில் செஞ்சாந்தும், புருவத்திற் கருஞ்சாந்தும், ஊத்தைப் பல்லுக்கு மேலே பொய்ப் பல்லும் கட்டிக்கொண்டு வரும் இக்காலப் பகல் வேஷங்

கள் நாகரிகமாகத் தோன்றுகின்றன! நன்றாகக் குளித்து ஆடை துவைத் துலர்த்தி யணிந்து, நெற்றி நிரம்பத் திருநீறணிந்து, ஜபமாலையில் பஞ்சாக்ஷரி செய்து தியானிக்கும் ஓர் அடியார் மூடப் பிடிவாதக் காரராகத் தோன்றுகிறார். என்ன காலம்! என்ன மாயம்! மேனாட்டு மாயம் செய்தவினை! நமது சன் மார்க்கத்தின் ஆழ்ந்த கருத்துக்களை அறியக்கூட மனமின்றித் திரியும் ஆணவத்தின் அடையாளம்! திருநெறியடியார் நாட்டிற் பெருகவேண்டும். சிவம் தழைக்கவேண்டும். அவரவர் சமயவொழுக்கங்களை விடாமல் அனுட்டிக்கவேண்டும். அன்னிய மாயம் ஒழியவேண்டும். பேத புத்தி கொண்டு பிறரை வெறுக்காமல் அவரவர் தத்தம் சமயங்களை அனுட் டிக்கவேண்டும். "விடையாய், இறைவா, எம் பிரானே!" என்று நீறிடுவார் அடியார். அவரை ஆறணி செஞ்சடை அண்ணலாகிய சிவனுக்குச் சமமாக மதிக்கவேண்டும். சிறப்பாக அடியாரைப் போற்றித் திருநீறணிவார் வினை நீங்கி உய்வர்.

இறைவன் நந்திநாதன், உமைபாகன், சடை யன்; அவனைப் பிரிந்து மனம் நொந்தேன்; அந்த நோவுடனே அவனையே சொல்லுவேன்; அவன் வருமளவும் பிதற்றொழியேன். அவன் அடியார் வடி வாய் வருவான். அடியார் அழிதகவில்லார். அவரைத் தொழும் பெருமை உலகிருளை நீக்கும். மனம் பழுது படாமல், அன்பர்க் கன்பனான பண்புள்ள சிவனை நாடித் தொழுதெழுந்தால் உலகினோர் இன்புற லாகும்.

அழிதக வில்லா அரனடி யாரைத்
தொழுதகை ஞாலத்துத் தூங்கிருள் நீங்கும்

பழுது படாவண்ணம் பண்பனை நாடித்
தொழுதெழ வையகத் தோரின்ப மாமே.

முகமும் அகமும் அத்தனுடன் ஒத்து நின்று பூசனை செய்ய வேண்டும். அப்படி ஒருவர் பக்தி வெறிகொண்டு ஊழிதோறூழி வழிபட்டு, உள்ளாராய்ச்சி செய்கிறார். அப்படிப்பட்டவரும் பகவராகிய அடியாருக்குப் பண்பிலராஞல் அவர் பூஜாபலன் ஒழியும். அரனன்பு, அடியார் நேயம் இவ்விரண்டும் வேண்டும். "அடியார்க்கும் அடியேன்" என்று சிவக் காதலரான சுந்தரர் பாடினர். தவத்திரு, சாந்த நிறைவு, தெய்வ சக்தி, பேரின்பம், அருட்பேறு ஞான வைராக்கியம் (அறிவுறுதி) இவை கொண்ட அடியாரே பகவராவர். வித்தக அடியார் உண்ட ஊண் அத்தன், அயன், திருமால் அருந்தியது போலாம். சித்தந் தெளிந்தவர் உண்ட பிரசாதத்தை உட்கொண்டால் முத்திப் பேறெய்தும் என்கிருர் மூலர்.

சித்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியா மென்று மூலன் மொழிந்ததே.

மனந்தளராமல், கீழியல்பில் தாழாமல், மேன் மேலும் அருந்தவம் முயலும் ஆள்வினையுடைய மகான்களுக்கு அறஞ்செய்க! அவ்வறத்தின் பயன் மிகப் பெரிதாம். அது துயர்தரும் பாசவினை தீர்த்து மாசற்ற பொன்னுலகளிக்கும்.

## ௩௭. நடுவுநிலைமை

அறவழிச் செல்பவனுக்கு நடுவுநிலைமை, ஒரகமின்மை இன்றியமையாத தன்மையாம். பிரம்மா

விஷ்ணு உருத்திராதி தேவரெல்லாம் நடுவுநிலையிலிருந்தே உலகை ஆக்கி அளித்து அழித்து முத்தொழில் புரிவர். ஞானிகள் நடுவுநிலையில் சாட்சியாயிருந்தே உலகிற் பற்றற்று வாழ்வர். நடுவுநிலையாவதென்ன ? நமது நடுவு இதயமே; அதுவே திருவடிநிலையம். அதில் திருவடிப் பற்றுடனிருந்து, முக்குண மாயையின் விளையாட்டைப் பற்றறப் பார்த்திருப்பதே ஞானிகளின் நடுவுநிலையாம். அவ்வாறு நடுவுநிலை நின்றவரே ஞானிகளாவர்; தேவராவர்; இதயப் பொருளுடன் கலந்து அதுவேயாவர்; நம்பனுமாவர். நானும் நடுநிற்கும் ஞானிகளுடனே நிற்கிறேன்.

நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை;
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி நானுநின் றேனே.

சலனமில்லாமல் இதயப் பொருளில் இலயித்திருப்பதே நடுவு நிற்பதாகும். தோன்றியவெல்லாம் துடைப்பவன் அரன். அவன் எவரையும் சார்ந்திரான்; அவன் நித்திய முத்தன்; சர்வ சுதந்தரன்; தானே தனக்கிறைவன். அவன் ஈசன் அவனடியை அனைவரும் தாங்கி நிற்பர். அவன் முத்தொழில் முதல்வருள் முதல்வன். அரன் வேலையில்லாவிடில் ஆக்கமில்லை; அருளில்லை; அவனது திருநாமத்தைப் பற்றித் தியானத்தில் இருப்பவரே நடுவுநிலை நிற்பவராவர்,

## ௩அ. அன்புடைமை

அன்பின் ஊற்றே அறமாய் விரிகிறது; அன்பின்றி அறமில்லை, அருளில்லை, இன்பமில்லை. அன்

பினால் உருகியுருகி மாணிக்கவாசகர் சிவமயமானார். எல்லாரும் இன்பமே வேண்டுவர்; மிகவும் உயர்வான - மாசற்ற - தூய - உண்மையின்பத்தை நமது அருட்புலவர் 'சிவம்' என்றனர். அன்பின் தீவிரத்தால் சிவம் வாய்க்கும். அன்பே சிவமாகும் என்பர் அறிஞர்; அறியாதவர் அன்பு வேறு சிவம் வேறு என்பர். அன்பே சிவமென்றறிந்தவர் தமது அன்பே சிவந் துலங்கக் காண்பர். அன்பை வளர்த்தாலே போதும்; அன்பே இன்பச் சிவமாகும். தேனும் இனிப்பும், பாலும் வெளுப்பும் போலும் அன்பும் சிவமும் ஒன்றேயாம்.

அன்புஞ் சிவமும், இரண்டென்பர் அறிவிலார்;
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்;
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்,
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

அன்பை யாரிடம் வைப்பது? பொன்னொளிர் மேனியன், புலித்தோலினன், மின்னொளிர் பிறை சூடி, சுடலையாடியாகிய சிவனுடன் என் பேரன்பு இணைந்து நின்றது; சுடு பொடியாடிக்குப் பின்னிக் கிடந்த தேன் பேரன்புதானே. அன்பு மிகப்பெரிது; அது அனைத்தினும் பெரிய சிவனுடனே பிரியாது பின்னிக்கிடந்தது. தவத்தினும் அன்பே மேலானதாம். எலும்பையே விறகாக்கி, காயக்கிலேசங்களால் ஊனுடலைப் பொன் போன்ற தவக்கனலில் வாட்டினும் பயனில்லை; அன்புடன் உள்ளம் நெக்குருகும் அடியார்க்கே ஞான சிகாமணியான இறைவனை எய்த முடியும்.

அன்பொ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை எய்தவொண் ணாதே.

இறைவன் என் அன்பை உருக்குவோன்; நான் எப்படி இறைவனை ஏத்தினேன்? அன்பையுருக்கி. என்போல் நீங்களும் அன்பையுருக்கி இறைவனை ஏத்துங்கள்! ஞானத்தால் இறைவனை யடைய லாம்; அதற்கு முன்னே அன்பை உருக்கி முதல் வனை நாடுங்கள்!

என்அன் புருக்கி இறைவனை ஏத்துமின்;
முன்அன் புருக்கி முதல்வனை நாடுமின்!

நான் அவ்வாறே நாடினேன்; பின்பு பெருந் தகையான சிவபிரான் எனது அன்பை ஏற்று உருக்கித் தனது அன்பையே, பதியன்பையே, என்னில் தலையாக நிற்கச் செய்தான். சிவன், தேன்போன்றினிய உமாதேவியைத் தன் மருங்கே கொண்டவன்; கொன்றை யணிந்தவன்; எனது அன்பில் ஒரு வண்ணமாகி நின்றான். அவன் பரம தயாளன், ஒருகால் 'ஏ சம்பு, சுயம்பு சிவனே' என்றேத்தினல், தக்ககாலத்தில் இன்பவிண்ணே நமக்கு வழித்துணையாய் நிற்கும்!

தான்ஒரு காலம் 'சுயம்பு' என் றேத்தினும்
வான்ஒரு காலம் வழித்துணை யாய்நிற்கும்.

ஆர்வத்தால் சிவதரிசனம் எய்தும், உள்ளன் பினல் திருவடிக் காட்சியாகும்.

ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை;
ஈரம் உடையவர் காண்பார் இணையடி.

இரண்டும் இல்லாமல் வினைப் பாரமே பெருக்கி அலைவோர் பிறவிப் பிணியே பெறுவர்; துன்புறுவர். நெல்லுக்கு உமி (கொங்கு) போன் றது உயிருக்கு ஊனுடல். தீநெறியாளர் மீண்டும்

மீண்டும் இத்துன்பவுடலிற் புகுந்து துயர்ப்படுவார்; கோர நெறி கொடு கொங்கு புக்காரே. எவ்வளவு அரிய உபமானம்! அரிசி ஆன்மா; உமி உடல். உமிக்குள் அரிசி புகுந்து நெல்லாகிறது. அதனால் அரிசி என்ன பாடுபடுகிறது! களத்தில் கதிரடித்து, சூடடித்து, நெல்லைப் பிரித்து, உலர்த்தி, வேகவைத்து, மீண்டும் உலர்த்தி, உலக்கைப் பூசை கொடுத்துப், புடைத்து—இத்தனை சிட்சை பண்ணியல்லவா உமியைப் பிரிக்க வேண்டியிருக்கிறது! அது போல வினையுடல் எடுத்த ஆன்மா, உலகின் இன்ப துன்பங்களால் அடியுண்டு, இடர்களில் இடியுண்டு வருந்துகிறது.

இறைவன் முன் மாந்தர், தம்மையே படைக்க வேண்டும்; (முன்+படைத்து) எப்படி? முதலிலும், இடையிலும் இன்பமே அளிக்கும் அன்பை உள்ளத்தில் அடைத்து (அன்பு+அடைத்து) எம்பெருமானைப் பணிந்து, அவனை அடையவேண்டும். அப்படி அடைய அறியா மாக்களை, இவ்வுலக வாழ்வில், வலியதுயர்கள் வந்தடையும். இறைவன் இருப்பது உள்ளிடம்; இன்பமே பெருகும் அதில், அவன் அன்பை அடைத்தான். அந்த அன்பை அறியாதார் அவனையும் அறிகிலார்; அன்பை மறுத்தவர் அரனை மறுத்தவராவார். இறைவன் ஒவ்வொருவர் உள்ளத்திலும் கனலும் செம்பொற் சோதிபோல் விளங்குகின்றான். அலையும் மனத்தை உள்ளத்தில் இருத்தி, பார்வையை ஆங்கே வைத்து "இறைவா" என்றேத்தி, அன்பு செய்து, ஆர்வங் கொண்டு, ஈசனருளை வேண்டினால் தேவ தேவனாகிய மகாதேவன், நம் மலங்களை ஒழித்து, சித்த சுத்தியும் சேதன வளர்ச்சியும் அளித்து நம்மை ஆட்கொள்வான்.

கருத்துறு செம்பொன்செய் காய்கதிர்ச் சோதி;
இருத்தியும், வைத்தும், இறைவனன் றேத்தியும்,
அருத்தியுள் ஈசனை ஆரருள் வேண்டில்,
விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே.

அருத்தி+உள் என்றால் அந்தக்கரணத்தை ஊணாகக் கொடுத்து என்றுமாம். 'நான்' என்று கிளம்பும் ஆணவ மனத்தைத் தானே தானாக பரம் பொருளுக்கு ஊணாக்கினாலன்றி அருளுணர் வெய்தாது. அதுவே தன்னைக் கொடுத்தலாம் அதுவே சிறந்த அன்பு செய்தலாம்.

இப்பிறவி நிலையில்லை; பிறந்தது இறக்கும். நாடோறும் உடலுயிர்கள் சாவை நோக்கி விரைகின்றன. இறக்கும் உடலில் இறைவன் ஆன்மாவை வைத்த பரிசென்ன? பிறப்பிறப்பென்னும் உலையில் உருக்கி உருக்கி ஆன்மாவைச் சூழும் களிம்பறுத்தலேயாம். பாசான்மாவைச் சுத்தான் மாவாக்கி ஆட்கொள்ளவே இறைவன் பிறவிகளைத் தருகிறான். "இப்பிறவி நிலையில்லை; இதோ சாவு வருகிறது; நாளை வீணாக்காமல் இறைவனை வணங்கவேண்டும்" என்பதை அவன் அறிவுறுத்துகிறான். உடலின் மாறுதலையும், உயிருள்ளபோதே திருவருளுக்குப் பாத்திரமாக வேண்டுமென்பதையும் மனிதர் அறிவர்; அறிந்தும் மதிமயங்கி, அரிதாகிய மானிடப்பிறவியை, நிலையற்ற உலக இச்சையுள் வைத்து, வினை மலிந்து மீண்டும் பிறப்பதற்கே இறக்கின்றார். "எந்தையயே, எம்பிரானே, அப்பனே, ஆட்கொள்!" என்று ஆர்வமுடன் நச்சி, நச்சி அனைத்திற்கும் பெரியானாகிய இறைவனை நாடாமல், மனிதர் வீண் காலம் போக்குவதென்னே!

நித்தலும் துஞ்சும் பிறப்பையும் செய்து, அவன்
வைத்த பரிசறிந் தேயும், மனிதர்கள்
இச்சையுளே வைப்பர்; 'எந்தை பிரான்' என்று
நச்சியே அண்ணலை நாடுகி லாரே!

இறைவன் முனிவர் பிரான்; அவன் எங்கே யிருக்கிறான்? எங்கும் இருக்கிறான். அன்பகத்தில் இருக்கிறான்; புறத்தே உடலாயும் இருக்கிறான். உடலாயிருப்ப தெப்படி? உடல் பஞ்சபூதக் கூடு தானே; பஞ்ச பூதங்களும் அட்ட மூர்த்தியின் வடிவங்களேயாம். ஆதலால், பூதங்கள், தன்மாத் திரைகள், பொறிபுலன்கள், அந்தக்கரணங்கள் ஆகிய இயற்கையுடல் (க்ஷேத்ரம்) அவனே. அவன் நம்முன் உலகாய், உலகநாதனாய், ஜீவகோடிகளாய் உள்ளான். நமக்குப் பின்னே அந்தர்யாமியாய்த் தோன்றாத் துணையாய் உள்ளான். இப்படி எங் கும் யாதுமாயிருக்கும் அரும்பொருளைச் சிற்றறி வும் சிற்றாயுளுங் கொண்ட நாம் அறிய முடியுமா? ஆகா, முடியும். எப்படி? அன்பு வலையில் அவ னைப் பிடித்து வைக்க வேண்டும். அவன் அன்பி னுள் ஆகி அமருவான். எவர் அவனன்பிலேயே உள்ளாரோ, அவனன்பே உயிராய் வாழ்வாரோ அவரை அவன் அணைத்துக் கொள்வான்; அவ ருக்கு அவன் எப்போதும் துணையாயிருப்பான். துணையாயிருந்து, தீயனவிலக்கி, தூயன துலக்கி ஆட்கொள்வான்.

அன்பின் உள்ளான்; புறத்தான்; உடலாயுளான்;
முன், பின் உள்ளான்; முனி வர்க்கும் பிரான்அவன்;
அன்பினுள் ஆகி, அமரும் அரும்பொருள்,
அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே!

## ௩௧. அன்பு செய்வாரை அறிவன் சிவன்

இவ்வுலகில் நமக்குத் துணை ஒன்றே-திருவருளே; வேறு துணையெல்லாம் காலத்தால் வீழும்; இவ்வுலகில் நம்மை யறிபவன் ஒருவனே-இறைவனே. "இந்தக் கடவுளுக்குக் கண்ணில்லையே" என்று ஒருவன் நோகிறான்; "கடவுளாவது, மண்ணாங்கட்டியாவது; எல்லாம் சமயப்புரட்டு" என்றொரு நாத்திகன் இகழ்கின்றான். அனைத்தையும் இறைவன் அறிவான். ஒருவன் உபாசனையால் வரங்களைப் பெறுகிறான்; அவன் இன்னதை, இதனால் பெற்றான் என்பதை இறைவன் அறிவான். எப்படி? அவனே அவரவர் உள்ளமாய், உயிர்க்குயிராய் நிற்கிறான். அவனன்றியாதும் இயலாது. கள்ளனுக்கும் உள்ளம் உண்டு; உள்ளத்தில் ஈசனுண்டு. அவன் அவரவர் பக்குவத்திற் கேற்றபடி மகிழ்ந்து அருள் செய்கிறான். அவனே உத்தம நாதன்; மேலான இறைவன். ஆர்வக் கொழுந்தேறும் அன்பு செய்யவேண்டும்; அத்துடன் சிவமயமான ஆன்மாக்கள்பால் அருள் மிகுந்தொழுக வேண்டும். உள்ளத்தில் அன்பும், சிவமயமான உயிர்களிடம் அருளும் கொண்டொழுக வல்லார்க்கு இறைவன் அருள் மகிழ்ந்து அன்பு செய்யும். அவனருள் அடியார் அன்பை மகிழ்ந்தேற்று அன்பு செய்யும் அருளாகும். அவன் அன்பர்க்கன்பன்.

> கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு
> மகிழ்ந்தன்பு செய்யும் அருளது வாமே.

பிறவியே துன்பமாம்; இதை யாரும் அனுபவத்தில் அறிவர். உடலிற் பிறப்பது துன்பம்;

அருளில் மாறிப் பிறப்பதே இன்பமாம். துன்பப் பிறவிகள் எண்ணில; அனைத்தையும் ஆக்கி, யளித்து, அழித்தழித்துப் பக்குவப்படுத்தி மாற்றிப் புதுக்கி இறைவன் தனது அருள் வல்லபத்தாற் செய்யுந் தொழில்களோ மிகப் பலவாம்; அத்தனைத் தொழில்களையும் அவன் எதற்குச் செய்கிறான்? ஆன்மாக்களின் மேல்பரிவு கொண்டே அவன் அவற்றைச் செய்கிறான். சுரங்கக் கட்டியைச் சொக்குத் தங்கமாக்க, எத்தனை இயந்திரச் சுழல்களில் அது சென்று மாசற வேண்டியிருக்கிறது! அது போலவே பாசான்மாவைத் துன்பப் பிறவி தந்து தந்து துரிசறுத்து, பரிணமத்தால் பக்குவப்படுத்தி, அருளேற்றி, இறுதியில் கடவுளுணர்வில் மாறிப் பிறக்கும் இன்பப் பிறவி, பேரின்பப் பிறவி, யோனிவாய்ப் பிறவா ஞானப்பிறவி யளிக்கவே இறைவன் தொழில் புரிகிறான். இந்தப் பிறவிச் சுழலைத் தப்புவதெப்படி? ஆ! அதை நினைத்தாலும் நரகவேதனையாயிருக்கிறதே! இப்பிறவிக்குக் காரணமான சஞ்சித-பிராரப்த-ஆகாமிய கருமங்கள் மலைமலையாகக் குவிந்து கிடக்கின்றனவே! ஒவ்வொரு நிமிஷமும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம், பொறி புலன்கள், உடல்-எல்லாம் எத்தனையோ வினைகளைச் செய்து சங்கற்ப விகற்பங்களையும் குண தொந்தங்களையும் பெருக்குகின்றனவே; மனம் அடங்காது நம்மையிழுத்துப்போய் வினைக் குழியில் தள்ளி மிதிக்கிறதே. எப்படி இப் பிறவித் துயரைத் தாண்டுவது என்று நாம் திகைக்கிறோம். வழியுள்ளது, தைரியம்! என்ன வழி? நாம் இப்போது காமக்கலவி செய்தல்லவா குழியில் விழுந்து தவிக்கிறோம்; அதை விட்டொழிப்போம்; சிவகாமக் கலவி செய்வோம்.

சிவனுடன் எப்போதும் அன்பினுற் கலந்துறை வோம். பிறகு? அவனே ஆதிப்பிரான்! நமது ஆன்மாவின் தோற்றம், மாற்றம், ஏற்றம் அனைத் தையும் அவனே அறிவான். அனுபவித்து அனுப வித்து நம் வினைகள் ஒழிய முன்பு பிறவியைச் சேமித்து வைத்தவன் அவனே; அன்பினுல் அவ னுடன் கலந்து நின்றுல் அப்பிறவி முடிந்தொழியும். தீயுடன் கலந்த கர்ப்பூரம் மிச்சமின்றி எரிந்தொழி யும். அதுபோலவே, இறைவன் அன்பிற் கலந்த ஆன்மாவின் இருவினைப் பிறவியும் மறைந் தொழியும்.

அன்பிற் கலவிசெய்து, ஆதிப்பிரான் வைத்த
துன்பப் பிறவி முடிவது தானே!

கண்ணை உள்ளே திருப்பி உட்குவித்தால் இன்ப மாம்; கண்ணைப் புறத்தே, புலன்வழியே அலையவிட் டால் மனம் விஷயவலையிற் சிக்குகிறது; கண்வலை மனத்தைப் பிடித்துத் துன்பவலையிட்டு வாட்டுகிறது. அத்தகைய துன்பமுறும் கண்ணுடன் இசைந்து மாந்தர் மனம் பொய்யான சிற்றின்பங்களில் விளை யாடிப் பற்றைப் பெருக்கும். கண்ணை உட்குவித்து, பற்றற்று, சிவநேசமே செய்யும் சிந்தையை நாடுங் கள்! அன்புள்ள சிந்தையின்மேல் அருளொளி எழும்; அந்த அருளொளியானது இன்பத்தைத் தரும்; பூமாலை போன்று (கண்ணி) இடைபிங்கலை சுழுமுனை நாடிகளிற் பின்னிய ஆதார கமலங்களூடு மேலேறும். அதனுல் மதியை மயக்கும் வினை முடிச் சுகள் அற்று முத்தியின்ப மெய்தும். அருளொளி யின்பத் திசைந்த அன்பு, அருள், சிவநேசம் ஆகிய புண்ணியங்களையே நாடுமின்! சிவனுடன் மனம்

பொருந்தி நின்றாருக்கே அந்த அருட்சோதி விளக்க மாகும். அச்சோதி புலன்களை அடக்கி வென்ற சித்தரும் அறியொணாதது. பத்தியால் பணிந்து தொழுது வணங்கும் அடியார்க்கே முத்தி கொடுத்து, அருட் சோதி அப்பனான முதல்வன் முன்பு நிற்பான்.

பத்திமை யாலே பணிந்துஅடி யார்தொழ
முத்தி கொடுத்தவர் முன்புநின் றானே!

புணர்ச்சியின்பம் நுகரும்போது, பெண்ணின் பால் ஆணின் அன்பு எவ்வாறு பதிந்து கலந்து சொக்கிக் கரைகாணாச் சுகங்கண்டு நிற்கிறதென்று காதலர் அறிவர். அதேபோல அருளுணர்ச்சியிற் கலந்து சிவத்துடன் மோனச் சுகத்தில் ஒடுங்கவல் லாருக்கு, உடலுணர்ச்சி யில்லாமல், தற்போத மிழந்து சிற்போதத்துடன் கூடி அணைத்துக் குலாவிக் குழைந்து உலாவிச் சுகிக்கும் பேரின்பமெய்தும். இப்பேரின்பச் சேர்க்கையால் 'இது' என்னும் சுத் தான்மா, வேதங்கள் 'அது' என்று கொண்டாடும் பரமான்மாவாகியின்புறும். அப்பும் உப்பும் போலச் சீவனும் சிவத்தில் அன்பாற் கரைந்து ஒன்றாகி நிற்கும்.

புணர்ச்சியுள் ஆயிழை மேல்அன்பு போல
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்கவல் லார்க்கு
உணர்ச்சி யில்லாது குலாவி உலாவி
அணைத்தலும் இன்பம் அதுஇது ஆமே!

'நம்பன்' ஒருவனே நானாவிதப் பொருளானான்!" என்று விண்ணவர் தம் தலைவனை ஏத்துகின்றனர். அம்முதல்வனே இன்பன்; எல்லா இன்பங்களுள் ளும் இருந்து இன்புறுவோன் அவனே; அன்பினால்

பிறக்கும் அந்த இன்பத்தை நுகரும் அன்பனும் அவனே! அந்தோ, அந்த இன்பனை, அன்பனை, அருளால் பலவான இறைவனை, ஒருவனை, அன்பு செய்து மாந்தர் அறியாதிருக்கிறார்களே!

நம்பனை நானுவி தப்போரு ளாகுமென்று
உம்பரில் வானவர் ஓதுந் தலைவனை
இன்பனை, இன்பத் திடைநின் றிரதிக்கும்
அன்பனை யாரும் அறியகி லாரே!

அவன் கொன்றை சூடியவன்; கரியுரி போர்த்தவன். சஹஸ்ரார கமலத்தில் மகா குண்டலி நாதனாக உறைபவன். அவன் திருவடிகளைக் கண்டேன்; என் அன்பினுள் யானே கண்டேன்.

கண்டேன் கமல மலர்உறை வான்அடி;
கண்டேன் கழலதேன் அன்பினுள் யானே!

அவன் துன்பப் பிறப்பும் இலான்; மாறிப் பிறக்கும் இன்பப் பிறப்பும் இலான். மலமிருந்தாலன்றோ சுத்தமெய்தி மாறிப் பிறப்பது! தாமிரத்தைப் பரிசவேதியால் தங்கமாக்கலாம்; சொக்குத் தங்கத்திற்குப் பரிசவேதி வேண்டுமா? வேண்டா. இறைவன் எப்பிறவியும் எய்தான்; அவன் இறவா நித்தியன். சிற்றறிமாந்தர் முன்பிறவியை அறியார்; இறப்பையும் அறியார்; இறைவன் கருணையை அறியார். "உலகில் உயிர்கள் இவ்வளவு துன்பப் படுகின்றனவே; அவற்றை ஏன் இறைவன் தீர்க்கவில்லை; அவனுக்கு இரக்கமில்லையா? அன்பில்லையா? அன்பில்லாத இறைவனை நாம் அறியோம்" என்பர் மாந்தர். அந்தோ! அன்பு மட்டும் இவர்களுக்கு இருந்தால் அந்த அன்பி

லேயே இறைவன் இலங்கக் காண்பார்களே! அன்பு செய்து இறைவனை அறியாதிருக்கிறார்களே மாந்தர்! இரவும் பகலும் தம்மை ஈசன் அறிகிறான் என்று ஒவ்வோர் ஆன்மாவும் உணர்க; அவனையே பற்றுக; பாசமெல்லாம் அவனிடம் வைத்து மனமுருகி அன்புசெய்க; அத்தகைய அன்பர்களை அறிந்து அவர்களுடன் அன்பு செய்க; வேறு செயலொழிக! அந்நிலையில் “ஈசன் எம்மிடையே வந்து செறிந்து நிற்கிறான்” என்று அன்பர் உணர்வர். இறைவன் மேதகு சோதி; அருட் பெருஞ் சோதி ஆண்டவன்; ஈறிலாப் பெருமையன்! விட்டு விட்டு அவனைப் பற்றுவதென்னே! அவனடியையே தொட்டு, அவனை விடாது தொடர்வேன். அவன் எட்டாப் பொருளல்லன். ஒருவனுக்கு உயிரை விடச் சமீபமான பொருளில்லை. நான் எட்டக் கூடிய என்னுயிராய் அவன் இருக்கிறான். அந்த ஈசனை உணர்ந்து கலத்தலே எனக்கு மஞ்சன மாகும்.

விட்டுப் பிடிப்பதென்? மேதகு சோதியைத்
தொட்டுத் தொடர்வன் துலையாப் பெருமையை
எட்டுமென் னுருயி ராய்நின்ற ஈசனை
மட்டுக் கலப்பது மஞ்சன மாமே.

## ௪௦. பொறையுடைமை

அன்பு விளக்கிற்குத் திரிபோன்றது பொறுமை. பேரின்பச் சாதகனுக்கு எத்தனையோ சோதனைகள் வரும்; அனைத்திற்கும் மேல் ஹிருதயக்ரந்தி யுள்ளது. அதைத் தியானத்தாற் சிதைக்க வேண்டும். அவ்வாறு சிதைத்தால் இத

யஸ்பந்தனம் அல்லது திருவடி நடனத்தைக் காண லாம். அது அமுத நாடி விழித்தெழுந்து துள்ளு வதேயாம். அமுதநாடி இதயத்திற்கும் ஸஹஸ்ரா ரத்திற்கும் ஓடுவது; அது ஒரு பல்லி போன்றது; அப்பல்லி சித்துணர்வு முற்றிக்கிடக்கும். அதன் மூக்கும் வாயும் அசைந்து சத்தமொலிக்கும். திரு வடிபற்றி அதே தியானமாயிருக்கும் அடியார் அந்த அமுத நாடியைத் தமது உள்ளத்தில் உணர் வர். அதை யுணர, வற்றுப் பொறுமை கொண்டு சிந்தையில் அன்பு செய்ய வேண்டும். அமர வாழ்வு பெற்றதேவர் குழாங்கள், "உலகினும் பொறுமை மிக்கவன், அனைத்திலும் நல்லன்," என்று நீண்டகாலம் தொழுதேத்தித் தேவர்க் கிறைவனுகிய பால்வண்ணச் சிவன் பாதம் பணிந்து உய்வு பெற்றனர். ஞானம் விளைந்த முத்தர் குழாங்களும் தினந்தோறும் இறைவனை வணங்கிக் கைதொழுவர்; ஞானிகளும் பொறுமையாக இறை வனை வணங்கி அன்பு செய்வர். விண்ணின் ஆதி யான இறைவன் இவ்வூனுடலை, வினையுடலை அளித்தான்; அதை வளைத்து வணங்கிப் பொறு மையாக அன்புசெய்து, அவனருளை எட்டலாம். உள்ளமாகிய தில்லைவனத்தில் இறைவன் கூத்தாடு கிறன்; எதற்காக? ஆன்மாக்களை விளையாட்டிப் பக்குவப் படுத்தித் தன்னுள் இலயப்படுத்துவதற் காகவே அவன் ஞான நடம் புரிகிறன். ஒவ்வொரு வர் உள்ளமாகிய முல்லை நிலத்தையும் (கொல்லை) பலவகையாலும் பண்படுத்திப் பதம்செய்ய வேண் டும். மனையிலும், மன்றிலும், வீட்டிலும் உலகிலும் அகத்திலும் புறத்திலும் வைராக்கிய சாதனங்க ளால், அன்பு அருட்பணி தியானம் முதலிய பல

வகையால் உள்ளத்தைப் பண்படுத்தினால், அதில் இறைவன் நடமாடுவான். அதையே கவனித்து நின்றால் ஆன்மா எல்லையில்லாத அருளுணர்ச்சி மேலிட்டு இறைவனுடன் இலயமாகும். இவ்வாறு சிவனுடன் ஆன்மா இலயிக்கும் இடமே சிவாலய மாகும். சீவ - சிவாலயமெய்த எல்லையற்ற பொறுமை வேண்டும்.

## சச. பெரியார் துணை

இத்தகைய சிவ-சீவக் கலப்புவாய்த்தல் மிக மிகக் கடினமானது. மனம் முரண்டு செய்யும்; அதைப் பழக்கத் தக்க பெரியாரைச் சார்ந்தது சாதனம் செய்ய தேண்டும். அமரர் தலைவனை நாடிக் கூடி அவனது தத்துவத்தை, உண்மையைப் பெற்றவர் மிகச் சிலரேயாவர். அவருடன் அருள்வழியில் நிற்கவேண்டும்; அதே கருத்தாயிருக்கவேண்டும். அப்போதும் நின்று நின்று பக்குவம் பார்த்துப் பார்த்தே இறைவன் அருள் செய்வான், பெரியாருடன் கூடினால் பேரின்பமாகும்.

நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன்கூடல் பேரின்ப மாமே!

நான் பெரியாருடன் கூடிப் பெரும் பயன் பெற்றேன். இறைவன்பால் விரைந்தோடிச் செல்லும் பக்குவப் பெரியாருடன் நானும் விரைந்தேகுவேன்; இறைவனைப் பாடவல்லாரொடும் பாடி உலகில் அன்பு செய்வேன்; தன்னைத் தேடி வருவாரை இறைவன் கூடுவான்; அப்படிக் கூறியின் புறும் பெரியார் திருவடியில் நான் கூடுவேன்;

ஓடவல் லார்தம ரோடு நடாவுவன்
கூடவல் லார்அடி கூடுவன் யானே!

சிலர் இடர்ப்பட்டு, காயக்கிலேசங்களால் வெயிலில் தளிர்போல் தயங்கி மயங்குவர்; அவருள்ளத்தில் மட்டும் அன்பு வைக்கமாட்டார்கள்; உள்ளன்பு மிகவும் அருமையானது. நெஞ்சமே! நீ அவர்களைப் போல இடர்ப்பட்டு என் செய்வாய்? நான் அருட்பெரியாரை நாடுகிறேன்; என்னுடன் வா! பெரியாரைச் சேர்ந்து பெரும்பயன் பெறுவாய். உலகில் நடக்கும் இருவிகாரப் போரைப் புகழாமல் உலகத்தந்தையைப் புகழவேண்டும். அதுவே அரனடியார்க்கு அடையாளமாகும். இறைவன் எப்போதும் தன்னை வாய்திறந்து வழுத்துவோர் உள்ளத்தை மலர்த்தி அருள்செய்கிறான், அவனுக்கே ஆளாகி, அவன் பொன்னடி பெற்றார் தேவர் எய்திய அருள் வழியிற் கூடுவர். எல்லாம் அவன் உடைமை; அனைத்தையும் உடையான் அவனே; அவனடியாருடன் கூடிச் சென்றே சிவபதியிற் புகுந்தேன். முற்றும் அவன்வழி நின்றவர் கண்டு அறிவித்தனர்; என்ன அறிவித்தனர்? "உன் ஆவிக்கு உடையான், இறைவன், இதோ உள்ளான்; அன்புடன் வருக!" என்றனர். அடியாரை இறைவனும் "வருக!" என்றான். அனைவரும் "அபயம்" என்று அவனடி சேர்ந்தார். நான் இருமையான திறமைவல்லவன், கலைஞானப் பெருமை வல்லவன்; பிறவிச் சுழியை நீந்த உரிமை வல்லவன்; ஆயினும், திருவருளுணர்வுடன் நீடூழி வாழ்ந்திருக்கும் திருவாளரான பெரியாருடன் சேர்ந்து நலம் பெற்றேன். அருட்பெரியார் உறவே இருட்பெருநோய் தீர்க்கும். அருளாளர் உறவே ஆனந்தமாகும்.

## ௪௨. தெய்வ நிந்தை

பித்தம் பிடித்த பேய்மகள் உத்தமக் கணவனைப் பழிக்கிறாள். அவள் பேய்த்தனத்தையே அது காட்டுகிறது. சித்தந் தெளியாச் சிறுமதியாளர் அருளிறைவனைப் பழிக்கின்றனர்; மறுக்கின்றனர்; குருமாரைத் தூற்றுகின்றனர்; அடியாரை ஏசுகின்றனர். அவர் சிறுமதியின் குறும்பே அப்படிச் செய்கிறது. சாதாரண மனிதரைத் தூற்றினால் கைகலந்து, இரண்டிலொன்று பார்த்துவிடுவர்; அந்தர்யாமியான கடவுளை வாய்க்குவந்தபடி பழித்தாலும், நேரே வந்து "ஏனடா பழிக்கிறாய்?" என்று ஆண்டவன் கேட்கப் போவதில்லை; ஆனால் அவ்வாறு நிந்திப்பவர்தம் சீவசக்திகுறையும், மனம் கலங்கும். பழிதூற்றுபவர் நரம்புகள் அதிர்ச்சியினால் தளரும். மனமே மனிதன்; அவன் தீய நாப்பறையால் மனம் கலங்கி அமைதி குலைந்து சீரழிவான். அவனவன் அவனவன் வினையை அனுபவித்தே தீருவான். கடவுள், ஆசார், அடியார் சமயம், தவம், ஒழுக்கம்—இவற்றையெல்லாம் மூடர் புரட்டு என்று பழிதூற்றுவாருக்குப் பழியும் புரட்டுமே நாவிலும், நெஞ்சிலும், புத்தியிலும் நிரம்பும்; தீய எண்ணங்களும், அகம்பாவமும் மனத்தில் நிறையும்; மதி கலங்கும்; குடிவெறியன் போல பழிதூற்றும் வெறியனும் உண்மையுணராமல் பொய்ம்மையே பேசி எந்த நன்மையும் காணாமல், கவலையாலும் நோயாலும் இறப்பான்; பிறகு தனது பாவங்களால் கீழ்ப் பிறப்பெடுத்து வருந்துவான்.

## உலகிலே காணப்படுவது

"உண்டுறங்கிக் கூடிப்பெற்று வளர்க்கிறோம்; வளர்கிறோம்; மூளைத் திறனால் இடத்தையும் காலத்தையும் வெல்லுகிறோம்; ஆகாயக் குண்டு போட்டு உலகைக் கொல்லுகிறோம்; சாமி, சமயம், குரு, கோயில், ஆசாரம் எல்லாம் எதற்கு? இவை வெறும் மூடர் புரட்டல்லவா?" என்னும் சாருவாகக் கும்பலை இக்காலத்தில் எங்கும் காணலாம். தவ முனிவர் நாடாகிய இப்புண்ணிய பாரதத்திலும் இத்தகைய நாத்திகக்கும்பல் பெருகி வருவது கண்டு நமது உள்ளம் புண்ணுகிறது. மனிதன் கேவலம் வயிற்றுக்கே ஆளாகி உள்ளத்தை மறந்தான். இப்போது உலகில் கூச்சலிடும் அரசியல் விவகாரங்களை யெல்லாம் அலசிப்பார்த்தால் அவற்றில் "உரிமை, உணவு" இரண்டின் வேட்கையே காணப்படும். புறவாழ்வில், உலகவாழ்வில், பிறர் நம்மை 'ஏன்?' என்று கேளாமல் ஆணும் பெண்ணும் சுதந்தரமாகச் செல்லும் உரிமை வேண்டும். "எல்லாரும் உழைத்த உழைப்பின் பயனைச் சமமாகப் பகுந்துண்ண வேண்டும்; பொருள் ஒருவனிடமே சேர்ந்து குவியக் கூடாது; முதலாளி கூடாது; பாட்டாளியே வேண்டும்" என்று உலகெல்லாம் கிளர்ச்சி செய்கின்றனர். இக் கிளர்ச்சியின் மூச்சைப் பிடிக்கப் பெரிய பெரிய அசுரப் படைகள் கிளம்பி, கொலைக் கருவிகளைக் கொண்டு எளியரை அடக்கி யாளுகின்றன. உரிமை அருமையாகிறது.

## சன்மார்க்கமில்லை

உடலுக்கும் வயிற்று விவகாரத்திற்கும் மேலே உள்ளம் உண்டு; அதில் ஒரு தெய்வம் உண்டு; அதில்லாமல் நீயில்லை, நானில்லை, உலகில்லை, அரசில்லை, பேச்சில்லை, செயலில்லை. அந்தப் பொருளே யாதுமாய் யாங்குமாய் நிற்கிறது. அப்பொருளைச் சன்மார்க்க வழியில் அடையலாம். அந்த அடைவால் மனிதன் ஒளி பெறுவான்; அன்புமயமாவான்; அருள் கொண்டு பொருளுலகில் நடப்பான்; தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளனுவான்; எங்கும் ஒரு பொருளைக் காண்பான். சுத்த சுதந்தர சமத்துவனுவன்; இன்புறுவான்; கனவிலும் பிறரைத் துன்புறுத்தான்; மண்வெறி, பொன்வெறி, பெண்வெறி கொள்ளான்; வாழ்வாங்கு வாழுவான்; அறத்தால் வரும் இன்பமே துய்ப்பான்; மக்களை நடமாடும் கோயிலெனக் காண்பான்—இத்தகை நல்லோர் பெருகினுல் உலகில் இன்று நடக்கும் மண்வெறிக் கொலைகள் நிகழா; நாத்திகக் கூத்துகள் நடவாவாம். இன்று உலகம் வருந்தும் துயருக்குக் காரணம் சன்மார்க்கமும், உள்ளறிவும், கடவுளுறுதியும் இல்லாத மதிக்கேடேயாம்! ஆதலால் நிந்தை யொழித்து. மாந்தர் சன்மார்க்க வழியில் நடக்க வேண்டும். பிறரை நிந்திப்பவன் தன்னையே நிந்திக்கிறுன்; கடவுளையும் அடியாரையும் நிந்திப்பவன், தன்னையே பாவச் சுமையாக்கிக் கொள்ளுகிறுன்.

இறைவன் தெளிந்த ஞானிகளின் சிந்தையி னுள்ளே அன்புமயனாக அமர்ந்து விளங்குவான். காமம் வெகுளி மயக்கங்களாற் கலங்கிய சிந்தை அவனைக் காணாது; குருடனுக்குப் பகலும் இருட்டாகும்; காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாகும். மனக்குருடர் இறைவனை இல்லை யென்பர். எத்தனையோ அண்டங்களை ஆக்கி யளித்து நீக்கி மாற்றிப் புதுக்கும் இறைவனைப் புல்லர் இகழ்வர். தமது புன்சொல்லைக் கொண்டு இவர் பிறர் மதியையும் கெடுப்பர். இவரையே திருமூலர் 'நீசர்' 'கீழ்மக்கள்' என்கிறார்.

ஒரு கிளி தன் தலைவனிடம் அருமையாய் வளர்ந்தது. தலைவன் கிளிக்குத் திருநாமங்கள் பயிற்றினன். நல்ல கனிகளையுண்டு அது தலைவன் பெயரைச் சொல்லிக்கொண் டிருந்தது. அக்கிளியை ஒரு நயவஞ்சகப் பூனை பார்த்து நாவூறியது. "கிளியே தலைவனை மற! அவன் எளியன்; சிறு மனிதன். வா என்னிடம்! உனக்கு வேண்டிய தைத் தருகிறேன்; என்னுடன் நீயும் வேட்டை யாடி யுண்ணலாம்; நான் திருடியுண்ணும் பாலில் உனக்கும் தருகிறேன்" என்றது. பூனையின் மாயை வார்த்தையைக் கேட்டுக் கிளி அதனோடு கூடியது. பிறகு? நீசப் பூனை தனது நயவஞ்சகத்தால் அறியாக் கிளியைப் பிடித்துண்டது. அறியா மாந்தர் மனம் வேறுபடும்படி நாத்திகம் பேசித் தலைவனை இகழும் புல்லர் செயலும் பூனையின் செயல்போலும்! அவர் கையிற் சிக்கிய பேதையரும் மேற் சொன்ன கிளியேபோல்வர்.

எளியனேன் நீசனை நீசர் இகழில்
கிளியொன்று பூனையிற் கீழது வாமே.

ஓர் அரசன் தன் அரண்மனையில் இருக்கிறான்; அவன் சக்தி உலகை ஆள்கிறது. அவனைப் பார்க்கவே எவ்வளவோ அன்பும் வணக்கமும் வேண்டுமே! அண்ட பிண்ட சராசரங்களுக் கெல்லாம் முதல்வனான இறைவனை ஆணவத் திமிர் கொண்ட மாந்தர் எப்படிக் காணமுடியும்? எலெக்ட்ரன் அணுக்களை நாம் பார்க்க முடியாது. ரேடியோவை இயக்கும்போதே அவற்றின் உண்மையை அறிகிறோம். அதுபோல சிருஷ்டி திதி ஸம்ஹார அற்புதங்களைக் கொண்டே முதல்வன் இருக்கையை நாம் அறியவேண்டும். திரையில் வரும் ஒலிப்படத்திற்குப் பின்னால் அதை ஆட்டும் மின்சக்தியுண்டல்லவா? அதுபோலே உலகாடலுக்குப் பின்னால் ஒரு திருவருட் சக்தியுண்டு; அச் சக்திமுதல்வனே இறைவன். அவனறிவு வாய்த்தல் எளிதன்று. உடல்வற்றத் தவம் புரிந்தவர், வானவர், தானவர், எல்லாந் துறந்தவர் ஆகியோரும் உண்மையான கடவுளறிவை உணர்ந்திலர். ஆதிப்பிரானாகிய இறைவன் கருணையமுதூறிய உளத்தன். சித்தந் தெளிந்த பக்தரே அவனை, அவனது கருணையன்பைத் தாங்க முடியும்.

அளிந்தமு தூறிய ஆதிப் பிரானைத்
தளிந்தவர்க் கல்லது தாங்க வொண்ணாதே.

என்பில்லாப் புழு சூரிய வெப்பத்தைத் தாங்க முடியாது; அன்பில்லாவுள்ளமும் இறைவனருளொளியைத் தாங்க வொண்ணாது. இறைவனைப்

பகைத்தவர் தேவராயினும், அசுரராயினும் இடை முடிந்தொழிந்தனர். கடவுளைப் பகைத்தல், அவன் மயமான உயிர்களைப் பகைத்தல், அவன் விளங்கும் திருக்கோயில்களைப் பகைத்தல், அவனருளுக்குரிய அடியாரைப் பகைத்தல், அவனருட் சுடர்களான குருமாரைப் பகைத்தல், அவன் வழியான சன்மார்க் கத்தைப் பகைத்தல் ஆகிய எப்பகை செய்தாலும் இறைவனை எய்த முடியாது. மனவிருளால் மதிமயங் கிப் பொய்கட்டிக் கிண்டல் செய்து கடவுளைப் பகைத்தவர் ஒன்றுக்குப் பத்தாக அனுபவிப்பர். அப்படிப்பட்டவர் சிலகாலம் பொய்ப்பரிசெய்தினு லும், நாத்திகக் கட்சி சேர்த்துப் புல்லர் புகழையெய் தினும், இறுதியில் அவர் மனத்திற் கொண்ட பகை யிறுமாப்பு ஒன்றுக்குப் பத்தாய்ப் பெருகித் தீராத் துயரந் தரும்.

இறைவன் ஆன்மாக்களின் உள்ளங்கலந்து அங்கே உயிர்க்குயிராய் விளங்குகிறான்; அவனே வேதியருள் வித்தையாய், அறிவாய் நிற்கிறான். அவன் பொதுநிலையினின்று எல்லாருக்கும் நீதி வழங்குகிறான். எனினும், அவன் விகிர்தன்; அனைத் திற்கும் அப்பால் எதன் பற்றும் இல்லாத தனி முதல்வன்; அப்படிப்பட்ட இறைவனைப் பற்றுவிட்டு, சித்தசுத்தியெய்தியே அடையலாம். அதற்குச் செய லில்லாப் பேதையர், உலக சுக போகங்களிலும், மாதர் புலவியிலும், கலவியிலும் நினைப்பை விட்டு, மதிமயங்கி ஈசன் நினைப்பொழிகின்றனர். மனித உறவிற்கு அன்பும், நேசமும், அகத் தூய்மையும் வேண்டும்; ஈசன் உறவிற்கு இவை பன்மடங்கு அதிகம் வேண்டும். அவையில்லாதார் பகையும்,

பொருண்மையும், சிறுமதியும் கொண்டு கடவுள் இல்லை என்று வாதாடினால் அதனை அறியாமையின் பிதற்றல் என்று கொள்க!

## ௪௫. குருநிந்தை

கற்றிருந்தாலும் பயனில்லை; கற்றவழி உற்றிருந்தாலும் பயனில்லை; இறைவனைப் பெற்றவரே அந்தப் பேரின்பத்தை அறிவார். சுவைத்தவரே அமுதை அறிவார். தியான மோன சமாதி சாதனம் பெற்றவர்களே கடவுட் பேறடைவர். அவ்வாறு கடவுட் பேறு பெற்று சகஜநிஷ்டையில் இருக்கும் பெரியாரையும் கயவர் பேணார்; மனத்தை ஒடுக்கி உள்ளத்தில் உற்றுத் திருவடியே பற்றிநிற்கும் யோகிகளையும் அக்கயவர் மனமுளையப் பேசுவார்.

பெற்றிருந் தாரையும் பேணார் கயவர்கள்
உற்றிருந் தாரை உளைவன சொல்லுவர்;
கற்றிருந் தார்வழி யுற்றிருந்தார்; அவர்
பெற்றிருந் தாரன்றி யார்பெறும் பேறே!

இறைவன் குருமார்மூலம் விளங்குகிறான்; குருமார்களையே உபசாரத்திற்காக 'அவதாரம்' என்பர்.

உலகம் போற்றும் மதாசாரியர்களெல்லாம் குருமார்களே யாவர். அவர் உலகம் உய்தற்கு 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தை உபதேசித்தனர்; பரம்பொருள் ஒன்றே; அதுவே அனைத்தும் என்று உணரக் கூறினர்; மாந்தர் உய்வதற்குக் கருணையுடன் சீரிய சன்மார்க்க உபதேசங்களைச் செய்தனர்; எழுதி வைத்தனர்; அவர் சீரெழுத்தாளர். அவர் எழுத்திற்கே மனித சமுதாயத்தைத் திருத்தும்

சீர்மையுண்டு. அத்தகைய அருட் பெரியாரையும் கயவர் மனஞ் சிதையப் பழிப்பர். அதனால் அப் பெரியார் பெருமை அணுவளவும் குன்றாது. பெரியாரை நிந்திக்கும் கயவர், ஊரில் எச்சிலுண்டு திரியும் நாயாய்ப் பிறப்பர்; ஒரு யுககாலம் நீரில் புழுவாய் நெளிந்து வருந்தி மாய்ந்து மண்ணுவார்.

ஓரெழுத் தொரு பொருள் உணரக் கூறிய
சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினோர்,
ஊரிடைச் சுணங்கனாய்ப் பிறந்தங்கு ஓர்உகம்
பாரிடைக் கிருமியாய்ப் படிவர் மண்ணிலே.

பத்தினிப் பெண்டிர், தெய்வபக்தர்கள், தத்துவ ஞானிகள் இவர்களைச் சித்தங்கலங்கத் தீங்கு செய்து நிந்திப்பவர் செல்வமும் ஆயுளும் ஓராண்டில் அழியும். என்றும் இது சத்தியம்! இது திருநந்திதேவர் ஆணை!

பத்தினி, பத்தர்கள், தத்துவ ஞானிகள்,
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும், ஆவியும், ஆண்டொன்றில் மாய்ந்திடும்,
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே.

மந்திரோபதேசம் செய்த மாதவர் சிந்தை நோவத் தீமைசெய்த அறிவிலிகள் நாயாய்ப் பிறப்பர்; நூறு ஜன்மமெடுத்துப் பிறகு நீசராய்ப் பிறந்து மண்ணில் மாய்வர். ஈசனடியார் உள்ளம் கலங்கக் கொடுமை செய்தால் தேசமே அழியும். தேசத்தார் நாடி முயலும் சிறப்பான காரியங்களும் அழிந்திடும். பெரிய மன்னர் அரியணை அழிந்திடும். இந்திரன் அரியணையும் அழியும். இது நந்திதேவர் ஆணை!

ஈச னடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்;
வாசவன் பீடமும், மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நந்நந்தி ஆணையே.

சன்மார்க்கம் போதிக்கும் சற்குருமார் சந்நிதியில் பொய் தலைநீட்டினால், பொய்யர் புகுந்து தீங்கு செய்தால், நாட்டில் நன்னெறியொழுக்கம் குன்றும்; ஞானம் நிலையாது, பழைய வேதாகமத்துறைகளும் அறிவும், அறநெறியும் மறக்கும்; பலவழியில் மாந்தர் மனம் சென்று வாழ்வு கெடும்; தொழில்கள் முரண்படும்; நாட்டில் பஞ்சமுண்டாகும்.

சன்மார்க்கச் சற்குரு சந்நிதி பொய்வரின்
நன்மார்க்க மும்குன்று, ஞானமும் தங்காது
தோன்மார்க்க மாய துறையும் மறந்திட்டுப்
பன்மார்க்க மும்கெட்டுப் பஞ்சமும் ஆமே.

சன்மார்க்க ஞானிகளை உலகம் வணக்கமுடன் போற்றவேண்டும். பல பிறவிகளில் பக்குவமடைந்து ஒரு சுத்தான்ம ஞானி தோன்றுகிறான். கர்மிகளுக்கு ஞானியின் பெருமை விளங்காது. "ஏதோ ஞானப் பைத்தியம்! அவனால் உப்புப் புளி மிளகாய்க்குக் கூடப் பயனில்லை. இவன் என்ன, தேசத் தொண்டு செய்கிறானா? ஊருக்குழைக்கிறானா? தின்று தின்று சும்மா உட்கார்ந்திருக்கிறான், சோம்பேறி!" என்பர் ஞானநிலையுணரா மாக்கள். கர்மிக்கும் ஞானிக்கும் ஒப்பேயில்லை. கைக்குவந்த மாணிக்கத்தை வழியில் தவறவிட்டு வெறும் கல்லைச் சுமப்பவன் விதியை என்சொல்வது? நன்றாகத் தோய்ந்து கடைந்தெடுத்த தயிர், வெண்ணெயுருக்கிய நெய் எல்லாம்

கைவசம் இனிதிருக்கையில், எவனுவது தனது சுகம் கெடும்படியான கசப்பைப் போட்டு உண்பானே? ஞானமே இன்பம்; பற்றைப் பெருக்கும் கன்மம் துன்பமாகும். "ஞானீது ஆத்மைவ மே மதம். ஞானி ஆத்மாவே; (நானே); இது என் சித்தாந்தம்" என்ருன் கண்ணன். கூழாங் கல்லுக்கும் கோஹினூர் வைரத்திற்கும் எவ்வளவு வேற்றுமையுண்டோ அவ்வளவு வேற்றுமை பற்றுற்ற கர்மிக்கும், பற்றற்ற ஞானிக்கும் உண்டு.

கைப்பட்ட மாமணி தான்இடை கைவிட்டு,
மெய்ப்பட்ட கல்லைச் சுமப்போன் விதிபோன்றும்,
கைப்பட்ட நெய்பால் தயிர்நிற்கத் தானறக்
கைப்பிட்டுண் பான்போன்றும் கன்மிஞானிக் கோப்பே.

## சச. மகேசுர நிந்தை

ஆண்டவன் அடியார் வடிவாயிருக்கிருன்; அடியாரை நிந்தித்தல் ஆண்டானை நிந்தித்ததாகும். பிக்ஷையுண்டு இறைவனடிக்கே ஆளாகி நிற்கும் அடியாரைப் பகைத்து, வேண்டாது, வெறுத்துக் கண்டபடி பேசினுர் ஆழ்ந்த நரகத்தில் வீழ்வர்.

ஆண்டான் அடியாரை வேண்டாது பேசினுர்
தாந்தாம் விழுவது தாழ்நர காகுமே.

ஞானிகள் சமதரிசிகள்; நல்லதும் பொல்லதும் ஒன்றெனக் காண்பவர். தம்மை நிந்திப்பவர்க்கும் அவர்கள் தீமை நினையார்கள். நிந்தனை, வந்தனை இரண்டையும் சமமெனக் கொண்டு தமது தனிநிலையில் நிற்பவர் ஞானிகள். ஞானியை நிந்திப்பவனும் விரைவில் தனது பிழையுணர்ந்து திருந்துவான்.

ஞானியை வந்திப்பவன் தீவினை நல்வினைகள் தேய்ந்து பிறகு இருவினைகளும் இல்லாத சமநிலை பெறுவான். ஞானியிடம் போன பொழுதே சிவ போகம் கைகூடும்.

ஞானியை நிந்திப் பவனும், 'நலன்' என்றே
ஞானியை வந்திப்ப வனுமே நல்வினை
யான கொடுவினை தீர்வார்; அவன்வயம்
போன பொழுதே புகும்சிவ போகமே.

## சரு. மோக்ஷ நிந்தை

(ஜீவயாத்திரை)

ஆன்மா பெத்தன்; ஆண்டவன் நித்திய முத்தன். ஆன்மா பந்தமற்று இறைவனடி பற்றி முத்தி பெறவேண்டும். இகம் பரம் என்ற இரண்டு நிலைகள் ஆன்மாவிற்குண்டு; பரகதியை மறுப்பது பாவம். 'பரகதி உண்டு' என்று வேத ரிஷிகளும், அருட் பெரியாரும் கூறுகின்றனர். அதை 'இல்லை' என்று மறுப்பவர், மனம் போனபடி நடந்து, தீவினை சுமந்து நரகதி செல்வர். இதை உலகம் அறியும்.

பரகதி உண்டென இல்லையென் போர்கள்
நரகதி செல்வது ஞாலம் அறியும்.

ஆன்மா உடலைவிட்டு எப்படிப் பிரிகிறது? எங்கே செல்கிறது? ஒவ்வோரான்மாவின் கதியென்ன? என்று இங்கே நுட்பமாகத் தெரிவிக்கின்றார் திருமூலர். ஜீவயாத்திரையைப்பற்றி அனுபவ யோகிகள் கண்ட உண்மைகளைச் சிறிது விளக்குவாம் :—

## சித்தும் சடமும்

நம்மில் இரண்டு கூறுகள் உள்ளன: (1) சித்து (2) சடம். சித்து: சத்து, தேகி, சீவன், ஆன்மா, சேதனம், உண்மை, உணர்வு, அறிவு, உயிர்மயம், அழிவற்றது, மாற்றமில்லாதது, உள்ளபடியுள்ளது. சடம்: அசித்து, தேகம், இயற்கையுடல், உணர்வற்றது, அறியாமை, மாறிமாறித் தேய்வது, காலத்தால் அழிவது. உலகில் உலாவும் உயிர்க்குலங்களெல்லாம் சித்து சடம் என்ற இரண்டு வேறுபாடுகளைக் கொண்டன. இரண்டும் ஒத்தால் வாழ்வு; பிரிந்தால் சாவு. தேகத்தில் இரண்டு கூறுண்டு: (1) தூலம் (2) சூக்குமம். நாம் வாழ்விற் செய்த வினைப்பயன்கள், சங்கற்பங்கள் இவை எல்லாம் சூக்கும தேகத்தில் மண்டிக் கிடக்கின்றன. இவையே நாம் மீண்டும் மீண்டும் உலகிற் பிறந்துழல விதையாகின்றன. சூக்கும சரீரம் மனம் புத்தி, சித்தம், அகங்காரம் என நான்கு அந்தக்கரணங்களையுடைத்து. இவற்றின் தன்மைக்கேற்றபடியே வாழ்வும் அமையும். மெய், வாய், கண், மூக்கு, செவி, நாகை, கால், கருவாய், எருவாய் ஆகிய தசேந்திரியங்கள் மூலம் மனத்தில் சங்கற்ப விகற்பங்கள் வந்து குவிகின்றன. இவற்றை அடக்கியாண்டு, அந்தக்கரண சுத்தி எய்தினல் மனம் உட்குவியும். உட்குவிந்த மனம் புத்தியிற் படியும்; புத்தி, சத்து இன்னது அசத்து இன்னது, அறிவு இன்னது மடமையின்னது, உண்மை இன்னது இன்மை இன்னது என்று தெளிவாக ஆராயும். உண்மைப் பொருள் இதயத்தில் உள்ளது என்றறிந்து புத்தி இதயத்திற் படியும்; அதையே தியானம் என்பர். தியானத்தால்

தன்னறிவு உறுதியாகும். அறிவால் தனது சொரூபம் புலனாகும். சொரூப சித்திபெற்று அதிலேயே வாழ்ந்தால், எல்லா வினைகளும் அறும். சடத்துள் சிவம் உள்ளது; இரண்டிற்கும் இடையே மனம் உள்ளது; மனம் சடவிவகாரங்களிலேயே திரிந்தால் வினைமூட்டை பெருகிப் பிறவிகளில் உழலும்; மனம் குவிந்து சிவத்தில் கலந்து நின்றால் வினைத்துயர் நீங்கிப் பிறவியொழியும்.

## உடலும் உயிரும்

ஐம்பூதங்களும் தன்மாத்திரைகளும் சேர்ந்து இத்தூலவுடலாகின்றன. ஜீவராசிகளில் பலகோடி வகையுள்ளன. ஐம்பூத நிறைக்கேற்றபடியே அவற்றின் தூல வாழ்க்கையமையும். மீன், திமிங்கிலம் போன்ற நீர்வாழும் உயிர்களுக்கு நீர்த்தன்மை மிகும்; பறவைகளுக்குக் காற்றுத்தன்மை மிகும்; தரை வாழ்வனவற்றிற்கு மண்தன்மை மிகும். விண்ணும் கனலும் அனைத்திலும் அளவாக விரவி நிற்கும். தேகம் நாளுக்கு நாள் மாறி முதிர்ந்து, தளர்ந்தழியும்; அதிற் குடிகொண்ட தேகி அல்லது சுத்தான்மா என்றும் அழியாது; கூட்டிலிருந்து கிளி தப்புவதுபோலத் தப்பியோடி அது கர்மபலத்திற்கேற்றபடி இன்னுமோர் உடலைத் தேடிக் கொள்ளும். உடலைத் தொகுத்த பஞ்ச பூதங்கள் பிரிந்து அததிற் கலந்துபோகும். ஆத்மா சங்கற்பங்கள் நிறைந்த சூக்கும சரீரத்தில் சஞ்சரிக்கும். எலெக்ட்ரன் அணுக்களைவிட நுட்பமான சூக்கும தேக அணுக்கள் வெகு விரைவாக விரும்பிய இடத்திற்குச் செல்லும். வினையும் மலமும் அற்ற சுத்தான்மா

பரமாகாசத்திற் கலந்து போகும். பரமாகாசமே பரம்பொருள் வடிவாம். சுத்தான்ம சித்தருக்குப் பிறவித்துயர் கிடையாது. இறுதிநாளில் ஒருவன் படுந் துயரிலிருந்தும், உயிர் பிரியும் உறுப்பிலிருந்தும் அவன் வினைப்பயனை அறியலாம். சுத்த ஞானிகளுக்குக் கண் வழியாகவும், சுத்த யோகிகளுக்கு பிரமரந்திரம் வழியாகவும் உயிர் பிரியும்.

## பரகதியும் இரகதியும்

புலன்களை அடக்கி, சித்தமொடுக்கி, மனத்தை வென்று, திருவடி பற்றியே தியானித்து, கர்ம வாசனைகளை ஒழித்த சுத்தமுத்தரின் ஆவி ஒளி வழியே சென்று அருட்சோதி மயமான பரமாகாசத்திற் கலக்கும். அத்தகைய சுத்தான்மாக்கள் மேலிருந்து தமது சக்தியால் உலக மாந்தருக்கு உதவ வல்லவர். அந்த மகாத்மாக்களே தேவதைகளாகி மனித சமுதாயத்திற்குத் தோன்றாத்துணை நிற்பர். சுத்த முத்தரான ஞானிகளைக் குருபூசை செய்து வணங்குவதன் பொருள் அதுவே. பிறப்பிறப்பில்லாத நித்தியரான நின்மலாத்மாக்களின் மூலம் திருவருள் சுரக்கும். அத்தகைய முத்தர் பெருமை அளவிடற்கரிது. கர்மிகளின் ஆவி வாய், மூக்கு, காது, ஆசனம், இவற்றின் வழியே வெளியேறி கர்ம வாசனைகளையே உருவாகக் கொண்ட யாதனை தேகத்துடன் இருள் வழியே சென்று வினைப்பயனை அனுபவிக்கும். இந்த அனுபவங்களையே கருட புராணம் பயங்கரமாகச் சித்தரித்துக் காட்டுகிறது. எல்லா மதங்களும் சுவர்க்க நரக அனுபவங்களை ஒப்புகின்றன. ஒளிவழிச் சென்ற சுத்தான்மா நித்திய சுவர்க்கத்தையனுபவிக்கும்; இருள்வழிச் சென்ற

பாவான்மா தனது தீமைக்கேற்றபடி நரகவாதனைப் படும். கர்மாத்மாக்களின் பாவங்களைப் போக்கி, யாதனு தேகத்தின் வாதனைகளைக் குறைத்து நற்கதி யுய்க்கவே பிரேதச் சடங்குகள் செய்வதாம். மேற் சொன்ன இருள் வழியையே, மூலர், 'இரகதி' என் கிறார். பரகதியை நிந்தித்தவர், மனம் போனபடியே நடந்து, சூக்கும தேகத்தில் வினைகளைச் சுமந்து, தமக்குத்தாமே கடைதோறும் (இறுதிநாளில்) இர கதி அல்லது இருள் வழியை உண்டாக்கிக் கொள்வர்; அவ்வாறு இருள் வழியே சென்று தமது துர்க்கதி அல்லது தீயவழிக்கேற்ற பலனை அனுபவிப்பர். ஆன்மாக்கள் தாமாகவே அன்பு செய்து இறைவன ருளிற் கூடலாம். வேத சாத்திரம் பேசிமட்டும் பய னில்லை. நயமாகப் பேசி என்ன? ஒரு குருவைப் பணிந்து அவன் சொல்லி வைத்த குறிகண்டு திரு வருளை நாடலாம்; இறைவனை மனமுருகப் பாடிப் புகழ்ந்து, முறையிட்டு அவனருளைப் பெறலாம். அடி யார்களுக்கு அவன் அருள்செய்த பரிசறிந்து அவர் களுடன் கூடி இறைவனைப் பாடி ஆடலாம். இவ் வாறு செய்து அருளுக்குப் பாத்திரமாகாத வினை யாளருக்கெல்லாம் மேற்சொன்ன இரகதியே விளை யும்.

கூடகில் லார், குரு வைத்த குறிகண்டு
நாடகில் லார், நயம் பேசித் திரிவார்கள்
பாடகில் லார், அவன் செய்த பரிசறிந்து
ஆடகில் லார், அவர் பேறிது வாமே.

மனிதனுக்குள் சிந்தை செய்வான் யார்; சிந்தை யாய் நிற்பவன் யார்? அவனையே தெய்வம் என் றெண்ணினேன். அவனே மீண்டும் உயிர்ப்பாய்

நெஞ்சிற் புகுந்து நிற்கிறான். அவனையே 'நான்' என்றும், என்னை அருதுறையும் 'பதி' என்றும் அழைத்தேன். அவனையே உறுதியாகப் பற்றினேன்.

அவனே எனது உள்ளமாயிருந்து "இங்கே, இது என்ன? இந்த நெஞ்சிலே சிந்தையாய் நிற்பதெது? உயிராய்த் துடிப்பதெது? உயிர்ப்பாய் உள்ளே புகுந்து வருவதெது?" என்று வினவுகிறான். உயிர்ப்பு எங்கிருந்து எழுவதோ, எங்கே அடங்குவதோ அங்கே நெஞ்சம் உள்ளது. அதுவே கடவுள் நிலயம்.

எஷ ப்ரஜாபதிர் யத்ஹ்ருதயம்;
ஏதத் ப்ரஹ்மம்; ஏதத் ஸர்வம்.

"உயிர்களுக் கிறைவனே உள்ளமாறுன்; அதுவே பிரமம்! அதுவே எல்லாம்" என்று ஆரிய வேதம் முறையிடுகிறது, "உள்ளமே, உள்ளத்தின் உள்ளே நின்ற கருவே" என்று தமிழ்மறை விளங்கக் கூறுகிறது.

புறப்பட்டுப் போகும் புகுதுமென் நேஞ்சில்,
திறப்பட்ட சிந்தையைத் தெய்வமென் றெண்ணி
அறப்பட்டம் அற்றப் பதியென் றழைத்தேன்
இறப்பற்றி னேன் 'இங்கி தேன்' என்கின் றானே.

ஒவ்வொருவர் உள்ளத்திலும் நடம்புரியும் இறைவன் "மனிதா, இதோ இங்கே, உள்ளத்தில் இருந்து நடம்புரியும் பொருள் எது என்று ஆராய்ச்சி செய்; அதுவே நீ (தத்வமஸி) என்றறிவாய்!" என்று ஞான விசாரத்தைத் தூண்டுகிறான். ஓடும் அருவி நீர் திடர்களிடையே தேங்கிப்போவதில்லை; அது மேன்மேலும் தடைகளைத் தாண்டி ஓடிக்கொண்டே

யிருக்கும். கடலிடையே கப்பல் தேங்கிப் போவ தில்லை; அது அலைகளைத் தாண்டித் தாண்டித் துறைசேரும். அது போலே இந்த வினையுடலில் உறும் நித்தியப் பொருளான சுத்தான்மா அதி லேயே தேங்கிப் போவதில்லை; இந்த உடலே அதன் நித்திய வீடன்று; இவ்வுலகும் அன்று. பிறகு அதன் வீடெது? 'நானே வீடு' என்று தீவண்ண னை பரமசிவன் அதோ அங்கே நிற்கிறான்! இத யத்தில் புருஷனாய், சீவனிற் சிவனாய் உயிர்க்குயிராய் நிற்கிறான்! வினைத் தடைகளையும் சித்தத் திரை களையும் கடந்து சீவாத்மா அவனை இரண்டறக் கலக்க வேண்டும். அதுவே மோட்ச மாகும்.

திடரிடை நில்லாத நீர்போல, ஆங்கே,
உடலிடை நில்லா உறுபொருள் காட்டிக்
கடலிடை நில்லாக் கலஞ்சேரு மாபோல்
அடலேரி வண்ணனும் அங்குநின் றானே.

அவன் தீ வண்ணமான தென்னை? வினைகளை எரித்து நம்மைத் தனது அருட் சுடரால் புனித மாக் கவே தீ வண்ணமானான். அவனே தன்னை "இதோ நெஞ்சுள் இருக்கிறேன்" எனச் சுட்டிக் காட்டுகி றான். தாமரை நூல்போல மிக மிக நுண்ணிதான சுழுமுனை நாடியில் அருட்கனலாக அவன் நிற் கிறான். பரமுத்தி வேண்டிய முமுக்ஷுக்கள் சிந்தை புறஞ் செல்லாது தடுப்பர். தாமரை நூலினும் குறு கிய பிரமரந்திரம் வழியே ஜீவன் வெளிச் சென்றால் பரத்தொடும் கலக்கும். அந்தக்கரணம் இதயத்தில் ஒடுங்கித் திருவடி பற்றி நிற்கும் ஞானிகளுக்கே அவ் வாறு பரமுத்தி யெய்தும். மனத்தைப் புறம்விட்டு

உலக விவகாரங்களில் உழலுவர் கர்மிகள்; அவர் பெரியார் வழிகாட்டினும், காணமுடியாத கலதிகள், ஞானக்குருடர். அவ்வாறு வழியறிந்து செல்லாதவன் தீ நெறிச் சென்று இறப்பிற்கும் பிறப்பிற்கும் திரிந்து வருந்துவான்.

முத்தியில் இரண்டு வகையாம்:—

(1) உடலுடன் முத்தி (2) உடலைப் பிரிந்த முத்தி. மாணிக்கவாசகர், திருமூலர் முதலிய சுத்தான்மாக்கள் உடலுடன் முத்தி யெய்தினர்; இவர் எரியும் கர்ப்பூரம் போலச் சிவசோதியிற் கலந்தனர். புதைகுழியுள் போட்டு மூடுவதற்கு இவர் உடல் கிடைக்கவில்லை. இவரையே "மூடுதல் இன்றி முடிந்த மனிதர்"—சதேக முக்தர் என்கிறார் திருமூலர். இவர் சிவனைக் கூடுவர்; சிவனையே குறித்து வேறு குறிப்பில்லாமல் காடும், மலையும், கணமும், வயலும், எங்கும் சிவவுணர்விலேயே உலாவுவர்; தம் உருவினை, (தேகத்தினை) உன்னமல், தற்போதமிழந்து அருளுணர்விலேயே வாழ்வர்.

'நடுஅங்கி' என்பது சுழுமுனையில் ஏறும் குண்டலிக்கனல்: அது கிளர்ந்தெழுந்தால் நரம்புகளில் தகதகவென்று ஒரு தீக்கனலும் நாவில் மந்திரம் சுழல்வதுபோல உணர்வாகும். அவ்வுணர்ச்சி பெற்றவர் அமரராவர். அவர் கிழக்கே சூரியன் உதித்து மேற்கே அத்தமிப்பது போலச் சுடர்வழியில் செல்வர். அச்சுடர்வழி கிழக்கும் மேற்கும் எனப்பெறும். மாந்தரில் புண்ணிய புருஷர் வடக்கே, ஊர்த்துவ மார்க்கத்திற் செல்வர்; தீவினையாளர் தெற்கே அதோ மார்க்கத்திற் செல்வர்.

இவ்வாறு ஜீவயாத்திரையின் இரகசியங்களும் மோக்ஷ மார்க்கங்களும் உள்ளன. அவற்றை மாதவ முனிவர் ஞான வழியாலே 'யறிவர். உள் விழிப்பில்லா ஊனக் கண்ணர் ஜீவரகசியங்களை யறியாமல் கண்டபடி பிதற்றுவர்; மயக்குற நோக்கிப் பெரியார் புண்படப் பேசுவர். ஆயின் சமநிலை பெற்ற மாதவப் பெரியார் அறிவிலிகள் பேச்சை மனதில் வைத்துக்கொள்ள மாட்டார். சினங் கொண்டு அவரைத் தூற்றிப் பேசிய தீவினையாளர் தமக்கே வலிய வினைப்பயனைத் தேடித் துயர்களைத் தாங்கி நிற்பர்.

சினக்குறப் பேசிய தீவினை யாளர்
தமச்குற வல்வினை தாங்கிநின் றாரே.

## சசூ. சமயாதீதம்

எல்லாச் சமயங்களும் உடல், உயிர், மனம் உலகம் இவற்றிற்கு மேற்பட்டு நிற்கும் ஒரு பரம்பொருளையே பலவாறு தேடுகின்றன. அப் பரம்பொருளை எங்கே தேடலாம்? கூடலாம்? அவரவர் உள்ளத்திலேயே அதை நாடிக் கூடலாம். உள்ளத்தில் அவனைக் கூடினால் புறத்தில், உலகத்திலும் அவனையே காணலாம்; சிவோஹம் பாவனை தெளிந்தவர் சிவமயந் தெளிந்தவர். "இறைவனாவது உள்ளத்திலாவது, புறத்திலாவது!" என்று வெறும் வாயாடித் திரியும் நாத்திகருக்கு இறைவன் உள்ளத்திலும் காண்பது இல்லை, உலகத்திலும் இல்லை.

உள்ளத்தும் உள்ளன்; புறத்துள்ளன், என்பவர்க்கு
உள்ளத்தும் உள்ளன்; புறத்துள்ளன் எம்இறை;
உள்ளத்தும் இல்லை; புறத்தில்லை என்பவர்க்கு,
உள்ளத்தும் இல்லை; புறத்தில்லை தானே.

இறைவன் உள்ளத்துள்ளேயே கரந்து உலகெங்கும் நிறைந்து நிற்கிறான். அவன் கருணை வள்ளல், உயிர்த் தலைவன், உலக நாதன்; இதய மலரில் உறையும் மாதவன். அவன் நவத்வாரபுரியாகிய இவ்வூனுடலில் புகுந்து அந்தக்கரணத்திற் கலந்து வாழ்ந்து இறுதியில் உடலை உதறிப் புறப்படுகிறான். நம்மையறியாமலே நம்முள் ஒளிந்துள்ள இக்கள்ளத் தலைவன் கருத்தை மாந்தர் அறிகிறார்களில்லையே!

உள்ளத்து ளேதான் கரந்து, எங்கும் நின்றவன்;
வள்ளல் தலைவன், மலர்உறை மாதவன்;
போள்ளற் குரம்பை புகுந்து புறப்படும்
கள்ளத் தலைவன் கருத்தறி யார்களே.

உள்ளமும், அதில் உள்ள பொருளும் எல்லாருக்கும் பொது. அப்பொருளையறிந்தால் சமயச் சண்டையே கிடையாது. அப்பொருளையறியாத சமய வாதங்களெல்லாம் வெறும் கூச்சலேயாம். காயத்துள் நின்ற கடவுளைக் காணமல் மாயக் குழியில் விழும் உலகோர், மனைமக்கள் பாசத்தில் சிக்கிப் பதைக்கின்றனர்.

ஆயத்துள் நின்ற அறுசம யங்களும்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலா
மாயக் குழியில் விழுவர்; மனைமக்கள்
பாசத்தில் உற்றுப் பதைக்கின்ற வாறே.

இறைவன் 'சமயாதீதப் பழம் பொருள்'. ஆறு சமய வாதிகளும் அவனைக் கண்டிலர். ஆறுசமயப் பொருளும் அவன் அல்லன்; வாய்மனம் கடந்த அவனைக் கேவலம் சமயவாதப் பேச்சுகளால் அறியொணது. உள்ளத்தில் தியானித்து இறைவனைத்

தேறித் தெளியவேண்டும். இறைவனைத் தெளிந்த பின் அறுசமய விகாரங்கள் இல்லை; மாறுதலில்லை; ஜீவன், முத்தி வீடெய்தலாம்.

ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர்;
ஆறு சமயப் பொருளும் அவனலன்;
தேறுமின், தேறித் தெளிமின்; தெளிந்தபின்
மாறுதல் இன்றி மனைபுக லாமே.

அவ்வாறு தேறித் தெளியும் பொருள் எது? சிவம், சிவம், சிவம் என்றால் சைவருக்கே உரிய சாமியா? சாமிக்குச் சாதி மதம் கிடையாதென்று முன்னரே சொன்னோம். நமது நாட்டுச் சன்மார்க்கிகள் தொழும் கடவுளரெல்லாம் ஒரே கடவுளின் பலகுணப் பெயர்களென்றோம். 'சிவம்' என்றால் நிறைவான இன்பப்பொருள். ஏகான்மவாதச் சங்கரரும் சிவனையே வணங்கினார். வேதாந்த சித்தாந்த வேறுபாடில்லாமல் சிவனை வணங்கலாம். இராமரும் இராமநாதனை வணங்கினார்; வைணவரும் சிவனைப் பணியலாம். இன்பம் வேண்டுவோர் சிவநாமத்தால் இறைவனை வணங்கலாம். ஞானிகள் உள்ளத்தில் தெளியும் பொருள் சிவமே; சிவமே இறைவன். சிவனைக் காணத் தலைப்படுவார்களுக்குத் தவமே துணை; தவத்தினர் தொழுவது சிவத்தை. சிவமே தவம், தவப்பயன் இரண்டுமாம். சிவக்கனலே தவக்கனல். சிவனைச் சார்ந்து மாந்தர் உய்க! சிவத்தை மறந்து அறுசமய வாதத்தில் உழல்வது அவமேயாகும். எல்லாச் சமயமும் அனைத்திற்கும் அண்ணலான சிவத்தையே நாடும். சிவகதியே கதியாகும். மற்றனவெல்லாம் பவகதியாகும்;

பாசப் பிறவிக்கே வித்தாகும். தவகதி தன்னல் நேரும் சிவப்பொருள் தோன்றினல், அவகதி சேர்க்கும் ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மூவரும் அழிவர். ஆறு சமயமும் மனிதர் விண்ணவராக, உலகில் தேவ ஜாதியை நாட்ட மிகவும் விரும்பி முயலும். எனினும் அச்சமயத்தார் தெய்வத் தன்மையின் வழியேயுள்ள ஆணவ மாயமாகிய முட்களை அழிக்கமுயலாமல், 'நான், எனது' என்றே பேசுவர்; அவர் மண்ணிலுழன்று அதை விட்டுக் கடைத்தேறும் வழியை அறியார்.

உலகில் நூறு சமயங்கள் உள்ளன; ஆறு சமயங்களும் அவற்றுள் அடங்கினவேயாம். இச்சமய நெறிகளையெல்லாம் கடந்து சமயங்கடந்த பொருளாய், அனைத்திற்கும் ஈற்றில் இருப்பது பரம்பொருளான சிவமாம். அப்பரம்பொருளடைவிற்கு நடத்தாத மார்க்கம் நன்னெறியன்றும். 'காள் காள்' என்று கத்தும் கழுதைகள்போலக் கலதிகள், சமய வாதம் பேசி ஒற்றுமையைக் கெடுத்தலைவர். சுத்த சிவன் இச்சமயம் அச்சமயம் என்றில்லாமல், எங்கும், எவர் இதயத்தும் தோய்ந்து நிற்கிறுன். தம் குற்றங்களைக் கண்டு திருத்தி ஒவ்வொரு சமயத்திலும் உள்ள குணத்தைக் கொள்ளவேண்டும். அவ்வாறன்றிப் பிறரை வஞ்சிப்பவர், தூஷிப்பவர், மதப் பித்தேறி ஆணவம் மீறி மீண்டும் மீண்டும் பிறந்து இறக்கின்றுர். குணவான்கள் நேர்மையாக நடப்பர்; பிறரை வஞ்சியார்.

கத்தும் கழுதைகள் போலும் கலதிகள்;
சுத்த சிவனெங்கும் தோய்ந்துநிற் கின்றுன்;

குற்றம் தெளியாதார் குணம்கொண்டு கோதாட்டார்,
பித்தேறி நாளும் பிறந்திறப் பாரே.

மாந்தர் மூன்னிலையுலகைக் கண்டு மயங்குகின்றனர். இருவினை முறையில் மனமெனும் பகடை (பாச்சி) இயங்குகிறது; இருவினைகளில் மாந்தர் மயங்கி முயங்குகின்றார். மதி தெளிந்தவர்கூட அவ்வாறு இரு விகாரத்தில் முயங்குகின்றார்; அதிலேயே புந்திவிட்டு இயங்குகின்றார்; இருவினைக் காட்டில் இறுதி பெறுகின்றார். அச்சமின்றி இருவினைகளைப் பொருது வென்ற தீரருக்கே பரகதியாகும்.

பயங் கெட்டவர்க்கே பரநெறி யாமே.

இகம் பரம் ஆகிய இரண்டு வழிகள் உள்ளன. இரண்டிற்கும் வித்தான வழி உலகவாழ்க்கையேயாம். வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தால், அன்பும் அறமும் கொண்டு வாழ்ந்தால், இகபரசுகம் அடையலாம். அறிவு சூனியமான அஞ்ஞானியின் சொல் வழியே சென்று அழிவைத் தேடிக் கொள்பவர், பரசுகவழியை நாடி நில்லார். தூய மாதவர் அனைவரும் வேறெதையும் கருதிப் புந்திவிட்டலையாமல் "மஹாதேவன் எம்பிரான்" என்பர்; அவர் பேதஞ் செய்யார்; "இறைவனே எல்லாம்" என்று கைதொழுவர். அவனே நாதப் பிரமமாக அறியப்படும் நந்தி. அவனையே வணங்கினால் ஆதியாகிய இறைவனும் அந்நெறியில் வந்து தூய அன்பரை ஆட்கொள்வான். இறைவன் கருதாதவருக்குச் சேயன், கருதுவாருக்கு அண்மையன்; அவன் பவப் பிணியில்லா நித்திய முத்தன்; அவன் பேர் நந்தி. மனமாசகன்று இதயத்தில் நோக்க வல்லார்க்கு

அவன் சுத்த மூர்த்தியாகக் காணுவான். அவன் உலகையெல்லாம் மாயாசக்திகளால் நடத்தும் மாயன். அவனுல் மயக்கப் பெற்ற மனேமய சீவர்களே மானிடர். அவன் எதற்காக மானிடசரீரத்தைப் படைத்தான்? அவன் கருத்தென்ன? மற்ற உயிர்களுக்கெல்லாம் புலனறிவேயுண்டு; மனிதனுக்குப் புத்தியறிவுண்டு; அதனுல் புலன்களையடக்கி இதயத்தில் வீற்றிருக்கும் இன்பப்பொருளையடையவே ஜீவனுக்கு இறைவன் மானிடத்தைத் தந்தான். அவன் அரன்; சன்மார்க்கத்திற்கு வழிகாட்டும் அப்பன்; ஆதிப்பிரான்; அவனே ஞானநெறியாகி அன்பர் உளம் புகுந்தான்; பரநெறி தேடிய பக்தர்கள் சித்தத்தைப் பரம்பொருளாகிய அவன் அறிகிருன். அவ்வாறு அவன் அறியாவிடின் பரசுக நெறி பலவகையாக மயக்கும்; தொலையாத்தூரமாய் எட்ட முடியாததாய் இருக்கும். ஆன்மாக்களின் அன்பை அறிந்து எளிவந்து இறைவன் அருள் புரிகிருன். ஒவ்வொருவர் தன்மைகளையும் அறியும் பண்பன் அவன். அவன் வானவன்; வானின்ருெளிரும் பகலவன். வானவர் பெற்ற இன்பப் பேற்றில் அவனே விளங்குகிருன். தூயமணிவண்ணனை அரியும் பிரமாவும் (தவன் - புருஷன் - பிரமா) அளித்தல் ஆக்கல் ஆகிய தமது தொழிலுக்காக முன்வைத்த அறநெறியும் அரன்நெறியேயாம். அவனையே மாசற்ற மனத்தினுல் நீ நினை! மனிதர் மனக் கட்டுமானங்களால் ஆன சமயவாதம் 'அது நன்று; இது நன்று' என்னும். அவ்வாறு சமயவாதங்களில் மயங்குவோர் மாய மனிதர்; அவர் மயக்கத்தை ஒழிக்கும் நாதாதீதனாய், அருட்சோதி மயமாய், பரமாகாசத்தையணிந்து விளங்கும் கடவுளையே நாடு!

ஊனங் கடந்த உருவம் கடவுளின் அருளுருவம். அவனை இடைவிடாது நேசித்துக் கலந்தால் அருளுருவம் பெறலாம்.

ஆன சமயம் அதுஇது நன்றேனும்
மாய மனிதர் மயக்க மதுவொழி;
கானங் கடந்த கடவுளை நாடுமின்;
ஊனங் கடந்த உருவது வாமே.

அமரரும் முனிவரும் ஊனங்கெடும் அவ்வழியே நாடினர்; அதற்காகிய செய்ய சன்மார்க்க நெறியைக் கண்டனர். தமக்கு உறுதுணை 'சிவன், சிவனே' என்றார்; எனவே பிறகு அவனைப் பெற்றார். மும்மலவழியே சென்று மயங்கிச் செந்நெறி செல்லார் முதல்வனருளைக் காணுதவராய்த் திகைக்கின்றனர். அவன் ஆன்மாக்களின் உள்ளத்தில் நின்றொளிரும் அருட்பெருஞ் சோதியிறைவன். அன்பு வழியறிந்தால் எவ்விதமான முரணுமில்லாமல் அவனைப் பெறலாம்; பந்தபாசங்களெல்லாம் அறும். தீ அங்கே உள்ளே எரிகிறது; அத் தீயை வளர்த்து, தீவினைக் கட்டுகள் அறுந்து நலியும் வழியை ஏழை மாந்தர் அறிகிறார்களில்லையே!

உறுமா றறிவதும் உள்நின்ற சோதி;
பெறுமா றறியிற் பிணக்கொன்றும் இல்லை;
அறுமா றதுவான அங்கியுள் ஆங்கே
இறுமாறு அறிகிலர் ஏழையர் தாமே!

உலகில் கழிநடை அடிமைகளின் கற்பனைகளைக் கேளாமல், மாயச் சுழியில் விழும் துயரம் நீக்கி, பழிபாவங்களை விலகி நடப்பவருக்கு இறைவனை வணங்க இயலும். அதுவே சன்மார்க்கத்தைப்

பின்பற்றும் வகையாகும். அவ்வழியே மாதவம் சென்று நிலைத்தால், வல்வினைப் பற்றறும்; பற்றறுந்ததும் ஆங்கே பழி விலகும். மனம்போன வழிச் செல்லும் வலிய வினையாளர் கோலின்றி, இருளிடத்தை நோக்கிச் செல்வர், வருந்துவர். அருளிடத்தை நோக்கிச் சென்றால் உம்பர் தலைவனை சிவன் முன்னின்று ஆட்கொள்வான். அதுவே சமயப்பற்றினும் மேலான இன்பமாம்.

## எஎ. கொல்லாமை

சிவநெறி செல்வார் கடைப்பிடிக்கும் அறநெறியை இனிக் குறிப்பாம். அறத்திற் சிறந்தது கொல்லாமை - அஹிம்சை. மிகவும் பற்றுதலுடன் நமக்கு ஞானோபதேசம் செய்யும் சற்குருவைப் பல நன்மலரால் பூசிக்க வேண்டும்; அதைவிட மற்ற உயிர்களின் அணுக்களைக் கொல்லாமையே சற்குருவைப் பூசிக்கும் ஒள்ளிய மலராகும். உயிர்களை அணுவும் கொல்லக் கூடாது. உயிர்களின்மேலே ஒரு காயம் விழுந்தாலும், கிள்ளினாலும், அந்த இடத்திலுள்ள ஆயிரக்கணக்கான உயிரணுக்கள் இறக்கும்.

பற்றுய நற்குரு பூசைக்கும் பன்மலர்;
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்.

கொல்லாமையே குருமாரை வணங்க நல்ல மாலையும் ஆகும்; நடுங்காது நின்றெரியும் தீபம் போல அலையாது நிலைத்த சித்தமும் ஆகும். அந்தச் சித்தத்தில் இளைப்பாறும் உயிர், உச்சியில் சஹஸ்ராரத்தில் அமர்ந்திருக்கும். கொல்லுவதனால் சித்தம் கலங்கி உச்சியிலிருக்கும் ஆவி பிரியும். ‘குத்து’

'கொல்' என்று கூறும் மாக்களை வலிய எமதூதர் பாசத்தால் கட்டி 'செல்!' என்று தீவாய் நரகிடை ஓட்டி 'நில், அங்கே!' என்று நிறுத்தி வேதனைப் படுத்துவர்.

கோல்லிடு குத்தேன்று கூறிய மாக்களை
வல்லிடிக் காரர் வலிக்கயிற் றாற்கட்டிச்
செல்லிடு நில்லேன்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே.

## சஅ. புலால் மறுத்தல்

உலகில் புண்ணிய நாடு தென்னாடு; அதனாலேயே 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்றார் மாணிக்கவாசகர். தென்னாட்டின் பருவநிலை உயிர்க்கினிது; உடற்கினிது; வாழ்வுக்கு வேண்டிய தாவரப் பயிர்கள் இங்கே ஏராளமாக விளைகின்றன. தென்னாட்டவர் உயிர்க்கொலை புரிந்து ஊனுண்ண வேண்டியதேயில்லை. வடக்கே செல்லச் செல்ல ஊனுணவு மிகுதி. வங்காளத்தில் பிராமணர்கூட மீனுணவு கொள்வர்; காளிக்குப் பலியிட்டு ஊனுணவு கொள்வர். தமிழர் கடவுள் அன்பேயான சிவம்; அருளேயான சக்தி. தமிழர் சுத்த சைவர். தமிழ் நூல்களெல்லாம் புலாலுணவைக் கண்டிக்கின்றன; கொல்லா நெறியைப் போற்றுகின்றன. தமிழ்நாட்டில் ஆங்காங்கே மடமையால் நடக்கும் உயிர்க்கொலைகளை நிறுத்த வேண்டும்; கட்கடைகளை மூடுவது போலவே புலாற்கடைகளையும் மூட வேண்டும். உயிரைக் கொன்று அதன் ஊனை யுண்ணும் பெரும்

பாவம் தமிழ் நாட்டில் இனிக்கூடாது. சைவத் தமிழர் புலால் மறுப்புப் பிரசாரம் செய்யவேண்டும். ஊனருந்துவோரைத் திருமூலர் "புலையர்" என்கின்றார். பறையருக்கும் புலையருக்கும் விடுதலை முழங்கும் இந்நாட்களில் ஊனுண்ணும் புலையர் இருக்கலாமா? புலால் பொல்லாதது; இதை யுண்பவர் நீசர். எல்லாரும் காண அவர் இகத்தில் நரகமனுபவிப்பவர். அவரை எமதூதர் பற்றி மடித்துத் தீ நரகத்தில் மல்லாக்காகத் தள்ளுவர். பிறகு குப்புறத் திருப்பி வேதனைப் படுத்துவர். நரகக் குழியில் ஒருவனைக் குப்புறப் புரட்டிவைத்தால் எப்படி யிருக்கும்....?

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங்காண இயமன்றன் தூதுவர்,
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே!

கொலை, களவு, கள், காமம், பொய்யுரை, ஆகியவை மறுக்கத்தக்க பெரும் பாவங்களாம்.அவற்றை நீக்கவேண்டும். மனிதப் பிறவிக்குத் தலையான செயல் சிவனடி சேர்தலே; சிவனடிச் சேர்ந்தோர் இன்புறுவர்; அவர்களுக்கு மேற்சொன்ன ஐம்பிழைகளும் இல்லையாம். சிவங்கண்டவர் அவஞ்செய்யார்; அவர் புண்ணியர். எப்போதும் சிவஞானானந்தத்தில் இருத்தலே அவர் தொழிலாம்.

கொலையே களவு, கள், காமம், பொய்கூறல்
மலையான பாதகமாம்; அவை நீக்கித்
தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்கு
இலையாம் இவை; ஞானானந்தத் திருத்தலே.

## ௪௯. கள்ளுண்ணாமை

மனிதவாழ்வை வெறி நரகமாக்கும் பெரும் பிழை கள்ளுண்ணலாம். மனிதனுக்கழகு மதியுற நடத்தல்; மதி மயங்கினால் மனிதன் எதுவும் செய்வான்; விலங்கினும் கேடாக நடப்பான். மனித மதியை மயக்கி வாழ்வை நரகமாக்குவது கள். அதை ஒழிக்கவேண்டும். ஆரியவேதியர் சோமபானம் உண்டனர்; காளிதாஸ காவியங்களில் மதுபானம் சொல்லப்பட்டிருக்கிறது. மச்சம், மது, மாமிசம், மாது, மைதுனம் ஆகிய பஞ்சமகாரத்தால் வாமாசார தாந்திரிகள் சக்தியை வழிபடுவர். காளி கறுப்பனுக்கு மது மாமிசம் படைப்பார். இவற்றையெல்லாம் கண்டு கேட்டவர் இக்காலம் கள், ஜின், சாராயம், விஸ்கி, பிராந்தி முதலிய மயக்குகளையுண்டு குடிகெட்டலைகின்றனர். வேதகால சோமரசம் என்பது 'சோம மூலிகைச் சாறு' என்றால், 'நான் அடிக்கும் வெள்ளைக் குதிரையும் திராக்ஷா ரசந்தானே; கள்ளும் தென்னம் பாலே' என்பர் வம்பர். அவர்களுக்கெல்லாம் திருமூலர் அழுத்தமாகப் பதிலுரைக்கிறார். மூலர் காலத்தில் வாமாசாரிகள், காபாலிகர் முதலியோர் காமக் களியாட்டயர்ந்தனர். அவர்களைக் கண்டிக்கவே இவ்வதிகாரம் எழுதப்பெற்றுள்ளது.

கங்கை சூடிய சிவனை அடைந்தனுபவிக்கும் சிவானந்தத் தேறலே இன்பமளிப்பதாம்; அதை விட்டுப் பதநீரை முற்றப் புளிக்கவைத்த கள்ளையுண்பவர் ஒழுக்கங் கெட்டவராவர். அரிசி கழுவிய கழுநீர் உண்டால் பசுவுக்கு நலமாகும். அழுக்குகளெல்லாம் கழுவிவிட்ட கீழான, கெட்ட, சாக்கடை நீரைக்

குடித்தால் அதன் உடல் நோயுற்றுச் சுருங்கும். தாந்திர வாமாசாரிகள் சக்தி வழிபாட்டில் கள்ளுண்பர். அது சுத்தப் பிசகாகும். அப்படிக் கள்ளுண்பவர் கலங்கிக் கெடுவர். குடியர் குடிகெடுவர்.

வாமத்தோர் தாமும் மதுவுண்டு மாள்பவர்
காமத்தோர் காமக்கள் ளுண்டே கலங்குவர்.

ஓங்கார உபாசகர் நாதசித்திபெற்று உள்ளொளி கண்டு அதனுள்ளே கள்ளினும் இனிய சிவானந்த முணர்வர். சிவநாம ஜபம் செய்பவர் அத்தகைய இன்பத்தை நண்ணுவர். இந்த உள்ளுண்மை அறியாமல், பசு பாச வினைகளை அறியாமல், அன்பு வள்ளலாய் இலகும் பசுபதியின் அருளில் வாழாது, தெள்ளிய உண்மை ஞானம் அருளும் சிவயோகஞ் சேராது கள்ளுண்ணும் மாக்கள் கடைத்தேறார்; அவர் ஆகம தந்திர சாத்திரங்களின் கருத்தை அறியார்.

உள்ளுண்மை ஓரார் உணரார் பசுபாசம்
வள்ளன்மை நாதன் அருளினின் வாழ்வுறார்
தெள்ளுண்மை ஞானச் சிவயோகஞ் சேர்வுறார்
கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே!

சித்தம் உருக்கிச் சிவமாகும் சுத்த சமாதியில், ஆன்மாவுடன் ஒத்துநிற்கும் ஒப்பற்ற சிவானந்தத் தேறலை உண்ணலே ஆத்மானந்தந் தரும் அமுத பானமாகும். அதை உண்டவரின் குண்டலிசக்தி, பிரமரந்திரம் வரையில் எட்டி மூலாதாரத்தில் காலூன்றி நிற்கும். அப் பேறுபெற்ற சித்தர் நின்றும், இருந்தும், கிடந்தும் சத்தியின் விறுவிறுப்பை அனுபவிப்பர். காமமும் கள்ளும் உண்ணல் கலதி

கள் வேலையாம். சுத்தனுகிய இறைவன் திருவடியில் ஓம்-நிறைவான ஆனந்தத் தேறலுண்டவர்க்குப் பக்குவமான சமயத்தில், கொடிய மும்மலங்களும் நீங்கும்; மையலறுந்துபோம்; தெள்ளிய மதிப் பொலிவு எய்தும். பாசச் சமயங்களில் புகுந்து தீமை நிறைந்த மூடர், மதிமயங்கும் கள்ளையுண்பர்; அவர் மதியை மயக்கும் மாயையை அறியாமல் அதன் வலையிற்பட்டுழல்வார். மதிமயக்கத்தால் மாயையின் வீடாகிய மனவுலகைப் பார்த்தால் அது நம்மை மயக்கும். கள்ளானது வாய்மையழிக்கும். கள்ளுண்ட மதி மயங்கும்; தியங்கும்; கண்வலை வீசி இயங்கும். கள்ளுண்டவர் மடவார் முயக்கமே இன்பமென்றெய்துவார்; நயமான சிவஞான மெய்த முந்தமாட்டார்கள். சிவஞானமே இடையரு ஆனந்தமளிக்கும்.

மகா குண்டலினி விளையாடும் சஹஸ்ராரத்தில், துரிய நிலை உள்ளது. அதுவே இராப்பகல் அற்ற இடம். அந்த இடத்தில் உணர்வை வைத்து சகஜ சமாதியில் ஆழ்ந்தவர்க்கு, காலத்தின் இருவிகாரமான இரவு பகல், மனத்தின் இருவிகாரமான இன்ப துன்பம், உயிரின் இருவிகாரமான பிறப்பு இறப்பு—ஆகியவை இராவாம். பராக்கில்லாமல் இரவும் பகலும் அற்ற அந்தத் துரிய வெளியில் இருப்பவரே ஆனந்தத் தேறலுண்பார். மூலாதாரம், நாபி, இதயம், புருவநடு, சஹஸ்ராரம் ஆகிய ஐந்தும் திருவடி நிலையங்கள் (பாதுகா பஞ்சமம்) ஆகும். இவ்வைந்தில் இதயமும், சஹஸ்ராரமும் முதன்மையானதியான நிலையங்களாம். உச்சத் திருவடி இராப் பகலற்ற இடத்தில் உள்ளது; அந்த இடத்தையடைந்து ஆனந்தம் பருகாதவர் மாயை நீங்கார், மயக்கொழி

யார். அவர் இரவுபகலாகிய இருவிகாரத்தில் உழல்வர்.

இறைவனடிபற்றி இன்பத் தேனுண்பார்க்கு இருவிகாரமாகத் தோன்றும் இராப்பகல் மாயை ஏனோ? இராப்பகல் மாயை அவர்களுக்கில்லை.

இராப்பகல் அற்ற இடத்தே இருந்து,
பராக்கற ஆனந்தத் தேறல் பருகார்,
இராப்பகல் அற்ற இறையடி, இன்பத்து
இராப்பகல் மாயை இரண்டிடத்து ஏனோ?

சாக்த சமயத்தவர் சக்தியை வேண்டிக் கள்ளுண்டு தம்மை மறந்து மதிமயங்குவார். அவரது ஜீவசக்தி அழிந்ததென்க! சிவ ஞானத்திலே தலைப்பட்டுச் சத்தியம், ஞானம், ஆனந்தம் (சச்சிதானந்தம்) பெறுதலே சக்தியாம்.

சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்;
சத்தி அழிந்தது தம்மை மறத்தலால்;
சத்தி சிவஞானந் தன்னில் தலைப்பட்டுச்
சத்திய ஞான னந்தத்திற் சார்தலே.

சாக்தன் அருளைத் தந்தால் சக்தி அருளுண்டாகும். சாக்தன் கள்ளுண்டு மருளைத் தந்தால் சக்தியருளெய்தாதென்க. சக்தியருள் தந்தால் சாக்தனுக்கு அருளுண்டாகும்; கள்ளுண்ணும் மயக்கமுண்டாகாது. சாதகன் சத்தியாகிய குண்டலியை சஹஸ்ராரமாகிய சிவத்துடன் பொருத்திவைக்க வேண்டும். அவ்வாறாயின் சத்தியமாக அஷ்டமா சித்திகளும் எய்தும். சக்தியும் சிவமும் ஒரு மின்சாரத்தின் இரண்டு மின்னோட்டம்போலும்.

சத்தன் அருள்தரின், சக்திஅருள் உண்டாகும்;
சத்தி அருள்தரின் சத்தன்அருள் உண்டாகும்;

சத்திசிவமாம் இரண்டும் தன்னுள் வைக்கச்
சத்தியும் எண்சித்தித் தன்மையும் ஆமே!

தத்துவவாதம், மருள், கள்மயக்கம், பொய்த் தவம்—இவை நீங்கி, தானேதானுகி, மேற்சொன்ன படி சிவமும் சக்தியும் சேர்ந்த உண்மையான போகத்துட் புகுந்து, உடலுடன்கூடிய இகசுகத்தையும் அனுபவித்து, பரமானந்த சித்தி யெய்தத் துணையாவது சிவானந்தத் தேறலாம்.

தத்துவம் நீங்கி, மருள்நீங்கித் தானுகிப்
போய்த்தவம் நீக்கி, மெய்ப் போகத்துட் போகியே,
மெய்த்த சுகமுண்டு விட்டுப் பரானந்தச்
சித்திய தாக்குஞ் சிவானந்தத் தேறலே.

காற்றையடக்கி, (வாசியடக்கி), ஒள்ளிய மதி மண்டலத்தில் சுகானந்தச் சிவபோதாமிருதத்தை உண்டுபண்ணுவோரே யோகிகளாவர். அவர்களே அஷ்டமாசித்தி பெற்றவராவர். மோகிகள் கள்ளுண்டு மூடராய் மீண்டும் மீண்டும் பஞ்சமகார மோகத்தில் அழுந்தி, மதமேறி, அறிவழிந்து கெடுவர்.

யோகிகள் கால்கட்டி ஒண்மதி ஆனந்தப்
போத அமுதைப் போசித்தவர் எண்சித்தி,
மோகியர், கள்ளுண்டு, மூடராய் மோகமுற்று
ஆகும் மதத்தால் அறிவழிந் தாரே.

சக்தி ஊறும் ஊற்றான மதிமண்டலத்தைத் திறந்து அமுதம் உண்ணுமின்; குருபரனை சிவன் இணையடித் தாமரையை எண்ணுமின்; சகஜ சமாதியை நண்ணுமின்! அச்சமாதியால், நாடிசஞ்சாரத்தால், நலங்காணும்.

நாடிகளில் சக்தி ஓட்டம் உணர்வாகும். அச் சக்தி சுழுமுனை வழியே மேலேறும். அதேறும் கண் (துளை) நுட்பமானது. அக்கண்ணூற்றேடே சென்றால் திருவடிக்கு வழிகாணும்; அவ்வழிச் சென்று திருவடியடைவீர்!

உண்ணீர் அமுதமும் ஊறும் ஊறலைத்திறந்து
எண்ணீர் குரவன் இணையடித் தாமரை
நண்ணீர் சமாதியில் நாடிநீரால் நலம்
கண்ணூற் றேடேசென்று கால்வழி காணுமே!

## ௫௦. பிறமாதரைச் சேராதே

ஆண்மையும், பெண்மையும், சிவமும், சக்தியும் போலும். ஒரு மின்மீட்டியில் நேர், நிலை மின்னேட்டங்கள் இருப்பனபோலே உலக வாழ்வில் ஆண் பெண் தன்மைகள் உள்ளன. இரண்டும் சேர்ந்தே வாழ்க்கை, உலகம். மழையும் நிலமும் சேர்ந்துதான் பயிர் வளமையாகும். பெண் நிலம்போலும்; ஆண் விதைபோலும்; இருவருக்கும் தளிர்க்கும் காதல் நீர் போலும்; சக்தியின்றிச் சிவனுக்குத் தொழிலில்லை, ஆடலின்பமில்லை. பெண்ணின்றி ஆணுக்கு வாழ்வின்பமில்லை, விரிவில்லை.

பெண்ணின் பெருமை எல்லையற்றது (யோகசித்தி குடும்ப வியலைப் பார்க்கவும்); ஆனல் மனிதன் பெண் சக்தியை அறியவில்லை. தனது காமத்தினைத் தீர்க்கும் ஒரு யந்திரமாகப் பெண்ணை மதிக்கிறன் மனிதன். பெண்ணைச் சக்தியென வணங்கினல் சக்தி வரும். வெறும் காமப்பாவையென இழிவுறுத்தினல் காமத்தாலாகிய நோயே மல்கும். ஆண்

பெண் காதல் உலகவளர்ச்சிக்குரிய மாயாசக்திக ளில் ஒன்று. பசி, உறக்கம் ஆகியவைபோலக் காத லும் ஒரு உயிர்த்தேவை. காதல் மரபை வளர்க்கும் ஒரு சக்தி. அதைச் சுயநலச் சுகபோகத்திற்காக மனிதன் பயன் படுத்துகிறான். அதனாலேதான் ஆண் பெண் வாழ்விற் பல சிக்கல்களும் நோய்களும் விளைகின்றன. பழைய ஞானநூல்கள் பெண்களைப் பற்றி இழிவாகப் பேசுகையில், நெறியில்லாக் காமத்தைப் பற்றி இழிவாகப் பேசுவதாகவே கொள்ளவேண்டும்.

திருமூலர் விளக்கும் யோகம் வைதிக-தாந்திர யோகம்; இருபாலாரும் உள்ளொன்றி இயற்றும் யோகம், பூரணசக்தி யோகம். இந்த யோகம் புரு ஷன் பிரகிருதி சேர்ந்தியற்றும் யோகமாம். இந்த யோக சாதகனுக்கு முதல் யோக்கியதை பெண் ணைச் சக்தியாக நினைத்தல், காமசிந்தனையை அறவேயொழித்தலாம். கேவலம் உடலையும் குறி களையும் கண்டு மயங்கக்கூடாது என்று உறுத்தவே திருமூலர் இரண்டு அதிகாரங்களில் பெண்ணைப்பற் றிச் சொல்லுகிறார்; முதன்மையாகப் பிறமாதரை இச்சிக்கும் பாவத்தை கண்டிக்கிறார்.

நேசமுள்ள மனைவி வீட்டிலிருக்கையில், கற் பைக் காத்து நிற்கும் பிறன் மனைவியைக் காமுறும் வாலிபக் காளைகள் வீட்டில் காய்த்துப் பழுத்த பலாக்கனியுண்ணாமல் காட்டிலுள்ள ஈச்சம்பழத்தை உண்ண வெகு இடர்ப்படுவோரைப் போல்வர்.

ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே,
காத்த மனையாளைக் காமுறும் காளையர்,

காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு இடருற்ற வாறே.

தாம் திருத்தி வளர்த்த தேமாங்கனியை அருந்தோம் என்று உண்ணுமல் அறையில் புதைத்து விட்டு, உடலுக்கும் மனத்திற்கும் பொருத்தமில்லாத புளிமாங் கொம்பேறிக் கீழே விழுந்து காலையொடித்துக் கொள்வரோ? சொந்த மனைவி கட்டி மாம்பழம் போல் இனியள். கற்புள்ள மனைவியுடன் கலந்து வாழ்வது எல்லா வகையிலும் இனிதாகும். தர்மபத்தினியை வீட்டில் அடைத்து வைத்துவிட்டு, அயல் மனைவியை நாடுவோன் இடர்ப்படுவான். பிறமாதர் சேர்க்கை உடலைக் கெடுக்கும்; உயிரைக் குறைக்கும்; மனத்தைக் கெடுக்கும். அவரை அணுகும் போதும் அச்சம், கூடும்போதும் அச்சம். உடையவன் கண்டு பிடித்தால் தடிக்கம்புப் பூசை தவறாது; கால் ஒடியும்; மண்டை சிதறும்; ஊரார் அறிந்தால் அவமானம்.

திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை
'அருத்தம்' என்றெண்ணி அறையிற் புதைத்து
பொருத்த மிலாத புளிமாங் கொம்பேறிக்
கருத்தறி யாதவர் காலற்ற வாறே.

காமசுகம் இருள் வெளியில் மின்னல் போன்று மினுக்கி மறைவதாம். அதையே சுகபோகம் என மயங்கித் தேனில் விழுந்த ஈப்போலக் காமந் துய்ப்பவரும், செல்வரும் பெண்களைக் கண்டு மதிமயங்கி மையலுறுகின்றனர். அவர் மதிமயக்கத்தை மாற்ற முடியாது; மீண்டும் மீண்டும் சிற்றின்பச் சேற்றிலேயே வீழ்வர்.

பொருள்கொண் டவனும், போகத்தை ஆளும்,
இருள்கொண்ட மின்வெளி கொண்டு நின்றோரும்
மருள்கொண்டு மாதர் மயலுறு வார்கள்
இருள்கொண்ட சிந்தையை மாற்றகில் லாரே.

இவ்வாறு மயங்கி வீழ மாதரிடம் என்ன சுகம் உள்ளது! அறிவாளி சிந்தித்துப் பார்க்கவேண்டும். மாதர் முலைநலம் கொண்டு முறுவல் செய்வர்; அவரிடையே நெஞ்சை விட்டலையாதீர்கள்! மாதரிடம் செல்லும் மனதைக் கண்டித்துத் திருப்பி வசப் படுத்துங்கள்! குலைகுலையாக எட்டி பழுத்தாலும் அதை உண்டு பசியாற முடியுமா? எட்டிப் பழம் அழகானதென்று சாப்பிட்டால் கசக்கும்; உயிரைக் கொல்லும். அதுபோலவே பிறமாதர் முலையும் இடும்பை செய்யும்.

முலைநலங் கொண்டு முறுவல் செய்வார்மேல்
விலகுறு நெஞ்சினை வெய்துகொள் ளீரே.

இல்லறத்தில் வாழ்வோர் மனைவியைக் காமசிந்தனையுடன் நாடாதீர்! அது சுனைபுகும் நீர் போல் சுழியுடையது; அச்சுழி அகப்பட்டோரை இழுத்துத் துன்பத்தில் ஆழ்த்தும், வருத்தும், கொல்லும். கசிந்தெழும் மாதர் இன்பம் கனவுபோல நிலையற்றதாகும். அதை நனவு, உண்மை என்று நாடவேண்டா. சிற்றின்பத்திற் சிக்கி விழிக்காதீர்!

மனைபுகு வார்கள் மனைவியை நாடில்
சுனைபுகு நீர்போற் சுழித்துடன் வாங்கும்
கனவது போலக் கசிந்தெழும் இன்பம்
நனவது போலவும் நாட வொண்ணுதே.

வயதிற்கேற்ற இளம் மாதரை மணம் புரிந்து கற்புடன் அவர் தோளைப் புல்லிப் புணர்ந்தவர் இயல்பான இன்ப வாழ்வை எய்துவார்.

இயலுறும் வாழ்க்கை, இளம்பிடி மாதர்
புயனுறப் புல்லிப் புணர்ந்தவர் எய்தும்.

இந்த வாழ்விலும் மனமயக்கம் வரும்; கவனமாயிருக்க வேண்டும்! இத்தகைய நல்லறமாகிய இல்லறத்திற்குப் புறம்பாகப் பேசி, மாதர் மையலில் திரிந்தவர் திருவகன்று, நலமகன்று கெட்டொழிந்தனர். மெய்ம்மனமுடைய பெரியார் உள்ளம் உலகில் அன்னிய மாதரோடு கூடினல் என்ன பயன்? அதில் ஒரு சுகமும் இல்லை. பிறமாதரைச் சேரக் கூடாது என்று பெரியார் விதிசெய்து வைத்தனர். கருப்பஞ்சாறு இனிதே. ஆனல் ஆலையில் கொதிக்கும் சாற்றைக் கையிலேந்திக் குடித்தால், உடல் வெந்து நோகுமல்லவா? இயல்பான இல்லறத்தில் பெண்ணுடன் கூடிவாழ்வதே இன்பம். பிறமாதரைச் சேர்தல் துன்பமாம்; அது கோழை ஒழுக்கம். குளத்தை மூடும் பாசியில் ஆழ நெல்கட்டு அளந்து கொட்டலாமா? குளத்தில் பாசி வேர்க்கொள்ளாது; அதில் பயிர் நடமுடியுமா? முடியாது. அதுபோலப் பிறமாதர் பசப்பு மொழியும், மினுக்கும், நகையும் மேல் பூச்சுத்தான்! அவர் அன்பு ஆழமானதன்று, அகத்ததன்று; புறத்தது. நிலையற்ற மாதர் மையலில் விழுவாரைக் கண்டித்துத் தடுக்கவேண்டும்; இன்றேல் அவர் குழியில் விழுந்தவர் கெட்டே போவர்.

# நூல் - ரு.

## உயிர்மெய் விளக்கம்

### ருக. நிலையாறு செல்வம்

செல்வம் இருவகைத்து: அருட்செல்வம், பொருட்செல்வம். அருட் செல்வம் நிலைபேருகும், இன்பேயாகும். பொருட்செல்வம் ஈட்டவும், பூட்டவும், காக்கவும், ஈயவும், இழக்கவும், வரவும், செல்லவும் பெருங் கவலைதரும். பொருட்செல்வத்தை ஒருநாள் விட்டுச் செல்லத்தான் வேண்டும்; அருட்செல்வம் நம்முடனே வரும். பொருட்செல்வம் உடலைப்பற்றி நிற்கும்; உடலுடன் விலகும். அருட்செல்வம் உயிரைப்பற்றி நிற்கும்; உயிருடன் சென்றுதவும். ஆதலின் பகுத்தறிவாளர் புவிச் செல்வத்தையே கருதாமல் சிவநேசமாகிய அருட்செல்வத்தைச் சேர்க்கவேண்டும்.

யானையும், தேரும், படை பண்டாரங்களும், அரியணையும், கூடிவரும் பெரும் பொருளும் பிறர் கைக்குச் செல்லும். தனது சாயல் தனக்குதவாது; எனது யான் என்றிருப்பவர் ஏழையர். மாந்தர் மகிழும் செல்வம் வேதவெள்ளத்தில் உடனே கவிழ்ப்போகும் மரக்கலம் போலும்.

செல்வம் நிலையற்றது; அது திங்களைப் போல வளரும், தேயும், தோன்றும், மறையும், வரும், போகும். வீடு பேற்றிற்கான தானதருமங்களைச் செய்யவே செல்வம் வந்தது; செல்வர், தமது செல்

வத்தைத் தாமே பூட்டி வைக்காமல் பலருக்கும் பய ஞம்படி விரிவாக வழங்குக! அந்த ஈகை உயிர்க் குத் துணையாகும். எவ்வளவு செல்வ மிருந்தாலும் உயிரை விலைக்கு வாங்க முடியாது; எமதூதர் உயி ரைக் கொண்டே போவர்; ஐம்பூதக்கூடு பிடிசாம்ப லாகும், மண்ணுகும். ஆசைக்கு அளவில்லை; யாக் கைக்கு நிலையில்லை; இவ்வுடலை யாரும் நீடித்து வைக்க முடியாது; அதற்கு ஒன்பது வாயில் உள் ளது. உயிர் ஒருநாள் ஓடிப்போம்; தாய்தமரெல் லாரும் கருமாதிகளைச் செய்து கைகழுவிச் செல்வர். உயிரை யாரும் நிறுத்த முடியாது; மணமலர்களில் வண்டுகள் தேன் எடுத்து ஒரு கொம்பில் கூடுகட்டிச் சேர்க்கின்றன. வலியமாந்தர், தேனீக்களை ஓட்டி, கூட்டை உடைத்துத் தேனைக் கொள்வர்; தேனீக் கள் தங்கள் தேன் பொருளைக் கைவிட்டுச் செல் லும். அதுபோலவே மாந்தர் செல்வத்தையும் வலி யவர் கொள்வர்.

ஈட்டிய தேன்பூ மணங்கண்டு இரதமும்
கூட்டிக் கோணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்;
ஓட்டித் துரந்திட்டு அதுவலி யார்கொளக்
காட்டிக் கொடுத்தது கைவிட்டவாறே.

ஆதலால் உடலில் உயிருள்ளபோதே அருட் செல்வனுகிய இறைவனைச் சேர்மின்; செல்வ மயக் கத்தைவிட்டு, இறைவனை நாடுமின்! ஒளியின்றிக் கண் காணுது; அவ்வொளியையும் உள்ளிருந்து ஒருவன் காண்கிறன்; அக்காண்பானைக் காணு மின்! அனைத்தையும் ஜீவசாட்சியாகப் பார்க்கும் முதல்வனே நிலையானவன்; நன்ருக இதைத்தெளி மின்! தெளிந்த அறிஞர் உலகச் செல்வம் வந்தா

லும் போனாலும் கலங்கற்க; மனத்தைக் கலக்கி மலக்கி மயங்கற்க! ஆற்றுப் பெருக்கு புதுப்புது வெள்ளமாக வரும்; அனைத்தையும் உயிர்களுக்கும் பயிர்களுக்கும் அளிக்கும். அதுபோலே தன்னலம் மறுத்து, பூட்டிப் பூட்டிக் காப்பதை மறுத்து, ஆற்று வெள்ளம் போலே வழங்கினால் எமன் வரும்போது. 'அச்சமில்லை, கவலையில்லை' என்று குதித்து மகிழலாம். ஈகையால் பாபம் ஒழியும்!

தேற்றத் தெளிமின்; தெளிந்தீர் கலங்கன்மின்;
ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே
மாற்றிக் களைவீர் மறுத்துங்கள் செல்வத்தைக்
கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே.

## ருஉ. இளமை.

காலை எழுகிறது. கழிகிறது; மாலை இரவாகிறது சூரியன் கிழக்கே யுதிக்கிறது. உலகம் ஒளி பெறுகிறது; அழகாக நிலவுகிறது. வானில் சென்று மேற்கே விழுந்து சுடர் மறைகிறது. மாந்தர் இதை நாளும் காண்கின்றனர். இளங்கன்று துள்ளி விளையாடுகிறது; முதிர்ந்து எருதாகிறது; சில நாளில் முதுமையடைந்து வீழ்கிறது. இளமை நிலைப்பதில்லை; இதைக் கண்டும் மாந்தர் அறியாதிருக்கிறார்கள்.

கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர்;
குழக்கன்று மூத்து, எருதாய்ச் சிலநாளில்
விழக்கண்டும் தேறார் வியனுல கோரே!

பிள்ளை மூத்துத் தந்தையாகிறான்; தந்தை பாட்டனாகிறான். இந்தக் கோலங்களைப் பூண்டும்,

மாந்தர் இப்படி மாறும் உடற்சட்டைக்குள் இருப்பவன் யார் என்று புகுந்தறியா திருக்கின்றனர். நீண்டகாலம் வாழ்ந்தாலும் ஒருநாள் யாக்கை அழிய வேண்டும். எவ்வளவு தூண்டியெரித்தாலும் சுடர் குறைந்து கொண்டே வரும். இளமையெழிலும் வயதாக வயதாகத் தேய்ந்து அற்று ஒழியும். முன்னே இளந்திறலுடனிருக்கையில் மெல்லியல் மாதர் கருப்பஞ் சாறுபோல் என்னை விரும்புவர்; அவர் உதட்டமுதைப் பருகுவேன்; அரும்பு முலையை அணைவேன். முன்னே அவர்களுக்குக் கரும்புபோல் இனிமையாயிருந்தேன்; இன்றோ வயதாய் முதிர்ந்தேன்; இளநலங் குலைந்தேன். உடல் சக்கைபோலானது. பெண்டிருக்கு என்னைக் கண்டால் இப்போது எட்டிபோல் கசக்கிறது.

> விரும்புவர் முனஎன்னை மெல்லியல் மாதர்
> கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போல்;
> அரும்போத்த மென்முலை ஆயிழை யார்க்குக்
> கரும்போத்துக் காஞ்சிரங் காயும்ஒத் தேனே!

பாலன் இளையனாகி, முதியனாகிறான்; அதைக் கண்டும், இளமை நிலைக்காது என்பதை உலகோர் அறியார்!

> பாலன், இளையன், விருத்தன் எனநின்ற
> காலங் கழிவன கண்டும் அறிகிலார்.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம், இந்திரியம் எல்லாம் ஓர் உடற்பையில் வாழும்; இவை நிலையில்லா விலங்குகள்போலப் பறந்தலையும். இவை உயிருடன் ஒருநாள் நீங்கும்; அப்போது உடற்பை

யும் மண்ணாய் மறையும். கண்ணும் கதிரும் உலகைக் காண்கின்றன; அளக்கின்றன. கண்ணிற் காண்பான் யார் என்பதை உலகோர் அறிகிலர். அவன் பதினாறு கலையுடனும் அனைத்துளும் நிற்கிறான். அவனை உலகினர் அறிகிலர்; கருக்குழியில் போய் விழுந்து திகைப்பர். இளமை எய்திய காலத்திலேயே இறைவனை இசைத்து ஏத்துங்கள்! உடலுள்ளபோதே அமைதியாயிருந்து தியான மோன சமாதிகளால் இறைவனைக் காணுங்கள்! அதுவே இளமையின் பயனும்.—எய்திய நாளில் இருந்து கண்டேனே.

## ருரு. உயிர் நிலையாமை

பசும்பூங் கொம்பில் அழகான மலர்கள் செழிக்கின்றன; காலையில் அவை புன்னகைக்கின்றன; நனிமணக்கின்றன; சிறிது நேரத்தில் எல்லாம்வாடியுதிர்ந்து மண்ணாகின்றன. இப்படியே உயிரிழந்து உடலும் வாடி வீழ்ந்து மண்ணாகிறது. இக்காட்சியைக் கண்டும் மாந்தர் குற்றமற்று என்றுமுள்ள இறைவனடி போற்றாமலிருக்கின்றனர்; சாவு வந்தழைக்கும் போது தம்மை அறியார்; தத்துவமறியார்; உடலைப் பிரிந்து செல்வர்.

> தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்
> இழைக்கின்ற தெல்லாம் இறக்கின்ற கண்டும்
> பிழைப்பின்றி எம்பெரு மானடி ஏத்தார்;
> அழைக்கின்ற போதறி யாரவர் தாமே!

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் ஆகிய பஞ்சப்பிராணன்களும் நிலமாகக்

கொண்டு உடலைக் காக்கின்றன. ஐம்பூதத் தலைவன் ஒலை வந்ததும் அந்த ஐந்தும் காவலைவிட்டு உடலை உதறிச் செல்லும்—ஐவரும் அச்செய்யைக் காவல் விட்டாரே! உடல் ஒரு மத்தள வாத்தியம் போலும்; இதயத்துடிப்புகள் இரண்டும் அதற்குத் தாளம் போடுகின்றன; அத்தாளத்தாலேதான் இரத்த ஓட்டம், நாடி ஓட்டம் ஏற்படும். அதனாலே தான் காற்றுப்பை மூச்சை யிழுத்து விடுகிறது; அதனாலே பஞ்சப் பிராணன்களும் உயிரை இயக்குகின்றன; உடலுக்கரசனாக, உயிர்க்குயிராக இறைவன் இதயத்தில் உள்ளான். பிராணன்போனால் இந்த உடலென்னும் மத்தளம் சத்தாதி தன்மாத்திரைகளற் றொடுங்கி மண்ணாகும். மலைமிசை உறையும் இறைவன், மலையாளி, சிவபிரான், வேதாந்தக் கூத்தன்; வேதங் கடந்த விழுப்பொருளாகி, இதயத்தில் திருவடி தூக்கி நடமாடுவோன். அவன், சில காலம் உயிர்த்து, உயிர் பிரிந்ததும் தீயில் வேகும் கடம்போன்ற இவ்வுடலுள் விளையாடுகிறான்; இது வெந்தழியும் கடமாயிற்றே, இதனுள் உறையும் இறைவனுக்கும் அழிவுண்டோ? இல்லை; அவன் அழியா நிலைபொருள். உடலைத் தாங்குவோர் அதற்குயிரான இறைவனை அறியவேண்டும். தனது ஒளி-வெப்ப உணர்வால் திவாகரன் பத்துத் திசைகளையும் அளந்து பரவி நிலாவுகிறான். அதே போல இறைவன் தனது அருட்கதிரால் எல்லா வுயிர்களிலும் பரவியுள்ளான். அலையும் புலனடக்கி உள்ளத்தில் நினைத்து அத்திருவருளிறைவனை உலக மாந்தர் அறியார். அவர் நாடோறும் சாவுணர்வையே பொருந்தி அழிவையே நோக்கித் திரிகின்

றனர்; அருளை அறியார்—ஆ இதென்ன மாயம்! கருமயிர் வெண்மயிராகிறது; உடற்சட்டையைக் காலம் கிழித்தெறிகிறது; நாட்கள் மேன்மேலும் செல்கின்றன. மூன்று கொம்மையுள்ள அடுப்பில் பஞ்சாக்கினிகளால் (காமம், வெகுளி, சடம், தீபனம், இராகம்) கொள்ளி கொண்டு எரியும் உலைபோன்றது மனித வாழ்க்கை; அந்த உலையில் உயிராகிய அரிசி கொதிக்கிறது. உயிருள்ளபோதே காமம், வெகுளி, இராகத் துவேஷம் ஆகிய தீக்களை அவித்து, அரிசியைத் தானம் செய்யுங்கள்! உயிரை இறைவனடியிலும், அவனடியார் தொண்டிலுமே ஈடுபடுத்துங்கள்! உயிர்நிலை, நாண்மலர்த் தேன் போன்றது; அதைக் காலமென்னும் வண்டு வந்து உண்டு தீர்க்கும்.

இன்புறு வண்டிங் கினமலர் மேற்போய்
உண்பது வாச மதுபோல் உயிர்நிலை.

இத்தகைய உயிரைக்கொண்ட உடலில் முச்சுடர் நிலயமான சஹஸ்ராரம் உள்ளது. அங்கே இறைவன் உள்ளான். அவனைச் சிலர் இன்புற நாடி நினைப்பர்; அப்படி நினைப்பவர் கண்களைப் புறம்நாட விடக்கூடாது; கண் புறஞ்சென்றால், புலன்மனம் அதன்வழியே செல்லும்; பிறகு கருத்தில் முச்சுடர் இறைவன் நில்லான்—கண்புறம் நின்ற கருத்துள் நில்லானே. உயிர் உடலைவிட்டுப் போகும்; அதற்காகும் விதி அதுவே; இந்நிலத்தைவிட்டு உயிர் மேனிலம் செல்லும்—அதன் விதி. உயிருள்ளபோதே அறஞ்செய்மின்; சுத்தனை இறைவனையே நாடுமின்; அவன் புகழே போற்றுமின்!

அதுவே மனிதரானவர்க்கு அருமையான செயலாம். இதுவே நாம் வேண்டும் விதி யென்போம்.

ஆம்விதி நாடி அறஞ்செய்மின்; அந்நிலம்
போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமின்!

உயிர் நிலையில்லை; வஞ்சமும் பொறாமையும் பேசித் தீமை செய்து அறங்கெட்டு நிற்காதீர்கள்! கொடியராகிப் பிறர் பொருளைத் திருடாதீர்கள்! செவ்வியராகி, நல்வழியில் பொருளீட்டிச் சிறப்பாக உண்ணுங்கள்; உண்ணும்போது யார் வந்தாலும், கொஞ்சம் இட்டுண்ண ஓர் அகப்பை தயாராக வைத்திருங்கள். நேர்ந்தபோதே இட்டுண்ணுங்கள்!

அவ்வியம் பேசி, அறங்கேட நில்லன்மின்
வெவ்விய ஞகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்விய ஞகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்விக்கொண் டுண்மின் தலைப்பட்ட போதே!

## ருச. உடலின் நாடகம்

ஒரே மண்; அது இருவினைப் பாத்திரமானது; உயிருள்ளமட்டும் அது திண்ணென்றிருந்தது; அதில் மீண்டும் தீவினை சேர்ந்தது; மழை பெய்தால் பச்சை மண் பாத்திரம் கரைந்து மண்ணுகிறது; அதுபோலவே எண்ணிறந்த மண்ணுடல்கள் இறந்து மண்ணுகின்றன; மாந்தர் இறக்கின்றனர். உடனே, "ஐயோ போனுயோ, அப்பா போனுயோ!" என்று உற்றார் உறவினர் ஊரரெல்லாம் ஒப்பாரி வைத்தழுகின்றனர். "சிவம்" என்று பேரிருக்கும்; இப்போது "சவம்" "பிணம்" என்றழைப்பர். பிணத்தைத் தூக்கிச் சுடுகாட்டில்

கட்டை யடுக்கி எரித்துக் கருமாதி கழித்துத் தலை முழுகி "ஹ்ூம், அவ்வளவுதான் அவன் தலையெழுத்து!" என்று நினைப்பொழிவர்.

ஊரெல்லாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி, நினைப்பொழிந் தார்களே!

உடம்பு ஒரு சிறுகுடில்; தின்பண்டங்களைப் பெய்து அதை வளர்க்கின்றனர். இவ்வுடலிலுள்ளவன் மனைவி மக்கள் சுற்றம் என்று பலரை நேசிக்கிறான்; அல்லும் பகலும் அவர்களுக்காக உழைத்துச் சம்பாதிக்கிறான்; அவன் சம்பாத்தியத்தை அவர்கள் உண்கின்றனர். ஒருநாள் மண்ணுடல் பழகி விழுகிறது; அதில் வசித்த உயிர் எங்கோ ஓடிச் செல்கிறது. பிறகு? செல்வம் வீட்டுடன்; மனைவி தெருவுடன்; மைந்தர் சுடுகாட்டுடன் நிற்பர். யாரும் உயிரைப் பின்பற்றிச் செல்ல முடியாது. அவரவர் கொண்ட விரதமும் ஞானமுமே உயிருக்கு உறுதுணையாகப் பின்செல்லும். புண்ணிய பாவங்கள் சூக்ஷ்ம சரீரத்தைப்பற்றி ஆவியுடன் செல்லும்.

பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செல்வர்;
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே.

இவ்வாறு பிரிந்த வுயிர் மீண்டும் உடலிற் புகாது; வினைமுற்றி உயிர் பிரிந்து செல்கிறது. பிறகு? கட்டியணைந்த பெண்டிரும் "அஞ்ஞைஞ்ஞே பிணம்!" என்று மூக்கைப் பொத்தும்படி நாறுகிறது; நாற்

றப் பிணத்தை என்ன செய்வது? காக்கைக்குப் பலி போட வேண்டியதுதான். "சமைக்கச் சொன்னார்; உண்டார்; பெண்டிருடன் தனியே கூடினார்; 'இடது பக்கம் கொஞ்சம் வலி' என்றார்; படுக்கையில் விழுந்து படுத்தார்; எழுந்திருக்கவில்லை; மீளா வுறக்கம்—இறந்தார்!"

அடப்பண்ணி வைத்தார்; அடிசிலை உண்டார்;
மடக்கோடி யாரோடு மந்தணங் கொண்டார்;
'இடப்பக்கமே இறை நொந்தது' என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே!

இதுதான் மாந்தர் வாழ்க்கை! உலகமாந்தர் மாடமாளிகை கட்டுவர்; மன்றிற் கொலுவிருந்து அதிகாரம் செலுத்துவர்; சேவகர் புடைசூழ சிவிகையேறிச் செல்வர்; தமது புகழுக்காக மன்றத்தில் கோடி சன்மானம் வழங்குவர்; ஒருநாள் உடலை உதறிச் செல்வர்; அதற்குமுன் "அத்தா," என்று இறைவனை வழுத்தித் திரியார். பெண்டிர், "தென்றல் எரிக்குதே, மதி சுடுதே!" என்று தமது விரக வேதனையைப் பேசுவர்; மணப்பர், புணர்வர்; சில காலம் சுகிப்பர்; பிறகு நேசம் தெவிட்டும்; மனம் கசக்கும்; நினைப்பும் ஒழிவர். ஆள் ஒருநாள் இறப்பான்; கட்டையைப் பாடையில் வைத்துக் கொண்டு போய் எரித்துப் பிண்டம் போட்டு வருவர். நமது கருத்தறிந்து ஊட்டியவர்; நம்முன் நெய்விட்டுப் பிசைந்து சோறுண்ட பெரியார் எல்லாரும் காலம் சென்றனர். அரசன், ஆசான், அப்பன், அன்னை, அண்ணன் ஆகிய ஐவர் விடைபெற்றுச் சென்றனர். மனைவி யிருக்கிறாள்; மாடிருக்கிறது. அவருடனே யாவது எப்போதும் இருக்க முடியுமா? இதோ

அவர்களிடமும் விடைகொண்டு உடலை விட்டேக வேண்டியதுதான்! இரண்டு கால், இரண்டு கை, எலும்புகள், நரம்புகள், குடல்கள், நாடி நாளங்கள் இவற்ருலாகித் தோல் மயிர் மூடிய குடில் இவ்வுடல்; பந்தல் பிரிகிறது; குடில் சிதைகிறது; தூல சூக்கு மப் பண்டம் நிறைந்த உடல் கட்டு விடுகிறது; ஒன் பது வாசலும் ஒக்க அடைக்கின்றன; சாந்துயர் மேலிடுகிறது; உயிர் புறப்பட்டுச் செல்கிறது; அன் புடையார் ஒரு குரல் கட்டியழுது அத்துடன் செல் கின்றனர். இருக்குமட்டும் நாட்டுத் தலைவன், ஊருக்கு அரசன்! தேரும் சிவிகையும் ஊருகிறான்! முடி வில்? காட்டுமூங்கிற் பாடையில் ஏறிச் சுடலை நாட் டிற்கு நடக்கிறான்; தன் ஆட்சியிலிருந்த நாட்டினர் பாடையின் பின்னே செல்கின்றனர்; முன்னே பிணப்பறை கொட்டிச் செல்லுகிறது; பல்லக் கேறி னவன் பாடையிலே போகிறான்,

நாட்டுக்கு நாயகன். நம்மூர்த் தலைமகன்,
காட்டுச் சிவிகையொன் றேறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே.

ஊன்மதிலுடைய உடற் கோயிலில் உயிர் வாழு கிறது; கோயில் சிதைகிறது; உயிர் பிரிகிறது; அதை நேசித்தவரும் பிணத்தைப் பாடையிலே கொண்டுபோய்ச் சுடுகாட்டில் எரித்து அத்துடன் கையைக் கழுவிச் செல்வர். பணப் பித்தர் புதைத் துக் காத்த செல்வமும் கூடவருவதில்லை; பணம் தாயாதிகள் கையிற் சிக்கி அழிகிறது. "ஐயோ" என்று மனைவி மக்கள் சுற்றத்தார் ஊர்த்துறை மட்டும் சென்று நீங்குவர். ஆள் இருக்குமட்டும்

"தனவான், கனவான்" என்று அஞ்சி நடப்பர்; இறந்தபின் அச்சமேது? பிணத்தை விறகிட் டெரித்து இவ்வளவு சிரமப்பட்ட வேர்வைபோகத் தலைமுழ்கிச் செல்வர். "அடா, உள்ளமட்டும் நமக்கு உபகாரம் செய்தானே!" என்று நியாயமான வீட்டார்கூட நினையார்; நீதியில்லா மாந்தர்!

ஆர்த்தெழு சுற்றமும், பெண்டிரும், மக்களும்,
ஊர்த்துறைக் காலே ஒழிவர்; ஒழிந்தபின்,
வேர்த்தலைப் போக்கி, விறகிட் டெரிமுட்டி
நீர்த்தலை முழ்குவர் நீதியி லோரே.

மட்குட முடைந்தாலாவது அதன் ஓட்டை எடுத்து ஒரு காரியத்திற்காக வைத்திருப்பர்; மண் ணுடலாகிய குடமுடைந்தால் சிறிது நேரமும் வைத்திருக்க மாட்டார்—நாறும்! தூலதேகம் அத் திப்பழம் போன்றது; (அத்தி=எலும்பு); எலும் பும் தசையும் சேர்ந்த பழம் போன்றது; சூக்கும சரீரம் அறைக்கீரை போன்று நுட்பமானது. இரண்டும் சேர்ந்தே இயற்கையுடல்; ஒருநாள் தூலவுடலை நீத்துத் தன் வினைவிதையுடன் ஆவி யைப்பற்றிச் செல்லுகிறது நுண்ணுடல். உடனே "குய்யோ முறையோ" என்று கத்திப் பிலாக் கணம் பாடித் தீயிலிட் டெரிக்கின்றனர். வீடும் கோலமும் விரிச்சென்றுகின்றன. கருத்தரித்துப் பத்து மாதம் சுமந்து, பிரசவித்த பிள்ளை உலக வாசனைகொண்டு பன்னிரண்டாண்டில் வளர்ந்து, பிறகு வாலிபமெய்தி, இருவினை துய்த்து, ஆள் முதிர்ந்து தளர்கிறான்; உயிர் விளக்கு அணைகி றது. அகலில் விளக்கேற்றுகிறான்; எண்ணெய் வற்றிச் சுடர் முடிவதற்குள் ஆளே முடிந்து போகி

ரூன்; அவ்வளவு விரைவாக உயிர் நீங்குகிறது. விடிகிறது; பகல் நண்பகலாகிறது, மாலையாகிறது, இரவாகிறது, இருளாகிறது. இதை யறியாமல் உடலுயிர் சதமென்றெண்ணி உலகின்பத்தில் படிந்து மயங்கி அதனுல் வரும் துயர்களேறி மாந்தர் பதைக்கின்றனர். குடையும் குதிரையும் கொற்ற வாளும் கொண்டு போர் புரிந்து நாடு புரந்து, உலகின் இன்பதுன்பங்களால் தளர்ந்து, வினை பெருத்து மனிதர் வாழ்வுத்தேரில் செல்லுகின்றனர்; அவர் அப்புறம் சென்ரூல் இப்புறம் உயிர் பிரிந்து செல்லுகிறது; ஆள் பிணமாகிரூன்; பிறகு அப்பிணத்தைக் காக்கை கவர்ந்துண்டாலென்ன, கண்டவர் பழித்தாலென்ன, அதன் வாயில் பாலூற்றினுலென்ன? ஒன்றுமில்லை; இத்தோல் பையில் புகுந்திருந்தவன், இதயக்கூத்தன்; அவன் பற்றற்றுத் தாக்கற்றுத் தொழிலற்றுத், தூலசூக்கும காரண தேகங்களைச் சாட்சியாக இயக்குகிரூன். அவனே உடலை ஊட்டி வளர்க்கிரூன். அவன் போன பிறகு உடல் கட்டை, நாற்றப் பிணமாம்.

> காக்கை கவரிலேன், கண்டார் பழிக்கிலேன்?
> பாற்றுளி பெய்யிலேன்? பல்லோர் பழிச்சிலேன்?
> தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங்
> கூத்தன் புறப்பட்டுப் போனஇக் கூட்டிற்கே!

ஆதலால் கூட்டில் ஆவியாயிருக்கும் போதே அறவினை செய்க! கூட்டில் உயிருக்குயிரான இதயக் கூத்தனை அன்பு செய்க! அவனடி பற்றியே வாழ்க!

# ௫௫. வாணாள்

மானிடப்பிறவி பெறுதற்கரியது; இப்பிறவிப் பயன் பிரானடி பேணல்; அப்பேறு பெற்றவர்களே மிகவும் அரிய செல்வத்தை நுகர்ந்தவர்களாவார்.

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்,
பெறுதற் கரிய பிரானடி பேணார்;
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேர் உகந்தாரே.

போது சடக்கெனப் போகின்றது; மாந்தர் அதை வீண் வாதத்தில் கழிப்பர்; வினைத்துயர் சுமப்பர்! நீதி நெறி நின்று அன்புசெய்து ஆதியிறைவனை சுத்தனை அறியாதிருக்கிறார்களே மாந்தர்!

போது சடக்கெனப் போகின்றது கண்டும்
வாதுசெய் தென்னே மனிதர் பெறுவது?
நீதியுளே நின்று நின்மலன் தாள்பணிந்து,
ஆதியை அன்பில் அறியகில் லார்களே!

மாந்தர் பசிக்குக் கடன் வாங்கியாவது சாப்பிட்டு உடலைப் பேணித்திரிவார். கல்லாலின்கீழ் நால்வர்க்குச் சிவபெருமான் அருளிய பரமஞானத்தை உணரார்; உண்மைக்கடவுளை உணராமல் 'அது, இது' என்று சமயவாதங்களுள் உழல்வர்; சோறே கூறையே எனத் திரிவர். இவர்களுக்கு வாழ்க்கை துன்பமாகும். தன் அடியார்க்கே இறைவன் நிலையான புகழும், நிறைவான தவத்தால் விளங்கும் பதியுண்மையும் அருள்வான்.

நின்ற புகழும் நிறைதவத் தூண்மையும்
என்றும்எம் ஈசன் அடியவர்க்கே நல்கும்.

அத்தகைய அடியார் வாழ்க்கை இன்பத்தில் பிறந்து, இன்பத்துளே வளர்ந்து, இன்பத்துளே இன்பப் பொருளையே மறவாது நினைக்கும். இந்த இன்பவழி மறந்தவர் துன்பத்தில் தூங்குகின்றனர். ஆர்வத்துடன் ஆண்டானைக் கூவ மனம் உள்ளது; அளவில்லாத் திறமை நல்கும் இளமையுள்ளது; அறிவுள்ளது; அது 'இன்னது நல்லது; செய்!' என்று தூண்டுகிறது; அக்காலத்தைச் சிவகாமத்தில் செலவிடாமல் அவகாமத்தில் தொலைத்துச் சிற்றின்பக் குழியில் கெட்டு உழன்று மாந்தர் சிவனின்பத்தை மறக்கின்றனர். இறைவன் இளஞாயிற்று உருவினன்; தீயுள் இருப்பவன்; அவன் இதயகமலத்தில் உறைவான். 'நானர்?' என வினவி உண்மைப் பொருளான இதயப் பெருமானை நாம் அறியவேண்டும்; குரு காட்டிய குறிவழியே நாடி அவனைக் கூட வேண்டும். அவன் புகழே பாடி ஆடவேண்டும். "இறைவன் நெஞ்சு நிறைந்த நெடுஞ் சுடராக அங்கே இருக்கிறன்; நம் செவ்விய பிரான்" என்று இறுதி மட்டும் தொழுங்கள்! இன்றேல் ஐம்புலன்களும் கட்டற்றுத் திரியும் மதயானைபோல் வாழ்க்கை துன்புறும். உள்ளடங்கி இன்புற உள்ளத்தானையே நினைக்கவேண்டும்.

நெஞ்சு நிறைந்தங் கிருந்த நெடுஞ்சுடர்
நம்செம் பிரான்என்று நாதனை நாடொறும்
துஞ்சு மளவும் தொழுமின்; தொழாவிடில்
அஞ்சற்று விட்டதோர் ஆனையு மாமே.

வண்டு மலரை அளைந்து தேனுண்டு இன்புறுகிறது; அரிய தேன் திருநாமம்! அது வாயில் புகுந்தூறும்; அத்தேனை அறியாதிருக்கின்றனரே மாந்தர்! இறைவன் உலகத்து உயிர்களுக்கெல்லாம் ஒருவன். அவனே உயிரின் வரவையும், இரவான மடமை யிருளையும் அறிவான். எழுஞ்சுடர்ச் சோதி போல் அவ்விருளைப் போக்குவான். புலன்களை அடக்கி அவனடி பற்றி நிற்கவேண்டும். அதுவே வாணாள் வீணாகாத வழியாம்.

## ருசு. கண்காணி

இறைவன் எங்கும் கண்ணன்; கண்காணி; உயிர்க்காதலன். நாம் காணாதபோதும் நம்மை அவன் கண்காணிக்கிறான். அவன் கண்ணில் காணாதவன் என்றெண்ணிமாந்தர் கள்ளத்தனமான தீமை பல செய்வர். அவன் கண்ணிலிருந்து பார்ப்பானாக எங்கும் எவ்வுயிரிலும் கலந்து நிற்கிறான். அவனைக் கண்டவர் களவொழிந்து நேர்மையாக நடப்பர். இறைவன் கண்காணியாகவே கருத்தில் இருக்கிறான்; கையில் உழைக்கிறான்; உயிரிற் கலந்து வழிசெய்கிறான்.

கண்காணி இல்லென்று கள்ளம் பலசெய்வார்!
கண்காணி யில்லா இடமில்லை காணுங்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கு நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந் தாரே!

மாந்தர் பொய்யர்! மெய்யரானால் வானோரும் வணங்கும் உயர்நிலை யளிப்பான் இறைவன்—

மெய்தான் உரைக்கில், விண்ணோர் தொழச் செய்வான். இறைவன் உடலுட் கலந்துள்ளான்! காயாபுரியை ஆளுகிறான்! உடலுள் மணங் கமழ்கிறான்! அஃதறியாமல் அவனைத் தேயமெங்கும் தேடுகின்றனர்.

காயக் குழப்பனைக் காயநன் னாடனைக்
காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்து ளேயெங்குந் தேடித் திரிவர்கள்!
காயத்துள் நின்ற கருத்தறியாரே!

வடக்கே யிருந்து தப ஜபம் செய்வர்; வடக்கே யாத்திரை நடப்பர்; வடதிசையைக் கொண்டாடுவர்—ஞானமில்லாதவர்! ஞானிகள் உள்ளத்தில் உலகம் அடங்கும். அவருக்குத் திசைவேறுபா டில்லை.

வடக்கில் அடங்கிய வையசம் எல்லாம்
அகத்தில் அடங்கும் அறிவுடை யோர்க்கே.

இறையின்பம் அன்பாலும் பழுத்த அனுபவத்தாலுமே விளங்கும்; கன்னி கலவியின்பம் அறியாள்; நூலே கற்றோர் சாதனத்தால் வரும் இன்பத்தை அறியார்; அரிய மாதவஞ் செய்தவரும், ஆன்ம வியல்பை நினைத்துணர்ந்தவருங்கூட இறைவனியல்பை உணர்வதரிதாகும். கண் ஒளியுடன் ஒன்றுவதுபோலே, மனம் அன்பில் ஒன்றுபட்டு, சித்தம் தெளிந்து, வேறு குணதொந்தச் செயலற்றால் இறைவனைக் காணலாம். இறைவன் ஒரே பரம்பொருளாயும், பராசக்தியுடன் கூடி இரண்டாயும் விளங்குவான். அவன் காணாதவர்க்கும் கண்ணான கருணைவள்ளல்; அன்னியங் காணாமல் அவனையே உள்ளத்தில் கண்டிருப்பவரே களவொழிந்த தெள்ளியராவர்.

காணாத வர்க்குங் கண்ணும் பெருங்கருணை;
காணாது கண்டார் களவோழிந் தாரே.

உயிரால் உணர்வு, அறிவு! அஃதின்றேல் ஆருடல் வீழும். உயிர்க்கு மேலே உயிர்க்குயிரான உணர்வுண்டு; உயிரின் உண்மை யறிந்தால் அந்த உணர்வை யறியலாம். அந்த உணர்வே சித்துணர்வு; அது உடலுணர்வை, தேகாத்மபுத்தியை விழுங்கும். அவ்வாறு சித்துணர்வு பெற்றவரே சத்தாகிய பெரும் பொருளை உள்ளே அறிவர். இறைவன் உலகிற்கு ஆதாரன்; ஒண்சுடர். மிதமாகப் பேசும் தேவர்பிரான், உத்தமச் சித்தன்; எல்லா ஒளிக்கும் ஆதாரன். பஞ்சபூத சரீரத்தில் அவன் நேரே நிற்கிறான்; வாக்கிற்குத் தலைமையான அவன் திருநாம ஜபம் தன்னறிவை நிலவச் செய்யும். இறைவன் தனிச் சுடர்; தானே அனைத்திற்கும் முடிவிலிருப்பவன். அவன் ஊனுள் உயிர்; ஊனைக் கடந்த உலகில் ஒள்ளிய சுடராய் விளங்குகிறான். சிற்றின்பத்தை ஒழித்தால், நற்குணம் வளரும்; அதனால் திருவருள் விளங்கும். உன்னுயிருடல்முதல் எல்லா ஊனுயிர்களுள்ளும் இறைவன் இருக்கிறான். கல்வியிலும் அவன் உறங்குகிறான். நன்மைக்கெல்லாம் முதலானது அவன் திருநாமம்; அதையே நீங்காது சிந்தித்திருந்தால் தன்முதல் ஆன சச்சிதானந்த தத்துவம் விளங்கும்; தான், உலகம், இறைவன் ஆகிய முப்பொருளுண்மை விளங்கும்.

## ருஎ. விதிவழி

விதிவழி ஒன்றுண்டு; அது எல்லாம் அறிந்த இறைவன் வகுத்த வழியாம். ஆகாயத்தை யாரும் செய்து மேலே பரப்பி வைக்கவில்லை. ஆற்றிலிட்ட நுண்மணல் வெள்ளத்தால் கரையும், மாறும்; அதை ஆறே சுமந்து நிற்காது. எல்லாம் விதிவழியே நடக்கும். முன்வினைப்பயனே பின்வாழ்விற்கு நிலைக்களமாகும். இதை யறிந்த ஞானிகள் அறியா வுலகம் செய்யும் இடர்களுக்கு அஞ்சார்; அது செற்றாலும், சீவினாலும், உச்சியில் உளியடித்துக் கொன்றாலும், அல்லது சந்தனம் பூசி மயக்கினாலும், தத்துவ ஞானிகள் தன்மை குன்றார்; உள்ளத்தில் இறைவனைப் பிரியார்; இயற்கையால் வரும் இடர்களையும் அவர்கள் அஞ்சார். அவர்களைப் போல நான் இறைவனையே நாடுவேன். அவன் நான் இரண்டறக் கலக்கும் முதல்வனாவன்!

வான்இன் றிடிக்கிலென்? மாகடல் பொங்கிலென்?
கான்நின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென்?
தான்ஒன்றி மாருதம் சண்டம் அடிக்கிலென்?
நான்ஒன்றி நாதனை நாடுவன் நானே.

யானை துரத்தினாலும், அம்பு பாய்ந்து என்னை அறுத்தாலும், அத்துடன் காட்டு வேங்கையும் வளைத்தாலு மென்ன? சிவஞானமாகிய உழவினையே நான் தளராமல் செய்வேன்; அதுவே எம்பெருமான் எனக்கு வைத்த வழி. இந்த ஐம்பூதக் கூடே கெட்டாலுமென்ன? இன்னொரு கூடு செய்யும் அருளிறைவன் இருக்கிறான். ஒரு வீடு கெட்-

டால் இன்னொரு வீடு புகலாமே! நாடே கெட்டா லும் அடியார் கெடார்!

கூடுகே டின்மற்றோர் கூடு செய் வானுளன்
நாடுகே டினும் நமர்கெடு வாரில்லை.

## ருஅ. உயிரிறைவன்

எந்தை இறைவன் ஒருவன்; ஏழுலகும் பரந்த பராபரன்; பேரருளாளன்; மனமுருகும் அன்பர் கலவிப் பயனாகி விளங்கும் நல்லோன். அடியார்க்கு என்றும் அருளும் வாடாப் பூங்கழலோன்; நுண்ண றிவானவன்; ஏழுலகிற்கும் எண்ணறிவானவன்; புறப்பார்வை யில்லாமல், அவனை உள்ளே கருதுக! அவனையே பாவித்த மாந்தரை விண்ணறிவாளர் விரும்புகின்றனர். சுத்தனான இறைவனை எப்படியா வது ஒன்றவேண்டும்; கும்பிட்டு நின்றாகிலும், தியா னத்தில் இருந்தாகிலும், சமாதியில் கிடந்தாகிலும், நிற்கும் போதும் உட்காரும்போதும் படுக்கும்போ தும் ஆன்மப் பொருள் இறைவனை ஒன்றும். அவன் புகழை உரைப்பவரும் ஐம்புலனை வெல்வர். மனப் பிணக்கறுவர்; இறைவனுடன் ஒன்றாயுணர்வர்; ஒன்றாவர், ஐக்கியானுபூதி பெறுவர். இறைவன் அவருடன் ஒன்றாவான். பிறகு அவன் ஒருவனே அனைத்துமெனக் காண்போம்.

நின்றும், இருந்தும், கிடந்தும் நிமலனை
ஒன்றும் பொருள்கள்; உரைப்பவ ராகிலும்
வென்றைம் புலன்கள் விரைந்து பிணக்கறுத்து
ஒன்றா யுணரும் ஒருவனு மாமே.

இறைவன் என்னவன்; என்னில் என் உயிரானவன்; பொன்னில் மணிபோல் என்னுட் பொலிவோன். மின்னலைப் போன்று தோன்றி மறையும் உயிராக உடல்களில் மேவினேன். அவனை நினைத்தாலும் போதும். அவனும் நம்மை நினைப்பான்; பக்குவமறிந்து வகையாக நமக்கருள வருவான்.

என்னிலும் என்னுயி ராய இறைவனைப்
பொன்னினு மாமணி யாய புனிதனை
மின்னிய வெவ்வுயி ராய விகிர்தனை
உன்னிலும் உன்னும்; உறும்வகை யாலே.

இத்தகைய இறைவனைக் காணவேண்டியது தூய அன்பு நெஞ்சமேயாகும்; அதைக் கொண்டு இறைவனைக் காண முடியாத மாந்தர் தமது சிற்றறிவால் "நாம் அவன் மாண்மை யறிவோம்" என்பர். மணிவாள் கொண்டு மதி - முயலை எறிந்துகொள்ள முடியுமா? இக்காய வாழ்க்கை காற்றில் விளக்குப் போலச் சலித்துக் கொண்டிருக்கிறது; எனது யான் என்னும் ஆணவத்தால் அல்லற்படுகிறது; இந்த ஆணவத்தைத் திருவருளுக்கே ஊணாக்க வேண்டும்; உயிர் இறைவன் மலரடிக்கே தொழும்பாய் வாழ வேண்டும்; அதுவே வாழ்க்கை; அதுவே இன்பமாம்.

# நூல் ௬.

## அருளுபதேச விளக்கம்

### ௫௧. வாய்மை

சுத்த முத்த சமரச சித்தரான அருட்பெரியார் வாக்குகளே நமக்கு நல்வழி காட்டும் அருளுபதேசங்களாம். அவை கனலேறி மாசற்ற பொன்போல் ஒளிரும்; அவற்றை அனுட்டித்தால் வாழ்க்கை இன்பச் செழுஞ்சுடரெனப் பொலியும். மொழியறிவிற் கெல்லையில்லை; அதை அறிந்தும் பயனில்லை. ஒளியறிவே யறிவு; அதை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகும்; மொழியறிவு கைவிளக்கும் போன்றது; ஒளியறிவு சூரியனைப் போன்றது. அறிவிற்கறிவாயிருப்பது இதயத்தில் உள்ள "நான்" என்னும் சுத்தான்மா. அதுவே அறிவு, அறிவான். அதை அறிந்தவனே எல்லாம் அறிந்த குரு எனத்தக்கோனுவான்.

எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு
எல்லாம் அறிந்தும் இலாபமங் கில்லை;
எல்லாம் அறிந்த அறிவினை நானெனில்
எல்லாம் அறிந்த இறையென லாமே.

ஒவ்வோருள்ளத்திலும் சுத்தான்மாவாக, உயிர்க்குயிராக நிற்கும் அருளிறைவனே கலை நின்ற கள்வன்; கலையறிவு தேடும் கண்ணுதல். அவனே உலகில் "தலைவன்" எனத் தக்கோன். மற்றெவரும் அவனுக்கு நிகராகார். அவனே உலகிற்குப் புருஷப் பிரகிருதி (ஆண்—பெண்) தத்துவமானுன்;

அவனே மழைபொழி வானவன். ஊனுருகி, உள்ள மான ஒருவனை உணரவே வேதம் விரும்பித் தேடும்; அந்த ஒருவன் அவனே.

தானே யுலகில் தலைவ னெனத்தகும்;
தானே யுலகுக்கோர் தத்துவமாய் நிற்கும்;
வானே மழைபொழி; மாமறை கூர்ந்திடும்
ஊனே யுருகிய வுள்ளமொன் றுமே.

அவன் திருவடியே உண்மைப் பொருள்; அதை யறியாது சிந்தை மருளுற்றலைகிறது; அதை அடக்கித் தெளிவாக்கி இறைவனை நாடிய அடியாரே அருள் பெறுவார். அவன் உண்மையாளர் உடலிற் கலந்துறைவான்; பொய்யர் முன் புகமாட்டான். அவன் வாழ்விற் கலந்துளான்; அழியா ஊழித் தலைவனாக என்றுமிருப்பான். உண்மையாளர் மெய் யிற் கலந்து அவன் இன்பமளிப்பான்.

மெய்கலந் தாரோடு மெய்கலந்தான் தன்னைப்
பொய்கலந் தார்முன் புகுதா ஒருவனை,
உய்கலந்து ஊழித் தலைவனுமாய் நிற்கும்
மெய்கலந் தின்பம் விளைந்திடும் மெய்யர்க்கே!

நெருங்கிக் கலந்த பேருக்கே அவன் கருத்தில் எழுந்து விளங்குவான்—கைகலந்தார்க்கே கருத்துறலாமே.

பொய்ப்புலன்களை அடக்கிய வீரரே உண்மை என்னும் புரவியைத் தூண்டி இறைவனை அடைவர். பொய் யொழிந்தார்க்கே அவன் புகலிட மாவான். மெய்யரிடையே ஐயனிருப்பான். பொய் மனம் வம்பு பழுத்த பலாப்பழம் போன்றது; அது அருட் பறவையைப் புகுந்துண்ண விடாது; அதன் பொய்த்

தோலில் மெய்யன்பினுல் எய்து உரித்தால் இன்பம் விளங்கும்; அந்த மெய்ச்சுவையால் சிவகதி சேரலாம். மனத்தை மயக்கும் ஐம்புலப்பாசம் நீங்க வேண்டுமானுல், அதை அறுத்தெறிந்த நித்திய முத்தனை சிவபெருமானைத் தொடரவேண்டும்; அவன் "உய்யப்போ!" என்று நமது மனத்தைத் தனது திருவடியில் ஒன்றுவிப்பான்.

## சூ௦. சன்மார்க்கம்

சத் + மார்க்கம் = சன்மார்க்கம்; அதாவது, மெய்வழி. அது தற்சிவமாய், தற்பரமாய், தானே தானுய் நிற்கும், இறைவன்பால் ஆன்மாவை நடத்தும். சுருதிகளெல்லாம் அதன் தத்துவத் தோற்றங்களையே விளக்கும். சுருதிச்சுடர் அருட்சோதியிறைவனேயாவான். அச்சுடரைக் கண்டால் ஆணவ மாயச் சீற்றமொழியும்; சிவயோகசித்தி கூடும்; நித்திய வாழ்வெய்தும்; கூற்றையும் வெல்லலாம். பொய்யினின்று மெய்க்கு, இருளினின்று ஒளிக்கு, சாவினின்று அமரவாழ்விற்கு, பாசான்மாவினின்று சுத்தான்மாவிற்கு நடத்தும் சன்மார்க்கத்தில் உலகெல்லாம் சேர்ந்துய்யவே அருட்புலவர் சிவநெறி வகுத்தனர். அதுவே சிவகுருநெறி. சிவகுருவைப் பக்தி செய்தவருக்கு முத்தியளிக்கும் சன்மார்க்கம் கூடும்.

தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்
பரிசிக்கக் கீர்த்திக்கப் பாதுகஞ் சூடக்
குருபத்தி செய்யுங் குவலயத் தோர்க்குத்
தருமுத்திச் சார்பூட்டுஞ் சன்மார்க்கந் தானே.

இச் சன்மார்க்க சாதனத்திற்கு மனத்தெளி வும் அமைதியும் வேண்டும்; தெளிவறியாதார் சிவனை அறியார்; சீவனுமாகார்; சிவமாகார்; பிறவி தீரார். எம் மார்க்கத்தாருக்கும் இயம்புகின் றேன்; சன்மார்க்க சாதனமே ஞானம், ஞேயம், அறிவு, அறிபொருள் ஆம்; ஆணவம், கன்மம், காமம், மாயை, பந்தம் ஆகிய குற்றங்களைச் செற்று, தான் அவனாகும் ஞானானுபூதியின்பமளிப் பது சன்மார்க்கமேயாம். சிவனை நாடிச் சிவமாதலே நன்மார்க்கம், சன்மார்க்கம். அன்னிய பாசம் தூய ராகும். இருவினை, விழிப்பு, கனவு, உறக்கம், துரி யம், துரியாதீதம் ஆகிய அவத்தைகள், மூலப்பிர கிருதி, அறிவு, பேதம், பேதாதீதம் அனைத்தையும் தாண்டித் தானாயிருக்கும் சகஜநிலை—இவையனைத் தையும் கண்டு, உண்மைச் சுடராக விளங்குவர் சன்மார்க்கிகள். சன்மார்க்கத்தால் நெஞ்சம் அன் புருகும். உண்மைச் சொரூபம் உள்ளத்தில் உதய மாகும். பாசம் நீங்கிப் பசு பதியைக் கூடி அசை யாது நிலைபெறெய்தியிருக்கும்; துவாதசாந்தமான உயர்ந்த சிவதுரிய நிலைபெறும்.

சன்மார்க்கமே சகமார்க்கமானது; அது முத்தி தரும்; துன்மார்க்கம் பிறவித்துயரே தரும். சன் மார்க்கத்தால் உயர்ந்த நிலை பெறாதவருக்குக் குரு, சிவம், சமயம் இவை கூடாவாம். அவர் வீட்டில் திருமகள் வசிக்கமாட்டாள்; அவர் உருக்குலைந்து, இனத்தாரையும் இழந்து வருந்துவர். யோகசமா தியிலேதான் உண்மைநிலை கூடும்; சமாதியினுள் ளேயே அருளுலகம், உள்ளொளி, உட்சக்தி இவை உணர்வாகும். யோகசமாதி உவந்தவரே சன்மார்க்கர்

சித்தராவார். யோகியர் உள்ளே இறைவனைக் கலந்து சுத்தசிவபோகந் துய்ப்பார். யோகம் உள்ளத்தில் ஒளிரும் சிவரூப சித்தியாகும்; போகம் உலகில் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்த சித்தியாகும். அழியாத யோகிக்கு இரண்டும் சித்தியாகும். அவன் பூரணயோகி; யோக—போகி.

யோகமும் போகமும் யோகியர்க் காகுமால்
யோகம் சிவரூபம் உற்றிடும் உள்ளத்தோர்
போகம் புவியிற் புருடார்த்த சித்தியது;
ஆகும் இரண்டும் அழியாத யோகிக்கே.

ஆதார சோதனை, நாடி சுத்தி, கலைகடந்த கதிரொளிக்காட்சி, அந்தக்கரண மடக்கல்—இவற்றால் சன்மார்க்க சித்தி யெய்தும். தன்னை வணங்கும் சன்மார்க்கிகள் உள்ளத்தில் இறைவன் வந்து நிற்பான்; பழங் கனிந்ததுபோல், உள்ளே இன்பங் கொடுத்து நிற்பான்.

உளங்கனிந் துள்ளம் உகந்திருப் பார்க்குப்
பழங்கனிந் துள்ளே பகுந்துநின் றானே.

## ௬௧. இதோபதேசம்

சிறந்த சிவநெறியைச் சிந்தை செய்மின்! பிறவி நிலையற்றது; அதை மறந்தொழிமின்! இறக்கும்போதும் இறைவனை நினைமின்! அவன் உயிர் படுந்துயர் தீர்ப்பான். இல்லை என்றாலும் இறைவன் உள்ளான்; செல்லுமட்டும் சிந்தையை இறைவன் பால் செலுத்துமின்; வாய்மையே மொழிமின்; நல்ல அறநெறி நாடுமின்; கைலாசபதியைப்

போற்றி செய்மின்! அவனே நாலுதிசைக்கும் நடுநாயகன்; கூற்றுதைத்தவன்; எல்லாம் அவனே; அவன் ஒருவனே; எல்லா வுயிர்களும் அவனில் ஒரு குலமே; உணர்மின்! நமனில்லை; அஞ்சாதீர், மனங்குன்றாதீர்! எல்லாருக்கும் நல்லதே நினைமின்! நீர் சென்று அவனைப் புகும் வழியில்லை; உமது சித்தத்தில் அவனே வந்து நின்று நிலை பெறத் தியானம் செய்மின்! உய்வீர்!

ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும்;
நன்றே நினைமின்; நமனில்லை; நாணுமே
சென்றே புகுங்கதி யில்லை;நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே!

இந்த உடல் வாதனையை நீக்கி இனி வேறு வினை யுடலிற் பிறவாது சுத்தமுத்தி பெறும் வழியைத் தேடுமின்!

இக்காய நீக்கி இனியோரு காயத்திற்
புக்குப் பிறவாமற் போம்வழி நாடுமின்!

இவ்வுடல் எக்காலம், ஏன் வந்தது, எவ்வினையால், அவ்வினை நீங்குவதெப்படி என விசாரித்துப் பாருங்கள்! வினை நீக்கும் இறைவனை நாடுங்கள்! அவனருள் பெறலாம். சாகின்ற போதும் தலைவனை நாடுமின்; உயிர் போய் இன்னொருடலிற் புகுவதை அவனே அறிவான். உயிர் பறந்து செல்கிறது! அப்போதும் இறைவனை நினைத்தால் பிறப்பில்லாச் சிவகதியாகும்.

பறக்கின்ற வொன்று பயனுற வேண்டின்
இறக்கின்ற காலத்தும் ஈசனை உள்கும்
சிறப்போடு சேரும் சிவகதி பின்னைப்
பிறப்போன் றிலாமையும் பேருல காமே !

கூடி நின்று தொழுதுபாடி இறைவனடி பணி மின்! உள்ளே திருவடி ஆடுகிறது; அந்த அறி மின்! கற்றுபோலே அது அருளமுதம் சுரக்கும். திருவடி யணிந்தவர்க்கு வினையில்லை. பிறவிப்பாசத் தில் உழைத்தொழியும் வீணயீர்! இறைவனுக்கே அன்புறுவீர், தவத்தாலெய்தும் மெய்ஞ்ஞானப் பண்புறுவீர், அவனை அறிந்தே இன்புறுவீர்! இன் பத்திற்கு வேறு வழியில்லை.

இன்புறு வீர்,அறிந் தேளம் இறைவனை ;
அன்புறு வீர்,தவம் செய்யுமெய்ஞ் ஞானத்துப்
பண்புறு வீர்;பிற வித்தொழி லேநின்று
துன்பறு பாசத் துழைத்தொழிந் தீரே !

தழல் வண்ணனை சிவபெருமானைச் சார்ந்த வர் பிறவிநோய் தீர்வர்; அவன் குஞ்சிதபாதங் காட்டி அடியாரை ஆட்கொள்வான். அவனைச் சேர்ந்தவர் தேவராவார். அவனடி யொன்றே மேற் கொள்ளத்தகும். புலன்களை அடக்கி மனத்தை அவனில் நிறுத்தும் தவமே மெய்த்தவம்; அவ னைச் சேர்தலே மெய்வழி. பாலில் நெய்போல் சுத்தன் உயிரிற் கலந்துள்ளான்—அந்த நின்மலன்

கணக்கிட்டு வைத்த யுகங்களை யாரும் எண்ண முடியாது. சிவத்தைத் தெளியாதார் பவ சாகரத்தில் வந்து பாய்வார். அவனை நினைக்கத் தோன்றுவதே புண்ணியமாகும். கணக்கற்ற தேவர் அவனை வழிபடுவார். குருவின்மூலம் வழிபட்டும் அவனைக் கூடலாம். நரரும் சுரரும் பசு பாசத்தால் வினை மலிந்து நலிவர். குரு என்பவன் சுத்த முக்த ஞானி; அவன் "எல்லாம் பரம், பரமன்" என்பான்;

குருவென் பவன்ஞானி; கோதிலன் ஞானல்
பரமென்றல் அன்றிப் பகர்வொன்று மின்றே.

அவனை அன்புற மேற்கொண்டவர் வினை தீர்வார். அவன் தான் ஆட்கொண்ட அன்பருக்குத் தனி நாயகனாவான்.

# நூல் ஏ.

## சிருட்டி விளக்கம்

### சூஉ. ஐந்தொழில் விளக்கம்

சுற்றிலும் பாருங்கள் உலகை! இதில் உயிர்கள் வருகின்றன, இருக்கின்றன, போகின்றன, மறைகின்றன, மீள்கின்றன. யாதோ ஒன்று இவ்வுலகாக விளையாடுகிறது. விண்ணைப் பாருங்கள் இரவில்! கோடி கோடிக் கணக்கான விண்மீன்கள் காண்கின்றன; அத்தனையும் சூரியர். அவற்றைச் சுற்றி நம் உலகைப் போலவே எத்தனையோ கோளங்கள் சுற்றுகின்றன. கீழ் உலகங்கள் ஏழு: — அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகாதலம், பாதாளம். மேல் உலகங்கள் ஏழு:—பூலோகம், புவர்லோகம், ஸ்வர்லோகம், மஹர்லோகம், ஜனோலோகம், தபோலோகம், ஸத்யலோகம். இவையெல்லாம் பிரம்மாண்டத்தில் அடங்கும். இவற்றையெல்லாம் ஆக்கி, அளித்து, அழித்து, மறைத்து, மீண்டும் தோற்றுவிக்கிறவன் இறைவன், ஒருவன். அவனே உலகும் உயிரும் ஆனான்.

ஒருவனு மேஉல கேழும் படைத்தான்
ஒருவனு மேஉல கேழும் அளித்தான்
ஒருவனு மேஉல கேழும் துடைத்தான்
ஒருவனு மேஉல கோடுயிர் தானே.

அவனே உலகம் படைக்கும் பொருள்; அனைத்திற்கும் காரணன்; அன்பிற் கலந்து எங்கும் நிற்பவன்; அவனொளியே அயனுள் வேதமானது.

போக்குவரவுகளை அவனே நடத்துகிறான்; அவனே ஆன்மாக்களுக்கு அருள் புரிகிறான். அவன் இச்சையால் அனைத்தும் ஆகும்; அவன் எண்டிசையிலும் அனைத்துடனும் கலந்துறைகிறான். அவனே 84 கோடி ஜீவராசிகளாக விரிந்தவன்; உள்ள நடுவே நின்றுயிர்ப்பவன். ஆகாயத்திலும் பூமியிலும் உள்ள அனைத்தையும் ஆக்கி அவற்றுட் புகுந்தான்; உணர்வுள்ள உயிர்களுள் அறிவானான். அவனே உயிர்களைப் பாசமறுத்து ஆட்கொள்ளும் அருளிறைவனான். அவன் மெய்யருக்கு ஒளியாய் நிற்பான்; பொய்யருக்கு இருள் மூடி நிற்பான். வான், வளி, ஒளி, இருள், தீ, நீர், மண், உடல், உயிர்த் தத்துவம், திசை, கடல், மலை, கார்முகில், வான்மழை, முதல், இடை, கடை எல்லாம் அவனே. அவன் ஒருசமயம் தானே தானான தனிச்சுடராவான், சண்டமாருதமாவான், தண்மழையாவான்; அன்பு, அறிவு, அடக்கம், இன்பம், இன்பக்கலவி, இன்புறு காலம், ஊழி, ஐம்பூதம், உள்ளுயிர், உயிருணர்வு அனைத்துமாவான். அவனே உலகை வனைவான்; உயிர்களைப் பெற்று உருவாக்குவான்; பிறவியைச் சுற்றிய வினைக்குடத்தை வனைவான்.

அந்த ஒருவனே சம்ஹார ருத்திரன்; காலாக்கினியாக எழுந்து உலகைச் சுட்டெரிக்கிறான்; கடலை வற்றடிக்கிறான்; அசுரரை நீறுக்குகிறான். அவனுக்கு நெருப்பே கையம்பு. அவன் அனைத்தையும் உறக்கத்தில் உணர்வறக் கிடத்தி, முதிர்ந்ததை உதிர்த்து உடல்களை அழித்து நித்திய சம்ஹாரம் செய்கிறான்; ஆன்மாக்களைப் பரிணமைப் படுத்திப் பக்குவமாக்க அருளால் தீதை அழிக்கிறான்; இறுதி

யில் அனைத்தையும் நீருக்கி, தானே தானாகிச் சுத்த சம்ஹார மூர்த்தியாய் விளங்குகிறான். இருள்வடிவான உடல்களை நீவி, நித்திய சங்காரனாகவும், மாயையைத் துடைத்து வைத்த சங்காரனாகவும், மனோ நாசஞ்செய்து மனத்தைக் கடந்த நிலையில் சுத்தசங்காரனாகவும், சங்கற்ப விகற்பங்களற்று, முத்தொழிலற்று, இகம்பரமற்றுத் தானே தானாகத் தற்பரச் சிவமாக நிற்கும் உய்த்த சங்காரனாகவும் நின்று இறைவன் கருவிடர் நீக்கி, உடலுயிர் நீவி, உணர்வை ஆரவைத்து, சர்வாதீதனாக, ஹரனாக உபசாந்த நிலையில் இருக்கிறான். இவ்வாறு முத்தொழில் புரியும் இறைவன் உள்ளத்தை விட்டு ஓரடி விலகாமல் அதனுடனே இருக்கிறான். எனினும் உள்ளம் அவன் சொரூபத்தை அறியாதிருக்கிறது!

உள்ளத் தொருவனை, உள்ளூறு சோதியை
உள்ளம் விட் டோரடி நீங்கா ஒருவனை,
உள்ளமுந் தானும் உடனே இருந்தும்
உள்ளம் அவனை உருவறி யாதே!

அவன் இன்பமயன்; உலகிற்கும் தேவருக்கும் இன்பந்தரும் ஆதிப்பிரான். அவனும் இந்தத் துன்பப் பாசத்துயரில், இந்த இருட்டறையில், என்பு தோல் போர்த்த உடலில் புகுந்தடைந்தான். கண் பல பொருள்களைக் காணும், தன்னைக்காணாது; அதுபோல், மனம் பல தோற்றங்களைக் கண்டும் உட்குவிந்து தன்னவனை உள்ளத்தானைக் காணாதிருக்கிறது.

இந்தக் காயப்பையை ஐம்பூதங்களாற் கட்டி வைப்பவனும், கட்டவிழ்த்து உயிருக்கு விடுதலை தரு

பவனும் இறைவனே. குயவன் தண்ட சக்கரத்தில் களிமண்ணை ஏற்றித் தன் மனம் விரும்பியபடி பானைகளை வனைகிறான். இறைவன் ஐம்பூதங்களையும் ஆணையாகிய சக்கரத்தில் ஏற்றித் தன் இச்சைப்படி அண்டசராசரங்களை யெல்லாம் உருவாக்குகிறான். அதுவாகிய அவன் இச்சையே, இதுவாகிய உயிருல காகிறது. ஒரு குடத்திற்குக் குயவன், மண், சக்கரம் இம்மூன்றும் வேண்டும். குயவன் நிமித்தகாரணம்; மண் உபாதான காரணம்; சக்கரம் ஸஹகாரி காரணம் ஆகும் அதுபோலவே, உலகிற்கும் அருளி றைவன் தலைவன். அவன் இச்சையே சக்கரம்; தத்துவங்கள் மண்.

குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்ற தெல்லாம் வனைவன்
குசவனைப் போல்எங்கள் கோன்நந்தி வேண்டில்
அசைவில் உலகம் அதுஇது வாமே.

பூதப்படையுடைய சிவன்பரிசே உலகை ஆக் கும்; அவனது குணமே எண் குணமாகும். உலகம் பூதம், ஊன், உயிர், அனைத்தையும் அவன் தனது மகிழ்ச்சியிலே பல ஊழிகாலம் படைத்தான்.

உகந்து நின்றே படைத்தான் ஐம்பூதம்
உகந்து நின்றே உயிர்ஊன் படைத்தானே.

முன்னே பலப்பல தேவரையும் சீவரையும் படைத்தும் அவன் இகத்தைக் கடந்த பரமாய் நிற் கிறான்.

படைத்துடை யான்பண் டுலகங்கள் ஏழும்
படைத்துடை யான்பல தேவரை முன்னே

படைத்துடை யான்பல சீவரை முன்னே;
படைத்துடை யான்பர மாகிநின் றானே.

தான் படைத்த ஐம்பூதம், ஊழி, தேவர், சீலர் அனைத்தையும் அவனே தாங்கி நிற்கிறான். சிவனே பலப்பல சீவனும் ஆகிறான்; உலகில் இறைவனுமாகிறான்.

சிவன்றான் பலபல சீவனும் ஆகி
நவின்றான் உலகுறு நம்பனும் ஆமே.

கண்ணுள் மணியாய் நிற்கும் கண்ணுதற் பெருங் கடவுள், நீரிற் கலந்த பால்போல் என்னுடன் கலந்துளான். அவனைச் சோராமல் காணும் சுகத்தை அறிந்தேன்; அதுவே சுகம்.

பரம்பொருள் ஐந்தொழில் முதல்வனாக விளங்குகிறான்; அவன் நித்திய முத்தன், இயல்பு திரியாதிருப்பவன். எனில் எப்படித் தொழில் புரிகிறான்? கேளுங்கள்! பஞ்ச பூதங்களைக் கடந்து, ஆகாயத்தைவிட நுண்ணிய பொருள் ஆன்மா; அது எங்கும் விரிந்துள்ளது; அதுவே மக்களுள் அறிவாயிருப்பது. அந்த ஆன்மா ஜீவாத்மா பரமாத்மா என இருவகையாம். ஜீவாத்மா பெத்தன்; பரமாத்மா முத்தன். ஜீவாத்மா ஆணவம், கன்மம், மாயை ஆகிய தளைகளால் கட்டுண்டு உடலில் புகுவான், இருப்பான், போவான். பரமாத்மா தானே தானாக சர்வசாட்சியாக நின்று நிலவுகிறான். அவனுக்குச் சித்து, அசித்து என்ற இரண்டு சக்திகள் உண்டு. அசித்து: ஜடசக்தி, முக்குணமாயை, மூலப் பிரகிருதி, அவ்யக்தம், பிரதானம், அவித்தை, அஞ்ஞானம். சித்து: அறிவுள்ளது. அதையே பரா

சக்தி, அருள், ஆணை, அம்பிகை, மஹேஸ்வரி, கலை, திரு, காளி என்று பலவாறு போற்றுகிறோம். அந்தச் சிற்சக்தியினாலேதான் பரமன் ஐந்தொழில் புரிகிறான். கல்லில் ஒளிபோல அந்த அருட் சக்தி அனைத்திலும் கலந்துள்ளது அண்ட பிண்ட சரா சரங்களெல்லாம் ஒருவனான பரமனும் ஒருத்தி யான பராசக்தியும் கூடிக்குழைந்த விளையாட்டே யாகும்.

ஒருவன் ஒருத்தி விளையாடல் உற்றார்
இருவர் விளையாட்டும் எல்லாம் விளக்கும்.

உலக மெல்லாம் சிவசக்தி விளையாடல்!

## ௩௫. கருவுயிர்த்தல்

ஆண் பெண் அன்புறவால் சிற்றின்பம் உண் டாகிறது. இருவர் வீறும் கருக்குழியிற் கலக்கின் றன. பூவின் மணத்தைக் காற்று அள்ளி உல கிற் பரப்புவதுபோல, ஆண் வீற்றுடன் ஜீவாதார மான வாயு கலந்து கருவிற் புகுகின்றது; காயங் கலந்த இருவர் அந்த மாயசுகத்தால் மனோலய மெய்துகின்றனர். அப்படி முயங்கி மயங்கி இரு வர் ஒருவரான மோகத்தில் இறைவன் கருமுட் டையை ஆக்குகிறான்—மோகத்துள் ஆங்கோரு முட்டை செய்தானே. இருவர் ஜீவசக்தியும் உயிர்க்கனலும், கருவிற் புகுந்து கலக்கின்றன. இருவரும் இசைந்து பிசைந்து வைத்த மண்ணால் துன்பத்திற்குக் கொள் கலமான உடற்கலசத்தை இறைவன் வனைகிறான்; கருவை உருவாக்குகிறான்.

இன்புற் றிருவர் இசைவித்து வைத்தமண்
துன்பக் கலசம் மனைவான் ஒருவனே !

பூதம், மாத்திரை, பொறி, புலன், கரணம் ஆகியவை ஒன்று சேர்ந்து இயற்கையுடலாகி, அதிற் சீவன் புகுந்து உயிருடலாகிறது. உடல் பல துயர் மனை; ஆசையாணவப் பாசம் நிறைந்தது. கர்ப்ப கோளகையுள் இருந்து பிண்டம் செய்து, அது உருவும், உயிரும் பெற்று வளர வேண்டியதெல்லாம் இறைவன் செய்கிறான்.

இன்புறு காலத்து இருவர்முன் பூறிய
துன்புறு பாசத் துயர்மனை வானுளன் ;
பண்புறு காலமும் பார்மிசை வாழ்க்கையும்
அன்புறு காலத் தமைத்தொழிந் தானே.

ஆக்கு கின்றான்முன் பிரிந்த இருபத்தைஞ்சு
ஆக்கு கின்றான்அவன் ஆதியெம் ஆருயிர்
ஆக்கு கின்றான்கர்ப்பக் கோளகை யுள்ளிருந்து
ஆக்கு கின்றான்அவன் ஆவ தறிந்தே.

நாடி நரம்பு, தசவாயுக்கள், உட்கரணங்கள் எல்லாம் கூடிய இக்காயத்தேருக்கு இறைவனே தச்சனாகவும் பாகனாகவும் விளங்குகிறான். அவன் நடத்தாவிட்டால் இத்தேர் நடக்காது. என்பால் மிடைந்து, நரம்புகட்டி, தசைகளை அடுக்கி, தோலைப் போர்த்து இந்த உடல்மனை யாக்கி, அதில் இன்பத்தால் உயிர்நிலை ஊக்கிய ஒருவன், இறைவன்; அவனையே நன்றாக, செவ்வையாக நான் நாடுகின்றேன்.

என்பால் மிடைந்து, நரம்பு வரிக்கட்டிச்
செம்பால் இறைச்சி திருந்த மனைசெய்து,
இன்பால் உயிர்நிலை செய்த இறையோங்கும்
நன்பால் ஒருவனை நாடுகின் றேனே.

உடல்வைத்து, ஒன்பது வாயில்வைத்து, உயிர் வைத்து, மயக்கம்வைத்து, உச்சித்தாமரையில் தெய்வக்கனல்வைத்து இக்காயப்பையைக் கட்டி முடிவில் அவனே அவிழ்க்கிறான்.

ஒட்டிய பாச வுணர்வெனும் காயப்பை
கட்டி யவிழ்க்கும் கண்ணுதல் காணுமே.

எதற்காக இறைவன் பாசத்தால் உயிரை உடலிற் கட்டி யவிழ்க்கிறான்? அவன் மண்முதல் மாந்தர் வரையில் அனைத்தையும் வகுத்தான். பாசத்தால் கட்டுண்டு அனைத்தும் பிறவிச் சுழலிற் சுற்றுகின்றன. பசுவான உயிர், அனுபவத்தால் மனம் பழுத்து, பதியன்பே செழித்து, அருள் சிறந்து, அறிவோங்கி விடுதலைபெறவே இறைவன் பரிணமப்படி வகுத்தான்; பல்லுயிர்களை வகுத்து அவற்றுள் நின்றான். அவனருளின்றி உலகில் உயிரில்லை; அரனின்றி அருளில்லை. ஆணில் ஆண்மையும், பெண்ணிற் பெண்மையும் அவனே. இரண்டும் மன விகாரங்களை வென்ற தூயநிலையில் கடவுட்டன்மை பெறவேண்டும். அதுவே வாழ்வின் நோக்கம். மனவிகாரங்களை அனுபவத்தால் ஒழிப்பதே இல்லற நோக்கமாம். காமம் ஏறும்போது அதை எதிர்த்து வெல்லும் ஆண்மையுள்ளவன் தனக்குத் தான் இறைவனாவான்; காம மயக்கத்தால் மனம் மாறாமல் அதை அடக்கி வெல்பவன்

உலகில் மிகவும் அரிய வைராக்கிய புருஷனவான். ஆண் பெண் விகாரங்களைச் சமமாகப் பாவித்து இரண்டும் ஒரே சுத்தான்மாவின் இரு தோற்றங்கள் என்று நினைப்பவன் சமரச ஞானியாவான்.

கலவியில் ஆண் வீறுபெற்றேரங்கினல் ஆண் மகவும், பெண்வீறு மிகுந்தால் பெண்மகவும் பிறக்குமென்பர்; ஆண்திறம் அதிகமானல் ஆண், பெண் திறம் அதிகமானல் பெண் என்பர்—ஆண்மிகில் ஆணும்; பெண்மிகிற் பெண்ணகும். இருவர் வீறும் சமமாகப் பொருந்தினல் அலியாகும். வெளியே பாய்ந்த உயிர்ப்பு ஐந்து விரற்கடை ஓடினல் ஆயுள் நூறாகும்; நான்கானல் எண்பது. யோகியானவன் இவ்வகையாக மூச்சை அளவுடன் விட்டு ஆயுளை வளர்ப்பான். சம்போகத்தில் மூச்சு அதிகமாகச் செலவாகும்; மூச்சை அடக்கி மனவமைதியுற மிதமாக விட்டுப் பழகினல் நலமாகும். அக்காலம் ஆண்பிள்ளை தனது மூச்சைச் சமப்படுத்த வேண்டும். ஆண்மகன் வாதநோய்கள் இல்லாமல் பாதுகாக்க வேண்டும். வாத நோயாளர் கர்ப்பக்கிரியை செய்யக்கூடாது. விந்துடன் வாயுவும் கருவிற் பாயும். அந்த வாயு அளவிற் குறைந்தால் குழந்தை குள்ளையாகும்; வாயு நோய் விளைந்தால் குழந்தை மூடமாகும்; வாயு தாராளமாகச் செல்லாமல் நடுவே சிக்கினல் குழந்தை கூனகும். இருவருக்கும் வாயு ஒத்துச் சமப்பட்டு நிதானமாகவும் அளவாகவும் எழுந்தால் குழந்தை கோமளமாகும்.

> கொண்டநல் வாயு இருவர்க்கும் ஒத்தெழில்
> கொண்ட குழவியுங் கோமள மாயிடும்.

இருவருக்கும் வாயு குழறினல் கருத்தரிக்காது. பெண்கள் தேகசுத்தியைக் கவனிக்கவேண்டும். மல மூத்திரங்களைச் சிக்காமல் கழிக்க வேண்டும்; அதற்கு உணவுநெறி பேண வேண்டும்.

மாதா உதரம் மலமிகில் மந்தனும்
மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே.

கவனம்: கர்ப்பவதிக்குக் குழந்தை வலப்பக்கம் சாய்ந்தால் ஆண், இடப்பக்கமானல் பெண்; அபானத்தெதிரானல் இரட்டைக்குழந்தை.

ஒரு செடி வேராகி, முளையாகி, இலையாகி, மொட்டாகி, மலராகிக் கனியாகிறது; தனது கனியை உலகிற்கு அளிக்கிறது; ஒவ்வொரு நிலையிலும் அததற்கு வேண்டிய ஆதாரம் அததனுள் இருக்கும் ஜீவசக்தியே (அதுவே) ஆகிறது. அச் சக்தி விரிந்து விளங்க விளங்க இன்பமாகிறது. அதற்கு அதுவாய் நிற்கும் ஒன்றிற்கும் ஆதாரமான ஒன்ருய் ஆதிப்பிரானே நிற்கிருன்.

அதற்கதுவாய் இன்ப மாவது போல
அதற்கதுவாய் நிற்கும் ஆதிப் பிரானே.

அவன் பெருமை அளவிலது; அதை வானேரும் அறியார் தவத்தினர் இதயத்துள்ளிருந்து அவன் தானே தனது பெருமையை அறிவான்—தானேயறியும் தவத்தினுள்ளே. அத்தகைய பரமாத்மா இச்சிறு ஊன் கூட்டின் உள்ளே உயிரிற் கலந்துள்

ளான்—ஊனே சிறுமையுள் உட்கலந் தங்குளான். தாய் தந்தை மகவு மூன்றுளும் பரமன் உள்ளான். இன் புடன் இருவர் கூடி மகப்பேறெய்துகின்றனர்; துன் புறும் பாசத்தில் மகவு தோன்றி வளர்கிறது. குயில் முட்டையைக் காக்காய் அடைகாத்துக் குஞ்சாக்கி வளர்ப்பதுபோல், ஒரு பாசமயக்கத்தால் பெற்றோர் பிள்ளையை உயிரெனப் போற்றி வளர்க்கின்றனர்; இப்பாசத்தின் காரணம் யாராலும் சொல்ல முடியாது; கர்ப்பதானம் செய்த தந்தை அறியான்; அதை ஏற்ற தாய் அறியாள்; கருவை உருவாக்கிய தட்டான் அறிவான், உரையான்! அனைத்திற்கும் சாட்சியாய் இறைவன் அங்கே இருக்கிறான்.

குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக் கூட்டிட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்,
இயக்கில்லைப் போக்கில்லை; ஏனென்ப தில்லை
மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே.

கடல் நீரால் உப்புத் தோன்றியதுபோல, திருவருளால், பலவாகத் திரிந்து உயிரினங்கள் பிறந்து வளரும்.

திரைகடல் உப்புத் திரண்டது போலத்
திரிந்து பிறக்குந் திருவரு ளாலே.

## ௬௪. மூவகைச் சீவர்

சீவர்களைச், சிவன் விளையாட்டால், அவனருட் சக்தியே உண்டாக்குகிறது. வண்ணான் அழுக்கால் அழுக்கெடுப்பது போலவே, திருவருள் உயிருக்குத் தனுகரண புவன போகாதிகளை ஊட்டி, நலந்தீதென்னும் இருமன மாயக்கூட்டத்திடையே அதைப்

பூட்டி, நாளடைவில் மாசறுத்துச் சுத்தான்மாவாக்கிச் சித்தத்திற் புகுந்து சிவமயமாக்குகிறது.

ஆணவம் மாயை கன்மம் ஆகிய மும்மலங்கள் உயிர்களைப்பற்றி மருட்டுகின்றன; இவையே மனிதன் பெறத்தகும் தெய்வ நிலையைத் தடுக்கின்றன. ஜீவர் சோபான முறையில் மூவராவார்: சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர். சகலருக்கு மும்மலங்களும், பிரளயாகலர்க்கு ஆணவம் கன்மம் ஆகிய இருமலங்களும், விஞ்ஞானகலருக்கு ஆணவமலமும் தடையாக நிற்கும். சகலர் தூலதர மாசுடையார்; குருசேவை, உபதேசம், நன்னூலறிவு, அனுட்டானம், அனுபவம் இவற்ருலேயே இவர் மாசு நீங்கும். பிரளயாகலர் தூல மாசுடையார்; குரு உபதேசத்தால் இவர் மாசு நீங்கும். விஞ்ஞானகலர் சூக்கும மாசுடையார்; இவர்களுக்கு அந்தர்யாமியான இறைவனே உள்ளிருந்து மாசறுப்பான். இவர் பக்குவத்திற்கும் தூய்மைக்கும் ஏற்றபடியே சக்தியும் முத்தியும் வாய்க்கும். துணியின் அழுக்கை அடித்து வெளுத்து நீக்குவது போலவே, ஆன்மாவைப் பிடித்த அழுக்குகளைத் திருவருள் பிறப்பு, இறப்பு, உலகானுபவம் இவற்றிற் போட்டு வாட்டி நீக்குகிறது.

அஞ்ஞான கர்மத்தால் ஆன்மாக்கள் பிறவிப் பிணியால் வருந்துகின்றனர்; பாசம் பசுவை மறைத்துப் பதியினின்றும் பிரிக்கிறது. அஞ்ஞானம் நீங்கி, மெய்ஞ்ஞான மெய்தியே சீவர் சிவத்தை மேவுவர்—மெய்ஞ்ஞானராகிச் சிவ மேவல் உண்மையே. சீவன் சிவமாவதே வாழ்வின் நோக்கம். அதற்கே

பல சாதனங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அச் சாதனங்கள் அனைத்தும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கில் அடங்கும். இவற்றை விரிவாக விளக்கப் புகுந்தால் இந்நூல் மிகப் பெருகும்.

திருமந்திரம் அறிவுக்கடல்; அதில் ஆழ்ந்து எனது சிறிய ஆற்றலுக் கெய்திய முத்துக்களை எடுத்து என்னருமைத் தமிழருக்குத் தருகிறேன். நான் அள்ளிய முத்துக்கள் ஒரே கூடையில் அடங்கவில்லை; மூன்று கூடைகள் வேண்டும். முதற்கூடை இத்துடன் உள்ளது. இன்னும் இரண்டு கூடை முத்துக்களை என் அன்பு மாணிக்கங்களுக்கு நல்க அன்புமயமான சிவம் அருளுக!

## ௬௫. ஓம் சிவம்!

இறைவனே, எம்பிரானே! உன்னை அடைக்கலம் புகுந்தேன்; இரவு பகலாய் நான் செய்யும் முறையீடுகளை நீ ஒருவனே அறிவாய்! அவ்வாறு முறையிடத் தூண்டியதும் உனது திருவருளே! என்னுள் இடையறாதினிக்கும் இன்பமே! உலகம் உனது திருவிளையாடல்; அந்த விளையாட்டில் எத்தனையோ அடியார்கள் உனது விருப்பத்திற்கு ஆளாகி நிற்கின்றனர். அவர்களுட் புல்லடியேன் ஒருவன். உனது பெருமையைப் பேசுவதே எனது இன்பப்பணி; இந்த மௌன இதயம் பேசுவதைக் கை எழுதி உன் அடியாருக்குத் தருகிறது; இன்னும் இம்மாதிரி என்னென்ன செய்ய வேண்டுமோ, எழுதவேண்டுமோ, எல்லாவற்றையும் என்னை யாட்கொண்டு என்னுள் இடையறாது கலந்து நிற்கும் நீயே செய், எழுது, அன்பருக்குத்

தா! நான் நிமித்தமாத்திரம். நான்? நான் என்பதே இல்லை, சூனியம். எல்லாம் நீ! ஐம்பூதம், மதி, இரவி, ஆன்மா எல்லாம் நீ! இந்த உடலும் உயிரும் நீ! எல்லாம் உன் செயல்; எல்லாம் உன் உடைமை. சக்தி சிவனே! உனது இச்சை நடக்கட்டும்! திருமந்திரம் நீ மூல சித்தருள் நின்றருளிய அறிவுக்கடல். அதில் சிற்றறிவினேனாகிய நானோ நீந்திக் கரைகாண வல்லேன்? ஏதோ இயன்றமட்டும் சென்று உனது சிறப்பையும், உண்மை விளக்கத்தையும், உனது சன்மார்க்கத்தையும் இப்பகுதியில் விளக்கியுள்ளேன். உன்னையடையும் யோகஞான மந்திரங்களை ஒரு பகுதியாகவும், உன் மயமாகும் சிவத்தெளிவை இறுதிப்பகுதியாகவும் வெளியிட்டுத் தமிழருக்குதவத் துணை செய்!

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று,
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை;
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
திருப்பெருந் துறையுறை சிவனே,
ஒன்று நீயல்லை; யன்றி யொன்றில்லை;
யாருனை யறியகிற் பாரே!

---

ஓம் சிவம்

சுத்தானந்த பாரதி

---

**திருமந்திர விளக்கம்,**

**சன்மார்க்கப் பகுதி முற்றிற்று.**

# எமது முந்திய வெளியீடுகள்

| | | | சதம் |
|---|---|---|---|
| 1. | கதிர் காம மாலை | .... .... | 15 |
| 2. | நமது சமய விளக்கம் | .... .... | 50 |
| 3. | இன்பத் திருப்புகழ் | .... .... | 50 |
| 4. | கணபதி பூஜை | .... .... | 20 |

## இனி அச்சேறுபவை

சித்தாந்த முழக்கம்
மனோன்மணி மாலை

60 டீல் இடம்
கொழும்பு. 3.
சுத்தானந்தப் பதிப்பகம்.

குறிப்பு: முதல் நான்கு நூல்களையும் ஒன்றரை ரூபாய் போஸ்றல் ஓடர் அனுப்பித் தபால்மூலம் பெற்றுக் கொள்ளலாம்.